


கல்கி
30
காசு
KALKI 22-7-1962

கார்டினல் பாலிஷ்




இதுவே உங்கள் வீட்டிற்குப்பெருமை!

உங்கள் வீட்டின் தரை,மங்கலாகவும் பளபளப்பின்றியும் இருந்தால் வீட்டின் அழகையே குறைத்துவிடும். ஆதலால், ரெட் கார்டினல் பாலிஷ் மூலம் உங்கள் வீட்டின் தரையை செக்கிற ஒளியுடன் கூடி பிரகாசிக்கும்படி வைத்துக்கொள்ளுங்கள். சாதாரண கல் தரையானாலும், சிமிட்டித் தரையானாலும், பளபளப்பைக் கொடுப்பதில் ''கார்டினல் பாலிஷ்'' அற்புதமாக வேலை செய்யக்கூடியது. கண நேரத்தில் மங்கலான தரையை செக்கிற ஒளியுடன் பிரகாசிக்கச் செய்யும்.

உங்கள் அழகான வீட்டின் தரையை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்துக்கொள்ள இன்றே ''கார்டினல் பாலிஷை'' உபயோகியுங்கள்.

ரெட்
கார்டினல்
பாலிஷ்




அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிட். (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)

JWTCP 5088

CP 2

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



புகையிலையின் உற்பத்தி, உபயோகம், ஏற்றுமதி இவைகளில் அமெரிக்க ஐக்கிய நாடுகளும், சீனாவும் இந்தியாவுமே தலைமை வகிக்கின்றன. இன்று உலகிலேயே புகையிலை விளைச்சலில் அமெரிக்காவுக்கும் சீனாவுக்கும் அடுத்தபடியாக மூன்றாவது ஸ்தானம் பெற்றிருப்பது இந்தியா தான். பதப்படுத்தப்பட்ட வர்ஜீனியா புகையிலையின் ஏற்றுமதி 1959—ல் பிறநாட்டு நாணயச் செலாவணியாக 16 கோடி ரூபாய்க்குச் சற்று அதிகமாக இந்தியாவுக்குத் தேடித் தந்தது.

புகையிலையின் வரலாறு... 7



பனாமா

ஒரு நல்ல சிகரெட்—
இறுதிவரை இன்பமூட்டுவது

GOLDEN TOBACCO COMPANY PRIVATE LTD.

பம்பாய்—57.

பாரதத்தில் இத்தகைய தேசிய ஸ்தாபனங்களில் மிகப் பெரியது.

GT.707 TM

Greens' Advtg



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

இதழ் 51

வறுமை மூலம் ஒருமைப்பாடா?

மாதம் நூற்று அறுபது ரூபாய் வருமானம் உள்ள ஒரு பிராமணர் தமது குடும்பத்தாருடன் சென்னையில் கூலிக்காரக் குடிசை வாழ்வோரிடையே வசித்து வருவதைப் பார்த்து விட்டு, ஏழைமைதான் சாதி மத வித்தியாசத்தைப் போக்கிச் சமத்துவத்தை ஏற்படுத்துகிறது என்று மத்திய மந்திரி ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் டில்லியில் அழகாகப் பேசியிருக்கிறார்.

நாற்பது, ஐம்பது ரூபாய் வாடகை கொடுத்தால் தமது நான்கு பெண்களுக்குப் படிப்புச் சொல்லித் தர முடியாது என்ற காரணத்தால்தான் அந்த எளிய வாழ்க்கையைத் தாம் மேற்கொண்டிருப்பதாக மந்திரி டி. டி. கே.யிடம் கூறியிருக்கிறார் அந்தப் பிராமணர். "பிச்சைப் புகினும் கற்கை நன்றே!" என்ற ஆன்றோர் மொழிப்படி அவர் எளிய வாழ்க்கை மேற்கொண்டிருக்கிறார். இது அவரது பிரத்தியேக மனோபாவத்தைப் பொறுத்ததே. இந்த அளவு ஊதியம் பெறுபவர் எல்லோரும் இதே மனப்பாங்குடன் இருக்க வேண்டுமென்றோ, இவரைப் போலவே நான்கு பெண்களைப் பெற்றிருக்க வேண்டுமென்றோ சட்டம் வரும் வரையில் மந்திரி விரும்பும் சமத்துவம் ஏற்படாது!

மாத வருமானம் நூற்று அறுபது ரூபாயில் நான்கு பெண்களைப் பராமரிக்க வேண்டிய ஒரு குடும்பத் தலைவரை 'ஏழை' என்று கருதுகிறார் மந்திரி டி. டி. கே. அவருக்கு இந்த உணர்வு ஏற்பட்டதில் சந்தோஷம் கொள்கிறோம். அவ்வாறெனில், இவரைவிடக் குறைந்த வருவாயில் இன்னும் பெரிய குடும்பத்தைக் கொண்ட ராஜ்ய சர்க்கார் ஊழியர்களையும், பாங்கிகளிலும், கம்பெனிகளிலும், லட்சக்கணக்கான தொழிற்சாலைகளிலும் வேலை செய்யும் ஊழியர்களையும் மந்திரி அவர்கள் ஏழைகள் பட்டியலில் சேர்க்கத்தானே வேண்டும்?

இவர்களுடைய வருவாயில் பாதியளவுகூட இல்லாதவர்கள் பாரத நாட்டின் ஏழு லட்சம் கிராமங்களில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களும் கைத்தறித் தொழிலாளர்களும் — இவர்களும் ஏழையர் என்பதை மந்திரி ஒப்புக்கொள்ளத்தானே வேண்டும்? அதாவது நாட்டு மக்கட் தொகையில் முக்கால் பங்குக்கு மேற்பட்டவர்கள் வறுமையில் வாடுகிறார்கள் என்பதை அவர் புரிந்து கொள்ள வேண்டுமல்லவா? இதற்குக் காரணம் என்னவென்றும் உள்ளத்துக்குக் கள்ளமின்றி ஆராய வேண்டுமல்லவா?

காங்கிரஸ் சர்க்காரின் பயன் தராத திட்டங்களின் காரணமாகவும் கடும் வரிக் கொள்கைகளின் காரணமாகவுமே பணத்தின் மதிப்பு குறைகிறது; கடைசியில் விலைவாசிகள் உயர்கின்றன. பள்ளிக்கூடச் செலவு, கல்லூரிச் செலவு, மருந்துச் செலவு யாவும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே போகின்றன. இதனால் மாதம் நூற்று அறுபது ரூபாய் வருமானமுள்ளவன்கூட ஏழையாகிறான். ஓட்டு வீட்டில் வாழ்ந்தவன் ஓலைக் குடிசையில் வாழ நேர்கிறது. அப்படியானால் அந்த ஓலைக் குடிசையில் வாழ்ந்தவன் நிலை எவ்வளவு மோசமாகி இருக்க வேண்டும் என்பதை ஆட்சியாளர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். தங்களுடைய கொள்கைகளுக்காகப் பச்சாத்தாபம் கொள்ள வேண்டும். (வேறு ஏதும் செய்யவில்லையாயினும் ஏழை விவசாயிகளின் நிலத்துக்கு வரி போடாமலாவது இருக்கலாமே. அதற்குப் பதில் காருண்ய காங்கிரஸ் இவ் வரியை உயர்த்தியிருக்கிறதே!)

'உயரிய சிந்தனை - எளிய வாழ்க்கை' — இதுவே மக்களின் மகா மந்திரமாக இருக்க வேண்டும் என்றார் மகாத்மா. குறிப்பிட்ட சென்னைவாசி இவ்வாறு தாம் வாழ்வதோடு ஆட்சியாளர்களும் உயரிய, உண்மையான சிந்தனையில் ஈடுபட வாய்ப்பளித்துவிட்டார்!


பலே பக்தவத்ஸலம்!


தமிழக மந்திரி சபையில் முதன் முறையாக ஒருவர் மத்திய மந்திரியின் கருத்தை மறுத்துப் பேசியிருக்கிறார்! இதர விஷயங்களில் நம் ராஜ்ய சர்க்கார் தில்லியின் கைப்பாவையாக ஆடுவதற்காக எவ்வளவு வெட்கப்படுகிறோமோ அவ்வளவு பெருமிதம் அடைகிறோம், இவ்விஷயத்தில். மத்திய மந்திரி ஸ்ரீ சிரீமாலி பிரதேச மொழியிலேயே கல்லூரிப் போதனையை நடத்த வேண்டும் என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்ட சில நாட்களுக்குள்ளாகவே நமது கல்வி மந்திரி ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் தற்போது பிரதேச மொழிப் போதனையை விஸ்தரிப்பது பொதுப் பணத்தை விரய மடிப்பதாகவே ஆகும் என்று உண்மையைத் துணிச்சலாகக் கூறிவிட்டார். அரசியல் காரணங்களுக்காக மொழிப் பிரச்னையைக் கிளறி விடுவதைக் கண்டித்துப் பேசியிருக்கிறார் அவர்.

எனினும் ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் போதன மொழி விஷயமாக இன்னும் தீர்க்கமாகச் சிந்தித்துத் திட்டவட்டமான முடிவுக்கு வர வேண்டும் என்றே தோன்றுகிறது. தமிழில் படிப்பதால் வெளி நாடுகளுக்குச் சென்று உயர் கல்வி பெற முடியாது என்பதாலேயே மாணவர்கள் தமிழ்ப் போதனைக் கல்லூரிகளில் சேரத் தயங்குவதாக அவர் கருதுகிறார். இது அவ்வளவு சரியல்ல. வெளிநாடு செல்லும் மாணவர்கள் மிகச் சொற்பமான சத விகிதத்தினரே. உண்மைக் காரணம் அவர்கள் பட்டம் பெற்ற பின் இந்தியாவிலேயே உள்ள மற்ற ராஜ்யங்களில் உத்தியோகம் பெறும் வாய்ப்பு குறைந்து வருவது தான். இதனை எதிர்க் கட்சி அங்கத்தினர் ஒருவர் எடுத்துக் காட்டியும் மந்திரி ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை.

பிராந்திய மொழிகளில் போதனை அளித்து அந்தந்தப் பிராந்தியங்களிலே வேலைக்கு அமர்த்திக் கொண்டால் இந்தியா தேசத்தின் ஐக்கியம் குலைவுபட்டு விடும் என்பதனை எடுத்துக் காட்டியிருக்க வேண்டிய அமைச்சரவர்கள் அவ்விதம் செய்யவில்லை. 'மாணவர்கள் அறிவுக்காகவே கல்வி பயிலுகிறார்கள்; வேலைக்காக அல்ல' என்று கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட லட்சியவாதி

பிரிட்டனின் தவிப்பு





களாக நம் மாணவர்கள் இருந்தால் அது எவ்வளவோ பூரித்துப் போக வேண்டிய விஷயம்தான். எனினும் நம்முடைய லட்சியக் கனவுகளுக்காக யதார்த்த நிலையைக் காணுமல் தூங்குவது முறையாகுமா ?

மந்திரி அவர்கள் இந்த உண்மையை ஒப்புக் கொள்ளாததற்கு உட் காரணம் இருக்குமோ என்ற ஐயம் ஏற்படுகிறது. தற்போது தமிழில் போதனை அளிக்கும் கல்லூரிகளில் போதிய மாணவர்கள் சேராதபோதிலும் அவற்றைத் தொடர்ந்து நடத்துவோம் என்கிறார் அவர். அதோடு இந்த இரண்டு ஆண்டுகள் நடத்திய பரீட்சை போதாதென்று இன்னமும் இந்தத் திட்டத்தைப் பரீட்சிக்க வேண்டும் என்கிறார். (பரீட்சைக்கு ஆளான துர்ப்பாக்கிய சாலிகளின் கதி என்ன ஆவதோ ?) மேலும், தமிழ்ப் போதனையை ஆதரிப்பவர்கள், இத்திட்டத்தை ஏற்க வேண்டுமென மாணவர்களை ஊக்க வேண்டும் என்றும் சொல்கிறார். இது வேடிக்கையா, அல்லது உண்மையான பேச்சா என்பதே புரியவில்லை. ஆகக் கூடி, இந்தப் போதனை மொழி மாற்ற விஷயத்தை ஒரேயடியாகக் கைவிட அவர் விரும்பவில்லை என்பது தெளிவு. மாணவர்கள் உத்தியோகத்துக்காகக் கல்வி கற்கிறார்கள் என்பதை ஒப்புக் கொண்டால் இந்தத் திட்டத்தைக் கைவிடத்தான் நேரிடும். எனவேதான் மந்திரி அவர்கள் இவ்விஷயத்தில் குழம்பிப் போய்ப் பேசியிருக்கிறாரோ எனத் தோன்றுகிறது.

மக்களின் உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, விரைவில் நல்ல பெயர் எடுக்கக் கூடிய ஒரு திட்டத்தின் தோல்வியை இந்த அளவுக்கேனும் ஒப்புக் கொண்டுள்ள ஸ்ரீ பக்தவத்ஸலம் அவர்கள் இந்தப் பிரச்னையை மேலும் நுணுகிப் பரிசீலித்தால் யுக்தமான முடிவுக்கு வருவார் என நம்புகிறோம். ஆங்கிலத்தை ஒழித்து விட்டால் இந்தியா பல துண்டுகளாகப் பிரிந்து போகும். அப்படிப் பிரிந்து போன துண்டுகளை ஹிந்தி எளிதாக ஆள முடியும். பிரதேச மொழிகளைக் காட்டி ஆங்கிலத்தை ஒழித்து விடலாம், பிறகு ஹிந்தியை உச்ச ஸ்தானத்தில் வைக்கலாம் என்கிற சதியைத் தமிழகமந்திரிகள் காணவில்லை.

உறுதிமொழி என்னவாயிற்று ?

நமது நாட்டு மக்களின் முன்னேற்றத்துக்கு அவசியமான காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைக் கவனியாத நமது அரசாங்கத்துக்கு அவசியமில்லாத சில காரியங்களை மிக அவசரமாகச் செய்யாவிட்டால் இந்தியா பின்தங்கிய நாடாகவே நின்று விடும் என்று திடீர் திடீரென்று தோன்றும். இப்படி ஓர் அபூர்வ யோசனை சர்க்காருக்கு இப்போது தோன்றியுள்ளது.

மூன்றாவது வகுப்பு ரயில் டிக்கெட்டுகளில் பிரயாணி புறப்படும் ஸ்டேஷன்களின் பெயரும், சேர வேண்டிய ஸ்டேஷன்களின் பெயரும் ஆங்கிலத்திலும், பிரதேச மொழியிலும் தற்போது அச்சிடப்பட்டிருக்கிறது. இனி இதில் ஆங்கிலத்துக்குப் பதிலாக ஹிந்தி மொழி இடம் பெறுமாம். அதாவது ரயில் பிரயாணச் சீட்டுகளில் ஆங்கிலத்துக்குச் சீட்டு கொடுத்தாகி விட்டது.



ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளின் விசேஷ கடாட்சத்தைப் பெற்றது பழைய மாம்பலத்திலுள்ள ஸ்ரீ சங்கர மடம். இம் மடத்தை ஒட்டியுள்ள நிலத்தையும் வாங்கி வைதிக தர்மத்துக்குகந்த திருப்பணிகள் புரிய வேண்டுமென அவர்கள் ஆக்ஞாபித்தார்கள். அதற்கேற்ப ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் டிரஸ்டினர் 20,000 ரூபாய் சேகரித்து மடத்தை அடுத்துள்ள விசாலமான நிலத்தை வாங்கியுள்ளனர். தற்போது அந்த மனைக் கட்டில் ஏழைகளுக்கும் நடுத்தர மக்களுக்கும் பயனுறும் முறையில் கலியாண மண்டபமும், வைதிக கர்மங்கள் செய்யத் தகுதியான மன்றமும், புரோகிதர்களுக்கு இருக்கையும் அமைத்துத் தர ஏற்பாடாகியுள்ளது. 'ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கர மட அபிவிருத்திக் குழுவினர்' ஏற்றுக் கொண்டுள்ள இப்பணிக்கு ரூ. 80,000 தேவைப்படுகிறது. இந்த நிதிக்கு உதவி பிரம்மஸ்ரீ மஞ்சக்குடி ராஜகோபால சாஸ்திரிகள் கடந்த ஜூன் 3-ந் தேதியிலிருந்து ஜூலை 2-ந் தேதி வரை ஸ்ரீமத் ராமாயணத்தை அற்புதமான உபந்நியாசங்களாக வழங்கினார்கள். பட்டாபிஷேகப் பிரவசனத்துக்கு முன்னாள் நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரிகள் தலைமை தாங்கினார்கள். பிரவசனத்தின் மூலம் சுமார் 20,000 ரூபாய் நிதி சேர்ந்துள்ளது. மிகுதியுள்ள தொகையையும் ஆஸ்திக அன்பர்கள் விரைவில் பூர்த்தி செய்துதரவேணும்.

ரயில் பிரயாணத்தினால் ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த மக்கள் இதர பிரதேசங்களுடன் தொடர்பு கொள்ளுவதற்கு அவகாசம் ஏற்படுகிறது. ஒருவர் எல்லாப் பிரதேச மொழிகளையும் அறிவதற்கில்லை. ஆங்கிலமே எல்லாப் பிரதேசங்களுக்கும் ஒரு பொது மொழியாகப் பயன்பட்டு வந்தது. மேலும் மூன்றும் வகுப்புப் பிரயாணிகளில் பலர் எழுத்தறிவில்லாதவர்கள். இவர்கள் தங்களது டிக்கெட்டு சரியானதா என்று அறியக்கூடப் பிறர் உதவியைத்தான் நாடவேண்டும். புது ஏற்பாட்டின்படி, வங்காளத்திலிருந்து ராமேசுவரம் வரும் ஒரு பிரயாணி ஆந்திரத்திலோ, தமிழகத்திலோ உடன் வரும் படித்த மக்களிடம் தமது டிக்கெட்டைப் பற்றி ஐயம் கேட்டால் அதைத் தீர்ப்பதற்கு வேண்டிய வங்காளி அல்லது ஹிந்தி மொழிஅறிவை அவர்களில் எவ்வளவு பேர் பெற்றிருப்பார்கள்? இந்தியாவில் ஹிந்தி ஒரு பிரதேச மொழி. ஆங்கிலமே படிப்படைந்த எல்லாருக்கும் பொதுவான மொழி என்கிற பேருண்மையைக் கண் திறந்து பார்க்க மறுக்கிறார்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்கள்.

ரயில் டிக்கெட்டுகளில் ஆங்கிலத்தை அகற்றினால் பாரத சர்க்கார் நம்பிக்கைத் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள். 1965-ம் ஆண்டுக்குப் பிறகும் ஆங்கிலம் அகில இந்திய மொழியாக இருக்கும் என்பதை ஊர்ஜிதம் செய்ய ஒரு மசோதாவே கொண்டுவரப்படும் என்று சமீபத்தில்தான் உள்துறை இலாகா அமைச்சர் அறிவித்தார். தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றியும் நாட்டில் காணப்படும் பிளவு மனப்பான்மை பற்றியும் பேசப்படும் போதெல்லாம் ஹிந்தி மொழி திணிக்கப்பட மாட்டாது என்றும் அடிக்கடி உறுதி அளிக்கப்பட்டது.

இவ்வளவு உறுதிமொழிகளும், அரசியல் கட்சிச் சார்பில் சொல்லியதல்ல. பிரதமர் நேருஜியும், பாரத சர்க்காரும் கூறியவை. அவற்றை இவ்வளவு எளிதில் காற்றில் பறக்க விட்டது ஆச்சரியமாக இருக்கிறது! மொழியை அரசியலுக்குப் பயன்படுத்தக் கூடாது என்று ஸ்ரீ பக்தவத்ஸலம் கூறியிருப்பது காங்கிரஸ் ஆட்சியாளருக்குத்தான் முதலில் புரிய வேண்டும்.

உண்மையில் இம்மாதிரி ஒரு சீர்திருத்தம் — அதாவது, சீராக இருந்ததை மாற்றிக் குழப்பம் செய்வது — இப்போது அவசியம்தானா? இது இல்லா விட்டால் நமது நடவடிக்கைகளும் விவகாரங்களும் சரிவர நடைபெறாதா? ஏன் இந்த உசிதமற்ற பரபரப்பு?

என்ன சேதி?

பல்லடம் மறைந்தார்

சங்கீத கலாநிதி வேணுகான-ஸார்வபௌம ஸ்ரீ பல்லடம் சஞ்சீவி ராவின் மறைவு கர்னாடக சங்கீதத்துக்குப் பெரியதொரு நஷ்டமாகும். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு மேல் இந்தவாத்தியத்தில் இசையை ரசிகர்களுக்கு அள்ளி அளித்துத் தன்னிகரில்லாப் பெருமையுடன் விளங்கினார் அவர். கண்ணன் ஊதிய குழலோசை இப்படித்தான் இருக்குமோ என்று மக்கள் புகழ்ந்து பாராட்டிய மேதை சரப சாஸ்திரிகளிடம் சம்பிரதாயமாகச் சிக்ஷை பயின்று, அதே போன்ற புகழைத் தமது காலத்தில் தமக்கும் தேடிக் கொண்டவர் ஸ்ரீ சஞ்சீவி ராவ். அசாதாரண வேகமும், பிர்க்காக்களும், அடுக்குகளும் சஞ்சீவி ராவுடைய குழலிசையின் விசேஷ அம்



சங்கள். அவருடைய நிரவல்களும் ஸ்வர ப்ரஸ்தாரங்களும் தனி அழகு பெற்றவை. தாம் பெற்ற செல்வத்தை வழிமுறையாக மற்றவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்று சில சீடர்களையும் இத்துறையில் பழக்கி வைத்திருக்கிறார். நகைச்சுவையுடன் பேசும் திறனுள்ளவர். தெய்வ பக்தி மிகுந்தவர். தாம் கச்சேரிக்குச் செல்லும் இடங்களுக்குத் தமது பூஜை சாதனங்களையும் கூடவே எடுத்துச் செல்வது அவரது வழக்கம். சமீப காலத்தில் ஸ்ரீ ராம நவமி உத்சவத்தைச் சிறந்த முறையில் நடத்தக் கோவையில் விரிவான ஏற்பாடுகள் செய்தவர். அந்த நற்பணி ஆண்டுதோறும் அங்கு நன்கு நடைபெற்று வருகிறது. நற்பண்புகளும் உயர்ந்த வித்வத்தும் ஒருங்கே பெற்ற ஸ்ரீ சஞ்சீவி ராவின் சங்கீதம் பலருடைய காதுகளில் அநேக நாட்களுக்கு ஒலித்துக் கொண்டிருக்கும்.

நெருக்கடி கூறும் படிப்பினை

சென்ற வாரம் சென்னையில் ஏற்பட்ட மின்சார சப்ளை நெருக்கடி இந்தத் துறையில் நமது மாநிலத்தின் நிலை எவ்வளவு ஆபத்தான கட்டத்தில் இருக்கிறது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டி விட்டது. ஜல சக்தியைக் கொண்டு உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம் ஏறக்குறைய உச்சவரம்பை அடைந்து விட்டது. மேட்டூர் சுரங்கத் திட்டம் முடிவடைந்தால் மேலும் சிறிதளவு மின்சக்தி கிடைக்கக் கூடும். ஆனால் சென்னை ராஜ்யத்தில் வேகமாக வளர்ந்து வரும் தொழில்களின் தேவைக்கும், உற்பத்தியாகக் கூடிய மின் சக்திக்கும் பெருமளவில் வித்தியாசம் இருக்கவே செய்யும். இந்த நிலைமையில் மின்சக்தியைப் பெருக்குவதற்கான உபாயங்களை அரசாங்கம் கவனிக்க வேண்டியது அவசியம். இந்த நெருக்கடியைக் காரணமாகக் காட்டி அணு மின் நிலையம் அவசியமாகி விட்டது எனச் சுலபமாகச் சொல்லி விடத் தோன்றும். ஆனால் இதனால் நன்மை கிடைக்குமா, இதன் மூலம் கிடைக்கக் கூடிய மின் சக்தியின் அடக்க விலை நீர்-மின்சாரம், எரி மின்சாரத்தை விடக் குறைவாக இருக்குமா அல்லது அதே விலையிலாவது இருக்குமா, அணு மின்சார உற்பத்தியினால் ஏற்படக்கூடிய ஏராளமான செலவும் இதர விளைவுகளும் விரும்பத்தக்கவைகளா என்பன விவாதத்துக்கிடமானவை. முக்கியமாக, அணுநிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கதிரியக்கம் வாய்ந்த கழிவுப் பொருட்களை எப்படி வீரியம் இழக்க வைப்பது என்பது பெரும் பிரச்னையாகும். இவ்விஷயங்கள் பற்றி நிச்சயமான முடிவுகள் ஏற்படும் வரை அணு மின் நிலையத்துக்குப் பதில் எரி மின் நிலையங்கள் மூலமே அதிகமான மின் சக்தி உற்பத்திக்கு வகை செய்து கொள்ளுவதுதான் முறையாகும். தனியார் துறைத் தொழிலதிபர்கள் கூட்டுறவு முறையில் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எரி மின் நிலையங்களை அமைக்க முன் வந்தால், அவர்களுக்குச் சர்க்கார் ஆதரவு அளிப்பது தான் புத்திசாலித்தனமாகும். அதுவே நாளாவட்டத்தில் நன்மை பயக்கும். மின் உற்பத்தி தங்களுடைய ஏகபோக உரிமையாக இருக்க வேண்டும் என்ற முரட்டுப் பிடிவாதக் கொள்கையைச் சர்க்கார் சிறிதேனும் தளர்த்திக் கொடுக்க இப்போதாவது முன் வர வேண்டும்.

ஜய ஜய சங்கரா

உதித்த இடத்தில் ஒடுங்கி இருத்தல் — அது கன்மம் பக்தியும் உந்தி பற!
அது யோக ஞானமும் உந்தி பற! — ஸ்ரீ ரமண பகவான்

11. சோதனை

குமாரில பட்டரைக் காண சங்கரர் துடித்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு. பௌத்தர்களை வென்ற பெரியவராயிற்றே என்பது ஒன்று. அதோடு, கர்மத்தை மட்டும் பெரிதாகச் சொல்லும் இந்தப் பட்டரை, அத்வைதம் கூறும் ஞான மார்க்கத்தையும் ஒப்புக் கொள்ளும்படி செய்தால் வைதிக மதத்திலேயே ஏற்பட்டுள்ள இரு பிளவும் ஒன்றுகூடிவிடுமே என்றும் கருதினார் ஆசாரியர். பேதங்களை யெல்லாம் நீக்க வந்த சமரஸ மூர்த்தி அல்லவா சங்கரர்? எனவே பட்டரின் இருப்பிடத்துக்கு விரைந்தார்.

கர்மாக்களை யெல்லாம் நீத்த துறவி தான் மீமாம்சகர்களின் முதல் எதிரி. எனினும், கற்றோரைக் கற்றோரே காமுறுவர் என்பார்களே! அந்த ரீதியில் சங்கரரை அன்புடன் வரவேற்றார், உமிக் காந்தல் தீயில் சிறிது சிறிதாக வறுபட்டுக் கொண்டிருந்த குமாரிலர். அந்த நிலையிலும் சங்கரரின் கொள்கைகளைக் கேட்கவும் அவருடன் வாதமிடவும் ஆர்வம் காட்டினார் அவர்.



ஆசாரியர் தம் மதத்தை அவரிடம் விவரித்துக் கூறினார். பட்டரின் அகக்கதவும் மெல்ல மெல்லத் திறந்தது. 'இந்த யுவன் வாயிலிருந்து வாக்குக்கள்தான் வெளிப்படுகின்றனவா? அல்லது பன்னீர்த் துளிகள் தெறிக்கின்றனவா? உடலைத் தீ தகிப்பதுகூடத் தெரியவில்லையே! கர்ம வினையை உடல் அநுபவிக்கும் போதே அதைவிட மேலாக, கர்மத்துக்கும் கட்டுப்படாமல் தம்மிடமே துலங்கும் ஏதோ ஒன்றைச் சாந்தி பெறவைக்கிறானே இந்தப் பிள்ளை? அந்த ஏதோ ஒன்றில் நிலைத்து நிற்பதே கர்மங்கள் செய்வதன் முடிவான பயன் என்று உணர வைக்கிறானே? இதென்ன ஆச்சரியம்!' என்று வியந்தார் குமாரில பட்டர்.

பூர்வ மீமாம்சையை அத்வைதம் எப்படிக் கண்டிக்கிறது?

வேத கர்மங்களை அத்வைத சாஸ்திரம் ஏற்கிறது; எனினும் அது உள்ளத் தூய்மை அளிப்பதற்குத்தான் உதவுமே ஒழியமோட்சத்துக்கு நேர்உபாயமாகாது என்கிறது. சுத்தமான உள்ளம் பெற்ற பின் ஆத்ம விசாரம் செய்து பரம் பொருளுடன் இரண்டறக் கலப்பது தான் வீடு; அதனை உபநிஷதம் கூறும் ஞான மார்க்கத்தாலேயே பெற முடியும் என்பது அத்வைதிகள் கருத்து.

'கர்ம மார்க்கக்காரர்கள் கருதுவது போல் காரணமே தன்னால் காரியத்தை உண்டாக்கிவிட முடியாது. நாம் காணும் சகல காரணங்களுக்கும் ஒரு ஆதி காரணம், மூலகாரணம் உண்டு. அதை அறிவது என்பது அதுவாகவே ஆவதுதான். அந்த அநுபவ நிலையில் காரியமே இல்லாமற் போகிறது. அந்த நிலையிலிருந்து பார்த்தால் இந்தக் காரிய காரண பிரபஞ்சமே ஒரு பொய்த் தோற்றமாகிவிடும்' என்கிறது அத்வைதம். கர்மம், பக்தி, யோகம், ஞானம் எல்லாம் இந்தப் பரம நிலைக்கு இட்டுச் செல்லவே ஏற்பட்டன என்று அது கூறுகிறது.

படைத்தல், காத்தல், அழித்தல் எல்லாம் உலகம் மெய்யென்று காணும் வரையில் தான் உண்டு. எனவே இந்தத் தோற்றத்தில் காணும் நன்மைதீமைகள் பரம்பொருளைத் தொடா என்று அது மீமாம்சகர்களுக்கு மறுமொழி கூறுகிறது. 'வேத வாக்கியங்களில், மக்களைச் செயலில் ஈடுபடுத்தும் விதிகளும், இன்ன செயலைப் புரியலாகாது என விலக்கும் நிஷேதங்களுமே பொருளுடையன என்ற மீமாம்சகர்களின் கருத்து தவறு. கர்மத்தில் ஏவாமல் ஒரு பொருளின் இயல்பை அறிய உதவும் பதங்களும் பொருளுடையனவே' என்கிறது வேதாந்தம். உதாரணமாக, 'சந்திரன் ஒளி படைத்தவன்' என்று கூறுமிடத்துச் செய்ய வேண்டியது எதுவுமில்லை. எனினும் சந்திரன் என்ற வஸ்துவின் இயல்பை அறிவதாலேயே இரவில் இன்னின்ன காரியம் செய்யலாம் என்று முடிவு செய்ய இயலுகிறது. எனவே காரியத்தைக் கூறாமல் ஆத்மாவின் இலட்சணத்தை மட்டும் கூறும் உபநிஷதங்களும் பொருளுடையனவே என்கிறது அத்வைதம்.

மேலும், கர்மத்தில் ஈடுபடுத்தும் வேத வாக்கியங்களைப் போலவே கர்மத்திலிருந்து தடை செய்யும் வாக்கியங்களையும் ஏற்கிறது மீமாம்சை. உதாரணமாக 'சுராபானம் செய்யாதே' என்னும் போது ஒரு காரியத்தைச் செய்யாமல் இருப்பதுதான் பயனுடையதாகும் என்கிறது வேதம். இதை ஒப்புக் கொண்டவர்கள், எந்தக் காரியமுமே செய்யாமல் தன்மயமாக இருக்கும் மார்க்கத்தைப் போதிக்கும் உபநிஷதங்களை ஏன் மறுக்க வேண்டும் என்பதே அத்வைதியின் கேள்வி. ஒரு காரியத்தைச் செய்வது, அல்லது செய்யாதது இகத்திலோ பரத்திலோ அவ்வாறு நடப்பதால் இன்பம் கிடைக்கும் என்ற பயனைக் கருதித்தான். இன்பம் கிடைக்கும் என்ற நிலைக்கும் மேற்பட்டுப் பேரின்பமாகவே ஆகும் பயன் பெரிதல்லவா? காரியங்களைக் கடப்பதால்தான் அந்தப் பயனைப் பெறலாம் என்கிறது ஞான காண்டம். கர்மத்தால் கிடைக்கும் பயனைவிட கர்மமற்றிருப்பது பெரும் பயனைத் தரும் என்றால் அதனை ஏன் புறக்கணிக்க வேண்டும்?

இந்த உண்மைகளையெல்லாம் குமாரில பட்டருக்கு உணர்த்தினார் பகவத்பாத சங்கரர். 'இருப்பது ஒரே ஆத்மா. அதைக் காரியத்தால் கட்டுப்படுத்த இயலாது. ஆத்மாவில் உறைவதே பிறப்பைக் கழிக்கும் பேரானந்தம்' என்றெல்லாம் அவருக்கு விளக்கினார். எனினும் சுய விருப்பு வெறுப்பின்றி, வேதம் கூறும் கர்மங்களைப் புரிவதே கர்மமற்ற பெருவாழ்வை எய்துவதற்கு முதற்படியாகும். முள்ளை முள்ளால் எடுத்து விட்டுப் பின்னர் இரண்டு முள்ளையும் எறிகிறோமல்லவா? அது போல, பழைய கர்மத்தால் ஏற்பட்ட பிறப்பை வைதிக கர்மத்தால் கெல்லி எறிந்து, பின்னர் இந்தக் கர்மத்தையும் துறந்தால் பவப்பிணி தீர்ந்து சுவஸ்தமாக — அதாவது தன்னிலேயே நிலைபெற்று — விளங்கலாம் என்று எடுத்து இயம்பினார் ஆசாரியர்.

காரியம் செய்யும் போது செய்பவன், செய்கை, செய்யப்படும் சாதனம், அந்தச் செயலின் பலன் என்று பல இருக்கின்றன. செய்பவனுக்குச் சாதனங்களாலும் வினையின் பலாபலத்தினாலும் துன்பம், பயம் எல்லாம் ஏற்படுகின்றன. இன்பம் ஏற்பட்டால் அதுவும்



ரா. கணபதி

இறுதியில் நிலேயாக இருப்பதில்லே. காரியமே இல்லாத நிலேயை இலக்காகக் கருதும் போது தன்னேயின்றி வேறு வஸ்துவே இல்லே என்ற உணர்வு ஏற்படுகிறது. எல்லாவற்றையும் தாளுகக் காணும் அப்போது எதனிடம் கோபமோ, பயமோ ஏற்படும்? எப்படித் துன்பம் நேரிடும்? ஆகவே அந்த நிலே வரவேற்க வேண்டியதேயல்லவா? அந்த நிலேயை ஞானகாண்டம் சொல்வதால் தான் நாம் உணர முடிகிறது. அந்த நிலேயை அடையவே அத்வைத சாஸ்திரம் சவிஸ்தாரமாக வழி சொல்கிறது.

''பயமும், துன்பமும், கோபமும், தாபமும் அற்ற நிலேயை அடைவதில் பயனில்லே என்று நீங்கள் கருதினுல் வொழிய வேதத்தின் ஞானகாண்டத்தைப் புறக்கணிப்பதற்கில்லே'' என்று ஆசாரியர் மொழிந்தார்.

ஊனக் கண்ணில் ஊனம் பெற்றிருந்த குமாரிலபட்டரின் ஞானக்கண் திறந்தது. அவரது புறஉடல் கருகிக் கொண்டே வந்தாலும் அதை அவர் பொருட்படுத்த வில்லே. பகவத் பாதரின் குரலும், அக்குரல் தெரிவிக்கும் கருத்தும் அவருடைய தகிக்கும் உடலுக்கு மிக மிக இதமாக, சீதளமாக, சந்தனமாக, பனி நீராக, பாரிஜாத மலராகத் தாபம் தீர்த்தன. ஞான காண்டத்தில் போய் முடிவதுதான் கர்ம காண்டத்தின் பிரயோஜனம் என்று அறிந்தார் அந்தப் பெரியார். அத்வைத தத்துவத்தைப் பரிபூரணமாக ஆமோதித்தார். சாகும் தறுவாயில் தமக்குத் தரிசனம் தந்தருளி, கர்மத் தளேயிலிருந்து விடுதலே வாங்கித் தந்த மகானேப் பணிந்தார். அவரைத் தம் குருவாக ஏற்ருர்.

சங்கரரிடம் பட்டர் சொன்ஞர்:

''ஸ்வாமின்! உங்கள் கொள்கையை நானே பிரசாரம் செய்ய இப்போது அசக்தனுக இருக்கிறேன். பாருங்கள், இப்போதே எவ்வளவு ஆழம் வரை தீய்ந்து போயிருக்கிறேன். இனி சில கணங்களில் நான் போய் விடுவேன். ஆகையால் அத்வைதத்தைப் பரப்பும் பேறு எனக்கில்லே. எனவே நீங்கள் ஒரு காரியம் செய்ய வேண்டும். மாஹிஷ்மதி நகரில் மண்டன மிச்ர பண்டிதர் என்று ஒரு மீமாம்சகர் இருக்கிருர். என்னேக் காட்டிலும் தீவிரமான கர்மவாதி அவர். அவருடன் நீங்கள் வாதிட்டு அவர் உங்கள் தத்துவத்தை ஏற்குமாறு செய்தால் அத்வைதம் பரவும்'' என்று கூறினுர்.

பின்பு உடலே அப்படியே அக்கினியில் பரித்தியாகம் செய்தார்.

ஆதியில் பிரம்மனின் மனக் கலக்கத்தைத் தீர்ப்பதற்காக தட்சிணமூர்த்தி தம் அருமை மகனேயும் கர்மவாதியாகப் பிறக்குமாறு ஆக்ஞையிட்டார் அல்லவா? அந்தக் குமரக் கடவுளின் அம்சமே குமாரிலர். கந்தன் பிறப்பெடுத்ததற்கு வேறெரு காரணமும் இருந்திருக்கலாம். ஓர் அவசரத்தில் தந்தையாகிய 'சிவஞர் மனம் குளிர உபதேச மந்திரம் இரு செவி மீதிலும் பகர்ந்த குருநாதன்' குமரன். அதற்கு மாற்ருகக் குகனுக்குத் தான் குருவாகி வெற்றி கொள்ளவும் அத்தன் எண்ணியிருக்கலாம்.

ஈசனுடைய கண்களிலிருந்து உண்டான பொறிகள் ஒன்று சேர்ந்து உருவானவன் முருகன். 'அக்னிபூ' என்று அவனுக்கு ஒரு திருநாமம். எனவே அவனே அக்கினி வருத்தாது. அவனுடைய அம்சமாகிய பட்டருக்கும் வேக்காட்டினுல் நோக்காடு ஏற்பட வில்லே. அப்படியே குமார ஸ்வாமிக்குள் அடக்கமாகிவிட்டார்.

நர்மதைக் கரையிலுள்ள மாஹிஷ்மதி நகருக்கு வந்து சேர்ந்தார் பகவத் பாதர், மண்டன பண்டிதரைக் காண்பதற்காக.

நர்மதா நதியில் நீராடினுர். அங்குள்ள சில பெண்களிடம் மண்டன மிச்ரரின் வீடு எங்கேயிருக்கிறது என்று விசாரித்தார். அவர்கள் அதற்குச் செய்யுள் உருவில் விடை சொல்ல ஆரம்பித்தார்கள். பாமர ஸ்திரீகளுக்கும் அவ்வளவு புலமை இருந்தது அந்த நகரில்.

''ஒரு வீட்டுத் திண்ணேயிலிருக்கும் பெண் கிளிகள் 'கர்மமே பலன் தருமா, அல்லது கடவுள் என்பவர் பலனளிக்கிருரா?' என்பது போன்ற பெரிய விஷயங்களே விவாதித்துக் கொண்டிருக்கும். அந்த இல்லம் தான் மண்டன பண்டிதருடையது'' என்று அந்தப் பெண்கள் அடையாளம் சொன்ஞர்கள்.

அந்த வீட்டைத் தேடிக் கொண்டு ஆசாரியர் புறப்பட்டார். அதேபோல் ஒரு வீட்டுத் திண்ணேயில் வேத சாஸ்திர மகாநாடு நடத்திக் கொண்டிருக்கும் கிளிப் பிள்ளேகளேயும் கண்டார். அது தான் தாம் தேடி வந்த வீடு என்று தெரிந்து கொண்டார்.

ஆனுல்.... வீட்டுக்குள் போவதற்கில்லாமல் வாயிற் கதவை அடைத்து வைத்திருக்கிறது! இதோ, இந்தக் கிள்ளேகளின் சத்தம் கொஞ்சம் அடங்கும் போது உள்ளேயிருந்து மந்திரங்கள் காதில் விழுகின்றன. உள்ளே திவசம் நடக்கிறது.

துறவிகளுக்கு இவ்வுலகக் கர்மாவே யில்லை. எனவே, முந்தையோருக்குச் செய்யும் பரலோக காரியமும் கிடையாது. அதனால்தான் கர்மவாதிகளான மீமாம்சகர்கள் துறவிகளைக் கண்டாலே கரிப்பது!

'சரியான சமயம் பார்த்துத்தான் நாம் இங்கே வந்து சேர்ந்தோம்!' என்று எண்ணினார் சங்கரர். திடீரென்று கண்ணனுக்குரிய குறும்புப் புத்தி முக்கண்ணனுக்கு வந்தது. தமக்குள்ளேயே சிரித்துக் கொண்டு ஒரு முடிவுக்கு வந்தார். மரமேறி ஒருவனிடமிருந்து தாம் கேட்டறிந்த ஒரு வித்தையை இன்று உபயோகமாகட்டும் என்று எண்ணினார்.

பண்டிதர் வீட்டை யொட்டித் தெருவில் வளர்ந்திருந்த ஒரு தென்னை மரத்திடம் சென்று சாணான் கற்றுக் கொடுத்த ஒரு மந்திரத்தைச் சொன்னார். அது அப்படியே தரையைத் தொட்டுக் கொண்டு வளைந்து கொடுத்தது. ஆசாரியர் அதைப் பிடித்துக் கொண்டு வேறொரு மந்திரம் சொன்னார். மரம் கொஞ்சம் கொஞ்சமாக நிமிர்ந்து, பிறகு மண்டனமிச்ரர் வீட்டு முற்றத்தின் பக்கமாக மீண்டும் வளைந்து கொடுத்தது. முற்றத்தில் அரவம் இல்லாமல் மெல்ல இறங்கினார் சங்கரர். மரம் முன்போல் நிமிர்ந்து கொண்டது.

அடிமேல் அடி வைத்து நடந்து சென்று, 'திடுதிப்'பென்று பிதிரு காரியம் நடக்கும் இடத்திலேயே வந்து நின்றார் சங்கரர். வெய்யிலில் வந்த அயர்வில் பளிங்கு நெற்றியில் முத்துக்கள் போல் வேர்வை அரும்பி விபூதி கலைய, இதழ்க் கடைகளில் முத்து நகை அரும்ப, பக்தியால் பதப்பட்ட உள்ளங்கள் தம்பால் நழுவுமாறு மோகன முகத்தைச் சுற்றியுள்ள வஸ்திரம் கழுத்தில் நழுவி விழ எழிலுற நின்றார். ஆனால் பக்தி செய்யக் கொடுத்து வைக்காத மண்டனரின் உள்ளம் எப்படி நழுவும்?

திவசப் பிராமணர்களைப் போஜனத்துக்கு அமர்த்தி விட்டுத் தலை நிமிர்ந்து பார்த்த மண்டனமிச்ரருக்கு எரிச்சல் பற்றிக் கொண்டு வந்து விட்டது. மொட்டைத் தலையும் முழங்காலுமாக இந்த ஆண்டி எங்கிருந்து, எப்படி, எதற்காக வந்து தொலைத்திருக்கிறது என்று பதற்றப்பட்டார். இதன் காதுபடும்படி மந்திரங்களைச் சொல்வதற்கில்லை. பிராமணர்களை இலையில் உட்கார வைத்தாகி விட்டது! இனி மேல் காக்க வைக்கக் கூடாதே!

சிராத்த காலத்தில் கோபமே கூடாது என்பது சாஸ்திரம். அதையும் மறந்தார் மண்டன மிச்ரர்.

ஆத்திரத்துடன் ''எங்கிருந்து, மொட்டை?'' என்றார் சங்கரரிடம். இந்தக் கேள்வியை எதிர்பார்த்தே போல் முக்காட்டைத் தள்ளியிருந்த ஆசாரியர் ''கழுத்திலிருந்து'' என்றார், குறுநகை பூக்கும் திருமுகமாக.

சந்நியாசிகள் கழுத்துக்குக் கீழ் வபனம் செய்து கொள்ளக் கூடாது. அதை மனத்தில் கருதி மண்டனர் வார்த்தைகளுக்கு நேரான பொருள் கொண்டு இப்படிப் பதில் சொன்னார். வேதவாக்கியங்களுக்கு எப்படிப்பொருள் கொள்ளவேண்டும் என்பதே முக்கிய விசாரமாகக்கொண்டவரை வார்த்தைப் பிழை கண்டு 'இறக்கி'விட்டார் சங்கரர்.

''நீ வந்த வழியைக் கேட்டேன்'' என்று எரிந்து விழுந்தார் மண்டனர்.

''ஓகோ! என்னைத்தான் ஏதோ கேட்டீர்களாக்கும் என்றல்லவா நினைத்தேன்! நான் வந்த வழியைக் (வழியிடம்) கேட்டீர்களா? அது என்ன சொல்லிற்று?''

பாடாய்ப் படுத்தி வைக்கும் பச்சைக் குழந்தை மாதிரி யிருந்தது சங்கரரின் குரல்.

அந்த அழகை அநுபவிக்க மண்டனமிச்ரர் கொடுத்து வைத்திருக்கவில்லை. பண்பையும் மறந்து உச்ச ஸ்தாயியில் இரைந்தார். ''ஆமாம், நீ வந்த வழியிடம்தான் கேட்டேன். அது உன் அன்னை விதவை என்று சொல்லிற்று'' என்றார்.

துளியாவது கோபம் வரவேண்டுமே சங்கரருக்கு! மதுரக் குரலில் பரிகாசம் தொனிக்க, ''நீங்கள் நான் வந்த வழியை என்னமோ கேட்டீர்கள். அதற்கு அது, 'உன் அன்னை விதவை' என்று உங்களிடம் பதில் சொல்லிற்று! அப்படித்தானே?'' என்றார்.

மண்டனமிச்ரர் துணுக்குற்றார். அவர் உடல் ஆடியது. எத்தனையோ சந்நியாசிகளிடமும், பௌத்தர்களிடமும் வாதம் நடத்தி அவர்கள் விழிகளில் விரலைவிட்டு ஆட்டிய தம்முடைய வார்த்தையில் இந்தச் சிறு பயல் தப்பு கண்டுபிடிக்கிறானே! அதுவும் தொடர்ச்சியாக?

நிலை கொள்ளாமல், பேச்சும் வராமல் தவித்தார் மண்டனமிச்ரர். அவருக்கு வந்த கோபத்தில் அவர் என்ன வேண்டுமானாலும் செய்து விடுவார் போலிருந்தது.

பார்த்தார்கள் பிராமணர்கள். அவர்கள் வேறு யாருமில்லை. சாட்சாத் வேத வியாச மாமுனியும், பூர்வ மீமாம்சையின் ஸ்தாபகரான ஜைமினியும் தான். வியாசருக்கு சங்கரர் யார் என்று தெரியும். எனவே சண்டை வளரக்



கூடாதென்று கருதினார். 'ஜைமினிக்கோ தம் சீடன் சிராத்த காலத்தில் கோபம் கொண்டு பலனை இழக்கப் போகிறானே என்று கவலை. கர்மத்தையே பெரிதாகச் சொன்ன அந்த ஜைமினியும் கடைசியில் கடவுள் தத்துவத்தைப் புரிந்து கொண்டு தில்லை நடராஜனைக் குறித்து வேதபாத ஸ்தவம் செய்துதான் சாந்தி அடைந்தவர். எனவே அவருக்கும் சங்கரரின் மகிமை தெரிந்திருந்தது. ஆக இருவருமாக மண்டன மிச்ரரைச் சமாதானம் செய்தார்கள்.

''சாப்பிடும் சமயத்தில் வந்திருக்கும் இந்தத் துறவியோடு சண்டை வேண்டாம். இவருக்கும் போஜனம் அளி; விஷ்ணு இலையிலேயே உட்கார வைத்து விடு'' என்று அவர்கள் மண்டனரிடம் கூறினார்கள்.

அவர்கள் வாக்கைத் தட்டுவதற்கே யில்லையே! வேண்டா வெறுப்பாகச் சங்கரரை விஷ்ணு இலையில் அமர்ந்து புசிக்குமாறு கேட்டுக் கொண்டார் பண்டிதர்.

அவர் மனத்தில் இருந்தது ஆசாரியர்களுக்குத் தெரியாமல் போகுமா?

''நான் வயிற்றுப் பிட்சைக்கு வரவில்லை. வாதப் பிட்சைக்கு வந்திருக்கிறேன். குமாரில பட்டர்தான் என்னை இவ்விடம் அனுப்பி வைத்தது'' என்றார்.


அவ்வளவுதான்! மண்டன மிச்ரர் அப்படியே மாறிவிட்டார்! மட்டற்ற மகிழ்ச்சி கொண்டார். அறிஞர் அல்லவா? வாதம் என்றவுடன் பெரும் களிப்புக் கொண்டார். அதுவும் பட்டர் அனுப்பி வைத்திருப்பதாகத் தெரிந்ததும் மேலும் உவகை பெற்றார்.

பிராம்மணார்த்தக்காரர்களை வரிக்கும் முறைப்படி சங்கரரை நமஸ்கரித்து அவரை விஷ்ணு இலையில் அமருமாறு வேண்டினார்.

''இந்தப் பிட்சை ஆனவுடன் அந்தப் பிட்சை ஆரம்பிக்கலாம். இவர்கள் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பிதிர்கர்மா தடைப் படக் கூடாது'' என்றார்.

எளிதில் பிரீதியடையும் சங்கரரும் அதற்கு இணங்கினார்.

திவசம் முடிந்தது. வியாசரும், ஜைமினியும் புறப்பட்டனர்.





இனி வாதத்தைத் தொடங்க வேண்டியதுதான்!

''இந்த வாதத்தின் முடிவு பற்றித் தீர்ப்பு கூற யாரை யாவது மத்தியஸ்தம் வைத்துக் கொண்டால் தேவலை. இந்த ஊரில் பண்டிதர் யாரையாவது உமக்குத் தெரியுமா?'' என்று கேட்டார் மண்டனர்.

''தெரியாது! நீங்கள் யாரை மத்தியஸ்தராக வைத்துக் கொண்டாலும் எனக்குச் சரி'' என்றார் சங்கரர்.

ஏனோ மண்டனருக்கு உள்ளம் குறுகுறுத்தது. 'இந்த இளைஞன் இத்தனை தன்னம்பிக்கையுடன் இருக்கிறானே ! ஒருவேளை தமக்கு ஐயம்...? அப்படியானால் அதை யாரோ மூன்றும் மனிதரான மத்தியஸ்தர் வேறு கண் கூடாகப் பார்க்க வேண்டுமா? தாமாகவே ஏன் இந்தப் பேச்சை எடுத்தோம் ?'

ஒரு கணம் நிலைதடுமாறினார் மண்டனமிச்ரர். சட்டென்று ஒரு யோசனை தோன்றிற்று அவருக்கு.

'' என் பத்தினி சரஸவாணி மகா பண்டிதை. அவளையே மத்தியஸ்தமாக வைத்துக் கொள்ளலாமா ?'' என்றார்.

''தாராளமாக'' என்றார் துணிந்த கட்டை சங்கரர்.



வாஸ்தவத்திலேயே சரஸவாணிபெரிய பண்டிதைதான். பெரியபண்டிதையாவது! அவள் கலைவாணியின் அம்சமே. உபய பாரதி என்பார்கள். மண்டனர் பிரமனின் அவதாரம். முன்பு கயிலையில் பிரமன் உற்ற தடுமாற்றத்தைத் தீர்க்கவே பட்டராகப் பிறந்த முருகன்தான் அந்த நினைவு மறக்காமல் சங்கரரை இங்கு அனுப்பியிருக்கிறான். பிரணவப் பொருள் கேட்டுப் பிரமன் தலையில் குட்டிய அந்தக் குறும்பன் மீண்டும் இப்போது அப்பா கையால் அவனுக்குக் 'குட்டு' வாங்கி வைக்கப் போகிறான்!

சரஸவாணிக்கு ஒரு திகைப்பு ஏற்பட்டது. ஒருவர் பர்த்தா, மற்றவர் மதிப்புக்குரிய சந்நியாசி. யார் பட்சம் பேசுவதென்றாலும் சங்கடமாக இருக்கும் போல் தோன்றிற்று. தன்மேல் பழி வேண்டாமென்று பார்த்தாள்.

இரண்டு மாலைகளைக் கொண்டு வந்தாள். ஆளுக்கொன்றாகப் போட்டுக் கொள்ளச்சொன்னாள். யார் மாலை முதலில் வாடுகிறதோ



அவரே தோற்றவர் என்று கொள்ள வேண்டும் என்றாள். பருத்தறிவுக்குப் புறம்பாகவும், மேற்பட்டதாகவும் பல சக்திகள் உள்ளன அல்லவா? அறிவுப் போரைக் கூட அப்படிப்பட்ட அற்புதத்தாலேயே நிர்ணயிக்க வேண்டும் என்று அறிவு தேவதையே எண்ணினாளோ?

வாதம் ஆரம்பிக்குமுன் இருவரும் ஒரு நிபந்தனை செய்து கொண்டார்கள். சங்கரர் வெற்றி பெற்றால் மண்டனர் துறவியாக வேண்டும்; மண்டனர் வெற்றி பெற்றால் சங்கரர் இல்லறம் ஏற்க வேண்டும் என்பதே அது.

வாதம் ஆரம்பித்து இருபத்தொரு நாட்களுக்கு நடைபெற்றது. குமாரில பட்டரிடம் கூறிய அதே உண்மையைத்தான் இங்கும் ஆசாரியர் சொன்னார். மண்டன மிச்ரர் அணிந்திருந்த ஹாரம் வாடத் தொடங்கியது.

எப்போதுமே தம் கட்சி தோற்கிறது என்றால் ஒருவருக்கு ஆத்திரம்தான் வரும். அது ஒரு தாபம். அந்த உஷ்ணத்திலே மாலை வாட வேண்டியது தானே? குளிர்ந்த இதயத்தினராகிய சங்கரர் உடம்பைத் தழுவிய மாலையோ, இப்போதெல்லாம் குளிர் சாதனப் பெட்டியில் வைக்கிறோமே, அதுபோலப் புத்தம் புதிதாகவே விளங்கியது.

மாலை வாடினாலும் மண்டனரின் மனமலர் விரிந்தது. சங்கரர் கூறிய தத்துவம் உண்மையிலேயே அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு விட்டது. சங்கரரிடம் சந்நியாச தீட்சை பெற்று அத்வைதத்தைப் பிரசாரம் செய்ய அவர் முன் வந்தார்.

சங்கரர் அவரைத் துறவு பூண வேண்டு மென்று கேட்டுக் கொண்டது இவனை ஜயித்து விட்டேன் பார்த்தாயா என்று உலகத்துக்குக் காட்டிக்கொள்வதற்காக அல்ல. அந்தப் புத்திமானால் சத்தியமான தத்துவத்தைப் பல பேர்கள் அறியச் செய்யலாமே என்பதுதான் அவரது கருத்து.

சரஸவாணிக்குப் பெரும் கவலையாகி விட்டது! மனைவியைக் கணவன் துறக்கலாம்! மனைவி எப்படி மனமொப்பிக் கணவனைத் துறக்க முடியும்? அவர் தன்னை விட்டுப் பிரியாதிருக்க உபாயம் கிடைக்குமா என யோசித்தாள் சரஸவாணி. அவளுக்கு ஒரு யோசனை உதித்தது.

தான் அறிவுக் கடவுளான சரஸ்வதி தேவி என்பது சரஸவாணிக்குத் தெரியும். எனவே தன்னை யாரும் வாதிட்டு வெல்ல முடியாது என்று அவள் உறுதி கொண்டிருந்தாள். இப்போது தன்னுடைய புலமையினாலேயே பர்த்தாவை இருத்திக் கொள்ள எண்ணினாள் அவள்.

சங்கரரிடம், ''கணவனும் மனைவியும் சரீரம் வேறானாலும் ஒருயிர்தான். ஆகவே இவரது உயிரில் ஒரு பாதியாகிய என்னையும் நீங்கள் வாதப் போரில் வென்றால் தான் உண்மையாகவே ஜயம் பெற்றவர் ஆவீர்கள்; அப்போதுதான் அவர் சந்நியாசியாவார்'' என்றாள்.

அவள் சொன்னதை ஒப்புக் கொண்டு அவளுடனும் வாதிட சங்கரர் இணங்கினார்.

எத்தனை எத்தனையோ கலைகளின் நுணுக்கங்களைப் பற்றி அவள் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சரியாக விடையளித்தார் ஞானசாகரமாகிய ஆசாரியர்.

ஆசாரியாருடைய கலை வல்லமை குறித்த சில விஷயங்களையும் இப்போது நாம் தெரிந்து கொள்வோம்.

ஞான மார்க்கத்தைச் சொல்ல வந்தவர்தாம் ஆசாரியர். அதற்கேற்பத் துறவும் பூண்டவர். எனினும் இதர துறவிகளுக்கு விதிக்கப்படாத சில விசேஷ காரியங்களையும் செய்தார் அவர். ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் கசடறக் கற்று சர்வக்ஞராக — எல்லாம் அறிந்தவராக — ஆக விரும்பினார். எதற்காக? அவருக்கு ஆசைகள் போகவில்லையா? அப்படியல்ல. கலைகளில் சிறந்த ஞானக் கலையைப்பற்றிச் சொன்னவர், சங்கரர்; அது அளிக்கும் பிரமானந்தத்தைப்பற்றிக் கூறினவர். சகல கலைகளையும் அறிந்த ஒருவர், அவற்றிலிருந்து அடையும் இன்பத்தை விட அத்வைதானுபவ இன்பம்தான் பெரிதென்று சொன்னால்தானே மக்களுக்கு அதில் நாட்டம் ஏற்படும்? இதற்காகவே ஆசாரியர் எல்லாக்கலைகளையும்பயின்றார்.

மேலும், இந்த நாளில் எப்படிப் பட்டம் பெற்றவர்களுக்கு ஒரு மதிப்பு இருக்கிறதோ அதே போல் அந்த நாளிலும் ஒருவர் சர்வக்ஞரானால் அவர் வாக்குக்குப் பெரு மதிப்பு இருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒருவர் அத்வைதம் சொல்கிறாரென்றால் அப்போது நிச்சயமாக அதனை மக்கள் ஒப்புக் கொள்வார்கள் அல்லவா? அதோடுகூட, மனித அறிவானது எவ்வளவு விஷயங்களை உள்ளடக்கக் கூடும் என்பதை மக்கள் அறிந்தால்தான் தங்கள் ஆத்மாவின் எல்லையற்ற மகிமையை நம்புவார்கள் என்றும் சங்கரர் கருதி, தம்மைக் கலைக் களஞ்சியமாக்கிக் கொண்டிருக்கலாம்!

ஆசாரியர் எல்லாக் கலைகளையும் கற்றார். வேதம், வேதாந்தம், புராணம், இதிகாசம், இலக்கியம், தர்மசாஸ்திரம் இவற்றைப் போலவே ஜோதிஷம், கணி

தம், சங்கீதம், தநுர் வேதம் எல்லாவற்றையும் அவர் பயின்றார். மந்திர சாஸ்திரத்தில் நிபுணராகவே விளங்கினார். சங்கரர் இயற்றிய நூல்களைப் படித்தால் அவருக்கு எத்தனை கலைகளில் பாண்டித்தியம் இருந்தது என்பது நன்கு தெரியும்.

அவருக்குத் தெரியாத கலையே கிடையாது என்பதற்கு ஒரு கதை சொல்வதுண்டு. செருப்புத் தைப்பவன் ஒருவன் அவர் சரியாக அந்த வித்தையைக் கற்றிருக்கிறாரா என்று பரீட்சித்துப் பார்க்க விரும்பினான். அவரிடம் வந்தான். (அவரை யாரும் அணுக முடியும் என்பதற்கு இது ஒரு சான்று.) ஒரு கிழிசல் செருப்பு, ஊசி, நூல் இவற்றை ஆசாரியர் முன் போட்டான். ஆசாரியர் ஊசியை எடுத்தார். அதை மூக்குத் தண்டின் மேல் இரண்டு முறை தேய்த்து விட்டுத் தைக்கத்தொடங்கினார். அசந்து போய் விட்டான் அந்தத் தொழிலாளி.

ஊசியை மூக்கில் தேய்த்த பின்னரே வேலை ஆரம்பிப்பது செருப்புத் தைப்பவர்களின் சம்பிரதாயம். தோலிலுள்ள ஓர் எண்ணெய்ப் பசை ஊசியில் படுவதால் அது சுலபமாகத் துளைக்கும் என்பதே காரணம். அப்படிப் போலவே செய்து பகவத்பாதர் அந்தச் செருப்புத் தைப்பவனிடம் 'சபாஷ்' பெற்றார்.

கல்வி வேறு, படிப்பு வேறு. புத்தகத்தில் விஷயங்கள் இருப்பது போல் மண்டையில் விஷயத்தைத் தேக்கிக் கொள்வது படிப்புதான்; கல்வியாகாது. அது அகம்பாவத்தைத்தான் உண்டாக்கும். புத்தியை எப்போதும் இதயத்திடம் பாடம் படித்து அடங்கி நடக்கச் செய்வதுதான் உண்மையான கல்வி. 'வித்யா விநய சம்பன்னே' என்று கல்வியையும் பணிவையும் சேர்த்தே கூறும் சாஸ்திரங்கள். அந்த வித்யை, விநய சம்பத்து இரண்டுக்கும் இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஆசாரிய சங்கரர். அவர் சண்டாளனை வணங்கிக் குரு என்று போற்றியதும், மரமேறியிட மிருந்தும் வித்தை கற்றதுமே இதற்குப்போதிய சான்றாகும்.

புத்தி இதயத்துக்குப் பணியும் போது தான் இதயத்தே உள்ள அகவொளி புலனாகும். அதுவே ஆண்டவன். அதை அறிவதே கல்வியின் பயன்.

கற்றதனால் ஆயபயன் என்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

என்று இதையே பாடினார் வள்ளுவர் பெருமான். சங்கரர் அருளிய 'பஜகோவிந்த'த்தின் உபதேசமும் இதுவே.

வித்தையின் ஒரு பகுதியான சித்திகளும் பயில்பவனை மயக்கவல்லன. இதை எண்ணியும் வருந்தினார் சங்கரர்.

நீண்ட காலம் யோகம் புரிந்து அதன் பலனாக வானத்தில் பறக்கும் ஆற்றலைப் பெற்ற ஒருவனை சங்கரர் கண்டார். அவரது கருணை இதயம் கசிந்தது. ''அப்பனே, வானத்தில் பறக்க இத்தனை பரிசிரமம் வேண்டாமே! பாபம் செய்பவர்களெல்லாம் காகமாகவும், கழுகாகவும் பிறந்து, — உன்னைப் போல ஒரிரு ஜாமமல்ல — ஜன்மம் முழுதும் பறக்கிறார்களே! பரதத்துவமாகப் பரிணமிக்கும் யோக உபாயத்தை இதற்காகவா செலவிட்டாய்?'' என்றார். எல்லாவற்றையும் ஏற்று, ஆனால் அதை உரிய இடத்தில் வைத்து, ஒழுங்கு செய்ததே ஆசாரியரின் தனிப் பெருமை.

சகல ஜீவராசிகளும் சங்கரருக்கு ஒன்றுதான். சகல தேவதைகளிடமும் அவருக்குப் பக்தி. சகல கலைகளும் அவரை அண்டி, கொழுநனை அடையும் மங்கை போல் அழகு பெற்றன. கலைத் தெய்வத்துக்கே சங்கரர்தான் பொருள் தந்தார் என்று போற்றுகிறார் சர்வக்ஞாத்மர். ஞானப் பொய்கை என்னும் சரஸில் இருப்பதாலேயே கலைத் தேவி சரஸ்வதி எனப்படுகிறாள். நவரஸங்களோடு கூடிய ஸ-ரஸ-வதி என்பதே சரஸ்வதியாயிற்று என்றும் கொள்ளலாம். இந்தப் பொய்கையானது மற்ற மதஸ்தர்களின் வாதத்தால் கலங்கிக் குழம்பிக் கிடந்தது. ரஸமேயில்லாத சேற்றுக்குழியில் வசிப்பவளாகி விட்டாள் வாணி. சங்கரர் தான் அதனைத் தமது சரியான வாதத்தால் தெளிவுபடுத்திப் பொய்கையாக்கி, சரஸ்வதிக்கு அவளது பெயர் பொருந்துமாறு செய்தார்.

அப்படித் தம்மைக் காத்தவரை இப்போது தோல்வியுறச் செய்வதா எனத் தயங்கினாள் சரஸவாணி. அவளது தயக்கத்துக்கு இன்னொரு காரணமும் இருந்தது. தான் கேட்காமல் விட்ட அந்த ஒரு கேள்வியைக் கேட்பது முறையா என்றும் அவள் திணறித் தடுமாறினாள்.

'மானவதியான ஒரு பெண்ணாகப் பிறந்தவள் கேட்கக் கூடிய கேள்விதானா அது? அதுவும் சந்நியாசி ஒருவரை நோக்கி? சந்நியாசி.... சந்நியாசி...'


சந்நியாச தீட்சை பெறத் துடிக்கும் பதியை ஒரு முறை பார்த்தாள் சரஸவாணி. அவள் நெஞ்சைப் பிசைந்தது. மனத்தை இரும்பாக்கிக் கொண்டு அந்த வினாவைப் போட்டே விட்டாள்.

இல்லற இன்பத்தைப் பற்றி சங்கரரிடம் வினவினாள்.


ஆசாரியர் அதிர்ந்து போனார்.

(தொடரும்)

ஊர் வம்பு



தர்ம சங்கடம்




வியாஸ பூஜை

இன்று நாமெல்லாம் இந்துக்கள் என்று நம்மைப் பெருமையாகச் சொல்லிக் கொள்வதற்குக் காரணம் இரண்டு மகா புருஷர்கள். ஒருவர் திருமாலின் அம்சமான வியாச மகரிஷி. மற்றவர் ஈசுவரனின் அவதாரமான ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள். ஸ்ரீ பகவத் பாதர்கள் ஸ்தாபித்த மடங்களில் வியாஸ பூஜை நடைபெறும் விமரிசையும், வைபவமும் சொல்லில் அடங்காது. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இந்த வழிபாட்டை நடத்தும்போது குரு பக்தியின் உருவமாகவே திகழ்வார்கள். வியாசர் மட்டுமின்றி, நித்திய ஜகத்துக்கு வழிகாட்டிப் பரம உபகாரத்தைச் செய்த எல்லா ஆசாரிய புருஷர்களையும் ஆராதிக்கும் குரு பூர்ணிமை இம்மாதம் 17-ந் தேதி நிகழ்கிறது. இவ்வாண்டு ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த காரைக்குடியை அடுத்த இளையாத்தங்குடியில் இந்தப் பூஜையை நிகழ்த்துகிறார்கள். ஸ்ரீ காமகோடி பீடாதிபதிகள் தமது ஐம்பத்தாறுவது சாதுர்மாஸ்யவிரதத்தையும் அங்கேயே நடத்துகிறார்கள். இந்த இரண்டு மாதங்களில் அத்வைத சபையின் ஆண்டுக் கூட்டங்கள் நடைபெற விருக்கின்றன. இவற்றில் பல பண்டிதர்கள் பங்கெடுத்துக் கொண்டு வேதாந்தத்தைப் பற்றி உபந்யாசங்கள் நிகழ்த்துவார்கள்.

சாதுர் மாஸ்யத்தின்போது சென்னை நகரம் ஒரு தனிப் பேறு பெறுகிறது. சில ஆண்டுகளுக்கு முன் இங்கு எழுந்தருளிச் சென்னையைச் சிவபுர மாக்கிய காமகோடி பீடாதிபதிகள் அப்போது திருவாய் மலர்ந்தருளிய உபந்யாசங்களை மீண்டும் கேட்கும் பாக்கியம் சென்னை மக்களுக்குக் கிட்டுகிறது. பழைய மாம்பலத்திலுள்ள சங்கர மடத்திலும், நுங்கம்பாக்கம் உபநிஷத ஆசிரமத்திலும் இந்த உபந்யாசங்களின் டேப்ரிகார்டுகள் ஜூலை 17ந் தேதியிலிருந்து ஒலிபரப்பப்படுகின்றன.







பல்லாண்டு கூறுகிறோம்!

உழைப்பும், விடாமுயற்சியும், ராஜதந்திரமும்,
மதியூகமும் மெத்தப் படைத்து, காங்கிரஸ் ஸ்தா
பனத்தைச் சேர்ந்தவர்கள் சிதறுண்டு போகாமல் தட்டிக்
கொடுத்துக் கட்சி 'மேலிடத்தில்' நல்ல பெயர் பெற்றிருப்
பதைப் போல் அடித்தளங்களிலும் மதிப்புப் பெற்று, எல்லாவற்
றுக்கும் மேலாக நாட்டு மக்களின் நல்லெண்ணத்தையும் பெற்று மணி
விழாவுக்குப் பாத்திரமாக விளங்கும் திரு காமராஜ் அவர்கள் நீடூழி வாழ்ந்து
நாட்டுக்கு நற்பணிகள் புரியவேண்டுமென இறைவனை இறைஞ்சுகிறோம்



வி. கே. ராமசாமி, வி. ஆர். ராஜ கோபால், டி. கே. ராமச்சந்திரன், எஸ் வரலட்சுமி, எம். என். ராஜம் ஆகிய எல்லா நல்ல நடிகர்களையும் "வடிவுக்கு வளைகாப்பு" ஒருவாறு தீர்த்துக் கட்டி விட்டது. ஸப்ஜாடா க்ளோஸ்!

நடிகர் திலகம் சிவாஜி கணேசனை மனத்தில் தங்கவில்லை யென்றால் மற்ற வர்களைப்பற்றிக் கூற என்ன இருக்கிறது!

என்ன கதையோ! என்ன கருத்தோ! படம் முழுவதும் அசடு வழிகிறது. படத் தில் வரும் ஒரு பாத்திரம் கூடச் சிந் தித்து உருவாக்கப்பட்டதாகத் தெரிய வில்லை. எல்லாம் அரையும், குறையு மாகவே நின்று விடுகின்றன.

வடிவு என்னும் ஏழைப் பெண்ணாக வந்து குமார ராஜாவின் பிறந்த நாள் அன்று நடந்த விளையாட்டுப் போட்டி களிலெல்லாம் வெற்றி பெற்று அவரது உள்ளத்திலும் இடம் பெற்று விட்ட சாவித்திரி ஒருவர்தான் நம் உள்ளங் களிலும் இடம்பிடிக்க முயன்றிருக்கிறார். குமார ராஜாவை முதல் முதலில் சந் திக்கும் கட்டம் சாவித்திரியின் நடிப்பின் சிகரமாக அமைந்து விட்டது.

வடிவின் தந்தையாக வரும் எஸ்.வி. சுப்பையாவின் நடிப்பில் கொஞ்சம் உயிர் இருக்கிறது. ஆனால் அது வழக்கம்போல் உயர்வாயில்லை.

ஜமீந்தாரின் வளர்ப்பு மகனுக்கு அரசுரிமை போய்விடக் கூடாதே என்று அவரது இளையதாரம் அங்கலாய்க்கிறாள். தன் சகோதரனின் உதவியினால் பலவித மான சதிச் செயல்களைப் புரிகிறாள். ஜமீந்தாரின் பிரதம காரியதரிசியின் மகள் குமார ராஜாவைக் காதலிக் கிறாள். ஆனால் அவன் ஏழை அடைப் பக்காரனின் மகளான வடிவைக் காத லிக்கிறான்.

பல ஆண்டுகளாகத் தயாரிக்க இதில் என்ன இருக்கிறது என்று புரியவில்லை. வெளிப்புறக் காட்சிகளை யெல்லாம் தவிர வேறு எதுவுமே நன்றாயில்லை.


குமார ராஜாவை வரவழைப்பதற் காகக் கல்யாணமாகாத இளம் பெண் வடிவு கர்ப்பமாக இருப்பதாகக் கூறி அவளுக்கு வளைகாப்புக் கொண்டாடு வதாகக் காட்டும் அசட்டுக் கற்பனையை என்னவென்று சொல்ல? படம் பார்ப்ப வர்களுக்கு ஒரே வேதனை! தந்தையையே எதிர்த்துப் பேசித் தன் காதலைச் சாதித் துக் கொள்ளும் நெஞ்சுரம் படைத்த வடிவு அசட்டுத்தனமாகத் தனக்கு நடத் தப்படும் வளைகாப்புக் கொண்டாட் டத்தை ஏன் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யவில்லை?

பாட்டுக்கள் படம் பார்ப்பவர்களை யெல்லாம் பாடாய்ப் படுத்தி வைக்கின் றன. ஒன்றுகூட நன்றாயில்லை.

இந்தக் கதையைப் படமாக்க முயன் றதே பெரிய தவறு. அதைவிடப் பெரிய தவறு இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு இதை வெளியிட்டது. கலை நுணுக் கமோ, வேறு சிறந்த உத்திகளோ இல்லாத உதவாக்கரைக் கதையை என்னத்துக்காகப் பெரும் செலவில் பட மாக்க வேண்டும்?

"வடிவுக்கு வளைகாப்பு" தமிழ்ப் படங்களின் விருவுக்கு வழி காட்டுமோ என்று எதிர்பார்த்து நீண்ட காலமாகக் காத்திருந்தவர்கள் சந்தேகத்துக்கு இட மின்றி ஏமாந்துதான் போயிருப் பார்கள்!

— காந்தன்



இலங்கையில் தமிழ்ப் பல்கலைக் கழகம்

ரஜனி

கொழும்பு, ஜுலை 12உ.

சென்ற வாரம் யாழ்ப்பாணத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அரசாங்க சேவையிலுள்ள தமிழ் உத்தியோகஸ்தர்கள் அடுத்த வருட முடிவுக்குள் சிங்களம் படித்துச் சிங்கள மொழியில் கடமையாற்றப் பழகிக் கொள்ள வேண்டும் என்றும் இல்லாவிட்டால் அவர்கள் பென்ஷனுடன் ஓய்வுபெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் உத்தியோக மொழிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உத்தியோகங்களை இழக்க விரும்பாத தமிழர்கள் சிங்கள மொழியைப் படித்து அதில் தேர்ச்சி பெறுவதைத் தவிர வேறு வழியில்லை. அநேகம் தமிழ் உத்தியோகஸ்தர்கள் இரகசியமாகச் சிங்களம் படிக்கிறார்கள் என்றும், இருக்கும் வேலைகளை இழக்க அவர்கள் தயாராக இல்லை என்றும் கூறப்படுகிறது. இது எவ்வளவு தூரம் உண்மை என்பது தெரியவில்லை. எப்படியிருந்த போதிலும் இது வரையில் சிங்களம் தெரியாததற்காக ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர்களில் நூற்றுக்கு எண்பது பேர்கள் சிங்களவர்களே. பாக்கி இருபது பேர்கள்தான் தமிழர்கள். சமீபத்தில் அநுராதபுரத்தில் நடைபெற்ற உப தேர்தலில் பார்லிமெண்ட் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிங்கள எம். பி.யும் சிங்களத்தில் கடமை பார்க்க முடியாது என்று சொல்லி அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகிக் கொண்டவர்தான். எந்த அரசாங்கம் சிங்கள மொழியை உத்தியோக மொழியாக்கியதோ, அதே அரசாங்கம்தான் சிங்களம் தெரியாத அரசாங்க உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்த ஒரு சிங்களவரைத் தன்னுடைய அபேட்சகராக அநுராதபுரம் தேர்தலில் நிறுத்தி வெற்றிபெறச் செய்திருக்கிறது. சிங்களவருக்கு நன்மை புரிவதற்காகவென்று இயற்றப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் அநேகம் சிங்களவர்களையே வேலைகளை இழக்கச் செய்து வருகிறதென்பது புள்ளி விவரங்களிலிருந்து வெளியாகியிருக்கிறது.

தமிழ் உத்தியோகஸ்தர்கள் சிங்களம் படிக்கக் கூடாது என்றும் பதவிகளில் இருந்து கொண்டே போராட்டம் நடத்த வேண்டுமென்றும் தமிழரசுக் கட்சி கடந்த வாரக் கூட்டத்தில் தீர்மானித்திருக்கிறது. தமிழர்கள் எல்லோரும் மொழி உரிமைக்காகப் போராட்டத்தை மேலும் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று இன்னொரு தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. தமிழரசுக் கட்சியின் வருடாந்தர மகாநாட்டை 25, 26, 27-ம் தேதிகளில் மன்னாரில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. கட்சியின் தலைமைப் பதவிக்குத் தற்போதைய தலைவரும் பட்டிருப்புத் தொகுதி பார்லிமெண்ட் அங்கத்தினருமான திரு எஸ். எம். ராஜமாணிக்கம் என்பவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

தேசிய இன ஒற்றுமை மகாநாடு

மொழிப் பிணக்குகளினால் வகுப்பு வேற்றுமைகள் பல்கிப் பெருகியிருக்கும் இச்சமயத்தில் தேசிய இன ஒற்றுமையை வளர்க்கக் கூடிய கல்வி முறை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஆராய்வதற்காக அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கம் கடந்த வாரம் கொழும்பில் ஒரு கருத்தரங்கை நடத்தியது. அதில் பிரபல அரசியல் தலைவர்களும் கல்விமான்களும் கலந்து கொண்டு அரிய உரை நிகழ்த்தினார்கள். ஆனந்தாக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பேசியபோது தமிழர் சிங்களவர் ஆகிய இரு வகுப்பாருமே தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்றும் இன ஒற்றுமையை வளர்க்க இது ஒன்றுதான் சிறந்த வழி என்றும் ஓர் அருமையான யோசனையைச் சொன்னார். தமிழர் சிங்களமும் சிங்களவர் தமிழும் படிப்பதென்று ஏற்பட்டுப் பள்ளிக்கூடங்களில் இவ்விரு மொழிகளும் கட்டாயப் பாடமாக்கப்பட்டால் மொழிப் பிணக்குத் தலையெடுக்க இடம் ஏது? உண்மையைச் சொல்லப் போனால் தமிழர்கள் சிங்கள மொழியையோ அல்லது சிங்களம் படிப்பதையோ எதிர்க்கவேயில்லை. சிங்களத்தை நாட்டின் ஒரே உத்தியோக மொழியாகக் கட்டாயத்தின் மீது அதைத் தங்கள் மீது திணிப்பதை மட்டுமே அவர்கள் எதிர்க்கிறார்கள்.

டாக்டர் என். எம். பெரேரா இந்தக் கருத்தரங்கத்தில் பேசியபோது சிங்களவர் ஆளும் வர்க்கம் என்றும் மற்றவர்கள் ஆளப்பட வேண்டியவர்கள் என்றும் கருதப்படும் வரையில் இந் நாட்டில் வகுப்பு ஒற்றுமை ஒரு போதும் நிலவமாட்டாது.



'தப்புக் கண்டு பிடிப்பது ரொம்ப தவறான செயல்! அதை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளுங்கள்!''

'' அது எப்படி ஸார், நான் தப்பு கண்டு பிடிக்காமல் இருக்க முடியும் - நான் பத்திரிகை ஆபீஸில் ப்ரூப் படிப்பவனாச்சே!''

இனப்பாகுபாடு இருந்து வரும் நாட்டில் ஜனநாயகமும் சோஷலிஸமும் தழைக்காதுஎன்றும் கூறினார். இன ஒற்றுமையை வளர்க்க உதவாத கல்வி கல்வியே அல்ல என்றார். அகில இலங்கை ஆசிரியர்கள் சங்கத் தலைவர் திரு சபாரத்தினம் பேசுகையில் தேசிய ஒற்றுமையை அஸ்திவாரமாகக் கொண்டே எந்தப் பொருளாதாரத் திட்டத்தையும் வெற்றிகரமாக நடத்துவது சாத்தியம் என்பதைச் சுட்டிக் காட்டினார். தேசியக் கல்வித் திட்டம் ஒன்றைத் தயாரிக்க கல்வி மந்திரி திட்டமிட்டு வரும் இந்நேரத்தில் ஆசிரியர்கள் சங்கம் தீர்க்கதரிசனத்துடன் இந்தக் கருத்தரங்கத்துக்கு ஏற்பாடு செய்திருந்தது பெரிதும் பாராட்டத் தருந்தது.

தமிழ்க் கலாசாரப் பல்கலைக் கழகம்

யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ்க்கலாசாரப் பல்கலைக் கழகத்தை நிறுவுவதென்று அரசாங்கம் தீர்மானித்து அதற்குத் தேவையான சட்டம் எழுதுமாறு அதிகாரிகளுக்குப் பணித்திருக்கிறது. இந்தத் தீர்மானம் முன்னாள் தபால் தந்தி இலாகா அமைச்சரும் பரமேசுவராக் கல்லூரி அதிபருமான திரு க. நடேசப்பிள்ளை அவர்களுக்கு ஒரு மிகப் பெரிய வெற்றியாகும்.

கொழும்பில் இரண்டு பௌத்த கலாசாரப் பல்கலைக் கழகங்கள் நிறுவப்பட்ட நாள் முதல் இந்துக்களுக்கும் அதே போன்ற ஓர் இந்துப் பல்கலைக் கழகத்தை நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று திரு நடேசப்பிள்ளை அரசாங்கத்திடம் இடைவிடாது வற்புறுத்தி வந்தார். அவருடைய கோரிக்கையைக் காலம் சென்ற பிரதம மந்திரி திரு பண்டார நாயகா ஏற்றுக் கொண்டாரென்றாலும் இந்த யோசனையைச் செயல்படுத்துவதற்கு முன்னால் அவர் கொல்லப்பட்டுவிட்டார். திரு நடேசப்பிள்ளை தற்போதைய பிரதமரையும் கல்வி மந்திரியையும் விடாமல் வற்புறுத்தியதன் பயனாக இந்து கலாசாரப் பல்கலைக் கழகத்தை யாழ்ப்பாணத்தில் நிறுவுவதென்று அரசாங்கம் இப்பொழுது தீர்மானித்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ராமநாதன் கல்லூரி, பரமேசுவராக் கல்லூரி ஆகிய இரு கல்லூரிகளையும் இணைத்து இந்துப் பல்கலைக் கழகத்தை நிறுவுவது என்றும் இதற்கு ராமநாதன் பல்கலைக் கழகம் என்று பெயரிடுவது என்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. புதிய பல்கலைக் கழகத்துக்கு ராமநாதன் பல்கலைக் கழகம் என்று பெயர் வைப்பது மிகவும் பொருத்தமானது. இலங்கையின் சமீப சரித்திரத்தில் இந்து சமயத்துக்காகப் பணியாற்றிய மாபெரும் அறிஞர்களில் காலஞ்சென்ற ஸர் பொன்னம்பலம் ராமநாதனைப் போன்றவர்கள் வேறு யாருமேயில்லை. அந்தப் பெரியாரின் நினைவு நாட்டு மக்களின் மனத்தில் என்றென்றும் மறையாமல் பசுமையாக இருக்க அவரது பெயரையே இந்துப் பல்கலைக் கழகத்துக்கு வைப்பதென்று அரசாங்கம் தீர்மானித்திருப்பதைத் தமிழ் மக்கள் அனைவரும் ஏகமனதாக மகிழ்ச்சியுடன் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

இடமில்லை, இடமில்லை !

இவ்வாண்டு பள்ளிகளிலோ கல்லூரிகளிலோ 'அட்மிஷ'னுக்காக அலைந்த பெற்றோர்களையும் உற்றோர்களையும் தமது அநுபவத்தைக் கட்டுரை வடிவில் ஆக்கிக் 'கல்வி'க்கு அனுப்புமாறு சென்ற இதழில் கோரியிருந்தோமல்லவா ? நேயர்களின் விருப்பத்துக்கிணங்க, இந்தக் கட்டுரைகள் கல்வி காரியாலயத்துக்குக் கிடைக்க வேண்டிய தேதியை ஜுலை 20-ந் தேதியிலிருந்து ஜுலை 31-ந் தேதிக்குத் தள்ளி வைத்திருக்கிறோம். கட்டுரை கல்வி இதழில் ஒரு பக்கத்துக்கு மேற்போகாமல் அமைய வேண்டுமென மீண்டும் நினைவுறுத்துகிறோம்.

வட்ட மேஜை

'ஓவர்லோடு'

பஸ், லாரிகளுக்குச் சர்க்கார் விதிக்கப் போகும் புதிய வரியினால் போக்குவரத்தை இனி தொடர்ந்து நல்ல முறையில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

பஸ் கட்டணத்தை உயர்த்தினால் பொது ஜனங்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற வாதமும், கட்டணத்தை உயர்த்தாவிடில் பஸ் சர்வீஸை நடத்த முடியாதென்ற நிலைமையும் வரி உயர்வால் உண்டாகியிருக்கின்றன.

பஸ் சர்வீஸைப் பொறுத்த வரையில், தமிழ் நாட்டில் சுமார் 5000 பஸ்கள் உபயோகத்தில் இருக்கின்றன. இதன் மூலம் 'ஸீட்' ஒன்றுக்கு வருடத்துக்கு ரூ. 170 வீதம் 55 'ஸீட்'டுகள் கொண்ட பஸ் ஒன்றுக்கு ரூ. 9350 வீதம் வரியாகச் சர்க்காருக்குச் செலுத்தப்படுகிறது. இது தவிர டயர், ஸ்பேர் பார்ட்ஸ் போன்றவைகளில் மறைமுக வரி வேறு செலுத்தப்படுகிறது.

தினசரி சுமார் 160 மைல் ஓடக்கூடிய பஸ் நிர்வாகச் செலவு இதன்படி மைல் ஒன்றுக்கு நாளொன்றுக்கு ரூ. 1-13 வீதம் ஆகிறது. பெரும்பாலும் ரூ. 150 முதல் ரூ. 200 வரையில் வசூலாகக் கூடிய பஸ்கள்தான் அதிகம் இருக்கின்றன.

இப்போது புதிய வரியினால் மேலும் 'ஸீட்' ஒன்றுக்கு வருடத்திற்கு ரூ. 130 வீதம் பஸ் ஒன்றுக்கு ரூ 7150 அதிக வரி விதிக்கப்பட்டிருக்கிறது. இதையும் சேர்த்து வருடத்துக்கு ரூ. 300 வீதம் 55 சீட்டுகள் கொண்ட பஸ் ஒன்றுக்கு வரியாக. ரூ. 16500 வரையில் இனி செலுத்த வேண்டும்.

இந்தத் தாங்கமுடியாத வரி, போக்குவரத்தை நடத்துபவர்களுக்குப் பெருத்த நஷ்டத்தை உண்டாக்கும். இதனால் நல்ல முறையில் பொது ஜனங்களுக்கும் சௌகரியம் அளிக்க முடியாது. இது சர்க்காருக்கும் நஷ்டத்தை உண்டாக்கும். முதலீட்டுக்குத் தகுந்த லாபமும், நம்பிக்கையும் கிடைக்கவில்லையானால், எந்தத் தொழிலுமே உற்சாகமின்றி நசித்து நஷ்டத்தை உண்டாக்கும்.

பஸ் தொழிலைப் பொறுத்த வரையில் பெரிய முதலீடு தேவை. இந்த முதலீடு முழுதும் தேய்மானம் உள்ளது. இதற்குத் தகுந்த வருமானம் இல்லையானால் யாரும் இந்தத் தொழிலை நடத்த முன்வர மாட்டார்கள்.

ராசிபுரம்
7–7–62

வி. மாரப்பா

தென்னைமரத்தில் தேள் கொட்டினால்...!

நம் மாநில பட்ஜெட்டும் புதிய ரயில் கட்டண விகிதங்களும் வந்த சில தினங்களில் சாமான்களின் விலை தாறுமாறாக உயர்ந்திருக்கின்றது. இந்தப் பட்ஜெட்டுக்குச் சம்பந்தமில்லாத சாமான்களும் இவற்றில் இடம் பெற்றிருக்கின்றன. சில தினங்களுக்கு முன்பு ரூ. 1-37க்கு விற்ற உளுத்தம் பருப்பின் விலை இன்று ரூ. 1—87. சீயக்காய் விலை 1—75 லிருந்து ரூ. 2—25 ஆக உயர்ந்துள்ளது. ரயில் கட்டண உயர்வுக்கும் மார்கோ சோப் ஒன்று 0—56 லிலிருந்து ஒரு வாரத்தில் 0—72 ஆக உயர்ந்திருப்பதற்கும் என்ன சம்பந்தமோ?

வெளி நாட்டிலிருந்து வரும் ஹார்லிக்ஸ் ஓவல்டின் இவற்றின் இறக்குமதியைத்தான் கட்டுப் படுத்தினார்கள். அதற்காக ஐந்து ரூபாய்க்கு விற்ற உள்நாட்டு போர்ன்விட்டா பத்து நாட்களில் ரூபாய் ஆறு ஆக உயர வேண்டுமா? கடவுள்தான் இந்த ஏழை நாட்டை இந்நிலையிலிருந்து காக்கவேண்டும்.

கோடம்பாக்கம்
4–7–62

எஸ். வெங்கடேசன்

சக்தி பிறந்தது!

ஜூலை 1-ந் தேதி கல்கி இதழில் வெளியான "சக்தி பிறந்தது" என்னும் சிறுகதை என்னை மிகவும் கவர்ந்தது. தான் செய்யும் எந்த ஒரு காரியமும் தெய்வானுக்கிரகம் இன்றேல் நிறைவேறாது என்பதை மனித மனம் உணர்கிறது. எனினும் அதை ஒப்புவதில்லை. தன் சக்தியே செய்வித்தது என்ற இறுமாப்பு மனித உள்ளத்தின் இயற்கை உணர்வு. சிந்தித்துப் பார்த்தால் அவனன்றி அணுவும் அசையாது என்பது தெரியும். நடையில் விறுவிறுப்பு போதாது. இருந்தாலும் நல்ல படைப்பு.

தாம்பரம்
2–7–62

எஸ். உத்திரபூஷணம்

வெறும் விலங்கு

சென்ற வார அட்டைப் படக் கதை "வெறும் விலங்கு" வெகு பிரமாதம். பாவம்! இதுபோல் எத்தனை குற்றவாளிகள் தர்மத்தை அறிந்தும் தவிர்க்க முடியாமல் குற்றம் செய்கிறார்களோ?

வெள்ளக்குட்டை
13–7–62

மா. ஆறுமுகம்

டாக்டர் ஸ்ரீஹரியின் சுற்றுப் பயணம்

'நாட்டு வைத்தியம்' டாக்டர் ஸ்ரீஹரி அவர்கள் ஜூலை 30-ந் தேதி கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸில் டில்லிக்குப் புறப்படுவார். ஆகஸ்டு 1-ந் தேதி டில்லி சேர்ந்து ஜந்தர் மந்தர் ரோட்டிலுள்ள தென் இந்தியக் கிளப்பில் தங்குவார். பிறகு 3-8-62 புறப்பட்டு 5-ந் தேதி செகந்திராபாத் வந்து தாஜ் ஹோட்டலில் தங்குவார். 6, 7 தேதிகளில் ஹைதராபாத்தில் கல்தான் பஜார் ரோட்டில் உள்ள தாஜ்மகால் ஹோட்டலில் தங்குவார். 7-ந் தேதி மாலை அங்கிருந்து புறப்பட்டு 8-ந் தேதி சென்னை வந்து சேருவார்.


காலத்தில் சேமித்த பணம்
"என்னுடைய விளைச்சல் பாழாகிவிட்டது. பணமெல்லாம் போய் விட்டது. வீட்டில் ஒரு மணி தானியம் கூட இல்லை. என் வாழ்க்கையே இருண்டு விட்டது ராஜு."
"ஏன் கவலைப்படுகிறீர்கள் முத்து? உங்களுடைய ஆயுள் இன்சூரன்ஸ் பாலிசியின் பேரில் பணம் வாங்க முடியுமே! நீங்கள் ஏன் எல்.ஐ.சி ஏஜெண்டை நாடக் கூடாது?"
முத்து எல்.ஐ.சி ஏஜெண்டிடம் வருகிறார்
"ஆம்! உங்களுடைய பாலிசியின் பேரில் நீங்கள் கடன் பெற முடியும்."
விரைவில் எல்.ஐ.சியிலிருந்து முத்துவிற்குப் பணம் கிடைக்கிறது. அடுத்த அறுவடை வரைக்கும் அவருக்குக் கவலையில்லை.
அடுத்த பருவத்தில் அமோக விளைச்சல். முத்துவின் துன்பங்கள் மறைந்து விட்டன. கடனைக் கூட அடைத்து விட்டார் அவர்.
வியக்கத்தக்கச் செயல் புரிகிறது ஆயுள் இன்சூரன்சு. அது, வாழ்வின் இடர்களிலிருந்து பாதுகாப்பளிக்கிறது.
ஆயுள் இன்சூரன்சு
போல ஆதரவு தருவது எதுவுமே இல்லை

Khira


கீரா ஸ்டீல் காபினெட்

உங்கள்

வீட்டுக்கும்...

மற்றும்

ஆபீஸுக்கும்



யூட்டிலிட்டி பீரோ
78"x36"x19"

ரூ. 250.00

(உள்ளூர் வரிகள் தனி)

உடனே கிடைக்கும்

Khira

கீரா ஸ்டீல் வொர்க்ஸ்
பிரைவேட் லிட்.,
பம்பாய்-54

எல்லா முக்கிய இடங்களிலும்
கீராவின் அதிகாரம் பெற்ற
வியாபாரிகளால் விற்பனை
செய்யப்படுகின்றன

அங்கீகாரம் செய்யப்பட்ட டீலர்களும் ஸ்டாக்கிஸ்டுகளும் :

சென்னை : கிக்கிபர் தூக்கி & கோ., லிமிடெட்; பகவத் இப்ராஹிம் & கோ., பிரைவேட் லிமிடெட்; இந்தியன் ரேடியோ ஹவுஸ்; ஆம்னன் & கோ.

கோயமுத்தூர், ஈரோடு, சேலம் : ராயல் டிரேடிங் கோ

எர்ணாகுளம், திருச்சூர் : சாகோமஸ் டீ. பி. கோஸப்பாய் & சன்ஸ்

திருநெல்வேலி, நாகர்கோவில் : ஆர். ஏ. செண்பக நாடார்
பி. வி. பி. ஜயசுப்ரமணிய நாடார் & கோ.

ஆலப்புழை, கோட்டயம் : ஜாசன் & கோ

கும்பகோணம், மதுரை, திருச்சிராப்பள்ளி : ஸ்ரீ கணேஷ் ஸ்டோர்ஸ்.

விசாகப்பட்டினம் : காவேரி ஏஜன்சீஸ்

விஜயவாடா, ராஜமகேந்திரபுரம் : ஸ்ரீ ராமா கார்ப்பொரேஷன்.

மற்றும்

பெங்களூர், கன்னிக்கோட்டை, மங்களூர், மைசூர், பாலக்காடு, கொல்லம் முதலிய இடங்களிலும் உள்ளனர்.

சிந்தனை மேடை

அரவிந்தன்

7. திரைப்படச் சுகங்கள்

விழிப்பில்லாத போது காண்கிற சொப்பனங்களைக் கனவுகள் என்று மன்னிக்கலாம். ஆனால் விழித்துக் கொண்டே காண்கிற சொப்பனங்களும் உள்ளன. உழைப்பினாலும், அநுபவப்பட்டு முன்னுக்கு வர வேண்டும் என்பதிலும் நம்பிக்கை குன்றி எந்தவிதத்திலோ மிகக் குறுகிய காலத்தில் சொகுசான வாழ்க்கையை அடைய வேண்டும் என்ற ஆசை இப்போது இளைஞர்களிடையே பெருகி வருகிறது. சொகுசான வாழ்க்கையை அடைய வேண்டும் என்று ஆசைப்பட எல்லோருக்கும் உரிமை உண்டுதான். ஆனால் நம்பிக்கையும், நாணயமான உழைப்பில் ஆர்வமும் குன்றிச் சொகுசான வாழ்க்கைக்கு மட்டும் ஆசைப்படுவது சமுதாயத்தின் நியாயமான பலத்தை நாளுக்கு நாள் நலிந்து போகும்படி செய்து விடும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த நாட்களில் பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் படிக்கிற இளைஞர்களில் பெரும்பாலோர் சினிமாவில் வருகிறது போன்ற கற்பனைச் சுகவாழ்வுக்கும், கற்பனைக் காதல்களுக்கும் அலைந்து ஆசைப்படுகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டால் நாளைக்கு உருவாக வேண்டிய சமுதாயத்தைப் பற்றி நமக்குப் பயமாயிருக்கிறது.

"ஒப்பில்லாத சமுதாயம் -
உலகத்துக்கொரு புதுமை"

என்று பாரதி வாழ்த்தி மகிழ்ந்த பாரத சமுதாயம் அதன் இடமான பெருமையிலிருந்து இனி என்றும் குன்றிப் போய்விடக் கூடாது என்பதில் இந்த விசால பாரதத்தின் குடிமகன் ஒவ்வொருவனுக்கும் கவலையும் அக்கறையும் வேண்டும். பலமான உழைப்பின் பேரில் கட்டி முடிக்க வேண்டிய சமுதாய நன்மைகளைச் சொப்பனம் காண்பதைப் போன்ற தனித்தனி மனிதர்களின் சில்லறைச் சுகங்களால் பலவீனப்படுமாறு செய்துவிடக் கூடாது.

நாடக மேடைகளிலும், திரைப்பட அரங்குகளிலும் நாம் காண்கிற கதை வாழ்க்கை மூன்று அல்லது நான்கு மணி நேர எல்லைக்குள் முடிந்து விடக் கூடியது. அதில் வருகிற கதாபாத்திரங்கள் படுகிற கஷ்டங்களுக்கு அந்த மூன்று நான்கு மணி நேரம்தான் கால எல்லை. வாழ்க்கையும் அதே போல வேகமாகவோ, பரபரவென்றோ வளரவும் நிறையவும் வேண்டுமென்று ஆசைப்படுவது சிறுபிள்ளை மனப்பான்மை. திரைப்படங்களிலும், நாடகங்களிலும், முன்பாதிக் கதையில் துன்புற்ற கதாநாயகன் பின்பாதிக் கதையில் மடமடவென்று செல்வச் செழிப்புப் பெற்று விடுவதைக் காட்டுகிறார்கள். பார்த்துக் கொண்டிருக்கும் அவையினரை இந்த நடிப்புச் சுகமும் நடிப்பு வளர்ச்சியும் மயக்குகின்றன. சொந்த வாழ்க்கையில் அவ்வளவு வேகமாகச் சுகங்களை அடைய முடியாமல் தவிக்கின்ற பலரை இந்த வேகமான கற்பனைச் சுகம் கவர்ந்து மயக்குகிறது.

நடைமுறை உலகம்

மயக்கம் என்ற சொல்லுக்கு 'ஒரு பொருளை எப்படி உணர வேண்டுமோ அப்படி உணராமல் பிறழ உணர்தல்' — என்று பொருள். திரைப்படக் கதையில் வருகிற சுகங்களைச் சொந்த வாழ்வுக்கும் ஆசைப்பட்டு ஏங்குவது இப்படிப் பிறழ உணர்வது தான். நடைமுறை உலகில் சுகங்கள் கட்டி வைத்திருக்கும் மாடிப் படியில் காலுள்ளவன் ஏறுவது போல் அத்தனை இயல்பாக இல்லை. சுகங்களை நாடி நடக்கும் போது நாம் நொண்டி நொண்டி நடப்பதை ஒவ்வொரு விநாடியும் நன்றாக உணர்கிறோம். யதார்த்த நிலையை முற்றிலும் மறக்கச் செய்கிற கவர்ச்சி எந்தக் கலையில் இருந்தாலும் (அந்தக் கலையின் இயல்புக்கு அது பொருத்தமாய்த் தோன்றினாலும்) அது சமூகத்துக்கு நீடித்த நலனைத் தராது. நடைமுறை உலகத்துக்குப் பயன் தரக்கூடிய நம்பிக்கைகளையும், உழைப்பையும் மறக்கச் செய்கிற எந்தக் கலையும் அபினியைப் போன்றதுதான். பரிசுத்தமான கலைகள் என்பவை தேசத்தின் நிரந்தரமான புகழைத் தாங்கும் தூண்களைப் போன்றவை. தூண்கள் தளர்ந்து போய்க் கட்டடத்தை முட்டுக் கொடுப்பது போன்ற பலவீனமான புகழ்ச்சிகள் புராதனமானதொரு தேசத்துக்குக் குறைவு தருவனவே.

எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளைப் பார்க்கலாம். ஒரு மில் முதலாளியின் மகள் தன்னுடனே கல்லூரியில் படிக்கும் மத்தியதரக் குடும்பத்து இளைஞன் ஒருவனை மணக்க விரும்புவதாக இடைவேளை வரை ஓடுகிற திரைக் கதை — இடைவேளைக்குப் பிறகு திடீரென்று நிகழ்ச்சிகளால் விரைவாக நிறைந்து ஓடி அதே மத்தியதரக் குடும்பத்து இளைஞன் குபேரசம்பத்துக்கு அதிபதியாகி விரும்பிய பெண்ணையே மணந்து கொள்வதாக முடிகிறதென்று வைத்துக் கொள்வோம். படத்தின் நீளம், ஓடுகிற கால அளவு, படிப்படியான நிகழ்ச்சிகள் இவற்றுக்கு ஏற்றபடி கதைக்கு ஏற்றத் தாழ்வுகள் அமைக்கப்படாமல் ஏனோ தானோ என்று அமைக்கப்பட்டிருந்தால் பார்க்கிறவர்களுக்கு வாழ்க்கையைப் பற்றியே பொய்யான நம்பிக்கை ஏற்பட்டுவிடும்.

முறையுள்ள படிப்படியான உழைப்பையும் படிப்படியான முயற்சிகளையும் இணைத்துக் காட்டாமல் செப்பிடு வித்தையைப் போலப் பிரமையான சுகங்களை முன் நிறுத்திக் காட்டும் கலைகளால் நிரந்தரமான குணங்கள் பாதிக்கப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களும், இளைஞர்களும், பிறரும், இப்படிப் பிறழ உணர்வதன் காரணமாகச் சமூகத்தை

இவர்கள் மதிக்கிற விதமே போலித்தன்மை உள்ளதாகி விடுகிறது. போலியாக மதிக்கப் பழகிக் கொள்ளும் பல பழக்கங்கள் நாகரிக உலகிற்குத் தேவை என்று இன்றைய நிலையில் கருதப்பட்டாலும் அப்படிப்பட்ட மதிப்பு ஒரு தொற்று நோய். சமூகத்தில் நியாயமும், சத்தியமும் காற்றுப் பட்டுப் பட்டுக் கரையும் கற்பூரம் போலப் படிப்படியாகக் கரைவதற்குத் துணை நிற்பது இந்தப் போலி மதிப்பீடுதான். வேகமான சுக துக்கங்கள் இன்றைய வாழ்க்கையில் மனிதனுடைய உடலையும் பாதிக்கின்றன. எதிலுமே அவசரம் அதிகம். சுகத்திலும் பிடிபடாத மகிழ்ச்சி. துக்கத்திலும் பிடிபடாத வேதனை. எந்த உணர்ச்சியானாலும் அதற்காகப் பதற்றமடைதலை வேகமான வாழ்வில் காண்கிறோம். இரத்த அழுத்தமோ இரத்தக் கொதிப்போ, ஏற்படுவதற்குக் காரணமான நிலைகள் என்று இவற்றைச் சொல்லுவதில் பிழையில்லை.

உலகத்துச் சுக துக்கங்களால் சலிப்படையாத ஒரு நிலையை 'உபசாந்தி!' என்று பழைய காலத்துப் பெரியோர்கள் போற்றிப் பேசி வந்தார்கள். சுக துக்கங்களினால் சலிப்படையாதவன் திரைப்பட வாழ்க்கை போல் ஓடுகிற நிகழ்ச்சிகள் உள்ள விரைவான வாழ்க்கைக்குத் தவிப்பதில்லை.

அவசரமாக வாழ்வதற்கும் பளிர் பளிரென்று அவ்வப்போது மின்னிப் பிறரைக் கவர்ந்து கொண்டே இருப்பதற்கும் ஆசைப்பட்டு நிலையான உழைப்பையும், மதிப்பீட்டையும் ஒருபோதும் புறக்கணிக்கக் கூடாது.

மின்னல் ஆசை

நாடகங்களும், திரைப் படங்களும் பொழுது போக்குக் கலைகள். மழையைப் போல் பருவங்களில் மட்டும் பெய்து வீழ்கிற ஆசையை விடச் சூரியனைப் போல் நாள் தவறாமல் உதித்துக் கொண்டிருக்கிற நிலையான கலைக் குணங்கள் தாம் காலத்தை எதிர்த்து நிற்கும். குத்து விளக்கைப் போல் ஒரு சீராக நிதானம் தவறாமல் பிரகாசம் தருகிற வாழ்க்கையை மறந்து விட்டு அவ்வப்போது மின்னிப் பிறருடைய கண்ணைப் பறிக்கும் வாழ்வுக்குப் பறக்கும் தவிப்புச் சான்றோர்களால் உயர்வானதென்று கணிக்கப் படமாட்டாது.

அநுபவங்களில் நிலையாமலும், காயாமலும் நாம் விரும்புகிற விதமான சூழ்நிலைகள் திடீர் திடீரென்று ஏற்பட்டு விடவேண்டுமென்று கனாக் காண்பது திரைப்படத்தில் சுகங்கள் திடும் திடுமென வருவதுபோல் வேகமானவை.

ஆனால் துரதிருஷ்டவசமாக மின்னி மின்னி மறைய வேண்டுமென்ற ஆசைதான் இன்று பலருக்கு இருப்பதாகத் தெரிகிறது. நிலையானதும் கண்ணைப் பறிக்காததுமான நிதானமுள்ள பிரகாசத்துக்கு ஆசைப்படாமல் கண்ணைக் குத்தி இழுப்பது போல் கவரும் ஒளி தெறிக்கிற பிரகாசத்துக்குத்தான் இன்று பலர் ஆசைப்படுகிறார்கள். இந்த ஆசையை நாடக மேடைச் சுகங்கள் என்பதா, திரைப்படச் சுகங்கள் என்பதா—என்று சொல்லத் தயங்கினாலும் நாடகத்தை விட மின்னுந் தன்மையும் வேகமும் அதிகமென்பதனால் 'திரைப்படச் சுகங்கள்' என்றே கூறலாமெனத் தோன்றுகிறது. இளமைப் பருவத்துச் செல்வங்கள் என்று இன்று அளக்கப்பட்டு இந்தப் பாரத தேசத்தின் நாளைய மனிதர்கள் என எதிர்பார்க்கப்படுகிற பிள்ளைகள் பலரிடம் இப்படி மின்னி மின்னி மறைய வேண்டுமென்ற ஆசைதான் அதிகமாக இருப்பதை இன்று காண்கிறோம். இது இந்த நாட்டுக்கு நல்லதில்லை என்று 'கவலைப்படுவதைத் தவிர நாம் இப்போது வேறென்ன செய்யலாம்?

விரைந்த வளர்ச்சி

நிதானமாகவும், படிப்படியாகவும் உழைத்து முன்னேற வேண்டிய இளைஞர்கள் கூட இன்று விரைந்த வளர்ச்சிக்குத் தவிக்கிறார்கள். அறத்தையும், நேர்மையையும் பற்றி ஆசிரியர்கள் கற்பிக்கும்போது எதிரே அமர்ந்து கற்றுக் கொள்ளுகிற மாணவர்களுக்கே அவற்றில் நம்பிக்கை பதிவதில்லை. ஏதோ பழைய நூலாசிரியர்கள் பழைய உலகத்துக்குச் சொல்லி வைத்து விட்டுப் போன நீதிகள்; இன்றைய உலகத்துக்கு அவை பயன்படப் போவதில்லை என்பது போல் ஒரு சலிப்பு மனப்பான்மை எங்கும் பரவியிருக்கிறது. இப்படிப்பட்ட மனப்பான்மை நாட்டுக்கு நல்லதில்லை.

இன்று திரைப்படக் கதைகளிலும், நாடகக் கதைகளிலும், அந்தக் கதைகளில் வருகிற



எவருடைய முன்னேற்றத்தைப் பற்றியாவது காண்பிக்கும் போது அந்த முன்னேற்றத்துக்கு உலகியல் ரீதியான வெறும் முயற்சிக் காரணங்களை விரைந்து காண்பிக்கிறார்களே ஒழிய அறமும், நேர்மையும் சிறிதளவாவது துணை நிற்பதாகக் காட்டுவதில்லை. வகுப்பறைகளில் ஆசிரியர்கள் நீதி போதனைப் பகுதிகளையும், அறநூற் கருத்துக்களையும் கற்பிக்கும் போது அவை சாரமற்றவைகளாகத் தோன்றி மாணவர்களைக் கவரத் தவறுகின்றன. நல்ல ஆசிரியர்கள் நல்ல சூழ்நிலையில் உள் மனத்திலிருந்து படித்த பகுதிகளைத் தேர்ந்தெடுத்துச் சொல்லிக் கற்பித்தாலும் அறநூற் கருத்துக்கள் இளம் பிள்ளைகளைக் கவர்ந்து இழுக்கத் தவறி விடுகின்றன. திரைப்படச் சுகங்களைப் போல் மின்னி மின்னி தெரிகிற சுகங்களுக்குத்தான் இன்றைய இளந்தலைமுறை மனம் தாழ்க்க ஆசைப்படுகிறது. வயதானவர்கள், இளைஞர்கள் என்று பாகுபாடு இருக்கத் தேவையில்லை. அறத்திலும், நீதியிலும், நேர்மையிலும் நம்பிக்கை வைப்பதற்கு வயது ஒரு காரணமும் ஆகாது. அறத்தில் நம்பிக்கை வைக்கிற இளம் பிள்ளைகளே

மனம் முதிர்ந்தவருகத் தோன்றவும், நம்பிக்கை வைக்காத வயது முதிர்ந்தவரே மனம் முதிராதவராகத் தோன்றுவதும் கூடும்.

திரைப்பட வளர்ச்சி போல் ஓடும் கதைகளில் மயங்கும் பரிதாபகரமான சூழ்நிலை வாழ்க்கையைப் பற்றிக் கொண்டு ஆட்டுகிற தலைமுறை எதுவோ அது தேசத்தின் போதாத காலம். மின்னி மின்னி மறைய வேண்டுமென்று வேகம் வேகமான கதைகளுக்குப் பறந்து கொண்டு தவிப்பதைவிட நிலையான நலத்துக்கு ஆசைப்படும் பரிபக்குவம் வருவது நாட்டுக்கே நல்லது. இந்த நாட்டின் எதிர்கால நலத்துக்கு இப்படி ஒரு பரிபக்குவம் மிக மிக அவசியமானது.

இவ்வாறு எழுதியிருப்பதனால் திரைப்படங்களும், நாடகங்களும் தமக்கென மேற்கொண்டு நிகழ்கிற கதையைப் பற்றிய விவாதப் பிரச்சினை ஏதும் இங்கு எழுவதற்கு நியாயமில்லை. 'கலை உருவம்' என்ற அமைப்பில் அவை கதாபாத்திரங்களின் வாழ்க்கை வளர்ச்சிகளையோ, கதைக்களங்களையோ விரைவாகக் (ஓரளவு தடுமாறாமல்) காட்டுவதற்கு உரிமையுள்ளவைதாம். அவை அவ்வாறு காண்பிப்பதைக் கலையாக மட்டும் இரசிக்கலாம். வாழ்க்கையிலும் அதே அளவு வேகம் வேண்டுமென்று ஏங்கி நிற்கக் கூடாது. வெறும் துக்க நிகழ்ச்சிகளுக்காக அந்த வேகத்தை யாரும் எதிர்பார்க்க மாட்டார்கள். ஆனால் களங்கள் வரும்போது மட்டும் சினிமாக் கதை நிகழ்ச்சிகளைப் போல் வேகமாக வர வேண்டுமென்று பலர் ஆசைப்படுவார்கள். வேடிக்கையான ஆசைதான் இது! வேறென்ன சொல்வது?

நெஞ்சின் கண்ணீர்

பா. தண்டபாணி

“வாடா, தூங்குமூஞ்சி!.......உனக்கு இப்பொத்தான் பொழுது விடிஞ்சுதாக்கும்?”

‘கஜமுகன் பழைய பேப்பர் ஸ்டோர்ஸ்’ முதலாளி பங்காரு செட்டியாரின் வரவேற்பு ஞானுக்கு வழக்கமாகத் தான் தோன்றியது. அவன் மனம் தத்தளித்துக் கொண்டிருந்த நிலையில் முதலாளியின் வரவேற்பில் தொக்கி நின்ற உள் அர்த்தத்தை ஆராய முடியவில்லை. கடைக்கு நேரத்தோடு வந்தாலும், அந்த ஸ்டோர்ஸில் வேலை பார்க்கும் எல்லாச் சிப்பந்திகளும், செட்டியாரிடமிருந்து எதிர்பார்க்கும் வரவேற்பு ‘இப்போதான் பொழுது விடிஞ்சுதாக்கும்?’ என்பது தான். கீறல் விழுந்த கிராமபோன் பிளேட் மாதிரி திரும்பித் திருப்பி அன்றாடம் காலையில் இதையே தான் சிப்பந்திகளிடம் கேட்பார்.



ஆனால் ஞான் இன்று ஸ்டோர்ஸுக்குக் கொஞ்சம் நேரம் கழித்துத்தான் வந்து சேர்ந்திருந்தான்.

கனவு காணும் கண்களை மலர்த்தி வலது கரத்தை நெற்றிப் பொட்டுக்கு நேரே உயர்த்தி, பின் தாழ்த்தி, இரண்டு புருவங்களிலும் தொட்டு, இருதயத்துக்கு நேரே சிலுவைக் குறியைப் போட்டுக் கொண்டு, “ஸ்தோத்திரம், முதலாளி!” என்று பயபக்தியோடு செட்டியாரை வணங்கி நின்றான் ஞான்.

சீவலை அள்ளி வாயில் போட்டபடி, “ஏண்டா, தூங்குமூஞ்சி! கடைக்கு வர இவ்வளவு நேரம்?” என்றார் செட்டியார்.

செட்டியார் ஸ்டோர்ஸில் வேலை பார்க்கும் ஒவ்வொரு சிப்பந்திக்கும் காரணத்தோடு அன்பால் அழைக்கும் பெயர் உண்டு.

ஞானுக்குக் கண் இமைகள் இரண்டும் பாதி மூடியே இருப்பதால், அவனைத் தூங்குமூஞ்சி என்று அழைப்பது வழக்கம். அடர்ந்து, படர்ந்து, காற்றில் அலையும் முடி உடைய சங்கரனுக்குத் தலை விரிச்சான் என்று பெயர். கையாளாக வேலை பார்க்கும் சந்தோஷம், நாற்பது வயதைக் கடந்தாலும் குள்ளமாக இருப்பதால் பொடியன் என்று பெயர். நண்டுக் கால்களைப் போல் மடங்கிய கால்களையுடைய மாணிக்கத்துக்கு ‘நண்டு’ என்று பெயர்.

செட்டியார் கேட்ட கேள்விக்கு ஞான் பதில் சொன்னான்: “அம்மாளுக்கு உடம்பு சுகமில்லீங்க... அவுங்க பிராணாவஸ்தை பட்டுக்கிட்டிருக்காங்க....”

“இங்கே எனக்குப் பிராணன் போய்க்கிட்டிருக்கு... உங்களையெல்லாம் நம்பி ஆயிரம், இரண்டாயிரம் போட்டுக் கடை நிறையப் பழைய பேப்பர்க் கட்டுகளை வாங்கிக் குவிச்சுட்டேன். எங்கே இதெல்லாம் ‘மூவ்’ ஆவுது?... அந்தத் தலைவிரிச்சான் என்னடான்னா, பெஞ்சாதிக்குப் பிரசவம்னுட்டு இன்னைக்கு மட்டம் போட்டுட்டான். நண்டுக்குக் கல்யாணமாம். அவரு ஒரு வாரம் ரெஸ்ட்டிலே இருக்காரு.

கடைக்குக் காவலா இந்தப் பொடியனும் நானும் குந்திக் கிடக்கிறோம். நீ ஜாலியா இப்பொத்தான் முதலாளி மாதிரி தலையை நீட்டறே. இந்தக் கடையிலே வேலை பார்க்கிற ஒருத்தனுக்காவது நன்றி விசுவாசமிருக்கா? வயிற்றுக்குக் கஞ்சி ஊத்தற முதலாளிக்கு நாலு காசு சம்பாதிக்கக் கொடுக்கணும்னு எவன் நினைக்கிறான்? படுமோசம்; நன்றிகெட்ட உலகம்.... பெட்டியிலே பணமாக இருந்தாலும் அதைப் பார்க்கப் பார்க்கக் கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும்; பசி கூடத் தெரியாது. இந்தப் பேப்பர் மலைங்க மேலே என் பணமெல்லாம் கொட்டி வைச்சிருக்கேன்; இதைப் பார்க்கப் பார்க்க மயக்கம்தான் வருது; தூக்கம்தான் வருதா? ஹூம்...அதையெல்லாம் நீங்க ஏன் எண்ணிப் பார்க்கப் போறீங்க? உங்க கஷ்டம் உங்களுக்கு; என் கஷ்டம் எனக்கு. அன்றாடம் உங்க கைக்குப் பணத்தைப் போட்டுட்டா சரி” என்று சொல்லியபடி வெற்றிலைச் செல்லத்தைக் கல்லாப் பெட்டியின் மேல் வைத்துக் கொண்டு, ஞானைப் பார்த்துக் கேலிப் புன்னகையை வீசினார் செட்டியார்.

திரிகாலமும் உணர்ந்தவர் என்று செட்டியாரைச் சொன்னால் முழுக்க முழுக்கப் பொருந்தும். தன் தாயாருக்கு உடம்பு சுகமில்லை என்று காரணம் காட்டித் தன்னிடமிருந்து ஞான் எந்தவித உதவியும் எதிர்பார்க்க வேண்டாம் என்று முத்தாய்ப்பு வைத்து விட்டார். செட்டியார் யாருக்கு உதவி செய்திருக்கிறார்?

தன்னைப் பத்து மாதம் வயிற்றில் சுமந்து பெற்ற தாய் பிழைத்து எழுந்திருக்கச் செட்டியார் உதவியால் தான் முடியும் என்ற நம்பிக்கை ஞான் மனத்தில் துளிர் விட்டது. ‘ஐந்து வருஷங்களாகச் செட்டியாருக்குச் செருப்பு மாதிரி உழைத்து, தெருத் தெருவாய்ப் பழைய பேப்பர்களை ஒண்ணேகால் வீசைக்கு, ஒரு வீசையாகக் காட்டி, குறைச்சல் விலைக்கு வாங்கி வந்து, சோறு தண்ணி இல்லாமல் நாயாய் அலைந்து, அதிக லாபத்துக்கு விற்றுப் பணத்தைச் சேர்த்துக் கொடுத்த தனக்கு இந்த ஆபத்தான நேரத்தில் உதவாமலா போவார்...? செட்டியாரும் மனுஷன்தானே? என் அம்மாவுக்கு வந்த ஆபத்தைப் போல் அவர் அம்மாவுக்கு வந்திருந்தால் என்ன செய்வாரோ, அதை என் தாயாருக்கு இப்பொழுது செய்யட்டுமே? அவரைத் தவிர இந்த நேரத்தில் எனக்கு உதவி செய்ய யார் இருக்காங்க?

இவ்வாறு பலமுறை எண்ணிய பிறகு, செட்டியாரிடம் உதவி கேட்பது என்ற தீர்க்கமான முடிவோடு வந்து நிற்கும் ஞானை ஓரக்கண்களால் எடை போட்டார் செட்டியார்.

உரித்துப் போட்ட நார் மாதிரி ஸ்மரணையற்றுப் படுக்கையில் கிடக்கும் தன் தாயை நினைக்கும்போது ஞானின் கண்களில் நீர் கோத்து, மோதி, முட்டி நின்றது. நைந்துபோன காக்கிச் சட்டையை இழுத்து விட்டுக் கொண்டான். பாதி இமைகள் மூடியுள்ள கண்களைத் துடைத்துக் கொண்டான்.

''ஏண்டா! புதிய மரமாட்டம் காலங்காத்தாலே கடை முன்னாலே மூதேவி மாதிரி நிக்கறே? தெரு மேலே வியாபாரத்துக்குப் போய் நாலஞ்சு விசைப் பேப்பரைக் கொண்டாருவியா, கண்ணைக் கசக்கிகிட்டு வந்துட்டான், பிழைக்கத் தெரியாதவன்!'' என்று செட்டியார் சீறி விழுந்தார்.

ஞான் நின்ற இடத்தை விட்டு அசையவில்லை. அவன் மனம் தன் தாயின் உடல் நிலையை எண்ணி உருகிக் கொண்டிருந்தது.

''டேய், தாங்குறாந்தி! வியாபாரத்துக்குப் போடா, மாசக் கடைசிடா; கையிலே பணமில்லாமல் அவனவன் பழைய பேப்பரை வைச்சிக்கிட்டுத் தத்தளிக்கிற நாளடா; நீ சொன்ன விலைக்கு, நீ காட்டிய எடைக்குப் பேப்பரைக் கொடுத்திடுவாங்கடா. போடா, ராஜா போ!'' செட்டியாரின் உற்சாகமூட்டல் ஞான் மனத்தில் பதியவில்லை.

உள்ளே திட்டம் போட்டது. வெளியே வார்த்தைகளாகப் பரிணமிக்கவில்லை. ஞான், வார்த்தைகள் பிடிபடாமல் திணறிக்கொண்டிருந்தான்.

கல்லாவை விட்டு எழுந்து, குறட்டில் நின்றபடி வீதியை நோக்கி வெற்றிலைச் சாற்றைத் துப்பி விட்டு, ''டேய், பொடியா!.... வாய் கொப்புளிக்கத் தண்ணீர் கொண்டு வாடா'' என்று கடையைப் பார்த்துக் குரல் கொடுத்தார் செட்டியார்.

நாற்பது வயதைக் கடந்துவிட்ட முதிர்ச்சியைத் தன் உடலில் இழுத்துப் போட்டுக் கொண்டு 'பொடியன்' என்ற நாமகரணம் பூண்ட சந்தோஷம் எவர்சில்வர் டம்ளரில் தண்ணீர் கொண்டு வந்து முதலாளியிடம் கொடுத்து விட்டு, குனிந்த தலை நிமிராமல் நிற்கும் ஞானைப் பரிதாபமாகப் பார்த்துப் பெருமூச்சு விட்டான்.

ஒவ்வொரு வினாடி கழிந்ததும் தன் தாய்க்கு ஆபத்து நெருங்கிக்கொண்டு வருகிறது என்று அறிந்த பதற்றத்துடன் ஞான் முதலாளியை வாய் திறந்து கேட்டு விட்டான்.

''முதலாளி!... அம்மா ரொம்பக் கிடக்கிறாங்க. அம்மாவை ஒரு நல்ல டாக்டரு கிட்ட காட்டலாம்னு யோசிச்சுக்கிட்டு இருக்கேன். இந்த நேரத்திலே எனக்கு உதவி பண்றவங்க உங்களைத் தவிர வேறு யாருமில்லே. கொஞ்சம் பண உதவி செய்யுங்க. உங்களுக்குப் புண்ணியமா இருக்கும்.'' செட்டியாரின் கால்களில் விழாதகுறையாகக் கெஞ்சிக் கேட்டான் ஞான். செட்டியார், அந்தமாதிரி ஞான் விழ வேண்டும் என்று விரும்பினாலும் அவன் விழுந்திருப்பான்.

கல்லாவில் உட்கார்ந்த செட்டியாருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை.

''டேய், தாங்குறாந்தி! விரலுக்குத் தக்க வீக்கம் வேண்டும்டா. கையிலே பணமில்லாதவங்களுக்காக எத்தினியோ தர்ம ஆஸ்பத்திரியைத் திறந்திருக்காங்க, புண்ணியவானுக.... இந்தக் காலத்திலே பணக்காரன் கூட அந்தத் தர்ம ஆஸ்பத்திரிக்குத்தான் போறான்...ஏன், இவ்வளவு சொல்லப் போவானேன், எங்கம்மாவுக்குக் கூட உடம்பு சுகமில்லே; அங்கே தான் காட்டி, மருந்து கொடுக்கச் சொன்னேன்; நீயும் உங்கம்மாவை அந்தத் தர்ம ஆஸ்பத்திரியிலேயே சேர்த்துடு... பணத்தைச் செலவு செய்யாதே'' என்றார். அவரது குரலில் கண்டிப்பு தொனித்தது.



அந்த ஆஸ்பத்திரியிலே அம்மாவைக் காட்ட மனசு இல்லீங்க; ஒரு நல்ல டாக்டரு கிட்ட காட்டினால் அம்மா தேறிடுவாங்க'' என்றான் ஞான்.

''கையிலே பணமில்லாமல் இந்த எண்ணம் ஏண்டா உனக்கு? வெறுங் கையை வைத்து முழம் போடறியா?''

''நீங்கதான் முதலாளி கொஞ்சம் பண உதவி செய்யணும்!''

''எவ்வளவு வேணும்?'' இதைக் கேட்டதும் தன் தாயார் பிழைத்து எழுந்து விட்டதாகவே நினைத்தான் ஞான்.

''இருபது ரூபா இப்போ கொடுங்கோ. அவசியமானால் பிறகு வாங்கிக்கிறேன்.''

''உன்னை நம்பி எவண்டா ரூபாயைக் கொடுப்பான்?''

ஞானுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''உங்க கடையிலே இந்த வருஷங்களா உழைச்ச உழைப்பைப் பார்த்து என்னை நம்பக் கூடாதா?''

''உழைச்ச உழைப்பெல்லாம் வியாபாரத்துக்குத்தான். நீ உழைச்ச உழைப்புக்காகத் தினமும் காசு வாங்கிக் கிட்டே... நீ 'ஓசி'யா உழைக்கலே! உழைச்ச உழைப்பை நம்பி உழைக்கப் போகும் உழைப்புக்காக அட்வான்சாகப் பணம் தர்ற பிஸினெஸ்ஸெல்லாம் நமக்கு ஒத்து வராது. நீ யாருன்னு நீயே யோசிக்கப் பாரு! ஜெயிலுக்குப் போய்த் திரும்பிய உன்னை நம்பி எவன் பணம் கொடு

பான்? உன்னே நம்பிக் கடையிலே வேலைக்கு வெச்சுக்கிட்டேனே, அதுவே பெரிய உபகாரமா நினேச்சுக்கோ.''

''முதலாளி!.... கொஞ்சம் இரக்கம் காட்டுங்க. நீங்க இந்தச் சமயத்திலே உதவி செய்யலேன்னு எங்கம்மாவை நான் பார்க்க முடியாது, முதலாளி, பார்க்க முடியாது!'' என்று சொல்லும் போதே தேம்பினுன் ஞான்.

''பண மில்லா தவனுலேயும் 'பணத்தை வைச்சுக்கிட்டுக் கொடுக்க மனமில்லாத வோ'ங்களாலேயும் தான் இரக்கம் காட்ட முடியும். நீ ஓர் அன்றாடம் காய்ச்சி. உனக்கு நான் அன்றாடம் கூலியா, மூன்னாலுப் பிள்ளே மாதிரியா ஒருரூபா தர்றேனே, அதை யோசிச்சியா? இரக்கம் வயிற்றுப் பசியை ஆற்றிடாது; ஆறு நான் உன் குடும்பத்தையே வாழ வைச்சிருக்கேன். வாழ வைக்கப் பிறந்தவன் நான். இரக்கம காட்டி, உன்னே ஏமாற்ற விரும்பலே. நீ வியாபாரத்துக்குப் போ. கூலி கேள்! தர்றேன். அது நியாயம். அதை விட்டு விட்டு 'அட்வான்ஸ்' கேட்கிற பேரமெல்லாம் நமக்குப் பிடிக்காது. டேய், தூங்குமூஞ்சி!...... நான் சொல்றேன்னு கஷ்டப்படாதே....உங்கம்மா தலேயிலே என்ன எழுதியிருக்கோ, அதன்படி தான் நடக்கும். எழுதியதை நாம் யாரும் அழித்து எழுதப் பிரயாசைப்படறது முட்டாள்தனம். எங்கம்மாவைப் பற்றி நான் இப்படித்தான் முடிவு பண்ணிட்டேன். காசுக்குப் பின்னுல் கடைக்கு வந்துட்டேன். காசுக்குப் பின்னுல் தாண்டா தாய், மனைவி, பாசம், அன்பு, இரக்கம், எல்லாம். போடா, பத்து விசைப் பேப்பரைச் சேர்த்துக் கிட்டு வாடா. காசை வாங்கிக்கடா'' என்று சொல்லியபடியே பத்து ரூபாய்த் தாளே ஞானிடம் நீட்டினுர் செட்டியார்.

தன் சட்டையில் அழுது வடிந்த முகத்தைத் துடைத்தபடி, தன் தாயாரைக் காப்பாற்றும் பொறுப்பை இலேசுநாதரிடம் ஒப்படைத்து விட்டு, பத்து ரூபாய்த் தாளே வாங்கிக் கொண்டான்.

நெருப்புத் துண்டம் தன் உடல்மீது விழுந்து விட்டவர்போல், அரண்டு, பதறிப் போய், ''டேய்,... டேய், தூங்குமூஞ்சி! கொண்டாடா ரூபாயை. நீ இன்னிக்கு இருக்கிற நிலையிலே இந்த ரூபாயைக் கொண்டு போய்



அம்மாவுக்காகச் செலவழிச்சாலும் ஆச்சரியப்படுவதற்கில்லே. நீ அப்படியே ஓடிட மாட்டேன்னு என்ன நிச்சயம்?... இன்னேக்கு நீ வெளியே போக வேண்டாம். வீட்டுக்குப் போய் உன் அம்மாவைக் கவனி ...ம் ....ரூபாயைக் கொடு'' என்று மிரட்டினுர் செட்டியார்.

'ஓ'வென்று கதறி அழ வேண்டும் போல் இருந்தது. ''என்மேல் நம்பிக்கை இல்லேயா முதலாளி?'' என்று விக்கி, விக்கிக் கேட்டான் ஞான். பத்து ரூபாய்த் தாளேத் திருப்பிச் செட்டியாரிடம் கொடுத்தான்.

செட்டியார் எங்கோ வெளியே புறப்பட்டுப் போய் விட்டார்.

தாயைக் காப்பாற்ற முடியாத தன் உயிரை நொந்து கொண்டு குறட்டின் மேல் அமர்ந்து பெருமூச்சுவிட்டான்.

''டேய், ஞான்! இந்தாடா இருபது ரூபா.. போய் உங்கம்மா உடம்பைக் கவனி'' என்று குரல் கேட்டு, கர்த்தர் ஆவி ரூபமாக வந்து உதவி செய்கிருரா என்று எண்ணியவாறு திடுக்கிட்டு எழுந்து நின்றுன் ஞான்.

பொடியன், கையில் இரண்டு பத்து ரூபாய்த் தாள்களோடு, குறட்டில் காலே வைத்துக் கொண்டு நின்றிருந்தான்.

கண்களில் ஆனந்தக் கண்ணீர் பொங்க, கைகள் மகிழ்ச்சியால் சில்லிட்டுப் போக, உடல் புல்லரிக்க, சந்தோஷத்தோடு பொடியனிடமிருந்து ரூபாயை வாங்கிக் கொண்டான்.


''அண்ணே! ரொம்ப சந்தோஷம். தினம் எட்டணுவா தண்டல் கொடுத்திடறேன்'' என்று நாக்குழறச் சொன்னுன் ஞான்.


''ஞான்! அதைப் பற்றி இப்போ என்ன? உங்கம்மா மேரியை எனக்கு நல்லாத் தெரியும்? உங்கம்மாவும் நானும் பால்ய சிநேகிதர்கள். நான் ரூபாய் கொடுத்தேன்னு உங்கம்மா கிட்ட சொல்லிடாதே. உங்கம்மாவுக்காக நான் ஏதாவது உதவி செய்ய முடியுமான்னு காத்துக் கிட்டிருந்தேன். போ, ஞான், போ!'' என்று துரிதப்படுத்தினுன், பொடியன்.

ஞான் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதந்தபடியே சிட்டாய்ப் பறந்தான்.

ஞான் போவதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த பொடியனின் கண்களில் நீர் ததும்பி முத்திட்டு நின்றது.




ஸ்பார்ட்டன் ஆட்டோ-
லாக்கர்கள்
5 முக்கிய அம்சங்களுக்கு
உத்திரவாதம் அளிக்கிறது
★ வர்ணத்தின் திடம்
★ உபயோகிப்பதில்
எளிமை
★ நீண்டகால ஜீவிதம்
★ நீடித்த பளபளப்பு
★ சீரான தர மேன்மை
இந்தியாவில் முதலில் தயாரித்து
இன்னும் முன்னணியில் இருப்பவர்கள்
அடிஸன்ஸ் பெயின்ட்ஸ் & கெமிகல்ஸ் லிட்.
செம்பியம் - சென்னை - 11
அங்கத்தினர்: இந்தியன் பெயின்ட் அஸோசியேஷன்


Look enchanting with - - -
எழில் மிகுந்த தோற்றத்திற்கு....
உங்களது அழகை அதிகரித்து பூரணப்
பொலிவுடன் திகழ பற்பல வகையில்
உதவுவது ஆப்கன் ஸ்னோ அழகு சாதனங்கள்.
உங்கள் கூந்தல், தங்கள் மற்றும்
வளர்ச்சி மிகுந்த தோற்றம், மாசு மருவற்ற
முகப் பொலிவு, இவைகளுக்குச்
சிறந்த பாதுகாப்பை அளிப்பது ஆப்கன்
ஸ்னோ அழகு சாதனங்கள். அழகுப்
பிரச்னைகள் அனைத்தையும் எளிதில் தீர்ப்பது
ஆப்கன் ஸ்னோ
அழகு சாதனங்கள்
AFGHAN SNOW
BEAUTY AIDS

''மேரி, உயிரோடு பிழைத்து எழுந்திருக்க ஆசீர்வதியுங்கள்'' என்று கர்த்தரை வேண்டித் திவ்யாசம் செய்தான்.

செட்டியாரின் மனைவி வீட்டை விட்டி றங்கி ஓட்டமும் நடையுமாகக் கண்களில் நீர் மல்க வேர்த்து விறுவிறுக்க வந்து கொண்டிருந் தாள். தன் எதிரே ஜான் வருவதைக் கண்ட தும் நின்றாள்.

''ஜான்! நீ நல்ல சமயத்தில் வந்தாய். அந்தக் கோடி மருந்துக் கடைக்குப் போய், சீக்கிரம் இந்த மருந்தை வாங்கிக்கிட்டு வா. முதலாளி அம்மாவுக்கு ஆபத்து. இந்த மருந்து உடனே வேண்டுமாம். டாக்டர் காத்துக்கிட்டு இருக்காரு. செட்டியார் இன்னைக்குப் பணம் கொடுத்துட்டுப் போகலே. உன்னிடம் வியா பாரத்துக்குச் செட்டியார் பணம் கொடுத் திருக்கிறதிலே வாங்கிக்கோ. செட்டியாரிடம் நான் சொல்லிக்கிறேன். ஓடு ....ஓடு'' என்று அவனை வேண்டினாள்.

மறுமொழி ஏதும் சொல்லாமல், மருந்துச் சீட்டை வாங்கிக் கொண்டு, நன்றி விசுவாச உணர்ச்சியோடு இரக்க மனம் படைத்த ஜான், மருந்துக் கடையை நோக்கி, தன் தாயை நினைத்தபடி ஓடினான்.

சிறிது நேரம் கழித்து மருந்தும் கையுமாகத் திரும்பி வந்தான்.

''உனக்குக் கோடிப் புண்ணியம். உனக்கு ஒரு குறையும் வராது. உன்னைப்பெற்ற வயிறு அதிர்ஷ்டசாலிதான்'' என்று வாழ்த்தி மருந்தை வாங்கிக் கொண்டு உள்ளே விரைவாகச் சென்றாள் செட்டியாரின் மனைவி.

மீதி பதினைந்து ரூபாய் பத்திரமாக உள்ளதா என்று சட்டைப் பையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டு, தன் குடிசையை நோக்கி வேகமாக நடந்தான்.

குடிசையின் படலைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தான். மூக்கனும், மூனகனும் தாம் அவனை வரவேற்றனர். எண்சாண் உடம்பைக் குறுக்கி, போர்வையால் இறுக்கிப் போர்த்திக் கொண்டு கிழிந்த பாயின் மேல் படுத்திருந்தாள் மேரி. தாயின் அருகில் அமர்ந்தான் ஜான். போர்வையை நீக்கித் தாயின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தான். அனலாய்த் தகித்தது. 'அப்பா இருந்தால் அம்மாவை இந்த நிலையில் விட்டு விட்டுச் சும்மா இருப்பாரா? அம்மாவுக்கு நான் மகனாயிருந்து என்ன பிரயோசனம்? ஏதோ தெரியாமல் ஒரு நாள் ஜேப்படி செய்த குற்றத்துக் காக, ஆயுள் முழுதும் என்னை நம்ப முடியாதவனாகிவிட்டேன். ஜெயிலுக்குப் போனேன். அப்படியிருந்தும் என் மேல் உனக்கு ஏன் அம்மா இவ்வளவு பாசம்? இந்தத் தள்ளாத நிலையிலும் எனக்குச் சோற்றைப் பொங்கிப் போட்ட அந்த அன்புக்கு என்னால் என்னம்மா பிரதி உபகாரம் செய்ய முடியும்? ஏதோ என்னால் முடிந்தவரைக்கும் உயிரைக் கொடுத் தாவது உன்னைக் காப்பாற்றுவேன்' என்று பலப்பல எண்ணி மனம் உருகித் தாயின் முகத்தையே பார்த்து கவனித்துக் கொண்டிருந்த ஜானின் கண்களிலிருந்து கண்ணீர் பொங்கி வந்தது.

சூடான நீர் முத்துக்கள் 'சொட்டுச் சொட்' டென்று தன் முகத்தில் விழுந்ததும், மெல்லக் கண் விழித்து வறட்சியான உதடுகளை நாவால் ஈரப் படுத்திக் கொண்டாள் மேரி.

மேரி மெல்லக் கண்களைத் திறந்து பார்த் தாள். ''ஜான்! ஏன் அழறே? நான் போயிட்டா எப்படி வாழ்வே! உன்னை யார் கவனிக்கப் போறாங்க? அதுதான் கவலையா இருக்கு!'' கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது மாதிரி இருந் தது, மேரியின் குரல்.



''அம்மா, அப்படி யெல்லாம் பேசாதேம்மா. நீ நிச்சயம் பிழைச்சு எழுந்திருப்பே. இதோ பணம் கூட வாங்கிட்டு வந்திருக்கிறேன். டாக்டருகிட்டே போகலாம்மா. ரிக்ஷா கொண்டுட்டு வரேன்'' என்று சொல்லி எழுந்த ஜானை மேரி கையை அசைத்துத் தன் அருகில் அமரச் சொன்னாள்.

''ஏதுடா பணம்?....'' என்று கேட்டாள்.

''எங்க கடையிலே வேலை பார்க்கிற ஒருத்தர் உதவி செய்தாரம்மா'' என்றான்.

''யார் அது?''

''அவர் பேரை உன்னிடம் சொல்ல வேணாம்னு கேட்டுக்கிட்டாரு. அதனாலே தான் சொல்லத் தயங்கறேன்....''

''நீ சொல்றதை நான் நம்பணுமா? ஜெயிலுக்குப் போய் வந்த பின்னுமா உனக்குத் திருட்டுத் தொழிலை விட மனமில்லே? பணத்தைப் பறி கொடுத்தவங்க எப்படித் துடிக்கிறாங்களோ? என்ன சபிக்கிறாங்களோ? திருடிக்கிட்டு வந்த பணத்தாலேயே உன் அம்மா நோயைக் குணப்படுத்தப் பார்க்கிறே. வேண்டாம்... ஜான்.... வேண்டாம்.... பணத்தைக் கொண்டு போய் அவங்ககிட்டே கொடுத்துட்டு, மன்னிப்புக் கேள்...'' ஆவேசம் வந்தவள் மாதிரி பேசினாள்.

''நான் சொல்றதை நம்பும்மா. கர்த்தர் மேலே ஆணையா சொல்றேம்மா. நான் திருடவில்லையம்மா. இந்தப் பணம் அவர் கொடுத் தாரும்மா... என்னை நம்பும்மா....'' என்று சொல்லியபடி பதினைந்து ரூபாயைத் தாயின் கரத்தில் வைத்தான்.

''யாரடா அவர்?''

''சந்தோஷம் என்பவர் இருபது ரூபாய் தந்தாரம்மா. அதிலே ஐந்து ரூபாய் முதலாளி அம்மாவுக்கு மருந்து வாங்கிக் கொடுத்துட் டேன்....'' ஜான் சொல்லி முடிக்கு முன்பே

கையில் வைத்திருந்த ரூபாய்த் தாள்களைக் கசக்கித் தூர எறிந்து விட்டுப் பற்களை 'நற நற'வென்று கடித்தாள் மேரி. ஜான் விதிர்த்துப் போய் நின்றான்.

''சந்தோஷம் யார் தெரியுமா? என்னைக் காதலித்து, அவன் மிருகத்தனத்துக்கு ஆளாகாததால் நடுவழியில் விட்டு, ஏமாற்றிய நயவஞ்சகன். அவன் பணத்திலா நான் உயிர் வாழணும்? அந்தப் பணத்தைத் தொட்டதே பெரிய பாபம்!....'' என்று சொல்லி மயக்கமாகச் சோர்ந்தாள்.

''ஜான்!....''

குடிசைக்கு வெளியே யாரோ அழைத்தார்கள். தள்ளாடியபடி படலைத் திறந்து கொண்டு ஜான் வெளியே வந்தான்.

செட்டியாரும், பொடியனும் நின்று கொண்டிருந்தார்கள்.

ஜான் ஒரு கணம் திகைத்து நின்றான்.

''ஏன்டா, தூக்குமூஞ்சி! இவ்வளவு பெரிய உபகாரத்தை நீ செய்து விட்டு, நானே உன்னைத் தேடிக்கிட்டு வரும்படியாக்கிட்டியே? பேஷ், ரொம்பக் கெட்டிக்காரன். நீ அந்த நேரத்திலே மருந்து வாங்கிட்டு வந்து கொடுத்தாலே தான் எங்கம்மா பிழைச்சாங்களாம்! என் மனைவி சொன்னா! மருந்துக்குப் பணம் கூட வாங்கிக்காம வந்துட்டயேடா. நான் இப்போ உனக்குக் கடன்காரனாயிட்டேன். நான் சொன்னதெல்லாம் மனசிலே வைச்சிக்காதே. இந்தா, நீ காலையிலே கேட்டியே இருபது ரூபாய். உன் அம்மாவை டாக்டரு கிட்டே கூட்டிக் கிட்டுப் போய்க் காட்டு'' என்று ரூபாயை நீட்டினார் செட்டியார்.

எதையோ நினைத்துக் கொண்டு, எதற்காகவோ திடீரென்று ஜான் குடிசையின் உள்ளே ஓடினான்.

''அம்மா!..... முதலாளியே ரூபாயைக் கொண்டுக்கிட்டு வீடு தேடி வந்திருக்காரம்மா. ரூபாயை வாங்கிக்கிடவா? அம்மா! இதோ பாரம்மா. சொல்லம்மா!'' என்று பரபரப்போடு தாயைத் தொட்டுப் பார்த்தான்.

மேரியின் உடல் விறைத்துப் போய், சில் விட்டு விட்டது. கண்கள் குத்திட்டு ஒரே நிலையில் நின்றன.

''அ....ம்...மா...மா....!'' என்று ஜான் கதறினான்.

செட்டியாரும், பொடியனும் ஜானின் குரலைக் கேட்டு உள்ளே ஓடி வந்தார்கள்.

''அம்மாவைப் பாருங்க முதலாளி! உங்க பணம் கூட அவுங்களுக்கு வேண்டாம்னிட்டு ஒரேயடியாகப் போயிட்டாங்க, முதலாளி, போயிட்டாங்க'' என்று விக்கினான்.

செட்டியார் இந்தக் காட்சியைக் காணப் பொறாமல் நெஞ்சோடு நெஞ்சம் விம்மினார். எல்லோரும் செய்யக் கூடிய ஒன்றைத் தாம் செய்யத் தவறிய குற்றத்துக்கு அவர் நெஞ்சம் கண்ணீர் உகுத்தது.

அட்டைப்பட விளக்கம்

அந்த நாளில்....

''ஏம்மா, நான் ஸ்கூலுக்குப் போகப் படுத்தினால் என்னை அசடுங்கிறயே! நீயும் அந்த நாளில் இப்படித்தானே 'ஸ்கூல்'னாலே முகத்தைத் தூக்கி வைச்சுக்குவியாம்; பாட்டி சொன்னாளே!''

''நான் முகத்தைத் தூக்கி வைச்சுண்டா அது வேறே விஷயம். நான் படிக்கச்சே யெல்லாம் ஸ்கூல் இப்படித்தான் இருந்ததா? முதலில் இதே மாதிரி 'ஜம்'னு 'யூனிபாரம்' அந்த நாளில் உண்டா ?''

''போம்மா, யூனிபாரமும் ஆச்சு; இனி பாரமும் ஆச்சு. எழுத்தை யெல்லாம் நான் 'இப்படி எழுதணும்; அப்படி எழுதக் கூடாது'ங்கிறா டீச்சர். போயிட்டுப் போறா! டிரஸ் பண்ணிக்கிறதுக்குக்கூட என்னம்மா கண்டிப்பு? 'கெவா ப்ளூ' பட்டுப் பாவாடையும், 'டிஷ்யூ' சட்டையும் போட்டுண்டு ஸ்கூலுக்குப் போனா பாடம் வராதா? இதெல்லாம் எனக்குப் பிடிக்கவே யில்லேம்மா!''

தாயார் யோசிக்கிறாள். அவள் படித்தவள். சிந்திக்கத் தெரிந்தவள். 'குழந்தைகள் ஒரே மாதிரி உடையணிந்து விட்டால் 'தேசிய ஒருமைப்பாடு' வந்துவிடுமா? அல்லது ஏழை பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வுதான் போய்விடுமா? பலப் பல வண்ணங்களையும் அநுபவித்து வண்ணத்துப் பூச்சி போல் இதயத்தைச் சிறகடிக்கும் குழந்தைகளுக்கு இதெல்லாம் எதற்குக் கட்டுப்பாடு? உள்ளத்தை நேர் சரிப்படுத்தாமல், வெளியில் எதையோ சீர் செய்யப் புகுவதில் என்ன பொருள் இருக்கிறது? பாலப் பருவத்திலிருந்தே எதற்கு இந்தப் போலித்தனத்தை யெல்லாம் புகட்ட வேண்டும்? மழையில் வெளியில் செல்லும் போது கணுக்கால் அளவுக்கு உடையைத் தூக்கிக்கொள்ளக் கூடக் கூச்சப்பட வேண்டிய பாரதப் பெண்ணுக்கு மேனாட்டு 'பிராக்'கை எதற்குப் பழக்க வேண்டும்?' — யோசிக்கிறாள்.

''ஏம்மா, நீ பட்டுப் பாவாடை யெல்லாம் கட்டிண்டுதானே ஸ்கூலுக்குப் போவே?''

''ஆமாம், கண்ணு!''

''இந்த மாதிரி பாட்டி உனக்குப் பவுடர் போடுவாளோ?''

''இல்லேம்மா போடமாட்டா. ஏதாவது விசேஷம்னாத்தான் போடுவா. ஒவ்வொரு நாளும் விபூதிதான் இட்டு அனுப்புவா !''

மீண்டும் யோசனையில் ஆழ்ந்து விடுகிறாள் தாய். ஆம், அந்த விபூதி வெளியில் நிற்பது மட்டுமில்லை. உள்ளத்தையும் சென்று சேர்ந்து சரிப்படுத்துவதல்லவா? அந்த நாளில் இப்படித்தான் எதற்குமே சுவாமியை முன்னால் வைத்துச் சொல்வார்கள். தன் அன்னை நயமாகப் பேசும்போது 'சமர்த்தா ஸ்கூலுக்குப் போனால் சாமி உனக்கு நல்லதெல்லாம் கொடுப்பார்' என்பாள். பயம் காட்டும் போதும் 'போகாவிட்டால் சாமி கண்ணைக் குத்தி விடுவார்' என்பாள்.

இதைப் பற்றி யெல்லாம் நன்றாகச் சிந்திக்கவேண்டும் என்பதற்காகக் குழந்தையைக் கெஞ்சிக் கொஞ்சி, பிடித்த டிபனைத் தந்து பள்ளிக்கு விரைவு படுத்துகிறாள் தாய். அந்த அன்னையைச் சாக்காக வைத்து நம்மையும் சிந்திக்க வைத்து விட்டார் சித்திரக்காரர் விஜு.



கள் அன்றாடத் தொல்லைகள், கவலைகளினும் நிரண வேலை பாதிக்கப்படுவது
ும் அதனால் சோர்வு ஏற்படுகிறது. அற்ப விஷயங்களிலும் ஆத்திரமுண்டாகி,
ததியிழந்து, பொறுமுகிறீர்கள். நீங்கள் பழைய உடல்நலத்தை மீண்டும் பெற
ழைவது அவசியம். க்ருஷன் ஸால்ட்ஸ் சாப்பிட்டு உடல்நலக் குறைவிலிருந்து
ஈசப்பு பெறுங்கள். உடல் உறுப்புகள் நன்கு செயலாற்ற உதவும் முக்கியமான
நப்பொருள்களும், உப்புக்களும் வேண்டிய தகுதியான அளவில் கலந்துள்ளது
டின் ஸால்ட்ஸ் ஒன்றே.

சகள், மற்றும் கணுக்களில் வலி, கீல்வாதம், இடுப்பு வாதநோய், தொடையில்
ஏற்படும் வாதநோய், படை மற்றும் இதர சரும வியாதிகள் ஆகியவற்றுக்கு
ணம் ரத்தத்திலுள்ள அசுத்தங்கள். அவற்றை அகற்ற உங்கள் தேக இயக்கத்
தூட்டுவது க்ருஷன் ஸால்ட்ஸ். காலையில் நீங்கள் அருந்தும் பானத்துடன் ஒரு
ன் அளவு க்ருஷன் ஸால்ட்ஸைக் கலந்து சாப்பிடுங்கள்.


**க்ருஷன் ஸால்ட்ஸ்
மட்டுமே அளிக்கக்கூடிய
7 வகைச் செய்கைகள்:-**



சிறந்த உடல்நலம் பெறச் சாப்பிடுங்கள்
க்ருஷன் ஸால்ட்ஸ்

ஒரு நிக்கோலஸ் N தயாரிப்பு . தரத்திற்கும் தூய்மைக்கும் நீங்கள்பெறும் உத்தரவாதம்

.. 18 TAM



போர்முனை

அத்தியாயம் 29

இரு துருவங்கள்

முதல் பார்வையிலேயே உமா காந்தின் உள்ளத்தை, தான் உலுக்கி எடுத்து விட்டதைத் தாரா கவனித்தாள். பார்வை அறிமுகத்திலும் அறிமுகம் அளவளாவுவதிலும் கொண்டு விட்டன. அளவளாவியதால் அன்பு வளர்ந்ததும் இறுதியில் அது திருமணத்தில் வந்து முடிந்ததும் எல்லாம் ஏதோ ஒரு சொப்பனம் போல் மிகக் குறுகிய கால அளவுக்குள் நடைபெற்று அவனைத் திக்குமுக்காடச் செய்தன. இதற்கெல்லாம் காரணம் தன் தோற்றமும் சுபாவமும் உமாகாந்துக்கு மிகவும் பிடித்துப் போயிருந்ததுதான் என்று ஆரம்பத்தில் அவள் எண்ணியிருந்தாள். போகப் போகத்தான், தான் தவறாக முடிவுபண்ணி விட்டது அவளுக்குப் புலனாயிற்று.

சுபாஷ் போஸ் அயல் நாடு சென்றதும் அண்மையிலிருந்த சுதந்திரமும் வெகு தூரத்தில் போய் மறைந்து கொண்டு விட்டதாகத்தான் உமாகாந்த் நினைத்தார். மகாத்மாவோ, ஒத்துழையாமை இயக்கத்தை முதலில் ஒரு மாதம் நிறுத்தி வைத்தார், பிறகு தனி நபர் ஒத்துழையாமை என்றார். கடைசியில் ஒரேயடியாக ஒத்துழையாமை இயக்கத்தை மூட்டை கட்டியே வைத்து விட்டார். தாம் குருடராக இருந்து விட்டதாய்த் தம் மீதே பழி சுமத்திக் கொண்டார். 'லட்சியத்தை அடைந்தால் போதாதாம், அதை அடையும் வழிமுறைகளும் நல்லபடியாக அமைய வேண்டுமாமே இவருக்கு! அன்னியனுடைய கண்களில் விரலைக் கொடுத்து ஆட்டுவதை விடுத்து இந்தச் சாந்த சொரூபியின் சொற்படி கேட்டால் சுதந்திரமாவது, மண்ணாவது?' மகாத்மாவின் உண்ணாவிரதங்கள், ஹரிஜன சேவை, தேசிய நிர்மாணத் திட்டம் எல்லாம் உமாகாந்துக்கு நகைப்புக்கு இடமளிப்பவையாகத் தோன்றின. 'முக்கியமான பிரச்னை நாட்டின் விடுதலை; தும்பை விட்டு வாலைப் பிடிக்கிறாரே இந்தக் கிழவர்?' என்று கருதிய உமாகாந்த், 'ராட்டையைச் சுற்றினால் நூல் வரும், சுயராஜ்யமா வரும்?' என்ற தாகூரின் கூற்றைத் திரும்பத் திரும்பத் தமக்குள் முணுமுணுத்துச் சிரித்துக் கொண்டிருப்பார். 'காந்திஜி ஓர் உபயோகமற்ற நாற்காலி' என்ற சுபாஷ் பாபுவின் அபிப்பிராயம் தான் அவர் ஒப்புக் கொள்ளக் கூடியதாய் இருந்தது. இடையில் பீகார் பூகம்பத்தின்போது தம்மை ஊழியராகப் பதிவு செய்து கொண்டு பாழடைந்து போன முப்பதாயிரம் சதுர மைல்களைச் சுற்றி வந்தார். அப்போதும் அவருக்கு மன நிம்மதி உண்டாகவில்லை. இருபதாயிரம்

பேர்கள் பூகம்பத்தினால் மாண்டார்களென்று மதிப்பிடப்பட்டிருப்பதாய் யாரோ கூறியபோது, ''பூ! இதென்ன பிரமாதம்? என்றென்றைக்கும் நம்மை அடிமைகளாகவே வைத்திருக்க வெள்ளையன் போட்டிருக்கும் பலமான அஸ்திவாரம் கிடுகிடுக்குமாறு நாம் சிருஷ்டிக்க வேண்டிய செயற்கைப் பூகம்பத்தில் லட்சக்கணக்கான மக்கள் உயிரைத் திருணமாக மதித்துப் பிராணத் தியாகம் செய்யத் தயாராகத்தான் இருக்க வேண்டும்'' என்று பதிலளித்துத் தம்மிடம் வாய் கொடுக்கத் துணிந்தவரைத் திகைக்க வைத்தார்.

இப்படி மனச் சோர்வினால் பீடிக்கப்பட்டு வாழ்க்கையே சுவையற்றுப் போயிருந்த தருணத்தில் அதில் இனிப்பூட்ட வந்தவளாகத் தாரா எதிர்ப்பட்டதுதான் உமாகாந்தைத் தம் உறுதியில் இருந்து நழுவி விழச் செய்தது. ஆனால் இதைத் தாரா அப்போது உணரவில்லை. உண்மையில் அவளுக்கு அவர் மேற்கொண்டிருந்த சபதத்தைப் பற்றியே திருமணமாகிப் பல நாட்களுக்குப் பிறகுதான் தெரிய வந்தது. அதுவும் யதேச்சையாகத்தான்.



அதற்கு முன்னால் அவரைப் பெரிய தேசபக்தர் என்று அவள் போற்றினாள். அவருடன் பழகும் வாய்ப்புத் தனக்குக் கிட்டியதே பெரும் பாக்கியம் என்று மனம் பூரித்தாள். படித்த பெண்ணாயிருந்தாளாதலால் வெட்கப்பட்டு ஒதுங்காமல் அவருடன் எந்த விஷயத்தைப் பற்றிவேணுமானாலும் சரிசமமாகவும் சகஜமாகவும் பேசுவது சாத்தியமாக இருந்தது அவளுக்கு. உமாகாந்தோ கேட்பதற்கு ஆள் கிடைத்ததே தமக்கு அடித்த யோகமாகப் பாவித்துக் கடகடவென்று தமது பிரதாபங்களைக் கொட்டித் தீர்த்தார். தேசிய விவகாரங்களைப் பற்றி நேரம் போவதே தெரியாமல் வம்பளப்பார்கள்; இனி மேற்கொள்ள வேண்டிய ஆக்க வேலைகளையெல்லாம் குறித்துத் தர்க்கம் புரிவார்கள்.

உமாகாந்தின் பெற்றோர்கள் அவர், 'சுயராஜ்யம், போராட்டம்' என்றெல்லாம் பேசுவதைக் கேட்கவே சகிக்க மாட்டார்கள். ஆனால் இப்போது தாராவின் ஆர்வத்தைக் கண்டதும் அவர்கள் தங்கள் வாயை மூடிக் கொண்டனர். பெண் என்ற சொல் கேட்டாலே பாய்ந்தோடுகிற பிள்ளை, தாராவுடன் தாராளமாகப் பழகியது மஹீமுக்கும் மிருணாளிக்கும் பெருமகிழ்ச்சியைத் தந்தது. எப்படியோ அவர்களிடையில் ஒரு பந்தம் பாசம் என்று உருவானால் போதும் என்று பிரார்த்தித்துக் கொண்டார்கள். ஆகவே தாராவை அவர்கள் அடிக்கடி வந்து போகச் சொல்லி வருந்தி வருந்தி அழைத்தார்கள்!

சில நாட்கள் காத்திருந்து மெல்லக் கல்யாணப் பேச்சையும் தொடங்கினார்கள். சென்னையிலிருந்து உத்தியோக ஓய்வு பெற்றுக் கான்பூர் திரும்பியிருந்த துவாரகாநாத்தும் உமாகாந்தின் தகப்பனாரும் நெடு நாள் நண்பர்கள். துவாரகாநாத் இங்கிலாந்தில் கல்வி கற்று ஐ. ஸி. எஸ். உத்தியோகம் பார்த்தவர். மேனாட்டுப் பாணியில், 'மகளின் விருப்பத்துக்குக் குறுக்கே நிற்க மாட்டேன்' என்று அவர் மஹீமிடம் சொல்லி விட்டார். தாராவும் நாணத்துடன் தலையசைத்துச் சம்மதம் தெரிவித்து விடவே உமாகாந்தின் பெற்றோர்களுக்குத் தலைகால் புரியவில்லை.

ஆனால் 'பாதி ஆற்றைத் தானே கடந்திருக்கிறோம்?' என்று தங்களைத் தாங்களே நிதானப்படுத்திக் கொண்டார்கள். பயந்து கொண்டே மகனை அணுகி அவன் அபிப்பிராயத்தை அறிந்து கொள்ள முயன்றார்கள். அவ்வளவு சுலபமாகத் தங்கள் ஆசை நிறைவேறி விடும் என்று அவர்கள் எதிர்பார்க்கவேயில்லை. உடனடியாக

உமாகாந்த் சரி என்று கூறி விட்டார். செல்வம் மிக்க இரு குடும்பங்களும் திருமணத்தின் மூலம் ஒன்றாயின.

கல்யாணமான புதிதில் நாட்டுப் பெண்ணை இழுத்து வைத்துக் கொண்டு மிருணாளினி, ''உன்னால்தான் இந்தக் குடும்பம் வாழப் போகிறது; தழைக்கப் போகிறது'' என்று அன்பொழுகப் பேசிப் புகழ்ந்தபோது தாரா சந்தோஷமடைந்தாள். ''கல்யாணமென்றாலே காத தூரம் ஓடிய என் மகனை எப்படியோ கவர்ந்திழுத்து விட்டாயே, கள்ளி!'' என்று செல்லமாகக் கன்னத்தில் தட்டிக் கடிந்து கொண்டபோது அவள் பெருமிதப் பட்டாள். உமாகாந்த் தன் வனப்பிலே கட்டுண்டு போயிருக்கிறார் என்ற உவகைச் செருக்குடன் தன்னை இன்னும் பிரமாதமாகச் சிங்காரித்துக் கொள்வதில் மிகுந்த கவனத்தைச் செலுத்தினாள். அள்ளியெடுத்து அணைக்கத் தூண்டும் வகையில் அலங்கரித்துக் கொண்டு அவள் அழகு நடை பயின்றாள். கண்ணைக் கவரும் கண்களும், கருத்தைக் கவரும் கன்னங்களும், இதயத்தை ஈர்க்கும் இதழ்களும், அதன் இனிமை சொட்டும் ஈரமும், மதியைப் பறிக்கும் மென்னகையும், வெண்மதியைப் பழிக்கும் வதனமும் ஒன்றோடொன்று போட்டியிடவில்லை; அனைத்தும் ஒன்றுகூடித் தங்கள் சக்திகளையெல்லாம் ஒன்றாய்த் திரட்டின, அவரை முழு வெற்றி காண. நெற்றியில் புரளும் கேசச் சுருளும், நெஞ்சில் தவழும் முத்தாரமும், பூரிக்கும் இளமையும், பொங்கும் பிரேமையும் கொண்டு அவள் அவரை நெருங்கினாள்.

அவர் விலகினார்!

திடுக்கிட்ட தாராவை நோக்கிச் சுடு சொற்கள் தீ நாக்குகளாய்ப் பாய்ந்தன: ''அடிமை வாழ்விலும் இத்தனை ஆடம்பரம் தேவைப்படுகிறதா உனக்கு? வெட்கமாயில்லை?''

அதிர்ச்சியாகத்தான் இருந்தது அவளுக்கு. அறிவுள்ள நங்கையாதலால் அதிலிருந்து விரைவிலேயே மீண்டும் விட்டாள். கணவருடைய கருத்துக்கிசைய கதர் உடுத்திக் கொண்டாள். புன்னகையைத் தவிர வேறு நகைகளை அணிவதைத் தவிர்த்தாள். தன்னடக்கத்துடன் திகழ்ந்தபோது அவளுக்குத் தன்னம்பிக்கையும் உண்டாயிற்று. இனிமேல் உமாகாந்த் தன் வசப்பட்டு விடுவார் என்று.

நாளடைவில் அவளை விரும்பி ஏற்கவும் செய்தார் அவர். அவர்கள் வாழ்க்கையில் குதூகலத்துக்குக் குறைவில்லை; சிரிப்புக்குப் பஞ்சமில்லை. இருந்தாலும் தாராவினால் அவர் ஏதோ ஒரு மன வேதனையுடன் போராடுவதைப் புரிந்து கொள்ள முடிந்தது. திடீர் திடீரென்று இந்த உள்ளக் கிளர்ச்சி அவருக்கு ஏற்படும். அந்த நேரங்களில் அவருக்கு மிக மிக அருகில் இருந்தாலும் இருவரும் இரு துருவங்களில் தனித்திருப்பதுபோல் தாராவுக்குத் தோன்றும். ஆசையோடு தம் மனைவியின் விரல்களை உமாகாந்த் பற்றும்போது சில சமயங்களில் சட்டென்று ஏதோ நினைவுக்கு வந்தவர் போலத் துணுக்குற்றுத் தமது கரத்தைப் பின்னுக்கு இழுத்துக் கொள்வார். அவர் உடல் சில்லிட்டுப் போகும். இலேசாக நடுங்கும் தமது கரங்களை அவர் சுய வெறுப்புடன் நோக்குவார்; நெஞ்சைக் கசக்கிக் கொள்வார்; எழுந்து போய் விடுவார்.

ஓரிரு மாதங்களுக்குப் பிறகு கல்கத்தாவிலிருந்து அவரைக் காண வந்த சில சிநேகிதர்கள் தாராவின் உள்ளத்தைக் குத்திக் குடைந்து கொண்டிருந்த சிக்கலை விடுவித்து வைத்தனர். பெரியதொரு தட்டில் அவர்களுக்காக டீயும் பிஸ்கோத்தும் எடுத்துச் சென்ற தாரா, அறைக்குள்ளே அவர்கள் தன்னைப் பற்றி ஏதோ பேசிக் கொள்வது காதில் விழவே தயங்கி நின்றாள்.

''டேய்! சுபாஷ்பாபு அப்பால் போனதும் இப்பால் பையன் எப்படி மாறி விட்டான் பார்த்தாயா?''

''தாராவைப் போன்ற அழகான மனைவியாக வாய்ப்பதாக இருந்தால் சுபாஷ் போஸே 'சபதமாவது சத்தியமாவது' என்று எல்லாவற்றையும் உடைப்பிலே தூக்கி எறிந்து விட்டு மாப்பிள்ளைக் கோலம் பூணுவார்! என்ன உமாகாந்த் அப்படித்தானே?''

இதைத் தொடர்ந்து அங்கே வாதப் பிரதிவாதங்கள் பலமாக நடைபெற்றன. ஒரே ரகளையாக இருந்தது. தாராவுக்கு அதெல்லாம் ஒன்றுமே கேட்கவில்லை. தட்டை அவர்கள் எதிரே வைத்து விட்டுத் தனிமையை நாடித் தன் அறைக்கு ஓடினாள்.

ஆயிரம் தேள்கள் ஒன்று சேரக் கொட்டி எல்லாவற்றையுமே விளக்கி வைத்தன அவளுக்கு! உமாகாந்த் தன்னை நேசித்தார் — சந்தேகமில்லை. ஆனால் அதே நேரத்தில் தமது மன உறுதி குலையக் காரணமாக இருந்த அவளுடைய கவர்ச்சியை வெறுக்கவும் செய்தார்! சந்தர்ப்பச் சூழ்நிலைகள் தாராவுக்குச் சாதகமாக இயங்கிச் சதி செய்து விட்டன. உமாகாந்தைக் குடும்ப வாழ்க்கையில் இழுத்துவிட்டு விட்டன!

இதை உணர்ந்ததும் உமாகாந்த் தன்னை வஞ்சித்து விட்டார் என்ற எண்

ணம்தான் அவள் உள்ளத்தில் மேலோங்கியது. மனக் கசப்பு மிகுந்தது. அவர் சிரித்துப் பேசினால் பசப்பி ஏய்ப்பது போலவும் பரிசாக எதையேனும் அளித்தால் அது குற்றமுள்ள நெஞ்சுடன் கொடுக்கப்படும் லஞ்சமாகவும் தென்பட்டது. ரொம்பவும் சிரமப்பட்டுத் தகாத சிந்தனைகள் என்று அவள் அவற்றை அப்புறப் படுத்த முயன்று, ஓரளவுக்கு — ஓரளவுக்குத்தான் — அதில் முன்னேற்றமும் கண்டாள். 'தமது உயிருக்குயிரான தலைவரின் உதாரணத்தைப் பின்பற்றி மேற்கொண்ட ஒரு சபதமல்லவா அது? அதைச் சாக அடித்து விட்டுத் தன்னை வாழ்க்கைத் துணைவியாக ஏற்கத் துணிந்தாரென்றால் தன் மீது அவருக்கு எவ்வளவு அன்பு இருக்க வேண்டும்?' என்ற ரீதியிலே சிந்தித்துத் தன் மனத்தைத் திருப்திப்படுத்திக் கொண்டாள்.

ஆனால் உமாகாந்தை அடிக்கடி அந்தத் தோல்வி மனப்பான்மை ஆட்கொள்ளத் தொடங்கவே தாராவுடைய நிம்மதியும் குலைந்து கொண்டே வந்தது. பித்துப் பிடித்தவர் போல அவர் கவரைக் குத்துகையிலும், கேசத்தைப் பற்றி இழுத்துக் கொள்கையிலும், கிட்ட வரும் மனைவியின் மீது சள்ளென்று விழுகையிலும் 'ஏமாந்து விட்டோம்' என்ற பீதியே தாராவிடம் தலைதூக்கும்.

இவ்வளவிருந்தும் தன் கணவருக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் அவள் கணப் பொழுதுகூடக் கவனக் குறைவாக இருந்ததில்லை. கண்ணுங் கருத்துமாக அவரைப் பார்த்துக் கொண்டது மட்டுமல்ல, அவரைப் பிடித்துள்ள உள நோயின் மூலகாரணம் என்ன என்பது பற்றித் தனக்குத் தெரிந்ததாயும் அவள் காட்டிக் கொள்ளவேயில்லை. அவர் மீது பழியைச் சுமத்திக் கோபித்துக் கொண்டதுமில்லை.

அன்றாடம் அவள் ஆண்டவனிடம் விண்ணப்பித்துக் கொண்டது ஒன்றே ஒன்றுதான். 'புரட்சிகளிலும் இயக்கங்களிலும் ஈடுபடும் உத்வேகம் உமாகாந்துக்கு மீண்டும் உண்டாகவே கூடாது' என்பதுதான் அவளுடைய அந்தக் கோரிக்கை. அப்படித் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொள்வாரேயானால் பிறகு மனைவி மக்கள் என்ற நினைப்பெல்லாம் அவருக்கு எழாது; நாட்டு நலனுக்காக அநேகமாக அவரைத் தான் இழந்துவிட்டது போலவே ஆகிவிடும் என்பதில் அவளுக்குச் சந்தேகமிருக்கவில்லை.

அவளுடைய இந்த ஐயப்பாடு நூற்றுக்கு நூற்றி ஐம்பது சதவிகிதம் உண்மையாகி விட்டது. உமா



காந்த் குடும்பத்தின் தலைமைப் பதவியை மட்டும் துறந்து விட்டுப் போகவில்லை; உலகையே உதறித் தள்ளிவிட்டுச் சென்று விட்டார்!

சுபாஷ்பாபு அக்கரைச் சீமைகளில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருந்த வரையில் பல்லைக் கடித்துக் கொண்டு சும்மா இருந்தவர், தலைவர் தாய் நாடு திரும்புகிறார் என்றதும் தோள்கள் தினவெடுத்துத் திமிரேற எழுந்தார். உண்மையை அறிந்தால் தாரா தகராறு செய்வாள் என்பதால் அவளால் விளையக் கூடிய தடங்கல்களைச் சமாளிக்க, 'காலதாமதமாகவேனும், தேன் நிலவுக்குக் கிளம்பலாம்' என்று சமாதானமாய்க் கூறிப் பம்பாய்க்கு வந்து சேர்ந்தார்.

தியாகபூமியில் விழுந்து புரண்டு அதன் விடுதலைக்காகத் தான் படும் அவதியை அதற்கு உணர்த்திவிட்டு உயிர்பிரிந்தார்.

அத்தியாயம் 30

விளக்கம் தேவையா?

உமாகாந்த் மேலுலகம் சென்றதும் துயரக் கடலில் மூழ்கியிருந்த தாராவுக்குத் துணையாகக் கான்பூர் வரையில் போனான் வடிவேலு. அவள் தகப்பனார் துவாரகாநாத்திடம் அவளைஒப்படைத்து விட்டுத்தான் ஊர் திரும்பினான். அந்த ரயில் பிரயாணங்களின் போதும், அதற்குப் பல நாட்களுக்குப் பின்னரும்கூட, உமாகாந்தின் நடத்தை குறித்து எத்தனையோ விதமாக எண்ணியது அவன் மனம். யோசித்து யோசித்து மூளையைக் குழப்பிக் கொண்டதில் தன்னலமற்ற தியாகியாக அவரைக் கருதி அவர் சார்பிலே வாதாடியதன் மூலம் தாராவுக்குத் தான் பெரிய தீங்கு இழைத்து விட்டதாகத்தான் முடிவுக்கு வந்தான்.

'உண்மையில் அவர் தன்னலமற்றவரே அல்ல! அல்பாயுளில் தம் வாழ்வுக்கு உலை வைத்துக் கொண்ட அசடர்; தாராவை வாழாவெட்டியாக்கி விட்டுச் சென்ற வஞ்சகர்! விடுதலைப் போராட்ட சரித்திரத்தில் தமது பெயர் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட வேண்டும் என்று பேராசைப்பட்டாரே அந்த விருப்பமாவது நிறைவேறியதா? அதுவுமில்லை. பத்திரிகைகளில் கூட ஏதோஒரு மூலையில் இரண்டு வரிகள்: 'துறை முகத்தில் சம்பவம்' என்று கண்ணுக்குப் புலனாகாத எழுத்துக்களில் அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். அவர் பெயரைக் கூட வெளியிடவில்லை அதில். அந்தப் போலீஸ் அதிகாரியின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று துவாரகாநாத் விண்ணப்பித்துக் கொண்டாரே, அதுவும் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடிந்தது. கடமையைச் செய்ய வொட்டாது குறுக்கே நின்றவனைத் தாக்கியதில் தவறில்லை என்று தீர்மானித்து விட்டது அரசாங்கம். ஆகக் கூடி உமாகாந்த் சாதித்தது என்ன? தமக்கும் தமது குடும்பத்துக்கும் துன்பத்தைத் தேடிக் கொண்டதுதான்!'

தாராவுடன் இன்று தேனூரில் தனித்திருக்க நேர்ந்த சந்தர்ப்பத்தில் உமாகாந்தை முழுமையாக அவள் வார்த்தைகளால் படம் பிடித்துக்காட்ட, அவருடைய குணாதிசயங்களைக் குறைவறக்கண்டு கொண்ட வடி



வேலுவுக்குத் தான் அவரைப்பற்றித் தவறாக அபிப்பிராயப் பட்டுவிட வில்லை என்பது நிச்சயமாயிற்று. அதை அவ விடமும் அவன் சூசகமாக வெளியிட்டான். ''ஆரம்பத்தில் நான் அவரிடம் ரொம்பவும் மதிப்பு வைத்திருந்தேன், தாரா!'' என்றான் வருத்தத்தோடு.

அவசரம் அவசரமாக, ''அது அப்படியே நீடித்து நிலைக்கட்டும்'' என்றாள் தாரா. ''என்னுடைய முட்டாள்தனத்தில் உங்களுக்கும் பங்கு வேண்டாம்!''

வடிவேலு வியப்புடன் அவளை ஏறிட்டு நோக்கினான். ''உங்களை நீங்களே ரொம்பக் கடுமையாகத் தாக்கிக் கொள்கிறீர்கள்!''

''எவ்வளவு திட்டிக் கொண்டாலும் போதாது'' என்றாள் அவள். ''கண்ணாடி மாளிகைக்குள் இருந்து கொண்டு கல்லெறியக் கூடாது என்பார்கள். அந்தக் காரியத்தைத்தான் நான் செய்தேன். தமக்கு மிகவும் பிடித்தமான தேச சேவையையே பின்பற்றிச் சென்று, குடும்பத்தைக் குறித்துச் சிந்திக்காத சுயநலக்காரர் என்று அவர் மீது குற்றம் சாட்டியது நானல்ல; என்னுடைய சுயநலம்தான் நாவை அப்படிப் புரண்டு கொடுக்கச் செய்தது. அதை அன்று நான் மறந்து விட்டேன். இன்று, — அவர் மறைந்து போன பிறகு — ஞாபகப்படுத்திக் கொண்டு மனம் புழுங்குகிறேன்.''

வடிவேலுவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. சிரமப்பட்டுப் பேசினான்: ''தாரா! மனப்பூர்வமாகச் சொல்கிறேன்; இந்த உலகம் முழுதும் தேடி அலைந்தாலும் உங்களைப் போல் பண்புமிக்க ஒரு பெண்ணைக் கண்டு பிடிப்பது சாத்தியமில்லை!''

அடக்கமாகச் சிரித்துக் கொண்டு தாரா எழுந்தாள், ''கிளம்புவோமா? அஸ்தமன நேரமாகி விட்டதே'' என்று கேட்டவாறே. தன் முதுகுப் புறமாய் வந்து கழுத்தைக் கட்டிக் கொண்டு தொங்கிய மோகனை முன்னுக்கும் பின்னுக்குமாய் ஆட்டி மகிழ்ந்துகொண்டிருந்த வடிவேலு அவள் கரத்தைப் பற்றினான். ''இவ்வளவு சீக்கிரமாகப் புறப்படாவிட்டால் என்ன? நாளைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே? பள்ளிக்கூடம் கூடக் கிடையாதே; என்ன காரியமாக இருந்தாலும் நிதானமாக நாளைக்குக் கவனித்துக் கொள்ளுங்கள்'' என்று அவன் சொல்ல, தாராவும் தன் கரத்தைச் சூழ்ந்திருந்த விரல்களின் அழுத்தமான வற்புறுத்தலுக்கு இசைந்து மீண்டும் உட்கார்ந்து கொண்டாள்.

காவிரி ஆற்றங்கரையில் பசும் புல் தரையில் அமர்ந்திருந்த அவர்களுக்கு அங்கிருந்து அசையக்கூடப் பிடித்தமில்லைதான். தன் கால்களை நனைத்துப் பாயும் நதியின் நீரையும், கேசத்தை அலைத்துச் செல்கின்ற தென்றலையும் விட்டுப் போகத் தாராவுக்கு விருப்பமேயில்லை. மாலைச் சூரியனின் பொன்னொளி பட்டுக் காவிரி நதி நீரம் உருக்கிய தங்க ஆறாக உருமாறியிருந்தது. அச்சில் அதை வார்த்து உறையச் செய்த பொற்காசுகளாகச் சரக்கொன்றைப் பூக்கள் அருகே ஒரு மரத்தில் குலுங்கிக் கொண்டிருந்தன.

நீரின் மேல் தவழ்ந்து வந்த பூங்காற்று உடலைத் தழுவிக் குளிரச் செய்தது. அலை அலையாக அசைந்தாடும் நாணல் காட்டின் பசுமை கண்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுத்தன. அந்தப் புதர்களினூடே தென்றல் புகுந்து ஒளிந்து விளையாடியபோது எழுந்த நாதம் செவிகளுக்குக் குளிர்ச்சியாக இருந்தது. காவிரி நீரினைக் கரத்தால் அளைந்து அள்ளி எடுத்துப் பருகிய போது நாக் குளிர்ந்தது. சற்றுத் தொலைவில் இருந்தாலும் அந்தப் பன்னீர் மரத்தில் பச்சைப் பசேலென்றிருக்கும் இலைகளுக்கு மத்தியில் வெண்மையான பூக்கள் சோபித்ததுடன் நாலா பக்கமும் நறுமணத்தையும் பரப்பிக் கொண்டிருந்தன. இப்படிப் புலன்கள் ஐந்தும் குளிர்ந்திருந்தும்கூட வடிவேலுவின் உள்ளம் குளிரவில்லை... அங்கே ஒரு தாபம் வெஞ்சுடராக எரிந்து கொண்டிருந்தது.

''உங்களுக்குத்தான் இப்போதெல்லாம் வேளைக்குச் சாப்பிடக் கூடப் போது இருப்பதில்லை'' என்று குறைப் பட்டுக் கொள்வது போலக் கூறினான் வடிவேலு. ''இன்றைக்காவது கொஞ்ச நேரம் இந்த இயற்கைச் சூழலை நிம்மதியாக அனுபவியுங்கள்.''

அவன் கூறியது பொய்யில்லை. வாய் வார்த்தையாக வடிவேலுவுடன் தனிமையில் பேசியபடி தாரா கழித்த காலம் மிகச் சொற்பம். ஏன், பாரு உள்பட யாரிடமுமே, அவள் அநாவசியமாக வம்பு வளர்த்துப் பொழுதை வீணாக்குவதில்லை. மாலை நேரங்களில் பள்ளி விட்டாலும் சிறுவர் சிறுமியரெல்லாம் வீடு திரும்பிய பிறகும் தாரா அந்தக் கொட்டகைக்குள்ளேயே அடைந்து கிடப்பாள். தரையில் உட்கார்ந்து தன் அலுவல்களைக் கவனித்துக் கொண்டிருப்பாள். அவள் எதிரே சிறிய மேஜை ஒன்று இருக்கும். அதன் மீது ஒரு மைக்கூடு, பேனாக் கட்டை, சில தாள்கள், அவை பறக்காமல் இருக்க ஒரு கருங்கல்—இவை இருக்கும். மேஜைக்குப் பக்கத்தில் சில நோட்டுப் புத்தகங்கள் இறைந்து கிடக்கும். தலைமை



சீரான ஆகாரமில்லாததால்
நீங்கள்
மெலிந்திருக்கிறீர்களா?

ஆல்போஸாங் சாப்பிடுங்கள்

**மிகச் சிறந்தது
சாதாரண உணவுடன் சேர்ந்து
சிக்கனமான, விஞ்ஞான முறையில்
ஊட்டமளிப்பது**

தேநீர், காப்பி, பால், கஞ்சி, பழரசம் முதலியவைகளுடன் சேர்த்து அருந்தினால் மிக ருசியாக இருக்கும். சிறு குழந்தைகளுக்கும், வளரும் பிராயத்திலும், பிரசவகாலத்தில் தாய்மார்களுக்கும், சிந்திக்கும் தொழிலாளிகளுக்கும், முதியவர்களுக்கும், பலவீனம் இரத்தமின்மை மற்றும் நோயிலிருந்து தேறி வரும் போதும் ஆல்போ-ஸாங் சிறந்த டானிக் உணவாகிறது.



பௌடர் மற்றும் மாத்திரைகளாகவும் கிடைக்கிறது.

ஜே. & ஜே. டீஷேன்,
ஹைதராபாத்—டெக்கான்

ஆசிரியை என்ற ஹோதாவில் அவளுக்குத் தனிப்பட்ட வேலைகள் பல இருந்தன. வரவு செலவுக் கணக்குகள், மாணவ மாணவியரின் முன்னேற்றம் பற்றிய குறிப்பேடுகள், பள்ளியின் அபிவிருத்திக்கான கடிதப் போக்குவரத்துக்கள் — இப்படிப் பலவகையிலும் அவளுக்கு வேலை சரியாக இருந்தது. போதாக்குறைக்கு எழுதுகோலைப் பிடிக்கும் குழந்தைகளின் நோட்டுப் புத்தகங்களையெல்லாம் திருத்த வேண்டிய தலைவலி வேறு!

சிறுவன் மோகன் மட்டிலும் தன் தாயார் வீடு திரும்பத் தயாராகும் வரையில் ஏதேனும் ஒரு புத்தகத்தைப் புரட்டிப் படங்களைப் பார்த்துக் கொண்டிருப்பான். அல்லது ஒரு பொம்மையை வைத்துக் கொண்டு தனக்குத் தானே பேசி விளையாடிக் கொண்டிருப்பான். தன் கடமைகளில் அவள் ஆழ்ந்து போய் விட்டிருக்கும்போது பல தடவைகளில் வடிவேலு அவளெதிரே வந்து நின்றிருக்கிறான். அவன் அருகிலிருப்பது கூடத் தெரியாமல் அவள் காரியத்தில் கண்ணாயிருப்பாள்.

''யானையைக் கொண்டு வந்து நிறுத்தினால் கூட மிரள மாட்டீர்கள் போலிருக்கிறதே'' என்பான் வடிவேலு.

திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்து, ''நீங்களா? இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன். சற்று உட்காருங்கள்'' என்பது போல் ஏதேனும் கூறித் தட்டிக் கழிப்பாள் தாரா.

''சரிதான்! உங்களுடைய ஒரு நிமிஷம் என்பது எவ்வளவு மணி நேரம் என்று எனக்கு நன்றாகப் பழக்கமாகி விட்டது. நான் மோகனுடன் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் சாவகாசமாக வந்து சேர்ந்து கொள்ளுங்கள்'' என்று கூறி விட்டுச் சிறுவனை உப்பு மூட்டையாகத் தூக்கிக் கொண்டு போவான் வடிவேலு. தன் மகன் வடிவேலுவிடம் சுலபமாக ஒட்டிக் கொண்டு விட்டதைப் பார்த்து மனம் மகிழ்வாள் தாரா. இப்போதெல்லாம் அவ்விருவரும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு சரளமாகப் பழகியது மட்டுமல்ல, வடிவேலு மீது தன் தாயாருக்குச் சிறிது பொறாமையே உண்டாகும் அளவுக்குச் சிறுவன் மோகன் 'சாசா'வுடன் இழைந்தான். அவனுக்கு ஏற்ற விதங்களிலெல்லாம் வளைந்து கொடுத்து வடிவேலு விளையாடினால் சிறுவனுக்கு அவன் மீது அன்பு அதிகரிக்காமல் என்ன செய்யும்? மரக்கிளைகளிலிருந்து மோகனைத் தன் கரங்களில் குதிக்கச் செய்தான், ஆற்றுநீரில் குளிப்பாட்டினான், வயல் வரப்புக்களுக்கு இட்டுப் போனான், வேண்டிய பழங்களைப் பறித்துத் தந்தான், ஆடுமாடுகளை மேய்க்கக்கூட அனுமதித்தான் வடிவேலு. ஒரே குஷிதான் மோகனுக்கு. அவனுக்குச் செல்லம் கொடுத்துக் கெடுத்துக் குட்டிச் சுவராக அடிப்பதாய்க் குற்றம் சாட்டுவாள் தாரா.

இப்போதும் அதையே கூறினாள்: ''பாருங்கள், அவன் உங்களைப் படுத்துகிற பாட்டை! ஆனாலும் அவனுக்கு இவ்வளவு இடம் கொடுத் திருக்கக் கூடாது, நீங்கள்!''


யானைச் சவாரி செய்ய வேண்டுமென்று வடிவேலுவை இம்சித்துக் கொண்டிருந்த மோகன், தாயார் கோபமாக இருப்பதை உணர்ந்து வாயில் விரலை வைத்துக் கொண்டு தயங்கியபடியே நின்றான்.

''இருக்கட்டுமே!'' என்று சிறுவனைக் கட்டி அணைத்துச் சொன்னான் வடிவேலு. ''உங்களுக்குத்தான் கழுத்து மட்டும் வேலைகள்; யாரையும் லட்சியம் செய்வதில்லை. மோகனுடன் விளையாட நான் ஒருவனாவது வேண்டாமா? எனக்குக் குடிமுழுகிப் போகிற காரியம் என்ன கெட்டழிகிறது?''

''நீங்கள் அநாவசியமாக என்னைக் குத்திக் காட்டுகிறீர்கள். இன்றைக்கு இது இரண்டாவது தடவை!''

''நிஜத்தைத்தானே கூறுகிறேன் நான்?'' என்றான் வடிவேலு.

''மூன்று வருஷங்களுக்குப் பிறகு வாழ்க்கையில் இப்போதுதான் எனக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்கிறது. குழந்தை



பீஹார் கவர்னர் திரு எம். அனந்தசயனம் அய்யங்கார் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி ருக்மிணிக்கும் திரு பி. ஆர். சீனிவாசன் பி. ஈ.க்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது. மணமகன் பெங்களூர் பாரிஸ்டர் அட் லா திரு ரங்கசாமியின் புதல்வர். புதுமணத் தம்பதிகள் நீடூழி காலம் சிறப்புடன் வாழ வாழ்த்துகிறோம்.

சனுடன் குலவும் போது மனத்துக்கு இதமாயிருக்கிறது. அன்றைக்கு நீங்கள் சொன்னீர்களல்லவா, 'விடிவு காலம் வராமல் போகாது' என்று. அது உண்மையாகவே வந்து விட்டதாய்த் தோன்றுகிறது. இப்படி நான் கொஞ்சம் சந்தோஷப்படுவது உங்கள் கண்களை உறுத்துகிறதா? பழையபடி நான் அமைதியிழந்து அவஸ்தைப்பட வேண்டுமென்கிறீர்களா?''

வடிவேலுவுக்கு அவன் போக்கு பிடிக்கவேயில்லை. 'தாரா! விடிவு காலம் வராமல் போகாது என்று நான் எதைக் குறிப்பிட்டேன் என்று உங்களுக்கு வாஸ்தவமாகவே விளங்கவில்லையா, அல்லது புரிந்து கொண்டும் உணராதது போல் நடிக்கிறீர்களா?'— இப்படி அவளைக் கேட்போமா வேண்டாமா என்று சில விநாடிகள் சிந்தித்தான் வடிவேலு.

அதற்குள் நாணல் புதர்களுக்கு மத்தியில் ஏதோ சலசலப்புச் சத்தம் கேட்டு அவ்விருவரது கவனத்தையும் கவர்ந்தது. (தொடரும்)

அப்பே பியரே

சமீபத்தில் தில்லியில் நடைபெற்ற அணு ஆயுதத் தடுப்பு மகாநாட்டுக்குப் பிரான்ஸிலிருந்து வந்திருந்த அப்பே பியரே என்ற பெரியார் சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்தார். இவர் தமது வாழ்க்கையை ஏழைகளின் பணிக்கே அர்ப்பணித்தவர்.

அப்பே பியரே சிறிது காலம் பிரான்ஸ் நாட்டு பார்லிமெண்ட் அங்கத்தினராக இருந்தார். அப்போது அவருக்கு ஓர் அனுபவம் ஏற்பட்டது. யாரோ ஒருவர் தற்கொலை செய்து கொள்ள முற்பட்டு, குற்றுயிராகக் கிடப்பதாகக் கேள்விப்பட்டு அவ்விடத்துக்கு விரைந்தார். அந்த மனிதன், கொலைக் குற்றத்துக்காக இருபது வருஷம் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு வெளியே வந்தவன். வந்த இடத்தில், தந்தை தாய், மனைவி, குழந்தை ஒருவருமே இல்லாதது கண்டு, தான் இருந்து இனி என்ன பயன் என்று தற்கொலை செய்து கொள்ள முற்பட்டானாம். அவனுக்குச் சாப்பாட்டுக்குப் பணம் கொடுத்திருந்தால் திருப்தி அடைய மாட்டான் என்று கண்டார் அப்பே பியரே. அதனால் ''நான் வீடு கட்டி வருகிறேன் — ஏழைகள் தங்குவதற்காக. நீ இந்த வேலையில் எனக்கு உதவ வருகிறாயா ?'' என்று கேட்டாராம். வாழ வேண்டியதற்கு ஒரு காரணம் கிடைத்து விட்டது என்றுணர்ந்தான் அவன். மகிழ்ச்சியுடன் அவருடன் வேலைக்கு வந்தான்.



சென்ற உலக யுத்தத்துக்குப் பிறகு பிரான்ஸில் வீடுகள் பற்றாக்குறை பெரும் பிரச்னையாகி விட்டது. ஆகவே, ஏழைகள் தங்குவதற்காக என்று பாடுபட்டுப் பணம் திரட்டி வீடுகள் கட்டத் திட்டமிட்டார் பியரே. இதற்கு ஏழைகளே மனமுவந்து உதவி வருகிறார்களாம். இம்முறையில் 23 வீடுகள்கட்டி, 6,00000 ஏழை மக்கள் தங்க வசதி செய்து கொடுத்திருக்கிறாராம். 'தன்னலம் கருதாத தொண்டர் படை உண்டெனில் சாதிக்க முடியாத பணிகளைச் சாதிக்கலாம்' என்கிறார் இவர். ஒவ்வொரு நாட்டுக்கும் தனித்தனிப் பிரச்னைகள் உண்டு. பிரான்ஸில் தொடங்கிய வீடுதிப் பணி வேறு நாட்டில் எடுபடாது. ஆகவே அந்தந்த நாட்டுப் பிரச்னையை நுணுகி ஆராய்ந்து பணி புரிய வேண்டும். மொராக்கோ நாட்டில் வீடுதிப் பணி புரியக் கேட்டார்களாம். ஆனால் அங்கு கல்வியறிவைப் பரப்புவது தான் மக்களுக்குத் தேவை என்பதை உணர்ந்து அப்பணியைத் தொடங்கினாராம் அப்பே பியரே.

ஒரு நண்பர் ''இந்திய நாட்டுக்கு எப்பணி தேவைப்படுகிறது?'' என்று கேட்டார். ''இந்திய மக்கள் கோருவது வேலை, வேலை, வேலை'' என்று பதிலளித்தார் பியரே.

''கிராம மக்களுக்குச் சிறிய கைத்தொழில்கள் செய்ய வாய்ப்பளித்தால் இந்தியா எவ்வளவோ சுபிட்சமடையும்'' என்றும் கூறினார்.

அப்பே பியரே நீள அங்கி அணிந்து தோளில் ஒரு பையை மாட்டிக்கொண்டு சிரித்த முகத்துடன் காட்சியளிக்கிறார். அவரைப் பார்க்கும்போது ஒரு நல்ல ஆத்மாவைத் தரிசித்த திருப்தியும் நிறைவும் ஏற்படுகின்றன. - என். வி. என்.

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்



உங்களுக்குப் பிடித்தமான கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும், கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத் தவறாமல் தேய்த்து வருவது கூந்தல் அடர்த்தியாக அழகுடன் வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.



எல்லோரும் அதிசயிக்கும் வண்ணம் உங்கள் கூந்தலின் உண்மையழகை வெளிப்படுத்த கால்கேட் உதவுகிறது.



மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

ECHO-Q-4.TAM.

ஸியஸ் கடவுளின் சிலை


புகழ்பெற்ற புராதன அதிசயங்களில் ஒன்று ஒலிம்பியா என்ற நகரில் எழுப்பப்பட்டிருந்த பிரும்மாண்டமான சிலை. ஸியஸ் என்ற கடவுளின் நினைவாக உருவானது இந்தச் சிலை.



கிரேக்க நாட்டுச் சிலைகளிலேயே மிக உன்னதமானது என்று புகழ்பெற்றது. இந்த அற்புதச் சிலை இருந்த அடையாளங்களோ துவும் ஒலிம்பியாவில் கிடையாது. ஆனால் இப்படி ஒரு சிலை இருந்தது என்பது எதனால் தெரிய வருகிறது தெரியுமா? எலிஸ் என்ற புராதன நகரில் கிடைத்த சில நாணயங்களில் இந்தச் சிலையின் உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அதன்படி ஸியஸ் தேவதை நாற்பதடி உயர முன்ன பீடத்தில் உட்கார்ந்திருந்திருக்க வேண்டுமென்று கருதுகிறார்கள். ஸியஸின் உடல் தந்தத்தினாலும் உடைகள் தங்கத்தாலும் ஆக்கப்பட்டிருந்தனவாம். ஐந்தாம் நூற்றாண்டில் இந்தச் சிலை கான்ஸ்டாண்டிநோபிளுக்குக் கொண்டு போகப்பட்டது. கி. பி. 476-ல் அங்கு ஏற்பட்ட ஒரு பெருந் தீ விபத்தில் ஸியஸ் சிலை அழிந்து மறைந்தது.

காட்டுக்குள்ளே...



கறுப்பு மான்

உங்களை எல்லாம் காட்டுக்கு அழைத்துக் கொண்டு போகப் போகிறேன். கானகத்தின் குழந்தைகளான மிருகங்களின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்கக் கேட்க வியப்பாக இருக்கும்.

மான் என்றாலே உங்கள் முகம் மகிழ்ச்சியால் மலரும். அழகும் அமைதியும் நினைவுக்கு வரும். பட்டுப் போன்ற உடல், மருண்ட பார்வை, துள்ளி ஓடும் அழகு இதெல்லாம் உன் மனத்திலே தோன்றுகிறதல்லவா? இதோ மேலே புள்ளது கறுப்பு மான். (பிளாக் பக்) கலைமான் வகையைச் சேர்ந்தது. நம் பாரதத்தில் காணப்படும் பல வகை மான்களில் இதுவும் ஒன்று. குட்டையான புல் மண்டிக் கிடக்கும் சம வெளிகளே இதன் வாழுமிடம். அடர்ந்த கானகங்களையோ, நீண்டுயர்ந்து வளர்ந்துள்ள புல் வெளிகளையோ, புதர்கள் மண்டிக் கிடக்கும் பிரதேசங்களையோ இவை விரும்புவதில்லை. இது உருவத்தில் சிறியது. நிமிர்ந்து நின்றால் அதன் (தோள் வரை) உயரம் முப்பத்திரண்டு அங்குலங்கள் தான் இருக்கும். நன்றாக வளர்ந்த ஆண் மானின்

யார் இவர் அறிவாயோ?



மனித சமுதாயம் என்றும் மறக்கமுடியாத சாதனையைச் செய்தவர் இவர். காந்திமகான் இறந்த செய்தியை, ஒரு விநாடியில் ஏழில் ஒரு பங்கு நேரத்துக்குள் உலகமெல்லாம் அறிந்து கொள்ளும் படியான வழி வகைகளை ஆக்கித் தந்தவர். உன் வீட்டில் உட்கார்ந்தபடி ஒரு கைப்பிடியைத் திருப்புவதன் மூலம், டெல்லியிலிருந்து பிரதமர் நேருஜி பேசுவதைக் கேட்கும் வாய்ப்பை உனக்கு அளித்த அறிஞர்.

பௌதிகத்திற்கான நோபல் பரிசு பெற்ற இவரது தகப்பனார் இத்தாலி தேசத்தவர். தாயாரோ அயர்லாந்தைச் சேர்ந்தவர். அப்படி இருந்தும் இவரை எல்லோரும் இத்தாலி நாட்டவர் என்று சொல்லுவார்கள்.

கம்பி இல்லாத் தந்தியைக் கண்டு பிடித்த விஞ்ஞானியாகப் பிற்காலத்தில் புகழ் பெறுவதற்கு முன்பு, சின்னஞ்சிறு வயதில் தமது வீட்டின் ஒரு அறையிலிருந்து மற்றோர் அறைக்குக் கம்பியில்லாத் தந்தி மூலம் செய்திகள் அனுப்பி வெற்றி கண்டார். பிறகு இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள இடத்துக்கு இதே போலச் செய்தியை அனுப்பி வெற்றி

வைத்தியரின் மருந்து

ஓர் ஊரில் ஒரு வைத்தியர் இருந்தார். நோயையும் நோயாளியையும் அறிந்து வைத்தியம் செய்வதில் வல்லவர் அவர். அவ ரிடம் மருந்து கால், மதி முக்கால். ஒருநாள் ஒரு குடியானவன் அவரிடம் வந்தான், நொண்டி நொண்டி நடந்தபடி. ''என்னப்பா காலில்?'' என்று கேட்டார் வைத்தியர். அவன் உடனே சிலேடையில் தனது நோயைக் கூறினன். ''முக்குறுணி கொண்டு மூவிரண்டுக் குப் போகையிலே, ஐந்து தலை நாகம் நாமா காணியில் கவ்வ, என் மாகாணியில் வலி யேறி விட்டது ஐயா! இதற்கு மருந்தென்ன?''

வைத்தியர் நிதானமாக அவன் குறிப்பிட்ட படியே சிலேடைப் பாஷையில் மருந்து சொன் னார். ''பத்துரதன் புத்திரனின் மித்திரனின் சத்துருவின் பத்தினியின் காலை வாங்கி அதில் தேய். சரியாகி விடும், வேறொன்றுமில்லை'' குடியானவனும் அதன்படியே செய்து குணங் கண்டு முகமலர்ச்சியுடன் போனன்.

இதைப் படிக்கும் உங்களுக்கு ஒன்றும் புரிய வில்லையல்லவா? விஷயம் இதுதான்.

முக்குறுணி நெல்லை எடுத்துக் கொண்டு மூவிரண்டு (3X2)க்கு —ஆறுக்குச் செல்கிறன் குடியானவன். அங்கே ஐந்து முனைகளை யுடைய (ஐந்து தலை நாகம்) நெரிஞ்சி முள் (நாமாகாணியில் — நாலு மாகாணி=கால்) காலில் குத்த அதனல் ஏற்பட்ட வலி என் மாகாணி (அரை) இடுப்புக்குக் மேலே ஏறிற்றும்!

இதற்கு வைத்தியரின் மருந்து? பத்துஎன்ற எண்ணுக்கு வடமொழியில் தசம் என்று சொல்வார்கள். பத்து ரதன்—தசரதன். அவர் புத்திரன்—ராமன். அவன் மித்திரன் சுக்ரீவன். அவன் சத்துரு வாலி. அவன் பத்தினி தாரை. பத்தினி தாரையின் (தாரை என்ற எழுத்தின்) காலை வாங்கி விட்டால் தரை என்று ஆகும் இல்லையா? முள் குத்திய காலைத் தரையில் தேய் என்பதற்காகத்தான் இத்தனையும்.

- ஜி. ராமமூர்த்தி

உடலின் மேல் பகுதி கருமை கலந்த காவி வர்ணமாகவும் அடிப்பாகம் பால்வெள்ளையாக வும் இருக்கும். மான் குட்டிகளுக்கும், பெண் மானுக்கும் உடலின் மேல் பகுதி வெளிர் காவி வர்ணமாகவும் அடிப்பாகம் வெண்மை யாகவும் இருக்கும்.

ஆண் மானுக்குத்தான் கொம்பு உண்டு என்பது உனக்குத் தெரியுமே. 'பிளாக் பக்' என்ற இந்த வகை மான்களின் கொம்புகள் ரொம்ப நீளமானதில்லை. ஆனல் உறுதியும் அழகுமுடையவை. மூன்றிலிருந்து ஐந்து வரையுமான வளைவுகளும் கொம்பு முழுவதும் அடுக்கடுக்கான வளையம் போன்ற கணுக்க ளோடும் காட்சியளிக்கும் இதன் கொம்பு மிகவும் கவர்ச்சிகரமாக இருக்கும்.

சாதாரணமான மான்களைப் போல இது அத்தனை பயந்த சுபாவமுடையதல்ல. வேட்டையாடும் நோக்கமின்றிச் சென்றால், நூற்றைம்பது கெஜ தூரம் வரைகூட இதன் அருகே செல்லலாம். அபாயம் என்று அறிந் தால் போதும், வியக்கத் தக்க விதத்தில் துள்ளிப் பாய்ந்தோடும் ஆற்றல் படைத்தவை இந்தக் கருப்பு மான்கள். ஒவ்வொரு துள்ள லுக்கும் ஆகாயத்தில் பறப்பது போன்ற பிரமை ஏற்படும் நமக்கு. உறுதியான காய்ந்த பூமியில் வேட்டை நாய்களினல்கூட இதன் வேகத்தைச் சமாளிக்க முடியாது. மணல் பிரதேசத்திலும், மழைக்காலத்தில் ஈர மான பூமியிலும்தான் நாய்களின் உதவியால் இதை வேட்டையாடுவார்கள்.

நூற்றுக் கணக்கில் மந்தைகளாகக் கூடி வாழும் குணமுடைய 'பிளாக் பக்'கின் உணவு பசுமையான புல்தான்.





கண்டார். தமது சாதனையின் வெற்றியிலே குதூகலித்திருந்த மகனைப் பார்த்துத் தந்தை ''உன் நேரத்தை ஏன் இப்படி வீணுக்கு கிறய்?'' என்று கடிந்து கொண்டார். ஆனல் இந்த வாலிப விஞ்ஞானி தமது சாதனையின் சில பகுதிகளை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு 50,000 பவுன்களுக்கு விற்ருர். இதற்குப் பிறகுதான் மகனுடைய திறமையிலே தந் தைக்கு நம்பிக்கை பிறந்தது!

1901-ல் இந்த விஞ்ஞானியின் கனவு நன வாகும் நாள் வந்தது. இங்லொந்திலிருந்து அனுப்பப்படும் செய்தியைக் கம்பியில்லாமல் அமெரிக்காவில் பெறுவதற்கு முயற்சி செய்ய லானர். நியூபவுண்டுலாண்டில் போய் இறங்கி னர். தமது கருவியை அங்கு அமைத்தார்.

பல மணி நேரம் காத்துக் கிடந்தார். பலனே இல்லை. தமது ஆராய்ச்சிகள் தோல்வி யடைந்து விட்டன என்று மனமுடைந்து போனர் இந்த விஞ்ஞானி. திடீரென்று அவரது கருவியில் மெல்லியதொரு சத்தம் உண்டாயிற்று. அதையடுத்து மற்றொன்று! இன்னுமொன்று! தந்தியில் உபயோகிக்கப் படும் 'S' என்ற எழுத்தின் அடையாள மான மூன்று புள்ளிகள் தான் அந்த மூன்று ஒலிகளும். அவர் எதிர்பார்த்த செய்தி யும் அதுதான். தம் ஆராய்ச்சி பலனளித் ததை அறிந்த அவர் துள்ளிக் குதித்தார். 'உலகத்தின் ஒரு கோடியிலிருந்து மறுகோடியி லுள்ளவருடன் பேசலாம்' என்ற புதுமையை ஐந்து கண்டங்களிலுமுள்ள பத்திரிகைகள் இந்த விஞ்ஞானியின் சாதனை என்று கதை கதையாக வெளியிட்டன. கம்பியில்லாத் தந்தி பிறந்து விட்டது. இதற்குக் காரணமாக இருந்த இந்த விஞ்ஞானி யார்? இன்னுமா தெரியவில்லை? **இவர்தான் மார்கோனி.** 'ஒயர் லெஸ் டெலிகிராபி' என்ற மகத்தான சாதனை யைக் கண்டுபிடித்த போது மார்கோனிக்கு வயது இருபத்தியேழு. இவர் இல்லாவிட்டால் இன்று நாம் ரேடியோவை அனுபவிக்க முடியுமா?

கடுவன் பூனை





இந்த இதழில் ஓர் அழகிய பூனை செய்யும் முறையைச் சொல்லித் தரப் போகிறேன். கெட்டியான காட்ரிட்ஜ், அல்லது டிராயிங் காகிதத்தை எடுத்துக் கொள். மான் செய்வதற்கு எப்படிக் கட்டான் போட்டுக்கொண்டு உடலின் பாகங்களை வரைந்து கொண்டாயோ அப்படியே இங்குள்ள பூனையின் பாகங்களையும் காப்பி செய்து கொள்.

முதலில் பூனையின் உடலையும் வாலையும் வரைந்து கொள். உடல் பாகத்தின் நான்கு கால்களிலும் வால் பகுதியிலுமுள்ள புள்ளிக் கோட்டின் மீது பேனாக்கத்தியின் பின் பக்கத்தால் (காகிதம் கிழிந்து விடாதபடி) அழுத்திக் கோடு கிழி. இந்தப் பகுதிகளைத் தனியாக வெட்டி எடுக்கு முன் இதைச் செய்து விடுவது சுலபம். இந்தக் கீறல் வேலை முடிந்ததும் வாலையும் உடலையும் தனியாக வெட்டி எடுத்துக் கொள். உடலை ரூல் தடியில் சுற்றி அழுத்தி வளைவாக்கிக் கொள். கீறிய பகுதிகளை இலேசாக உள்நோக்கி மடித்து விடு. இப்படிச் செய்வது பூனை உருவத்துக்கு அழகூட்டுவதோடு அதற்கு உறுதியளித்துத் துவளாமல் விறைப்பாக இருக்கச் செய்யும். முதுகிலுள்ள புள்ளிக் கோட்டின் மீது உடலை இரண்டாக மடி. தலைப் பகுதியைப் புள்ளிக்கோட்டில் மடித்து இரண்டு தலைகளும் ஒட்டிக்கொண்டிருக்கும் பகுதியை விட்டு விட்டு வெளிப் பக்கமாகக் கத்தரித்தால், கொஞ்சம் வேலை மிச்சமாகும். கண், மூக்கு, வாய்ப் பகுதிகளை இப்படி இரண்டாகவே கத்தரிக்காதே. மடிந்துள்ள தலைப்பகுதியைப் பிரித்துக் கொண்டு இந்தப் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கூரான பிளேடினால் வெட்ட வேண்டும். பூனையின் கண்களின் கருவிழிக்கு வட்டமான காகிதத்தைத் தகுந்த அளவில் தனியாக வெட்டி அதைத் தலையின் உட்பகுதியில் கண் துவாரத்தின் ஓரமாக வைத்து செலோ டேப்பினால் ஒட்டிவிடு. இதே போல் மூக்குத் துவாரத்தையும் ஒரு கருப்புக் காகிதத்தினால் மூடு. நான்கு கரு விழிகளையும் இரண்டு மூக்குத் துவாரங்களையும் இப்படி உட்பக்கமாக ஒட்டியானதும் தலையை மடித்தால் இரண்டு பக்கமும் ஒன்றே போலத் தோற்றமளிக்கும்.

இனி வாய்ப் பகுதியைக் கவனமாக வெட்டி அதன் முனைகளை வெளிப்புறமாக மடித்துத் தூக்கிவிடு. இது தூக்கி இருப்பதால் ஒளியில் இதன் நிழல் கீழே விழும். நிஜமான வாய் போலவே தோற்றமளிக்கும். தலை சரியாக அமைந்து விட்டவுடன் அதை இரண்டாக மடி.

இனி பூனையின் பாகங்களை ஒன்று சேர்த்து உருவாக்கலாம். தயாராக உள்ள வாலை உடலின் பின் பக்கத்திலும் வாலின் அடியிலுமுள்ள வெட்டு வாய்களோடு பொருந்தும்படி இணைத்து ஒட்டி விடு. தலையையும் இதேபோல உடலின் முன் பக்கத்திலுள்ள வெட்டு வாயோடு இணைத்துப் பொருத்தி விடு. 'A' என்ற பகுதிகளை உடலின் உட்புறத்தில் சேர்த்து ஒட்டி விடு.

இப்போது பூனை தயார், இல்லையா? இனி உடலில் 'P' என்ற இடத்தில் ஒரு ஊசியைக் கொண்டு துவாரம் செய்து அதில் ஒரு நூலை நுழைத்து அதில் பூனை ஊசலாடும்படி செய். இந்த மையம் சரியாக இல்லாவிடில் பூனை முன்னோ, பின்னோ சாய்ந்து காட்சியளிக்கும். பூனை சமமாகத் தொங்க, அதன் சரியான மையத்தை அறிந்து துவாரம் செய்ய வேண்டும். கடைசியாக உடலின் அடியிலுள்ள 'B' என்ற முனைகளை ஒன்றாகச் சேர்த்து ஒட்டி விடவேண்டும். உருட்சியான உருவில் அழகாகத் தோற்றமளிக்கும் இந்தக் கடுவன் பூனையைக் கருப்பான பின்புலனில் கண் உயரத்தில் தொங்க விடு. மெல்லிய காற்றும் கூட உன் பூனையை ஊசலாட வைக்கும். இருட்டிலே பூனை ஓடி வருவது போலவே இருக்கும்.


பாமாலிவ் லவண்டர்

வசீகரிக்கும் நறுமணம்....

பெருமிதத்தையும், அழகையும் அளிக்கிறது!



வசீகரம்...பாமாலிவ் லவண்டர் டால்கம்
பெருமிதத்திற்கும், அழகிற்கும் உற்ற நண்பன்.
சிறிது பாமாலிவ் லவண்டரை உங்கள் உடம்பின்மேல்
தூவிக்கொண்டால், அதன் இனிய நறுமணம்
உங்களைச் சூழ்ந்து நிற்பதை உணர்வீர்கள். பாமாலிவ்
உபயோகித்து எப்பொழுதும் புத்துணர்ச்சியுடனும்,
நறுமணத்துடனும், அழகுடனும் விளங்குங்கள்.



பாமாலிவ் டீலக்ஸ்—மயக்கும்
17 ஸெண்டுகளின் அற்புதமான கலவை.

PT-8-4.TAM.




ராபின் ப்ளூ



அட்லான்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.)

ARBC. 17/TM



மூட்டுவலி, கீல்வாதம், சுளுக்குகள் மற்றும் கடும் வேலையினால் ஏற்படும் நோவு எதுவாயினும் ஸ்லோன்ஸ் லினிமென்ட் உபயோகியுங்கள். உடனடி நிவாரணமளிப்பது ஸ்லோன்ஸ்

வார்னர்-லாம்பர்ட்
பார்மஸூடிகல் கம்பெனி
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பெற்றது.)

TAM.

நந்தவனம்

சோமு

29. வட்டப்பாறை

“திரும்பிப் பாராமல் மேலே நட தம்பி!'' என்றார் மீண்டும் போலீஸ்காரர்.

தனக்கு இரண்டு பக்கத்திலும் நின்று தன்னைத் 'தள்ளிக் கொண்டு' போக முனைந்த அந்த இரண்டு போலீஸ் வீரர்களையும் ஏற இறங்கப் பார்த்துக் கொண்டே மேலே நடந்தான் வில்வநாதன்.

''தம்பியைக் காலால் நடத்திக் கூட்டிக் கொண்டு போகிறோமே என்று தயங்குகிறார் போலும்! அப்படித் தானா?'' என்று கேட்டுக் கொண்டே சிரித்தார், முத லாவது போலீஸ்காரர். அந்தச் சிரிப்பு வில்வநாத னுக்குத் திகைப்பைத் தந்தது.

''நடவும் தம்பி! கொஞ்ச தூரம் காலால் நடந்து சென்றால், பிறகு வில்வண்டியிலே ஏறிப் போகலாம்!'' என்றார் இரண்டாவது போலீஸ்காரர்!

''வில் வண்டியிலா?'' என்று மிகவும் குழம்பிக் கொண்டே கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம் தம்பி! வில் வண்டியிலேதான்! அது வரையில் வேகமாக நடவும்!'' என்று ஊக்கப்படுத்தி னார் முதலாவது வீரர்.

திகைப்பும், இன்ன செய்வது என்று தெரியாத ஒருவிதமான அங்கலாய்ப்பும் நிரம்பியவனாக, வில்வ நாதன் அந்தப் போலீஸ்காரர்களோடு நடந்தான்.

மலையடிவாரத்துக் கிராமத்தைத் தாண்டி நடந் தார்கள் மூவரும். சற்றுத் தூரம் அப்படியே நடந்து சென்று, ஒரு குத்துக் கல்லுக்கு அருகிலே வந்ததும், போலீஸ்காரர்கள் நின்றார்கள்.

''தம்பி! இதுவரை சாலையோடு நடந்தது சரி. இனிமேல் ஒத்தையடிப் பாதையிலே நடக்க வேண்டும், தெரிந்ததா?'' என்று கேட்டுக் கொண்டே முதலாவது போலீஸ்காரர், வில்வநாதனின் கையிலிருந்த விலங் கைக் கழற்றினார்.

''ஒற்றையடிப் பாதையிலா?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம். ஒத்தையடிப் பாதையிலே. சுமார் மூன்று பர்லாங்கு தூரம் நடக்க வேண்டும். பிறகு வில்வண்டியிலே போகலாம்!'' என்று சொல்லிக் கொண்டே, சாலையிலிருந்து கீழே இறங்கினார்கள், மீசைக்காரப் போலீஸ் வீரர்கள் இருவரும்! வில்வ நாதனும் கீழே இறங்கி ஒற்றையடிப் பாதையிலே நடக்க ஆரம்பித்தான்.

மருத மரங்கள் அடர்ந்த சாலையிலிருந்து விலகி இறங்கி, உடை மரங்கள் அடர்ந்த காட்டுக்குள்ளே இருந்த ஓர் ஒற்றையடிப் பாதை வழியாகச் சென் றார்கள் மூவரும். யாரும் எதுவும் பேசாமல் மௌன மாக நடந்தார்கள். குழப்பமும் வேதனையும் உள்ளத் திலே துயரம் செய்தன வில்வநாதனுக்கு! அந்த நிலை யிலே அவனும் மௌனமாகவே நடந்தான்.

உடை மரக்காட்டின் வழியாக எங்கெங்கோ வளைந்தும் திரும்பியும் சென்ற அந்த ஒற்றையடிப் பாதை, இப்பொழுது இன்னொரு பெரிய சாலையிலே சென்று ஏறியது. எங்கே போகிறோம், எப்படிப் போகி றோம் என்று தெரிந்துகொள்ள முடியாத ஒரு நிலை யில், வில்வநாதனுக்குக் கோபம் வந்தது!

''ஐயா! நீங்கள் இருவரும் என்னைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துப் போவதாகச் சொல்லிக் கொண்டு வந்தீர்கள். பிறகு ஏதோ வில்வண்டியிலே

போவதாகச் சொன்னீர்கள். இப்போது இந்த உடங்காட்டில் சுற்றியும் வளைத்தும் எங்கெங்கோ நடத்திக் கொண்டு வந்தீர்கள். இனி மேல் நீங்கள்—''

''சபாஷ்! தம்பி! நன்றாகக் கோபப் படுங்கள் தம்பி! இன்னும் கொஞ்சம் கோபமாகப் பேசுங்கள்! நீங்கள் வருத்தமோ குழப்பமோ அடைவதற்குப் பதிலாகக் கோபம் அடைந்தால் நான் மிகவும் மகிழ்ச்சி அடைவேன்! ஏனென்றால் நீங்கள் வருத்தப்படுவதை என்னால் பார்த்துக்கொண்டு, சகித்துக்கொண்டு இருக்க முடியாது! அவ்வளவு தூரம் உங்களிடம் எனக்கு ஒரு வாஞ்சையும் ஒரு சொந்தமும் இருக்கிறது!'' என்றார் முதலாவது போலீஸ் வீரர்.

''வாஞ்சையா? உங்களுக்கா? என்னிடமா?'' என்று கேட்டான் வில்வன்.

பேசிக்கொண்டே புதிய சாலையிலே ஏறினார்கள் மூவரும். அப்போது தான் வில்வநாதனுக்குத் தெரிந்தது. இவர்களுடைய வரவுக்காக அங்கே ஒரு வில் வண்டி காத்திருந்தது! வண்டிக்காரன் ஒருவன் பக்கத்திலே நின்று கொண்டிருந்தான், சாட்டையும் கையுமாக!

''தம்பி! உங்களுடைய கேள்விகளையும் சந்தேகங்களையும் பிறகு சாவகாசமாகக் கேட்டுக் கொள்ளுங்கள்! முதலில் வண்டியிலே ஏறி உட்காருங்கள்! மாப்பிளே! கோச்சுப் பெட்டியிலே ஏறு!'' என்று சொல்லிக் கொண்டே, இரண்டாவது போலீஸ் வீரருக்குச் சமிக்ஞை செய்தார் முதலாவது வீரர்!

மூவரும் வண்டியிலே ஏறினார்கள். கோச்சுப் பெட்டியிலே ஏறி உட்கார்ந்தார் இரண்டாவது போலீஸ் வீரர்! முதல் வீரர் வில்வநாதனோடு வண்டிக்குள்ளே ஏறி உட்கார்ந்து கொண்டார்! வண்டிக்காரர் சாட்டையை ஒரு சுண்டுச் சுண்டினார்.!

'மடமட' என்று பறந்தது வில் வண்டி.வண்டிக்குள்ளே இருந்த போலீஸ் வீரர்கள் எதுவும் பேசவில்லை. வில்வநாதனுக்கு அத்தனை குழப்பத்துக்கு மத்தியிலும் ஏதோ ஒரு விசித்திரமான எண்ணம். இந்தப் போலீஸ்வீரர்களைப் பற்றி ஒரு விநோதமான சந்தேகம் எழுந்தது! அவர்கள் தன்னிடம் நடந்து கொண்ட விதத்தில், இனம் புரியாத ஒரு நேசம் இழைந்ததைக் கண்டதும் அவனுடைய வியப்பு அதிகரித்தது!

''தம்பி! நம்முடைய வில்வண்டி இப்போது எங்கே போகிறது தெரியுமா? வட்டப்பாறையை நோக்கிச் செல்கிறது!'' என்று திருத்தமாக அறிவித்தார் முதலாவது போலீஸ் வீரர்!

''வட்டப்பாறைக்கா? அங்கே ஏது போலீஸ் ஸ்டேஷன்?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''அங்கே ஏது போலீஸ் ஸ்டேஷன்! அங்கே போலீஸ் ஸ்டேஷன் கிடையாது! போலீஸ் எல்லையை யெல்லாம் கடந்த ஒரு சௌக்கியமான பிரதேசம் அது!'' என்று சொல்லிச் சிரித்தார், முதலாவது போலீஸ் வீரர்! மறு விநாடி தமது சிவப்புத் தொப்பியைக் கழற்றி, வண்டிக்குள்ளே வைத்தார்!

''தம்பி! வேணுலிங்கம், வேணுலிங்கம் என்று ஒரு கொள்ளைக்காரனைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?'' என்று மெதுவாகக் கேட்டார் முதலாவது போலீஸ்காரர்.

''கேள்விப் பட்டிருக்கிறேன். ஆனால் பார்த்ததில்லை!'' என்றான் வில்வநாதன். வக்கீல் ஐயா அவர்கள் சொன்ன வார்த்தைகள் அவனுக்கு அப்போது நினைவுக்கு வந்தன!

''கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ரொம்பச் சரி. அந்த வேணுலிங்கம் வேறு யாருமில்லை இதோ இந்த அடியேன் தான்!'' என்று சொல்லிச் சிரித்தார் அந்த விசித்திரமான போலீஸ்காரர்! வில்வநாதன் திகைப்பிலிருந்து மீளுவதற்குள் மறுபடியும் தொடர்ந்து பேசினார் அந்தப் போலீஸ் வீரர்.

''அதோ கோச்சுப் பெட்டியில் உட்கார்ந்திருக்கிறாரே போலீஸ்வீரர் நம்பர் இரண்டு. அவர்தான் நம்முடைய மதிப்புக்கு உரிய மாப்பிள்ளை திருவாளர் கடலையாண்டி! நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள்! மாப்பிளே, இப்படி வண்டிக்குள்ளே திரும்பிக் கொஞ்சம் உன்னுடைய முகத்தைக் காட்டு, தம்பிக்கு!''

கடலையாண்டி வண்டிக்குள்ளே திரும்பிக் கொண்டே, தனது சிவப்புத் தொப்பியை எடுத்துக் கீழே வைத்தான்! அப்படியே ஒரு 'ஸல்யூட்' அடித்தான்!

''என்ன ஆச்சரியம் இது!'' என்றான் வில்வநாதன்!

''ஆச்சரியமா! தம்பி, ஆச்சரியம் உங்களுக்கு இல்லை. இப்பொழுது உண்மையான ஆச்சரியம் யாருக்குத் தெரியுமா? குமுதவல்லிக்கும் வல்லாள வேலருக்குந்தான்!'' என்றான் வேணுலிங்கம்.

''ஐயா! நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லையே! குமுதவல்லியும் வல்லாளவேலரும் எதற்காக ஆச்சரியப் பட வேண்டும்?'' என்று கேட்டான் வில்வநாதன்.

''தம்பி! உங்கள் பேரில் ஒரு பொய் வழக்கை ஜோடனை செய்து, உங்களைப் பிடித்துக் கொண்டு போகும்படி போலீஸில் ஏற்பாடு செய்தார்கள் குமுதவல்லி

யும் வல்லாள வேலரும்! நீங்களானால் அவர்கள் கைக்கு அகப்படவில்லை! உங்களை நாங்கள் பிடித்துக் கொண்டு போகிறோம் இப்போது!''

இவ்வாறு சொல்லிச் சிரித்தான் வேணுலிங்கம். கடலையாண்டி சொன்னான்: ''தம்பி! வட்டப்பாறையிலே போய் உட்கார்ந்து களைப்புத் தீருவதற்காக இளநீர் சாப்பிடுங்கள்! அதன் பிறகு எல்லார் விவரமும் பேசிக் கொள்ளுவோம்!''

கடலையாண்டி இப்படிச் சொன்னதும் வில்வநாதன் கேட்டான்:

''அது சரி! நந்தவனத்தையும், அந்தச் சித்திரங்களையும், செண்பக சுந்தரியையும் மறந்து உங்களோடு நான் ஏன் இப்படி இந்தக் காட்டுக்குள்ளே செல்ல வேண்டும்! எனக்கு ஒன்றும் புரியவில்லையே! நீங்கள் இருவரும் எனக்கு நன்மை செய்வதற்காகவே மிகுந்த அக்கறையோடு இருக்கிறீர்கள் என்று வக்கீலையா சொன்னார்கள். ஆனாலும் செண்பகசுந்தரி காணாமல் போனபிறகு நான் எப்படிப்போனால் என்ன! எனக்கு இனிமேல் வாழ்வில் என்ன கதி நேர்ந்தாலும் கவலையில்லை! அவளைக் கண்டுபிடித்து, அவளுக்கு எவ்விதமான ஆபத்தும் நேராதவாறு அவளைக் காப்பாற்றி — ''

''தம்பி! நிறுத்துங்கள்! நீங்கள் கவலைப்படுவதைப் பார்த்துச் சகித்துக் கொண்டு சும்மா இருக்க என்னால் முடியாது என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே! அதற்குள் மறந்து விட்டீர்களா? வட்டப் பாறைக்குப் போன பிறகு எல்லாச் செய்தியும் சொல்லுகிறேன்! அதுவரை மனசை அலட்டிக் கொள்ளாமல் இருங்கள்! உங்களுடைய செண்பக சுந்தரியை இனிமேல் நீங்கள் கொஞ்சம் மறந்தால் தான், உங்களுக்கும் நல்லது. எங்களுக்கும் நல்லது. அவளுக்கும் நல்லது!'' என்று ஒரு செம்போடாகப் போட்டான் வேணு!

வேகமாக ஓடிய வண்டி வட்டப் பாறைக்கு அருகிலே வந்து நின்றது. மூவரும் இறங்கினார்கள்.

வண்டி வந்து இறங்கிய மறுகணம் எங்கிருந்தோ நாலைந்து முரட்டுவீரர்கள் இளநீரும், அரிவாளுமாக அங்கே வந்து நின்றார்கள்.

''சாப்பிடுங்கள், தம்பி! முதலில் இளநீர் சாப்பிடுங்கள்! பிறகு இந்தப்பாறையிலே நடந்து சென்று அந்த மேற்கு முனையிலே உட்கார்ந்து கொள்ளுங்கள்! நானும் கடலையாண்டியும் கொஞ்சம் 'ட்ரெஸ்' மாற்றிக் கொண்டு இதோ ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறோம்!''

இவ்வாறு சொல்லி விட்டுப் போலீஸ் உடையிலே நின்ற இருவரும் அங்கிருந்து பனை விடலிகள் அடர்ந்திருந்த வட்டத்துக்குள்ளே சென்று மறைந்தார்கள்.

கவலையும், மனச் சோர்வும், உள்ளத்தின் களைப்புமாக நின்ற வில்வநாதனுக்கு அந்தப் புதிய மனிதர்கள் இளநீர் கொடுத்தார்கள். அதைக் குடித்து விட்டு, வில்வநாதன் அந்த வட்டப் பாறையிலே ஏறி நடந்து சென்று,சுற்று முற்றும் பார்த்தான்.

அது ஒரு வட்டமான காட்டுப் பாறை. கண்ணுக்கு எட்டிய தூரம் எங்கும் நான்கு பக்கமும் மரங்கள்! பனை மரங்கள், உடை மரங்கள், பெரிய பெரிய ஆலமரங்கள்! இவற்றுக்கு அப்பால், தென்னஞ் சோலைகள்! அவற்றையும் தாண்டிப் பொதிகை மலைத் தொடர்! அதற்கு அப்பால் தெள்ளத் தெளிந்த நீலமயமான தூய வானம்! அந்தக் காட்சி ஓவிய இளைஞனுடைய உள்ளத்திலே ஒரு தண்மையை ஊட்டிக் கொண்டிருந்தது!

''ஆகா! எவ்வளவு எழிலான இயற்கைக் காட்சிகள்! செண்பகசுந்தரி மட்டும் இங்கே என்னோடு இப்போது இருந்தால்! ஐயோ! செண்பக சுந்தரி! அவள் இப்போது எங்கு இருக்கிறாளோ! ஒரு வேளை வல்லாளவேலர் செய்த சூழ்ச்சியாக இருக்குமோ இது! வேணுலிங்கம் ஏதோ குறிப்பாக ஒன்றிரண்டு வார்த்தைகள் சொன்னாரே! அப்படியானால் இந்தச் சூழ்ச்சிக்கு அந்தத் தாய்க் கிழவியும் உடந்தையாக இருந்தாளோ! இருக்கலாம்! குமுதவல்லியைப் பற்றிக் கம்பரும் பட்டரும் எத்தனை கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார்கள்! ஐயோ! அத்தனை எச்சரிக்கையும் இப்போது மெய்யாகி விட்டதா! அப்படியானால் இனிமேல் செண்பகசுந்தரியை நான் பார்க்கப் போவதில்லையா! அவளை இனிமேல் பார்க்க முடியாதா! அவளை நான் மறந்து விடவேண்டும் என்றல்லவா வேணு சொன்னார்! என்னிடம் அன்பாக இருப்பவர், நான் கவலைப்படுவதைச் சகிக்க முடியாத ஒருவர் — அவரா இப்படிச் சொன்னார்! அவருக்குத் தெரியாதா என்னைப் பற்றி? என்னுடைய உயிரையும் விட மேலான பொருள் எனக்குச் சுந்தரிதான் என்பது வேணுலிங்கத்துக்குத் தெரியாதா?''

இவ்வாறு ஏதேதோ எண்ணி எண்ணிக் குழம்பிக் கொண்டிருந்த போது, வில்வநாதனை நோக்கி நடந்து வந்தனர் வேணுவும் கடலையாண்டியும்!

''என்ன தம்பி! பாறையிலே அப்படியே உட்கார்ந்து விட்டீர்கள்!'' என்று சொல்லி, வில்வநாதனுக்கு எதிரே உட்





கார்ந்தான் வேணுலிங்கம். வில்வநாதன் உட்கார்ந்ததும் கடலையாண்டியும் வேணுவுக்கு அருகிலே அந்தப் பாறையில் உட்கார்ந்து கொண்டான்.

கடலையாண்டி சொன்னான்:


''தம்பி! எங்கள் இரண்டு பேரையும் பற்றி இந்த வட்டாரத்தில் ஏதேதோ பேசக் கேட்டிருப்பீர்கள் நீங்கள்! வேறு யார் என்ன சொன்னபோதிலும், நியாயம் அநியாயத்துக்குக் கட்டுப்பட்ட மனிதர்கள் நாங்கள் என்பது, வக்கீல் ஐயா ஒருவருக்குத்தான் நன்றாகத் தெரியும். அதோடு நாங்கள் வெறும் கொள்ளைக்காரர்கள் இல்லை. வேணுலிங்கத்தோடு நீங்கள் பழகிப் பார்த்தால், அவருக்கு இத்தனை படிப்பும் பண்பாடும் எப்படி அமைந்தன என்பது உங்களுக்கு ஒரே வியப்பாக இருக்கும். நான் அவ்வளவு தூரம் படிக்காவிட்டாலும், படித்தவர்களை மதிக்கக் கூடிய அளவுக்கு எனக்கு அறிவு உண்டு. இத்தனை சுய புராணமும் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? நீங்கள் ஏதோ கொள்ளைக்காரர்களிடம் வந்து சிக்கிக் கொண்டு விட்டதாக மனம் குழம்பக் கூடாது என்பதற்குத்தான்! தெரிந்ததா?''

கடலையாண்டி இவ்வளவு திருத்தமாகவும் தெளிவாகவும் பேசியது, வில்வநாதனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அப்போது வேணு சொல்லுவான்:

''தம்பி! உங்கள் மனம் இப்போது இருக்கும் நிலை எனக்கு நன்றாகத் தெரியும். தாமரைச் செல்வியை மறந்துவிட உங்களால் முடிந்தது. ஆனால் சுந்தரியைப் பிரிந்த விநாடியிலிருந்து, முள் இல்லாத கடிகாரமாகி விட்டீர்கள் நீங்கள்! அது எனக்குப் புரிகிறது. ஆனாலும் குழப்பத்தையெல்லாம் நிதானப் படுத்திக் கொண்டு, அமைதியோடு இருக்க வேண்டும். மிகப் பெரிய ஆபத்திலிருந்து நீங்கள் இப்போது தப்பி வந்



திருக்கிறீர்கள். செண்பகசுந்தரி எங்கே மறைந்திருக்கக் கூடும் என்பதைப் பற்றி நாங்கள் சில ஊகங்கள் செய்திருக்கிறோம். இனி அவளைக் கண்டுபிடித்துக் காப்பாற்றுவது என்பது, இலங்கையிலிருந்து சீதையை மீட்டுவருகிற ஒரு காரியம்! அவளைக் கொண்டு போயிருக்கிற ராவணனே பெரிய வல்லான வேலன்! எங்கே கொண்டு போய் எந்த அசோக வனத்தில் அவளைச் சிறை வைத்திருக்கிறான் என்பதை எப்படியும் கண்டு பிடித்தாக வேண்டும். ஒரு அனுமாருக்கு இரண்டு அனுமார்கள் நாங்கள் இருக்கிறோம்! அதனால் கவலைப்படாமல் நீங்கள் நிம்மதியாக இருக்க வேண்டும். ஒரே ஒரு சந்தேகம் உங்களுக்கு உண்டாகலாம். அது இயல்பு. அதாவது எங்கள் இரண்டு பேருக்கும் உங்களுடைய வாழ்க்கையில் எதற்காக இத்தனை அக்கறையும் கவலையும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள். தயவுசெய்து அந்த ஒரு கேள்வியைமட்டும் எங்களிடம் இப்போது கேட்காதீர்கள். உங்களுடைய இலட்சியம் எல்லாம் நிறைவேறியபிறகு அந்தச் சந்தேகம் தானாகவே தெளிவடையும். அதுவரை நீங்கள் நிம்மதியாக எங்களிடம் முழு நம்பிக்கையோடு இருக்க வேண்டும். உங்களுக்கு வேண்



பிரும்மஸ்ரீ அனந்தராம தீட்சிதரின் மருமான் திரு வைத்தியநாத சாஸ்திரிகளின் புதல்வி சௌ சாரதாம்பாளுக்கும் திரு வேங்கடரமணிக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.



திருச்சி சேஷசாயி பிரதர்ஸ் ஸ்தாபன டைரக்டர் திரு எச். கே. ராமசாமி அவர்களின் புதல்வி சௌ கமலாவுக்கும் திரு ராமமூர்த்திக்கும் சிறப்பாகத் திருமணம் நடந்தது.


டிய வசதிகள் இங்கே செய்துதருகிறோம். சாப்பிட, உலாவ, படுத்துக் கொள்ள, சித்திரங்கள் வரைய எல்லாவற்றிற்கும் வசதிகள் செய்து தருகிறோம். எங்கோ ஒரு போலீஸ்ப் பாதுகாவலில் கைதியாக இருப்பதற்குப் பதிலாக, இங்கே எங்களுடைய அன்புக் காவலில் ஒரு சுதந்திர மனிதராக நீங்கள் இருக்கப் போகிறீர்கள். எத்தனை காலம் இப்படி இருக்க வேண்டி வருமோ, தெரியவில்லை. தயவு செய்து பொறுமையோடு இருங்கள்! மனசைக் கொஞ்சம் தேற்றிக் கொள்ளுங்கள்! என்ன செய்வது! முள்ளான புதருக்குள்ளே ஆடை சிக்கிக் கொண்டு விட்டால், அதை மெதுவாகத்தானே எடுக்கவேண்டும்? ஆத்திரப்படலாமா?''

வேணுலிங்கம் இவ்வாறு சொன்னான். இதுவரை அந்த வார்த்தைகளைப் பரிவோடு கேட்டுக் கொண்டே உட்கார்ந்திருந்த வில்வநாதன் இப்போது வேணுலிங்கத்திடம் பேச ஆரம்பித்தான்:

''ஐயா! உங்களிடமோ உங்கள் தோழரிடமோ எனக்கு எவ்விதமான சந்தேகமும் இல்லை. சுந்தரி காணாமற்போனது என் உள்ளத்தைச் சிதறச் செய்து விட்டது. அதற்கு மத்தியில் போலீஸ் உடையிலே நீங்கள் வந்து, என்னை விலங்கு போட்டு அழைத்து வந்ததும் என் மனம் நிலைகலங்கித் தடுமாறியது. இப்போது உங்கள் பேச்சைக் கேட்ட பிறகுதான் மெதுவாக ஒரு தெளிவு உண்டாக ஆரம்பிக்கிறது. ஆனாலும் சுந்தரி என்ன ஆனாளோ என்ற கவலை என்னை மேலும் மேலும் துயரப்படுத்துகிறது. என்னால் எதுவுமே சிந்திக்க முடியவில்லை. எனக்கு மூளையே குழம்புகிறது!''

''தம்பி! நாங்கள் அங்கே போலீஸ் உடையில் வந்து உங்களை இப்படிக் கொண்டு வரவில்லையென்றால், உண்மையிலேயே நீங்கள் கைதியாகி இருப்பீர்கள். நிஜமான போலீஸ் வீரர்கள் வந்து நிஜமாகவே உங்களைக் கைது செய்திருப்பார்கள். அவர்கள் அங்கே வந்து சேர்வதற்கு முன்பு, நாங்கள் விரைந்து வந்து இப்படி ஒரு சூழ்ச்சிக்கு எதிர்ச் சூழ்ச்சி செய்தோமோ, பிழைத்தோமோ!'' என்றான் வேணுலிங்கம்.

புது தில்லி நிதி வருமான இலாகா உதவிக் காரியதரிசி ஸ்ரீ டி. சுப்பிரமணியம் அவர்களின் புதல்வி சௌ வத்ஸலாவைத் திரு சிவசுப்பிரமணியம் மணந்துகொண்டார்.




லைப் இன்ஷூரன்ஸ் கார்ப்பரேஷன் டிவிஷனல் மானேஜர் திரு வி. ஆர். ராஜன் அவர்களின் புதல்வர் திரு ராமனுக்கும் சௌ சுதாவுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.





சென்னை மின்சார போர்ட் சீப் அக்கௌண்டென்ட் திரு ஆர். கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மருமான் சௌ ஜயலட்சுமிக்கும் திரு பாலகிருஷ்ணனுக்கும் திருமணம் நடந்தது.



திரு என். எஸ். ராமசுவாமி அய்யர் அவர்களின் புதல்வி சௌ மீனாட்சிக்கும் திரு எஸ். வி. மணிக்கும் சமீபத்தில் விமரிசையாகக் கலியாணம் நடைபெற்றது.

''ஐயா! அப்படியானால் குமுதவல்லியின் வீட்டுக்கு இப்போது போலீஸ்காரர்கள் போயிருப்பார்களா?'' என்று வியப்போடு கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம். நிஜமான போலீஸ் அங்கே போவதற்குள்ளே தான், இந்தப் போலிப் போலீஸ் அங்கே சென்று உங்களைக் கைப்பற்றிக்கொண்டு வந்தாயிற்றே! இனி அவர்கள் அங்கே போய் என்ன செய்வது? இந்நேரம் குமுதவல்லியின் வீட்டில் ஒரே களேபரமாக இருக்கும்! போலீஸ்காரர்களுக்குமே இது ஒரு பெரிய புதிராக இருக்கும்! வேணுலிங்கமும் சுடலையாண்டியுந்தான் இந்த வேலை செய்திருக்கிறார்கள் என்று வல்லாளவேலர் அட்டகாசமாகச் சொல்லிக் கொண்டிருப்பார்!'' என்றான் வேணுலிங்கம்!

''அவரால் இதை ஊகிக்க முடியுமா? என்ன?'' என்றுகேட்டான் வில்வநாதன்.

''முடியும் தம்பி! ஏற்கனவே அடியேன் ஒரு தரம் போலீஸ்காரராகவே அவருடைய வீட்டுக்கு விஜயம் செய்திருக்கிறேன்! அதை அவர் எப்படி இதற்குள் மறந்திருப்பார்!'' என்று சொல்லிச் சிரித்தான் சுடலையாண்டி.

''மாப்பிளே! அதெல்லாம் இருக்கட்டும்! செல்வியின் திருமணத்தையும் சுந்தரியின் பிரிவையும் நம்முடைய தம்பி இனிமேல் மறந்து சித்திர வேலையிலே ஈடுபட வேண்டும். சித்திரங்கள் வரைவதற்கான வர்ணங்கள், புத்தக மடல்கள், இறகுகள் முதலான எல்லாப் பொருள்களும் நீதான் கொண்டு வர வேண்டும். அதற்கு ஏற்பாடு பண்ணு முதலில்! நான் அவருக்கு இப்போது ஒரு கதை சொல்லப் போகிறேன். நம்முடைய கதை முடிவதற்குள் நீ திரும்பி வந்துவிட வேண்டும், என்ன? புறப்படு உடனே!''

இவ்வாறு வேணுலிங்கம் சொல்லி முடித்ததும் சுடலையாண்டி அங்கிருந்து எழுந்தான்.


''கதையா?'' என்று கேட்டான் வில்வநாதன்.


''ஆமாம். ஆனால் வெறும் கற்பனையில்லை. உண்மையாக நடந்த நிகழ்ச்சி!'' என்றான் வேணுலிங்கம். (தொடரும்)

சிந்தாதிரிப்பேட்டை திரு கந்தசாமி முதலியாரின் புதல்வர் திரு கண்ணப்பனுக்கும் சௌபாக்கியவதி சரோஜினிக்கும் சென்னையில் திருமணம் நடந்தேறியது.



புதுடில்லி நிதி இலாகா பொருளாதாரப் பிரிவைச் சேர்ந்த திரு வி. எஸ். நடராஜனுக்கும் சௌபாக்கியவதி மதுரத்துக்கும் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.





தாளம் படுமோ...?



தாமரை மணாளன்

வேலை பார்ப்பது புத்திசாலித்தனமான காரியமாக இருக்கலாம். ஆனால் மண்ணளந்தார் கம்பெனியில் வேலை செய்வது அந்த விதிக்கு விலக்கு. இருந்தும் நான் அதைச் செய்து கொண்டிருந்தேன் என்றால் அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள் இருந்தன. ஒன்று அந்த வேலையைச் செய்ய எனக்குச் சம்பளம் கொடுத்தார்கள். இரண்டாவது அந்தச் சம்பளம் என் வயிற்றுப் பிழைப்புக்குத் தேவைப்பட்டுத் தொலைத்தது!

'மண்ணளந்தார் ரோட் காண்ட்ராக்ட் பிரைவேட் கம்பெனி லிமிடெட்' என்றால் அந்தப் பிராந்தியம் முழுவதும் ரொம்பப் பிரசித்தம். அந்தப் பகுதியில் உள்ள பெரும்பாலான ரோடுகளுக்குக் காண்ட்ராக்ட் பேரில் மண்ணடிப்பது அந்தக் கம்பெனியே. ஆனால் ஒன்று. கல் என்ற பேச்சே இல்லாமல் வெறும் மண்ணைத் தட்டி நிரப்பிக் காட்டியே காண்ட்ராக்டை ஒப்பேற்றி விடுவதால் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் கம்பெனிக்கு அந்தப் பெயரிட்டிருப்பதாக ஊரில் பிரஸ்தாபப்படுவது தவறு. முதலாளியின் பெயர் மண்ணளந்த பெருமாள் பிள்ளை. அதனால்தான் கம்பெனிக்கு அந்தப் பெயர்.

திரு. மண. பிள்ளை ரோடுகளுக்கு மண்ணடிப்பதைவிடப் போட்டிக் காண்ட்ராக்டர்

களுக்கு 'மண் காட்டு'வதில் சூரர். எனவே அந்தப் பிராந்திய ரோடு காண்ட்ராக்டர்களில் பெரும் பகுதி அவர் கையில்தான் இருக்கும். ஏககாலத்தில் ஏகப்பட்ட இடங்களில் அந்த அந்தப் பகுதியிலுள்ள தொழிலாளர்களைக் கொண்டு வேலை நடக்கும். ஒவ்வொரு பகுதியில் நடக்கும் வேலையையும் முதலாளி நேரடியாகப் பரிபாலிக்க முடியாததால் அதற்கென்று ஒவ்வொரு மேஸ்திரியை நியமித்திருந்தார். தொழிலாளர்களிடம் வேலை வாங்குவது, அவர்களுக்குச் சம்பளப் பட்டுவாடா செய்வது, முதலாளி சார்பில் அவர்களிடம் ஏச்சுக்கள் வாங்கிக் கட்டிக் கொள்வது போன்ற இத்தியாதி வேலைகள்தான் அந்த மேஸ்திரிகளுக்கு.

அப்படி நியமனமான மேஸ்திரிகளில் நானும் ஒருவன். இந்த உத்தியோகத்தைப் பற்றி வேண்டுமானாலும் வீட்டில் மனைவியிடம் அதுவும் அக்கம்பக்கத்தாருக்குக் கேட்காமல் பெருமையடித்துக் கொள்ளலாம். மற்றப்படி இதன் லட்சணத்தைக் கூற வேண்டுமானால், நாற் சந்தியில் நின்று, ''தாளம் படுமோ, தறிபடுமோ நான் படும் பாடு!'' என்று மைக் வைத்துக் கத்தினாலும் மனம் ஆறாது. காரணம் இதுதான். மற்ற மேஸ்திரிகளின் நிலைமை எப்படியோ? என் சங்கதி ஓர் இரண்டுங்கெட்டான் பிழைப்பு. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் நடுவில் நிற்கும் உத்தியோகம் வாய்த்தாலும் வாய்த்தது, இருதரப்பாரின் நம்பிக்கையையும் இழந்து நின்றேன். முதலாளியின் பார்வைக்கு நான் தொழிலாளர்களுடன் சேர்ந்து அவர்களைத் தூண்டி விடும் சதிகாரனாகக் காட்சியளித்தேன்; தொழிலாளர்களின் கண்களுக்கோ, முதலாளியிடம் ஐந்தாம்படை வேலை செய்யும் துரோகியாகக் காட்சியளித்தேன்! வேலையில் சேர்ந்த முதல் நாளே என்னுடைய நிலை தெளிவாகப் புரிந்து விட்டது.

எனக்குத் தலைமை அலுவலகம், அதாவது முதலாளி இருக்குமிடம் திருநெல்வேலி. என் உத்தியோக சாம்ராஜ்யம் அமுலாக இருந்தது நாற்பது கல் தொலைவிலுள்ள புளியங்காடு.

முதல் நாள் புறப்படும் போதே, ''இந்தாப்பா, புளியங்காட்டில் இருக்கிற பசங்கள் அத்தனை பேரும் குட்டிச் சாத்தான்கள். அவங்களுக்கு இடம் கொடுத்து ஏனோ தானோவென்று இருந்தாயானால் உன் பிழைப்பும் அவ்வளவுதான்' என்று என்னை மிரட்டினார் முதலாளி.

அப்போதே புளியங்காட்டுக் குட்டிச் சாத்தான்களை நினைத்துக் குலை நடுக்கம் எடுத்து விட்டது எனக்கு. இருந்தாலும் வெகு தீரத்துடன், ''அதெல்லாம் ஒண்ணும் என்னிடம் நடக்காதுங்க. காய்ஞ்ச சருகிலேயே சாறு பிழிகிறவன் நான்'' என்று மார் தட்டி விட்டுப் புளியங்காட்டுக்குப் பயணமானேன்.

நான் அவ்வூர் மண்ணை மிதித்ததுதான் தாமதம்; மேற்படி குட்டிச்சாத்தான்கள் என்னை வளைத்துக் கொண்டு அரை மணி நேரம் என்னை முறைத்துப் பார்த்தார்கள். முப்பத்தோராவது நிமிஷம் அவர்களில் ஒருவன் (கோவிந்து என்று பெயர்) முன்னே வந்து, ''இந்தாங்க, சார்! அந்த முதலாளி வேதாளம் எங்களைப் பற்றி ஏதாச்சும் சொல்லி அனுப்பிச்சிருக்கும். அதை மனசில் வெச்சிக்கிட்டு எங்களண்டை முறைக்கப்படாது. ஆமாம்'' என்றான்.

எனக்குப் பெருங் குழப்பமாகி விட்டது. 'முதலாளி சொன்னபடி இவர்கள்தான் குட்டிச்சாத்தான்களா, அல்லது இவர்கள் சொல்கிறபடி அவர்தான் வேதாளமா?'—என்று கண்டுபிடிக்க முடியாமல் திணறினேன்.

அதற்குள் அந்தக் கோவிந்துவின் குரல் மீண்டும் கரகரத்தது. ''என்ன சார், நான் சொல்கிறதைக் காதில் வாங்கிக் கொண்டீங்களா?'' என்று அவன் கேட்கும் போதே தன் புஸ்தி மீசையில் கை போட்டு முறுக்கினான். அவ்வளவுதான். சட்டென்று ஒரு முடிவுக்கு வந்து விட்டேன். தொலைவில் இருக்கும் வேதாளத்தைவிட அருகில் இருக்கும் குட்டிச் சாத்தான்களை அநுசரித்துப் போவதே எனக்கும், கடந்த ஆறு மாதகாலமாக என் புது மனைவி விழுந்து விழுந்து ஊட்டி வளர்த்த நூற்றறுபது பவுண்ட் எடையுள்ள என் உடம்புக்கும் நல்லது!

உடனே, ''என்ன பிரதர்! என்னை என்னவென்று நினைத்துக் கொண்டீர்கள்! முதலாளியாவது முதலாளி! அவரிடம் சம்பளம் வாங்குவதால் அவருடைய ஆளாகி விடுவேனா? நீங்கள்தான் நான், நான்தான் நீங்கள்!'' என்று ஆவேசமாக முழங்கினேன்.

அரை நம்பிக்கையுடன் அவர்கள் நகர்ந்தார்கள். அந்த அரை நம்பிக்கைக்கும் பழுது வராமல், அவர்களைக் குழையடித்துக் காலத்தைக் கடத்திக் கொண்டு வந்தேன். மீதிக் காலத்தையும் அப்படியே தள்ளியிருப்பேன், அந்த அட்வான்ஸ் விவகாரம் மட்டும் குறுக்கிட்டிருக்கா விட்டால்!

ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் எங்கள் தொழிலாளர்களின் தேச பக்தி எல்லையற்றது! சம்பளப் பணத்தை வாங்கிப் பெட்டிக்குள் பூட்டி வைத்து நாட்டில் பொருளாதாரத் தேக்கத்தை உண்டாக்கும் துர்க் குணம் அவர்களில் யாருக்கும் கிடையாது. ஒவ்வொரு வாரமும் சனிக் கிழமையன்று சம்பளப் பட்டுவாடா ஆகும். அன்று சம்பளத்தை வாங்குபவர்களுக்கு, ஞாயிற்றுக் கிழமையில் அதைச் செலவிட்டுவிட்டுத் திங்கட்கிழமையன்று அடுத்த வாரச் சம்பளத்தின் பேரில் முன் பணம் வாங்கிக் கொண்டால் தான் வேலை பார்ப்பது போலவும் சம்பளம் வாங்குவது போலவும் மன நிறைவு ஏற்படும். இது அவர்களுக்கும் கம்பெனிக்கும் பொதுவாகச் சரித்திரம் கண்ட சமாசாரம்.

நான் வேலையில் சேர்ந்தபின் வந்த முதல் திங்கட்கிழமையன்றும் எல்லோருடைய சார்பிலும் அட்வான்ஸ் கோரிப் பூர்வாங்க அறிவிப்புக் கொடுத்து விட்டான் கோவிந்து.

'சார்! பணத்தை ரெடியா வைச்சிருங்க. சாயங்காலம் நாலு மணிக்குச் சரியாகப் பட்டுவாடா ஆயிடணும்' என்று தெரிவித்தபடியே நானும் தயாராகத்தான் இருந்தேன்.

ஆனால் மூன்று மணிக்கு முதலாளியிடமிருந்து ஓர் அவசரத் தபால் வந்து சேர்ந்தது. அதில், ''தொழிலாளர்களுக்குச் சம்பளத்தில் முன் பணம் கொடுத்து வருவதில் கணக்கில் குழப்பம் ஏற்படுகிறது. எனவே அந்தப் பழக்கத்தை நிறுத்த வேண்டும். தவிர்க்க

முடியாத சந்தர்ப்பங்களில் மட்டுமே அந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும்'' என்று கண்டிருந்தது!

சரியாக நான்கு மணிக்குக் கோவிந்துவின் தலைமையின் கீழ் அனைவரும் அட்வான்ஸ் வாங்க வந்து நின்றார்கள். நான் தயக்கத்துடன் முதலாளியின் உத்தரவைக் காட்டினேன். அவர்கள் முகங்கள் நான் எதிர்பார்த்தபடி விகாரமாக மாறவில்லை; நான் எதிர்பார்த்ததிலும் பத்து மடங்கு அதிகக் கோரமாக மாறின.

''என்னய்யா, இத்தினி நாட்களும் இல்லாம நீர் வந்தப்புறம்தான் இப்படி நடந்திருக்குன்னு என்ன அர்த்தம்? நீர் முதலாளிக்கு எழுதி இப்படி உத்தரவு போடச் செய்தீரா, அல்லது நீரேதான் இதை எழுதி முதலாளி மாதிரிக் கள்ளக் கையெழுத்துப் போட்டு எங்களிடம் காட்டுகிறீரா?'' என்று தன் பயில்வான் மார்க் மீசையில் கை போட்டுக் கொண்டே உறுமினான் கோவிந்து.

அவர்களுடைய காலைப் பிடிக்காத குறையாக ஒரு மணி நேரம் நான் நிரபராதி என்பதைச் சொல்லி முறையிட்டேன். அந்த ஒரு மணி நேரத்துக்குள்ளும் சரியாக மூன்று நிமிடத்துக்கொரு முறை கண்களைக் கலக்கிக் கண்ணீரைத் துளிர்க்க வைத்து உருகிக் கொட்டினேன். அவ்வளவு செய்ததற்குக் கொஞ்சம் பலன் கிடைத்தது. ''இன்னிக்குப் பொழுது போகட்டும். இராத்திரி யோசித்துப் பார்த்து விட்டுக் காலையில் வந்து பேசிக்கிறோம்!'' என்று எனக்கு ஓர் இரவுப் பொழுது அவகாசம் கொடுத்து விட்டுப் புறப்பட்டார்கள்.

இரண்டு அடி எடுத்து வைத்த கோவிந்து மீண்டும் திரும்பி வந்து, ''ஆமாம், தவிர்க்க முடியாத சந்தர்ப்பம்னு கொடுக்கலாம்னு இருக்கே, அப்படீன்னு என்ன சந்தர்ப்பம்?'' என்று கேட்டான். அவன் சந்தேகம் எனக்கும் சந்தேகமே! இருந்தாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல், ''அதாவது வீட்டில் பெண்டு பிள்ளைகள் வியாதிப்பட்டுப் படுக்கையில் இருந்தால் அவசரச் செலவுக்கு அட்வான்ஸ் வாங்கிக் கொள்ளலாம்'' என்று விளக்கம் கொடுத்தேன். நான் சொல்லி வாய் மூடுமுன் கோவிந்து தன் சகாக்களிடம் ''ஏம்பா, நம்ப பெண்சாதி பிள்ளைகளுக்கு உடம்புக்குச் சரியில்லாமல் பண்ணிப் படுக்கையில் கிடத்தி விட்டால் பணம் தருவாங்களாம்!'' என்று வார்த்தைக்குப் பொழிப்புரை வழங்கினான். உடம்புக்குச் சரியில்லாமல் பண்ணுவதாவது! ஒரு வேளை காலைக் கையை உடைத்துப் போடுவார்களோ ! எனக்கு உடல் பதறியது!

மறு நாள், காலையில் அத்தனை பேரும் என் இருப்பிடத்துக்கு வந்து நின்றார்கள். ஒவ்வொருவர் வீட்டிலும் மனைவியோ, குழந்தையோ, அல்லது இருவருமோ படுக்கையில் கிடக்கிறார்களாம்! அட்வான்ஸ் வேண்டுமாம் ! அவர்களுடைய வாக்குமூலங்கள் பொய்யோ, நிஜமோ அந்தப் பிரச்னையில் என்னைப் படுக்கையில் கிடத்தாமல் அவர்கள் விட்டது பரம திருப்தியாக இருந்தது. மறு பேச்சில்லாமல் அவர்கள் கேட்ட முன் பணத்தைக் கொடுத்து விட்டு முதலாளிக்கு அவர்களுடைய 'நெருக்கடியான' சந்தர்ப்பத்தைப் பற்றி ஓர் அறிக்கை அனுப்பினேன்.

அதற்கு மூன்றாம் நாளே முதலாளியிடமிருந்து பதில் வந்தது. கடித சாராம்சமாவது:'' நூற்றுப்பத்து வீடுகள்கொண்ட புளியங் காட்டிலுள்ள நூறு வீடுகளுக்குள் புகுந்த அந்த அதிசய வியாதியின் பெயர் என்ன? அது ஆண்கள் எல்லாரையும் ஒதுக்கி விட்டுப் பெண்களையும் குழந்தைகளையும் மட்டுமே பிடித்ததன் மர்மம் என்ன? இவற்றை மறு தபாலில் விளக்க வேண்டியது. அத்துடன், இனி எக்காரணத்துக்காகவும் தொழிலாளர்களுக்கு முன் பணம் கொடுக்கக் கூடாது என்பதையும் அறிய வேண்டியது!''

கடிதத்தை வாசித்ததும் எனக்கு உதறல் எடுக்க ஆரம்பித்தது. ஒரு முரடனின் மீசைக்குப் பயந்து இடம் கொடுத்தால் பிழைப்பில் மண் விழுந்து விடாதா? பிழைப்புக்காக உயிரை விட்டால் குடும்பத் தியாகி என்ற பட்டமாவது கிடைக்கும். உயிருக்குப் பயந்து பிழைப்பைத் தொலைத்து விட்டால்....... ஔவையார் காலத்திலேயே இல்லானை, இல்லாளும் ஈன்றெடுத்த தாயும் வேண்டார்களாமே, இந்த அறுபத்திரண்டில் யாராவது சிந்துவார்களா ?

ஒரு கணம்கூடத் தாமதியாமல் எல்லாரையும் அழைத்து இனி எக்காரணத்துக்காகவும் முன் பணம் கிடையாது என்ற விவரத்தைத் தெரிவித்து விட்டேன். அவர்களும் எதுவும் பேசவில்லை.

ஆனால் மறு திங்கட்கிழமை மாலையில் வழக்கம்போல் என் அறை வாசலில் வந்து கூடி விட்டார்கள்.

''என்ன விஷயம்? அட்வான்ஸ்தான் கொடுக்கக் கூடாதே!'' என்றேன் கடுமையான குரலில்.

''அது தெரியுமய்யா, உம்மிடம் யார் அட்வான்ஸ் கேட்டது? வேலையை விட்டு விலகி விடுபவர்களுடைய கணக்கை அன்றே முடித்து விடுவீர்களல்லவா?'' என்று கேட்டான் அவர்களில் ஒருவன்.

''ஆமாம், அதற்கென்ன இப்போது?'' என்று திகைப்புடன் கேட்டேன்.

''நாங்கள் எல்லாரும் வேலையிலிருந்து நீங்கி விடுகிறோம். எங்கள் கணக்கை முடித்துப் பணத்தைக் கொடுங்கள்'' என்று அனைவரும் ஒரே குரலில் கோரஸ் முழங்கினார்கள்.

எனக்கு என்ன சொல்வது, என்ன செய்வது என்றே புரியவில்லை. அந்தரங்கத்தில் சொந்த விஷயம் அடித்துக் கொண்டது. அவர்கள் எல்லாரும் வேலையிலிருந்து நின்று தொலைத்து விட்டால், முதலாளி என்னையும் நிறுத்தித் தொலைத்து விடுவாரே! அவர்கள் இல்லாமல் எனக்கென்ன வேலை?

வெகு கனிவான குரலில் நான் அவர்களுக்கு ஞானோபதேசம் செய்தேன். இந்தக் கம்பெனியைப் போல் தலைசிறந்தது உலகத்திலேயே இல்லை என்றும், பிரம்மாவின் தற்கால 'புரடக்ஷன்'களில் இந்த முதலாளிதான் மிகவும் தங்கமானவர் என்றும், இந்தக் கம்பெனியை விட்டு விலகுவது சிசுஹத்தி செய்த பாவமாகும் என்றும் எடுத்துரைத்தேன்.

அந்தச் சமயம், ''அட, சரிதான் சார்! நீர் உம் கம்பெனியையும் முதலாளியையும் பற்றித்தான் பெரிசாப் பேசுவீர். நீர் முதலாளியின் கையாள் என்று எங்களுக்கு அப்போதே தெரியுமே! கணக்கை முடிக்கச்

சொன்னால் வேறு பேச்சு என்ன?'' என்று குறுக்கிட்டான் கோவிந்து. எந்த விஷயத்திலும் கோவிந்து குறுக்கிட்டால் ஒன்று அந்த விஷயம் அதில் முடிகிறது. அல்லது அதை முடித்துவிட வேண்டியது என்பது என் அனுபவம்.

வேறு வழியில்லாமல் கணக்கை முடித்து அவர்களை அனுப்பி விட்டேன். அன்று இரவு முழுவதும் சிந்தித்ததில் ஒரு யுக்தி தோன்றியது. இந்த விஷயத்தை முதலாளியிடம் சொல்லுமுன் அக்கம் பக்கங்களில் தேடிப் பிடித்து வேறு ஆட்களை அமர்த்தி வேலையை நடத்தினால் என்ன? அதனால் முதலாளியிடம் நல்ல பெயர் வாங்குவதுடன் சொந்த வேலையையும் காப்பாற்றிக் கொள்ளலாமே!

அந்த உத்தேசத்துடன் மறு நாள் வெளியேறியவனை வாசலில் எதிர்மறித்து நின்றார்கள் கோவிந்துவும் அவன் சகாக்களும்.

''என்ன சார், வேலைக்குப் போக வேண்டாமா ...?''

எனக்கு ரோஷம் பீறிட்டது. ''நேற்று கணக்கை முடித்தபின் இன்னிக்கு என்ன வேலை?'' என்றேன் மிடுக்காக.

''கூலி வேலைக்கு என்னய்யா சட்டம்? நேற்று வேணாம்னு தோணிச்சு, போயிட்டோம். இன்னிக்கு வேணும்னு தோணிச்சு, வந்துட்டோம்'' என்றான் கோவிந்து.


எனக்கு ஆத்திரம் பொங்கியது. இருந்தாலும் அதை அடக்கிக் கொண்டு விஷயத்தைக் கொஞ்சம் லோகாயத சிந்தனைகளால் அலசிப் பார்த்தேன். அவர்களுக்கும் எனக்கு மிடையே 'மானம்' ஒன்றுதான் நெருடிக் கொண்டிருந்தது. அதை நெஞ்சிலிருந்து விசிறி யெறிந்து விட்டால் இரு தரப்பாருக்கும் நல்லதாகவே தோன்றியது.

பிறகென்ன, அப்படியே செய்தேன். அவர்கள் மீண்டும் வேலையில் சேர்ந்து கொண்டார்கள். நான் வெகு நேரம் மூளையைக் குழப்பி நாளுக்காக ஓர் அறிக்கை எழுதி முதலாளிக்கு அனுப்பி வைத்தேன்.

மூன்றாம் நாள். பிரளயமாகத் துரித தபாலில் என் அறிக்கைக்குப் பதில் வந்தது. அது இது தான்: ''உமது அறிக்கையிலிருந்து எமக்கு இரண்டு சந்தேகங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒன்று, நீர் ஒரு வடிகட்டின முட்டாளாக இருக்க வேண்டும்; அல்லது என் உத்தரவை முறியடிக்க வேலையாட்களுக்கு யுக்தி சொல்லிக் கொடுத்துத் துரோகம் செய்து வரும் சதிகாரனாக இருக்க வேண்டும். இரண்டில் நீர் யார் என்ற விவரத்துக்கு உடனே தகவல் அனுப்பவும். அதற்கேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. இதற்கிடையில் கீழ்க்கண்ட புதிய உத்தரவையும் நிறைவேற்றத் தவறினால் எமது மறு தகவலின்றியே நீர் வேலையிலிருந்து நீங்கிக் கொள்ளலாம். உத்தரவாவது: 'வேலையிலிருந்து விலகும் எந்தத் தொழிலாளியையும் மீண்டும் வேலையில் சேர்க்கக்கூடாது.'

ஜீவ மரணப் போராட்டத்தின் கடைசி எல்லையில் நிற்பது போல் இருந்தது எனக்கு. இனி நூலளவு தப்பினாலும், அடுத்த மாதச் சம்பளத்துக்கு நான் மண்ணளந்தார் கம்பெனி சிப்பந்திச் சம்பளப் பட்டியலில் கையெழுத்துப் போட முடியாது என்பது நிதரிசனமாகி விட்டது. எனவே மனத்தை இரும்பாக்கிக் கொண்டு ஆவேசத்துடன் முதலாளியின் உத்தரவைப் பிரகடனப்படுத்தினேன்! இம்முறை, எல்லாருடைய முகத்திலும் கவலை படர்ந்து விட்டது. அனைவரும் கோவிந்து முகத்தைப் பார்த்தனர். அவனிடமும் சுதாரிப்பு இல்லை. நெற்றியைத் தேய்த்துக் கொண்டு திரும்பினான். எனக்குப் பெரும் நிம்மதியாக இருந்தது.

ஆனால் அந்த நிம்மதி மறு திங்கட் கிழமை வரையில்தான். திங்களன்று மாலை வழக்கம் போலவே அட்வான்ஸுக்காகக் கணக்கை முடிக்க வந்து நின்றார்கள் கோவிந்து வகையறாக்கள். நான் மீண்டும் முதலாளியின் உத்தரவை நினைவூட்டிப் பார்த்தேன். அவர்கள் கல்லென்றால் அசல் குத்துக் கற்களாக நின்றார்கள்.



புதுக்கோட்டையில் புவனேசுவரி தேவிக்குக் கோயில் கட்டிக் கும்பாபிஷேகம் சமீபத்தில் அதிவிமரிசையாக நடந்தேறியது. இவ்வைபவத்தில் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களும் தமது அமுத வாக்கால் தேவிக்கு அபிஷேகம் செய்தார்.

அதற்கு மேல் நான் என்ன செய்வது? 'இந்தச் சனியன்களின் சகவாசம் இதோடு தொலையட்டும்' என்று பல்லைக் கடித்துக் கொண்டு ஒவ்வொருத்தர் கணக்குக்கும் எதிரே 'நீக்கப்பட்டான்' என்று வார்த்தையைச் சற்று அதிகமாகவே எழுதிக் கணக்கைத் தீர்த்துக் கட்டினேன். அந்தக் கையோடு வேலைக்கு ஆள் தேவை என்று அக்கம் பக்கத்துக் கிராமங்களில் தண்டோராப் போட்டு விளம்பரம் செய்து விட்டேன்.

மறு நாள் விடியற்காலைப் பொழுது. என் அறை வாசலில் கசமுசவென்று ஒலித்த பேச்சுக் குரல் கேட்டுப் பரபரப்புடன் வெளியே வந்து பார்த்தேன். வந்திருந்தவர்கள் கோவிந்துவும் அவன் சகாக்களும்தான்.

''எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டேன்.

''வேலைக்கு ஆள் தேவை என்று தண்டோரா போட்டார்கள்; வந்தோம்'' என்று முன் வந்தான் கோவிந்து.

''நேற்றே சொல்லியிருந்தேனே, வேலையிலிருந்து விலகியவர்களைத் திரும்பவும் சேர்ப்பதில்லையென்று.''

''நாங்கள் இதற்குமுன் உங்கள் கம்பெனியில் வேலை செய்ததே இல்லையே!'' என்று நிதானமாகத் தெரிவித்தான் கோவிந்து.

எனக்குத் திகைப்பாக இருந்தது. கண்களை நன்றாகக் கசக்கி விட்டு மீண்டும் அவர்களை உற்றுப் பார்த்தேன். அவர்களேதான்!

''என்னப்பா, கோவிந்து! என்ன சொல்கிறாய்? நீ இங்கு வேலை பார்த்து விட்டு விலகவில்லையா?'' என்று மிகுந்த குழப்பத்துடன் கேட்டேன்.

''அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். நேற்று வேலை செய்தவன் கோவிந்துவாக இருக்கலாம். அந்தக் கோவிந்து நேற்றோடு விலகியாச்சு. இன்றைக்கு நான் கோவிந்து அல்ல, குப்பன்! பழைய பேரை மாற்றிக் கொண்டேன். இனிமேல் உங்க கணக்குப்படி நான் புது ஆள். பழைய பேரில் இருந்தால் தானே பழைய ஆளாகும்? இப்போ நான் புது ஆளாக வந்திருக்கிறதாலே என்னைப் புதுசாச் சேர்க்கலாம். அதோ அவன் நேற்றைக்குச் சுப்பனாக இருந்தான், இன்னிக்கு அவன் பெயர் கருப்பசாமி! எல்லாரும் புது ஆளாகி விட்டோம்! என்னய்யா யோசிக்கிறீங்க? எங்களைத் தவிர வேறு எவனும் இந்தப் புளியங்காட்டு ரோட்டு மேலே காலெடுத்து வைத்து விடுவானா?'' என்றான் கோவிந்து.

நான் ஐந்து நிமிஷங்கள் அவர்களையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆறாவது நிமிஷம் என் மூளையில் பளிச்சென்று அப்படித் தோன்றியது. உடனே சடாரென்று வீட்டு வாசற்படியில் மூர்ச்சையடைந்தது போல் விழுந்து மண்டையை உடைத்துக் கொண்டேன்.

ஆமாம், மூர்ச்சையானது போல் வேண்டுமென்றேதான் விழுந்தேன். அதற்கப்புறம் நான்கு நாட்கள் ஆஸ்பத்திரியில் கண்ணை மூடிக் கொண்டு கிடந்து விட்டு, புளியங்காட்டுக்கு வேறொரு மேஸ்திரியைப் போட்டாயிற்று என்று கேள்விப்பட்ட பின்தான், கண் விழித்திருக்கிறேன். ஒரு வேதாளத்துக்கும் நூறு குட்டிச்சாத்தான்களுக்குமிடையேயிருந்து தப்ப அந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு வேறு வழியே தோன்றவில்லை. மண்டையை உடைத்துக் கொண்டு ஆஸ்பத்திரிக்குள் பதுங்கிக் கொண்டதால்தான் தப்பினேன். எவனோ ஒரு புண்ணியவான் எனக்குப் பதிலாக மூட்டாள் பட்டத்தையும் சதிகார விருதையும் வாங்கிக் கொள்ளப் புளியங்காட்டுக்குப் போய் விட்டான்.

இனி மேலென்ன? மண்டைக் காயம் குணமாகியதும் முதலாளியின் காலைப் பிடித்து வேறொரு பகுதிக்கு ஓடி விடலாம். அங்கேயும் கோவிந்துக்களாகவே இருந்தால், மண்டையில் காயம் படாத பகுதி இன்னும் நிறைய இருக்கிறதே. கடைசி வரைக்கும் விழுந்து உடைத்துப் பார்த்து விடலாம்!

ரோஜாவின் நறுமணம்...

ஒரு பவுண்டு ரோஜா எண்ணெய் தயாரிப்பதற்கு ஏறக்குறைய 4000 பவுண்டு ரோஜாக்கள் வேண்டியிருக்கிறது. ஆனல் கோத்ரெஜ் ந. 1 லிருந்து ரோஜாக்களின் ஆனந்தமயமான நறுமணத்தை நீங்கள் பெறலாம். ரோஜாவின் இனிய நறுமணம் பெரிய–சைஸ் ந. 1 ல் மிகச்சிறந்த பாணியில் சேர்க்கப்பட்டு இயந்திரத்தினல் உரையிடப்பட்டுள்ளது

புதிய ஆராய்ச்சிகள், நூதன முறைகள், நவீன இயந்திரங்கள், பல ஆண்டுகளில் ஏற்பட்ட சிறந்த தொழில் நுட்ப அறிவு இவைகளெல்லாம். கோத்ரெஜின் மற்ற சோப்புகளுடன், இந்த முதல் தாவர எண்ணெய் ஸ்நான சோப்பின் தோன்று தொட்டு ஏற்பட்ட சுத்தம் செய்யும் தன்மையையும், உடம்புக்கு இதமளிக்கும் குணங்களையும் இன்னும் அதிகரிக்கச் செய்திருக்கின்றன



கோத்ரெஜ்

ந. 1 ஸ்நான சோப்

பெரிய–சைஸ்

சிறந்தது, சுதேசியும் கூட



கோத்ரெஜ் சோப்புகளில் புகழ்பெற்ற பெயர்

முதல்தர விற்பனையாளர்!





டண், டண்!

அடுத்த மணியின் ஒலி ஓய்வதற்குள்ளாகவே, தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த பியூன் அறையின் அரைக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே பாய்ந்தோடினான்.

அடுத்த நிமிஷம் வெளியே வந்தவன், ''நீங்க உள்ளே போங்க, சார்!'' என்று பெஞ்சியில் உட்கார்ந்திருந்தவரை உள்ளே அனுப்பி விட்டு, மீண்டும் தனது ஸ்டூலில் போய் உட்கார்ந்தான்.

'ஸ்டைலா'க உள்ளே நுழைந்த ரங்கசாமி, மிடுக்காக மானேஜருக்கு வணக்கம் தெரிவித்து விட்டு, அவர் காட்டிய நாற்காலியில் அமர்ந்து கொண்டான்.

அவன் பூர்வோத்தரத்தை விசாரித்த மானேஜர், ''உமக்கு இந்த விற்பனைத் துறையில் எத்தனை வருஷ அநுபவம் இருக்கிறது?'' என்று கேட்டார்.

''அநுபவம் என்ன சார், அநுபவம்! எதற்கும் ஒரு சாதுரியம் வேண்டும், தைரியம் வேண்டும், பேச்சுத் திறன் வேண்டும். எங்கள் சரக்குத்தான் உலகத்திலேயே உயர்ந்தது என்று அடித்துச் சொல்லும் ஆற்றல் வேண்டும். அது என்னிடம் பரிபூரணமாயிருக்கிறது. எனக்கு மட்டும் ஒரு வாய்ப்புக் கொடுத்தீர்களானால், என்னை முதல்தர விற்பனையாளன் என்பதை நிரூபித்துக் காட்டுவேன்!'' என்று ஆணித்தரமாகத் தன் பெருமையை மிகப் பெருமிதத்துடன் கூறிக் கொண்டான் ரங்கசாமி.

''பேஷ்! இப்படிப்பட்ட ஆசாமிகள்தான் எங்களுக்கு வேண்டும். ஆமாம், இதற்கு முன்னால் எந்த எந்தக் கம்பெனிகளில் வேலை பார்த்திருக்கிறீர்கள்? இப்பொழுது ஏதாவது கம்பெனியில் வேலை பார்த்து வருகிறீர்களா?''

''அதென்ன, அப்படிக் கேட்டு விட்டீர்கள்? எத்தனையோ குப்பைக் கம்பெனிகளில் குப்பை கொட்டியிருக்கிறேன். இப்பொழுது கூட அப்படியொரு கம்பெனியில்தான் வேலை பார்த்து வருகிறேன்.''

''அப்படியா? என்ன இருந்தாலும், உங்களை வேலைக்கு எடுத்துக் கொள்ளுவதற்கு முன்னால், உங்கள் திறனைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டு விட வேண்டும் என்று எண்ணுகிறேன். நான் ஒரு பொருள் கொடுத்தால், விற்று வருவீர்களா?''

''என்ன பிரமாதம்? ஒரு நொடியில் விற்று வருகிறேன்!'' என்று தன் பாண்டுப் பைக்குள் கையை விட்டுக் கொண்டே எழுந்து நின்றான் ரங்கசாமி.

''நீங்களே இதற்கான சில்லறையை எடுத்துக் கொடுத்து விட்டு, 'விற்று விட்டேனே!' என்று சொல்லிவிடப் போகிறீர்கள். பாண்டுப் பைக்குள்ளே விடுவதைப் பார்த்தால் அப்படியல்லவா எண்ணத் தோன்றுகிறது!'' என்று சிரித்தார் மானேஜர்.

''சே! அப்படியெல்லாம் செய்வேனா? சிறந்த விற்பனையாளருக்கு அதுதான் அழகாகுமா? இன்று காலையில் எங்கள் கம்பெனியில் புதிதாக ஒரு சரக்குக் கொடுத்தார்கள். அந்த மாதிரி மட்டச் சரக்கை நான் பார்த்ததே யில்லை. அதை இன்று காலையில் வீடு வீடாகச் சென்று பல பேர் தலையில் கட்டி விட்டுத்தான் வந்திருக்கிறேன்! என்ன செய்வது? பேய்க்கு வாழ்க்கைப் பட்டால் புளிய மரத்தில் ஏறியாக வேண்டும் என்ற நிலைதானே எங்கள் பிழைப்பு?''

''நான் தரும் பொருள் அப்படிப்பட்டதல்ல. அந்தப் பொருள் வைத்திருக்கும் பாட்டிலே பார்ப்பதற்கு மிக அழகு. பார்க்கப் பார்க்கப் பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் தோன்றும்.''

''அப்படித்தான் சார், எங்கள் கம்பெனி விளம்பரம் செய்திருக்கிறார்கள். 'ஆளைக் கண்டு மயங்காதே, ஊது காமாலை' என்று சொல்லி விருப்பேன், உண்மையான நண்பன் ஒருவன் வாங்க வந்தால். ஆனால் என்ன செய்வது? என் பிழைப்பு அப்படி?''

''நான் உங்களிடம் தரப்போகும் பாட்டிலுக்கே அறுபத்திரண்டு பைசாக்களைக் கண்களை மூடிக்கொண்டு தரலாம்!'' மானேஜர் தம் மேஜை டிராயரைத் திறக்கப் போனார்.

''அறுபத்திரண்டு பைசாவா? உங்கள் கம்பெனிச் சரக்குத்தானே?''

''இல்லை. இன்னொரு கம்பெனிச் சரக்கு. உங்கள் திறனைப் பார்க்கத் தானே விற்றுவரச் சொல்கிறேன்! எங்கள் சரக்காயிருந்தால் என்ன, வேறு ஒருவர் சரக்காயிருந்தால் என்ன?'' என்றார் மானேஜர்.

''வாஸ்லைனா?''

''ஆமாம், அதென்ன அப்படிக் கணக்காகச் சொல்லி விட்டீர்கள்? நீங்களும் ஒரு பாட்டில் வாங்கினீர்களோ?'' என்று கேட்டவாறே ஒரு பாட்டிலை எடுத்தார் மானேஜர்.

அதற்குள்ளாக ரங்கசாமி தன் தோல் பையைத் திறந்து, ''இதுதானே நீங்கள் வாங்கின வாஸ்லைன்?'' என்று ஒரு பாட்டிலை எடுத்து அவர் மேஜை மீது வைத்தான்.

மானேஜர் தம் கையிலிருந்த பாட்டிலையும், ரங்கசாமி மேஜை மீது வைத்த பாட்டிலையும் வியப்புடன் மாறி மாறிப் பார்த்தார்.

''இன்று காலை என்னிடம் வாஸ்லைன் வாங்கியவர்களில் நீங்களும் ஒருவர் தானா?'' என்றான் ரங்கசாமி.

மானேஜர் மேலும் அவனுக்குப் பரீட்சை வைக்க விரும்பவில்லை. அவன் கேட்ட சம்பளத்தைக் கொடுத்துத் தமது கம்பெனியில் பிரதம ஸேல்ஸ்மேனாக நியமனம் செய்து கொண்டார்.

- குறும்பன்



புதுவெள்ளம்

அத்தியாயம் பன்னிரண்டு

அகத்திலே அழகுடையாள்

அகிலன்

முருகையனின் எதிர்பாராத வருகையும் அவனுடைய மனக்கலக்கமும் சிறிது நேரத்துக்குச் சாந்தாவையும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளுக்கு இலக்காகச் செய்தன. அவற்றிலிருந்து தன்னை மீட்டுக்கொள்ள விரும்புகிறவள் போல் சரேலென்று அடுத்த அறைக்குள் நுழைந்தாள் சாந்தா. உடனடியாக அங்கே பாத்திரங்களின் ஓசை எழுந்தது.

''சாப்பிட்டு விட்டுத்தான் வந்திருக்கிறேன், சாந்தா!'' என்று குரல் கொடுத்தான் முருகையன். ''எனக்கொன்றும் இப்போது பசியில்லை; சும்மா பார்த்துவிட்டுப் போகலாம் என்றுதான் வந்தேன்.''

சாந்தா அவன் கூறியதைக் காதில் போட்டுக் கொள்ளாதவள் போல் அறைக்குள் அமர்ந்து ஏதோ கைக் காரியத்தில் ஈடுபடத் தொடங்கினாள்.


தனியே விடப்பட்ட முருகையன் அந்த அறையைச் சுற்றிலும் ஒரு கண்ணோட்டம் செலுத்தினான். அலமாரிகளில் தென்பட்ட சாமான்கள் ஒழுங்காகவும் அழகாகவும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. சுவரில் இயற்கைக் காட்சிகளைச் சித்திரிக்கும் இரண்டு மூன்று படங்கள் மட்டிலும் தொங்கின. புத்தகங்களையும் பத்திரிகைகளையும் அவற்றின் அளவுக்குத் தக்கவாறு அடுக்கி வைத்திருந்தாள் சாந்தா. ஜன்னல்களுக்கு வெளியில் தோட்டத்துச் செடிகள் தளிர்களும் மலர்களுமாகக் குலுங்கிக் கொண்டிருந்தன. தோட்டக்காரனை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடிய வசதி அவர்களுக்குக் கிடையாது என்பது முருகையனுக்குத் தெரியும்.

திரும்பிய பக்கமெல்லாம் அழகு, அமைதி, ஒழுங்கு இவற்றைக் கண்ணுற்ற முருகையனுக்கு அவை ஒவ்வொன்றிலும சாந்தாவின் உழைப்பு மிளிர்வது தெரிந்தது. கண்களைக் கவர்ந்து நொடிப்பொழுதில் மயங்கச் செய்யும் வெளி அழகு சாந்தாவிடம் கிடையாதுதான். ஆனால் அவளுடைய கைபட்ட பொருள்கள் எல்லாமே ஒரு தனிப் பொலிவு பெற்றிருந்தன. மனிதர்களிடம் மட்டிலும்தான் அவள் அன்பு கொண்டிருந்தாள் என்று சொல்ல முடியாது. அவளைச் சுற்றியிருந்த சின்னஞ் சிறு பொருள்களில் கூட அவள் கொண்டிருந்த நேசமும் பற்றுதலும் வெளிப்பட்டன.

ஏதோ ஒரு முழுமை உணர்ச்சி, முருகையனால் இன்னதென்று விளங்கிக் கொள்ள முடியாத ஒரு பூரிப்பு, அவனுடைய உள்ளத்தின் ஆழத்தில்

தோன்றிக் 'குபுகுபு' வென்று பொங்கி அவனுடைய நாடி நரம்புகளிலெல்லாம் பரவத் தொடங்கியது. இதுபோன்ற ஓர் அநுபவத்தை அவன் ஒரு கணம் கூடச் சித்திராவுடன் பழகியபோது பெற்றதில்லை.

எதிரில் மேஜை மீது தண்ணீர் நிறைந்த ஒரு கூஜாவையும் தம்ளரையும் கொண்டு வந்து வைத்து விட்டு, அடுத்தாற்போல் மாம்பழத் துண்டுகள் நிறைந்த ஒரு தட்டையும் சூடான



காப்பி நிறைந்த கிண்ணத்தையும் கொண்டு வந்தாள்.

''கை கழுவி விட்டு மாம்பழம் சாப்பிடுங்கள்; அதற்குள் காப்பியும் சூடு குறைந்து விடும்.''

'கை கழுவி விட்டுத்தான் மாம்பழம் சாப்பிட வேண்டும். அதைச் சாப்பிடும் நேரத்துக்குள் குடிப்பதற்கு ஏற்றாற் போல் காப்பியும் சூடாறிவிடும்! ஒவ்வொன்றுக்கும் காலம் நேரம் என்றெல்லாம் ஒழுங்கு வைத்திருப்பாள் போலிருக்கிறது!' என்று எண்ணிக் கொண்டே கை கழுவி விட்டு வந்தான் முருகையன்.

பங்கனபள்ளி மாம்பழம் ஒன்று கச்சிதமாகத் தோல் சீவப் பெற்று, ஒரே மாதிரி அளவில் துண்டு துண்டாக வெட்டி வைக்கப்பட்டிருந்தது. பசியும் ருசியும் இல்லாதவர்களுக்குக்கூட அந்தக் காட்சி பசியையும் ருசியையும் தூண்டி விடும் என்பதில் சந்தேகமில்லை.

''ஒரே பழந்தான்; தட்டில் மீதம் வைத்து விடாதீர்கள்'' என்று வேறு சொல்லி வைத்தாள் சாந்தா.


''நீ ஒரு துண்டாவது எடுத்துக் கொண்டால் தான்....''

சிரித்துக் கொண்டே ஒரு துண்டை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு தண்ணீரில் அவன் கை கழுவிக் கொண்டான்.

மளமள வென்று மாம்பழத் துண்டுகள் தட்டிலிருந்து மறைந்தன. கடைசித் துண்டும் அவன் கைக்குச் சென்றது. பிறகு காப்பியைக் குடித்து விட்டு,

''உண்மையில் சொல்கிறேன்; பழமும் காப்பியும் மிக நன்றாக இருக்கின்றன'' என்றான். அவனுடைய மனப்பூர்வமான சொற்கள் அவள் முகத்தில் மலர்ச்சி தோன்றி மறையச் செய்தன.

பாத்திரங்களைக் கழுவி வைப்பதற்காக உடனடியாக உள்ளே சென்றாள் சாந்தா. முருகையனும் வீட்டைச் சுற்றிப் பார்ப்பதற்காக எழுந்து சென்றான். சமையல் அறையில் மாம்பழத் தோல்களையோ, சற்று முன்பு காப்பி போட்டதற்கான அடையாளங்களையோ காணவில்லை. எல்லாம் பளிச்சென்று சுத்தமாக இருந்தன. சமையலுக்கு வேண்டிய பல்வகைச் சாமான்களைக் கண்ணாடி சீசாக்களில் போட்டு வைத்து, அடுப்படியின் அருகில் கைக்கு எட்டுவது போல் அலமாரியில் வைத்திருந்தாள். பச்சைக் காய்கறிகளும் பழங்களும் காற்றோட்டமான இடத்தில் இருந்தன.



"நான் சமீக்கிழமை ரேசுக்காகக் கிளம்பினேன் சார்! அதிசயமான நிகழ்ச்சிகள் நடந்தன. அன்று அந்த வருஷத்தின் பதினோராவது மாதத்தின் பதினோராவது நாள். என் பையனுக்கு அன்றைக்குப் பதினோரு வயது. எங்கள் வீட்டு நம்பர் பதினொன்று. அன்றைக்குத்தான் என் பையனுக்குப் பதினோரு வயது பூர்த்தி. நான் 'ரேஸ் கோர்ஸை' அடைந்தவுடன் மணி பதினொன்று ஆகிப் பதினோரு நிமிஷம். மைதானத்தில் பதினோரு குதிரைகள் ரேசுக்குத் தயாராக நின்றன. நான் பதினோராவது குதிரைமேல் பணம் கட்டினேன்! என்ன ஆச்சரியம்?"

"ஏன் அது ஜெயித்ததா?"

"இல்லே அது பதினோராவது குதிரையாக வந்தது. அதோடு இல்லே. இதுதான் ரேசில் என் பதினோராவது தோல்வி!"

மென்மையும் இல்லை; சாந்தா தன்னுடைய ஐம்புலன்களின் சின்னஞ்சிறு சலனங்களின் வாயிலாகவும் தான் பெண்மையே உருவானவள், முழுமையை நோக்கி வளர்ந்து கொண்டிருப்பவள் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அடக்கத்திலும், பணிவிலும், இங்கிதமான சொற்களிலும் செயல்களிலும் அவள் தன்னுள்ளே இருந்த பெண்மையின் சக்தியைச் சுடர்விட்டு ஒளி பெருகச் செய்து கொண்டிருந்தாள். ஆனால் அவளுக்கே அவளுடைய சொந்த சக்தி தெரிந்திருக்கும் என்று தோன்றவில்லை. எல்லாமே அவளுடைய சுபாவத்தோடு இரண்டறக்கலந்திருந்தன.

திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்தான் முருகையன். 'எளிமையிலும் செம்மையாக வாழத் தெரிந்த இவளை மணந்து கொள்ளப் போகிறவன் மிகப் பெரிய பாக்கியம் செய்தவனாக இருக்க வேண்டும்' என்று அவனுடைய மனம் கூறியது. அந்தப் பாக்கியசாலி பெருமாள்சாமியாக இருப்பானோ என்று கூட அவன் சிறிது வருத்தத்துடன் நினைத்துக் கொண்டான்.


ஏனோ அவனால் அந்தச் சமயத்தில் சித்திராவைச் சாந்தாவுடன் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. சித்திரா எத்தனையோ சந்தர்ப்பங்களிலெல்லாம் அவன் மீது உயிரையே வைத்திருந்தவள் போல் நடந்து கொண்டிருந்திருக்கிறாள்.

அவனுக்காக உடைகள், பொருள்கள், வசதிகள், பணம் இவ்வளவுக்கும் ஏற்பாடு செய்திருக்கிறாள். ஒவ்வொன்றையும் அவளது ஆழ்ந்த காதலின் அன்புப் பரிசு என்றே எண்ணி ஏற்றுக் கொண்டிருக்கிறான் முருகையன். என்றாலும் அவளிடம் சாந்தாவின் நளினம் இல்லை; சாந்தாவிடம் தென்பட்ட உள்ள வலிமையும் புறத் தோற்றத்தின்

மீண்டும் வந்து முன் போலவே சுவரில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்தாள் சாந்தா. அவள் அமர்ந்திருந்த சாதாரணக் காட்சியே முருகையனுடைய தன்னம்பிக்கையையும் வாழ்க்கையில் உள்ள பற்றுதலையும் வளர்க்கக் கூடியதாக இருந்தது. எவ்வளவுதான் கோபம் வந்தாலும் அவள் தன்னைச் சித்திராவைப் போல் சிறுமைப்படுத்த மாட்டாள் என்று நினைத்துக் கொண்டான் முருகையன். செய்வதெல்லாம் செய்து விட்டு, பூஜைக்குரிய விக்கிரகத்தை அலங்கரித்து வேடிக்கை பார்ப்பது போல் பார்த்து விட்டு, கடைசியில் அதைத் தெருப் புழுதியில் வீசி எறிவது போல் எறிந்து விட்டுப் போனாள் அல்லவா சித்திரா? மழையிலும் மின்னலிலும் இடியிலும் தனியே கடற்கரையில் தவிக்க விட்டுச் சென்றாளல்லவா?.... ஒருபோதும் அப்படி யாரையுமே செய்ய மாட்டாள் சாந்தா.

பெருமாள்சாமி ஒருவகையில் முரட்டுத்தனமான போக்குடையவன்தான். ஆனால் அவனுக்குக் கூடச் சாந்தா சிறுமை செய்வதற்குச் சிறிதும் துணிய மாட்டாள்.

வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்



திட ஆரோக்கியத்துக்கும் தென்புக்கும்

நல்லதென்பதற்கு 4 காரணங்கள் இதோ...

1. எந்த சீத வெப்ப நிலையிலும் எப் பருவத்திலும் முதியோர், சிறுவர் யாவரும் சுவைத்துப் பருகுவதற்கு இனிய, உடல் நலனுக்கு உகந்த டானிக் இதுவே.
2. இரத்த விருத்தி செழிக்கச் செய்து, நரம்புகளுக்கு வலுவூட்டுகிறது.
3. பசியின்மைக் கோளாறுகளுக்கும், பிணியாறும் பருவத்திற்கும் பிரத்தியேகமாக உரித்தானது.
4. பொது பலவீனம், ஊட்டக் குறைவு, சோர்வு, உணவிலே உலோகப் பொருள் குறைபாடு, மிதமிஞ்சிய உடல் தளர்ச்சி, உள்ளத் தளர்ச்சி யாவினுக்கும் உகந்த நிவாரணமாகச் சிபாரிசு செய்யப்படுகிறது.

வாட்டர்பரீஸ் வைட்டமின் காம்பவுண்ட்

வார்னர் - லாம்பர்ட் பார்மஸூடிகல் கம்பெனி.

(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு. எஸ். ஏ. வில் இணைக்கப்பெற்றது)


அன்றாடம் அணியும் ஆடைகளுக்கு
அத்தனை வெண்மையும் பொலிவும்
அளிப்பது ஸன்லைட்
SUNLIGHT
SOAP

''இங்கு வந்தபிறகு நீங்கள் இங்கே வந்து போய்க் கொண்டிருப்பீர்கள் என்று நினைத்தேன். எங்களை மறந்தே போய் விட்டீர்கள் போலிருக்கிறதே!''

''அப்படி யொன்றுமில்லை; நான் வராவிட்டாலும் நீயாவது வந்திருக்கலாம் அல்லவா?''

மௌனமாகத் தலையைக் கீழே குனிந்து கொண்டாள் சாந்தா. அவளுடைய மௌனத்துக்கும், அவள் சுந்தரத்தின் வீட்டுக்கு வராமல் இருந்ததற்கும் பெருமாள்சாமிதான் காரணமாக இருக்க வேண்டும் என்று சந்தேகப்பட்டான் முருகையன்.

''நான் உங்களிடம் ஒரு விஷயம் கேட்கலாமா? கேட்டால் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே?'' என்று கேட்டாள் சாந்தா.

''தவறான எதையுமே நீ கேட்கமாட்டாய். தாராளமாய்க் கேட்கலாம்'' என்றான் முருகையன்.

அவன் அப்படிக் கூறிய பிறகும் அவள் சற்றே தயங்கினாள். தன்னைத் தானே ஒருவாறு தேற்றிக் கொண்டு அவன் முகத்தை நேரடியாக உற்றுப் பார்த்தாள்.

''உங்களுக்கும் சித்திராவுக்கும் நடப்பதாக இருந்த கலியாணம் ஏன் நடைபெறவில்லை? சொல்லக்கூடிய காரணங்கள் ஏதுமிருந்தால், என்னிடம் சொல்வதற்கு நீங்கள் விரும்பினால் சொல்லுங்கள்.''

அத்தியாயம் பதின்மூன்று

நண்பனின் எச்சரிக்கை

முருகையனுக்கும் சித்திராவுக்கும் ஏன் திருமணம் நடைபெறவில்லை? சாந்தா கேட்ட இந்தக் கேள்வி முருகையனையே ஒருகணம் திகைக்கச் செய்து விட்டது. 'ஆமாம். திருமண ஏற்பாடுகள் அவ்வளவும் முடிந்த பிறகு, எல்லாருமே நிச்சயம் நடக்கப் போவதாக நம்பிக் கொண்டிருந்த சமயத்தில், ஏன் அது திடீரென்று நின்று விட்டது?'

நடந்த விஷயங்களை நினைவுபடுத்திக் கொண்டிருந்தான் முருகையன். அவன் அதை வெளியிடத் தயங்குவதாக எண்ணிய சாந்தா, ''உங்களுக்கும் அதனால் மனக் கஷ்டம் ஏற்படுமென்றால் சொல்ல வேண்டாம்'' என்றாள்.

''சொல்லக் கூடாது என்பதில்லை; தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்ல முடியுமா என்று பார்க்கிறேன்'' என்றான். பிறகு அவனுடைய குரல் நிதானமாக ஒலிக்கத் தொடங்கியது. ''காரணம் என்று பார்த்தால் எங்கள் இரண்டு பேர்களை மட்டும்தான் சொல்ல வேண்டும். என்னைப் பற்றி ஓரளவு உனக்குத் தெரியும்; அவளும் நல்ல பெண்தான். இருந்தாலும் இருவருமே வெவ்வேறு சூழ்நிலையில் முற்றிலும் மாறுபட்ட இடங்களில் பிறந்து வளர்ந்தவர்கள். எங்களுடைய ஆசைகளும் நோக்கங்களும் விருப்பு வெறுப்புக்களும் பல விஷயங்களில் முரண்பட்டிருந்தன. அவளோ கஷ்டம் தெரியாமல் வளர்ந்து விட்ட செல்லப் பெண். நான் சிறு வயதில் அப்படி இருந்தாலும், வளர்ந்துவிட்ட பிறகு வாழ்க்கையில் மிகவும் சிரமப்பட்டவன். உலகத்தில் மனிதர்கள் படும் துன்பங்களை என்னால் ஓரளவு உணர முடிகிறது. சித்திரா இந்த விஷயத்தில் இன்னும் குழந்தையாகவே இருக்கிறாள். வாழ்க்கைக்கு நாம் கொடுக்க வேண்டியது எவ்வளவு, அதனிடமிருந்து எடுத்துக் கொள்ள வேண்டியது எவ்வளவு என்று அவளுக்குத் தெரியவில்லை.''

''அடடா!'' என்று அவன் கடைசியில் கூறிய சொற்களைக் கேட்டு மெய்ம்மறந்து கூறினாள் சாந்தா. ''உலகத்தின் தொல்லைகளுக்கும், துன்பங்களுக்கும் ஏற்றதொரு மருந்து சொல்லி விட்டீர்களே! எடுத்துக் கொள்வதற்கு வசதியும் வாய்ப்பும் உள்ளவர்கள் தங்கள் தேவைக்கு அதிகமாகவே எடுத்துக் கொள்கிறார்கள். உலகத்துக்கு அவர்கள் கொடுப்பதோ மிக மிகக் குறைவு. ஆனால் உலகத்துக்குக் கொடுத்துக் கொண்டிருப்பவர்களோ அதனிடமிருந்து தங்கள் குறைந்த தேவைகளுக்குக்கூட எடுத்துக்கொள்ள முடிவதில்லை. நீங்கள் சொல்வது போல் நடந்துவிட்டால் வாழ்க்கை எவ்வளவு இன்பகரமாக இருக்கும்!''

'இப்படி ஒரே ஒருமுறை கூடச் சித்திரா என்னிடம் பேசவில்லையே!' என்று மனத்துக்குள் நினைத்துக் கொண்டான் முருகையன்.

மீண்டும் சாந்தாவே பேசினாள்: ''இவ்வளவு பெரிய லட்சியங்களைச் சித்திரா எதற்காகப் புரிந்து கொள்ள வேண்டும்? அவள்தான் சிறு குழந்தை என்று சொல்லி விட்டீர்களே? கல்யாணம் செய்து கொண்ட பிறகு அநுதாபத்துடன் ஒருவரை யொருவர் புரிந்து கொண்டு ஒத்துப் போக முயற்சி செய்திருக்கக் கூடாதா?''

இந்தக் கேள்விக்கு எப்படி விடையளிப்பதென்று முருகையனுக்கு விளங்க

வில்லை. ஒரு வேளை அன்றைக்குக் கடற்கரையில் இருவருக்கும் விவாதம் நடந்திருக்காவிட்டால் இதற்குள் கல்யாணமே நடந்திருக்கலாம். அப்படி நடந்திருந்தால் அந்த வாழ்க்கை....

ஏனோ அந்த வாழ்க்கை அமைதியுள்ள வாழ்க்கையாக இருக்க முடியாதென்று முருகையனுக்குத் தோன்றியது. அவளை மணந்து கொள்ளாதது துன்பமென்றால், மணந்து கொண்டிருந்தாலோ, துன்பத்திலும் துன்பம் என்று அவனது உள்ளம் கூறியது.

''நீங்கள் இருவரும் உண்மையிலேயே ஒருவரையொருவர் விரும்பியிருந்தால், ஒருவரோடு ஒருவர் கடைசி வரையில் வாழ்ந்துதான் தீர வேண்டும் என்ற அளவுக்கு விரும்பியிருந்தால், இப்படி நடந்திருக்காதென்று நினைக்கிறேன்.''

திடுக்கிட்டுச் சாந்தாவின் கண்களை ஏறிட்டுப் பார்த்தான் முருகையன்... மின் வெட்டும் நேரம் நான்கு விழிகளும் ஒன்று கலந்தன. உடனே தன் விழிகளைத் தாழ்த்திக் கொண்டாள் சாந்தா.

காதல் என்ற சொல்லை அவள் உச்சரிக்க வில்லையென்றாலும், 'நீங்கள் உண்மையிலேயே காதலித்திருந்தால் இப்படிப் பிரிந்திருக்க மாட்டீர்கள்' என்றுதான் அவள் உறுதியாகக்கூறினாள்.

''நீ என்ன சொல்லுகிறாய் சாந்தா?'' என்று கேட்டான் முருகையன்.

''நம்மையே நாம் பல சமயங்களில் புரிந்து கொள்வதில்லை. நம்மை நாமே புரிந்து கொள்ளாத போதும், நம்மை மற்றவர்கள் புரிந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். ஒன்று மற்றொன்று போல் நமக்குத் தோன்றுகிறது. ஒருவரை யொருவர் விரும்பிக் கல்யாணம் செய்து கொண்டதாக நம்பியவர்களில் சிலர், பிறகு வேதனைகளால் புழுங்குகிறார்கள்.''

முருகையனின் சிந்தனைசக்தி மின்னல்களால் தாக்கப் படுவதுபோல் தோன்றியது. அவனுக்கே தெரியாத உண்மை ஒன்றை அவனுக்கு அவள் கட்டிக்காட்டுகிறாளா? அப்படியானால் சித்திராவை அவன் காதலித்ததாக நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் வெறும் மனமயக்கத்தின் விளைவுதானா? பருவமும், பழக்கமும், உறவும் சேர்ந்து கொண்டு அவனையே அவன் தெரிந்து கொள்ளாதபடி செய்து விட்டனவா?

'ஆத்மாவைக் காண முடியவில்லை என்று கடைசியாகச் சித்திராவைக் குற்றம் சாட்டினேனே, ஆத்மா இல்லாத இடத்தில் எப்படி நான் காதல் கொண்டிருக்க முடியும்? எப்படி நான் காதலை வளர்த்திருக்க முடியும்?' — நெடுநாட்கள் நெருங்கிப் பழகிய பிறகும் அவன் தெரிந்து கொள்ள முடியாத ஓர் உண்மையை எப்படியோ ஒரு பெண் பிள்ளை தெரிந்து வைத்துக்கொண்டிருந்தாள்.

''இப்படி வெளிப்படையாகப் பேசியதற்கு என்னைத் தவறாக நினைத்துக்கொள்ளாதீர்கள். நடந்து போன விஷயங்களுக்காக நீங்கள் இனியும் வருத்தப்பட வேண்டாம்என்பதற்காகத்தான் இதைக் கூறினேன். வேறொன்றுமில்லை. உங்களுக்கு இது மனக் கஷ்டம் தருமானால் என்னை மன்னித்து விடுங்கள்... என்னை மன்னித்து விடுங்கள்.''

சாந்தாவின் குரல் தழுதழுத்தது. அதில் கண்ணீரின் அலையோசை எழும்பியது. அவள் சட்டென்று உள்ளே எழுந்து சென்றாள்.

முருகையன் ஏதோ ஒருவித உணர்ச்சிப் புயலில் தான் அப்போது அகப்பட்டுக் கொண்டிருப்பது போல் உணர்ந்தான். எதற்காக இப்போது சாந்தா மனம் குமுற வேண்டும்? அவனுடைய இன்ப துன்பங்களைப் பற்றி அவளுக்கு என்ன அவ்வளவு கவலை?

திடீரென்று சாந்தாவிடம் சென்று தன்னுடைய முக்கியமான சந்தேகம் ஒன்றைப் பற்றிக் கேட்க வேண்டுமென்ற துடிப்பு அவனுக்கு ஏற்பட்டது. 'என்னிடம் நீ கேட்டுத் தெரிந்துகொண்டது போல் நானும் உன்னைப் பற்றி ஒரு விவரம் தெரிந்து கொள்ளலாமா?' என்று கேட்க நினைத்தான். 'பெருமாள் சாமியை உனக்கு எவ்வளவு நாட்களாகத் தெரியும்? அந்தப் பழக்கத்தில் ஏதும் எதிர்கால நோக்கமிருக்கிறதா?'

நினைத்தானே தவிர கேட்கக் கூடிய துணிவு அவனுக்கு வரவில்லை. சாந்தாவிடம் அந்த அளவுக்கு உரிமை எடுத்துக் கொள்வதற்கு அவன் அப்போதைக்குத் தயங்கினான். இப்போதே கலக்கமடைந்திருக்கும் சாந்தா இதனால் அதிகமாய்க் கலங்கினால் என்ன செய்வது? — எந்தக் காரணத்தைக் கொண்டும் அவளுக்குத் துன்பம் கொடுக்கக்கூடாதென்று அவன் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டான்.

ஜன்னல் வழியாக வெளியே பார்த்த போது தூரத்தில் பெருமாள்சாமி வேகமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது. அவனும் நேரே சாந்தாவின் வீட்டுக்குத்தான் வந்து கொண்டிருந்தான். முருகையனுக்கு அதற்கு மேல் நொடிப்பொழுது கூட அங்கு தங்குவதற்குப் பிடிக்கவில்லை.

''நான் போய் விட்டு வருகிறேன், சாந்தா! அம்மாவிடமும் கல்யாணியிடமும் சொல்லிவிடு. இன்னொரு நாள் வந்து எல்லோரையும் சந்திக்கிறேன்.''

''இருந்து விட்டுப் போகலாம்; அம்மாவும் எழுந்து விடுவார்கள்; கல்

யாணியும் வந்து விடுவாள்'' என்றாள் சாந்தா.

''இல்லே; பிறகு வருகிறேன்.'' பதிலுக்குக் காத்திருக்காமல் வெளி வாசலுக்கு வந்தான் முருகையன்.

முருகையன் எங்கிருந்து வருகிறான் என்பதைப் பெருமாள்சாமியும் கண்டு கொண்டான். அவனுடைய விழிகள் விரிந்தன; நெற்றி சுருங்கியது; ஒரு கணம் முருகையனைக் கூர்ந்து நோக்கி விட்டு அவன் அருகில் வந்து நின்றான்.

இருவருடைய விழிகளிலுமே சந்தேகம் பொங்கியது.

''உனக்கு ஏற்கனவே இந்த வீட்டுக்காரர்களைத் தெரியுமா?'' என்று எடுத்த எடுப்பில் கேட்டான் பெருமாள்சாமி.

''தெரியும்; சென்னையில் ஒரே வீட்டில்தான் குடியிருந்தோம்.''

''ஓஹோ!''

சட்டென்று பெருமாள்சாமியின் முகத்தில் கோபம் குடி கொண்டது. ஒரு கையால் தனது தாடியைத் தடவி விட்டுக் கொண்டே, மற்றொரு கையை முருகையனின் தோளின் மீது வைத்தான். பிறகு அவன் கண்களை உற்றுப் பார்த்தான். ''முருகையா! உன்னை ஒரு விஷயத்தில் நான் கடுமையாக எச்சரிக்கை செய்யவேண்டியிருக்கிறது'' என்றான் பெருமாள்சாமி.

''எதற்காக எனக்கு எச்சரிக்கை?'' என்று முருகையன் மிகுந்த வியப்புடன் கேட்டான். (தொடரும்)



படித்துப் பாருங்கள்

கல்யாண மஞ்சரி

ஸ்ரீ பகவானின் அருளால் துக்கங்கள் விலகி ஆனந்தம் கிடைக்க வேண்டும். அப்படி மக்களுக்கு ஆனந்தம் கிடைக்கச் செய்யும் காலத்தையே பெரியோர்கள் கல்யாணம் என்று கூறுகின்றனர். இம்மாதிரியான நிலையை இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் அடையவே ஸ்ரீராமன், கிருஷ்ணன், முருகன், பரமேச்வரன் முதலிய தெய்வங்கள் சீதை முதலிய தெய்வ சக்தி வாய்ந்த பெண்களை சாஸ்திர முறைப்படி கல்யாணம் செய்து கொண்டனர். அவர்கள் தங்களது சக்தியையே மனைவியாக்கிக் கொண்டனர். அந்தத் தெய்வங்கள் செய்துகொண்ட கல்யாண சரித்திரத்தைக் கேட்ட மாத்திரத்திலேயே கேட்போருக்கு மங்களங்கள் கிட்டுவது ஆச்சரியமாகும்.

தெய்வங்களின் கதையைக் கேட்டு அவைகளின் மூலம் நம் குறைகளை நீக்கிக் கொள்வது தான் ஹிந்து மதத்தின் அடிப்படையான கொள்கையாகும். தெய்வங்கள் கல்யாணம் செய்து கொண்ட கதைகள் பல புராணங்களில் புதைந்து கிடக்கின்றன. அவ்வித விவாகங்கள் எவ்வளவு என்பதைக் கூடப் பலர் அறிந்திருக்க முடியாது.

சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்பு கூட நமது பெரியோர்கள் பல புராணங்களைத் தாங்களும் படித்துப் பிறருக்கு உபதேசித்து வந்தனர். அதனால் கல்யாணங்களை முறைப்படி நான்கு தினங்கள் ஹோமங்கள் செய்து நன்கு நடத்தி வந்தனர். நமது கல்யாணங்களில் நான்காவது நாள் இரவின் பின் பாகத்தில் சேஷ ஹோமம் என்ற ஹோமத்தைச் செய்யும்படி முனிவர்கள் கூறியுள்ளனர். கணவனுக்குப் பல விதத்திலும் கஷ்ட நஷ்டங்களைக் கொடுக்கக் கூடிய சூக்ஷ்மமான மெய் ரேகைகள் அந்த ஹோமத்தால் அழிந்து விடுகின்றன என்று வேதம் கூறியுள்ளது.

முனிவர்கள் கல்யாணத்தை வேதம் கூறிய முறைப்படி செய்து வாழ்க்கை முழுதும் சுகமாய் வாழ்ந்து வந்தனர். இம்மாதிரி தெய்வங்களும் கல்யாணம் செய்து கொண்ட சரித்திரங்களைப் பல நூல்களின் மூலமாக அறிய வேண்டியிருந்தது.

இந்தச் சிரமத்தைப் போக்கவே 'கல்யாண மஞ்சரி' என்ற சிறந்த நூலை ஸ்ரீ எம். ஏ. ராஜகோபாலய்யர் என்ற ஆஸ்திகர் ஒரு சிறந்த வித்வானாகிய ஸ்ரீ ஆர். தங்க ஸ்வாமி சர்மா என்பவரைக் கொண்டு தொகுத்து வெளியிட்டுள்ளார். ஸ்ரீ கணேச கல்யாணம், ஸ்ரீ தாட்சாயணி கல்யாணம், ஸ்ரீ உமா கல்யாணம், ஸ்ரீ கௌரி கல்யாணம், ஸ்ரீ பார்வதி கல்யாணம், ஸ்ரீ மீனாக்ஷி கல்யாணம், ஸ்ரீ லலிதா கல்யாணம், ஸ்ரீ தேவஸேனா கல்யாணம், ஸ்ரீ வல்லி கல்யாணம், ஸ்ரீ அருந்ததி கல்யாணம், ஸ்ரீ லோபா முத்ரா கல்யாணம், ஸ்ரீ சாந்தா கல்யாணம், ஸ்ரீ அஹல்யா கல்யாணம், ஸ்ரீ ஸாவித்ரி கல்யாணம், ஸ்ரீ காவேரி கல்யாணம், ஸ்ரீ ஸ்வாஹா தேவி கல்யாணம், ஸ்ரீ திரௌபதி கல்யாணம், ஸ்ரீ சுகன்யா கல்யாணம், ஸ்ரீ காமரதி கல்யாணம், ஸ்ரீ கங்கா கல்யாணம், ஸ்ரீ உஷா கல்யாணம், ஸ்ரீ லக்ஷ்மி கல்யாணம், ஸ்ரீ துளஸி கல்யாணம், ஸ்ரீ ஸீதா கல்யாணம், ஸ்ரீ பத்மாவதி கல்யாணம், ஸ்ரீ கோதா கல்யாணம், ஸ்ரீ ருக்மிணி கல்யாணம், ஸ்ரீ ஸத்யபாமா ஜாம்பவதி கல்யாணம், ஸ்ரீ ராதா கல்யாணம் — என்ற பல்வேறு கல்யாணங்கள் இந்நூலில் அடங்கி யிருக்கின்றன.

பல நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்ட ஸம்ஸ்கிருத சுலோகங்கள் மட்டுமே இதில் இடம் பெற்றுள்ளன. இது ஆஸ்திக பக்தர்களுக்கு ஒரு நல்ல பாக்கியமாகும். இன்னும் பல கல்யாணங்கள் கொண்ட தொகுப்பு வெளி வர விருக்கிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். மறு பதிப்பு வெளியிடும் பொழுது மற்றக் கல்யாணங்களைத் தமிழ் உரையுடனும் வெளியிட்டால் யாவருக்கும் பெரிய உபகாரமாக இருக்கும். இம்மாதிரி கல்யாணங்களைப் பாராயணம் செய்வதால் நிச்சயம் உலகுக்கே மங்களம் உண்டாகும்.

கிடைக்குமிடம்: கல்பகலக்ஷ்மி, நெ. 1 பி, டாக்டர் ரங்காச்சாரி ரோட், மயிலாப்பூர், சென்னை-4. விலை ரூபாய் ஆறு.

உபன்யாச சக்கரவர்த்தி
சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதர்

மரகதக் கல்

வைரத்தைப் போல் ஏழு வர்ணங்களையும் சிந்தாது மரகதக் கல். பசும் வண்ணமொன்றையே அது தீர்க்கமாகக் காட்டிவிடும். 'மரகதக் கல்' சிறுகதைத் தொகுப்பைப் படித்து முடித்ததும் இதே போலப் பசுமையான, இதமான, ஒரு சாயல்தான் உள்ளத்தில் தோய்கிறது. பலப் பலவான சுவைகளை ருசிக்கும் உணர்வு ஏற்படவில்லை. அப்படியானால் இந்நூலில் நவரசங்களும் இல்லை என்று பொருளல்ல. விஜயரங்கச் சொக்கநாதரின் கோபமானாலும், ராணி மீனாக்ஷிதேவியின் சோகமானாலும், வக்ரபாதத்திடம் கஜேந்திரன் புத்தகம் இரவல் வாங்கிக் கொண்டதால் ஏற்பட்ட ஹாஸ்ய விளைவுகளானாலும், வண்டிக்கார வடிவேலுவுக்கு வண்டிக் குதிரையிடம் உள்ள கருணையானாலும், புரொபசர் சாமிநாதனுக்கும் அம்புஜத்துக்குமிடையே நிலவிய பிரேமையானாலும் — இந்த ரசங்களை விட அவற்றை ஆசிரியர் பரிமாறும் பான்மை யொன்றே எடுப்பாக முன் நிற்கிறது. எளிமை என்பதே நூல் ஆசிரியரின் அந்த மனப்பான்மை. ''மணி அவர்கள் இந்தக் கதைகளிலே எளிய மன இயல்புகளை, எளிய முறையிலே எளிய

உத்திகளின் மூலம் சித்திரிக்கிறார்'' என்று இத் தொகுப்பின் முகவுரையில் ஸ்ரீ மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் கூறியிருப்பதே இதற்குப் பொருத்தமான விமரிசனம். சிக்கல் இல்லாத தெளிவான நடை இந்த எளிமைக்கு எழில் கூட்டுகிறது.

ஆசிரியர்: பி. எஸ். மணி; வெளியீடு: எஸ். ஆர். சுப்பிரமணிய பிள்ளை, பிரசுரகர்த்தர், திருநெல்வேலி; விலை ரூ. 2.00.

சத்தியாக்கிரகம் - உதயமும் வரலாறும்

உலகத்துக்கு மகாத்மா அளித்த உயர்வான தத்துவம் சத்தியாக்கிரகம். இந்தத் தத்துவத்தைத் தாம் கண்டு பிடிக்கவில்லை என்பதை அடிகளுக்கே உரிய அடக்கத்துடன் ஒப்புக் கொண்டிருக்கிறார். ஆனால் அந்தத் தத்துவத்தை உலகப் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கும், மனித கண்யத்தைக் காப்பதற்கும், அரசியல் விடுதலை பெறுவதற்கும் வெற்றிகரமாகப் பயன்படுத்தியது தான் காந்திஜியின் தனிப் பெருமை.

இந்தத் தத்துவம் உதயமானது, அது நாளாவட்டத்தில் வளர்ச்சியடைந்தது, பல போராட்டங்களை அதன் அடிப்படையில் நடத்தி வெற்றி கண்டது. இந்த உயர்வான சாதனத்தை மேற்கொள்பவருக்கு இருக்க வேண்டிய தகுதி, அரசியல் போராட்ட காலங்களில் இதை எதிர்த்தவர்களுக்கு மகாத்மா அளித்த பதில்; சுருங்கக் கூறின் சத்யாக்கிரகத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டியவை யாவும் 'மகாத்மா காந்தி நூல்கள்' 8-வது தொகுப்பில் இடம் பெற்றுள்ளன.

மேலும் காந்தியடிகளின் கட்டுரைகள் பேட்டிகள், சொற்பொழிவுகள் மட்டுமல்ல, சத்தியாக்கிரக சம்பந்தமாகக் காந்தியடிகளைப்பற்றிப் பிறர் எழுதியவைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்தக் கொள்கை எப்படி உதயமாயிற்று என்பதை முதல் கட்டுரை விளக்குகிறது. அடிகளின் ஆப்த நண்பர் திரு போலாக் இது பற்றி அவரைக் கேட்டதற்குக் காந்திஜி பதிலளித்ததைக் கவனிக்கலாம்.

''நான் குழந்தையாக இருந்தபோது பள்ளிக்கூடத்தில் கற்ற குஜராத்திப் பாடல்களில் ஒன்று என் மனத்திலேயே எப்பொழுதும் இருந்து வந்தது. அதன்கருத்து வருமாறு:

'தாகத்துக்கு நீர் கொடுத்தவருக்கு நீ திரும்பி நீர் கொடுத்து விடுவதில் பெரிது எதுவுமில்லை. ஆனால், தீமை செய்தவருக்கு நன்மை செய்வதிலேயே உண்மைப் பெருமை உண்டு.'

''குழந்தையாக இருந்த காலத்திலேயே இப்பாட்டு என் மனத்தில் அதிக மாறுதல் உண்டாக்கியது. நடைமுறையில் அதன்படி நடக்க முயன்று வந்தேன். பிறகு ஏசுவின் மாலை உபதேசங்கள் என் கவனத்துக்கு வந்தன.''

பிறகு டால்ஸ்டாய், ரஸ்கின், தோரோ முதலியோரின் போதனைகளும் தம்மை ஆட்கொண்டதெனக் கூறிவிட்டு, ''குஜராத்திப் பாடலிலும், ஏசுவின் மாலை உபதேசத்திலும் இருக்கும் கருத்து, வாழ்க்கை முடிவதையுமே அடியோடு மாற்றி விட வேண்டும் என்பதே என் ஆர்வம்'' என முடிக்கிறார். (பக்கம் 23 – 24)

இந்தியாவில் சத்தியாக்கிரக இயக்கம் தொடங்கிய பின் அது பற்றிப் பிரசாரம் செய்வதற்காக நாடெங்கும் அடிகள் சுற்றி வருகையில் 1927-ம் ஆண்டு செப்டம்பரில் தந்தையின் ஜனன ஸ்தலமாகிய சிதம்பரம் சென்றார். அங்கே நிகழ்த்திய சொற்பொழிவில் நந்தனார் தம்மை ஆட்கொண்டது பற்றி அடிகள் கூறியது தமிழர்களின் கவனத்துக்குரியது.

தென் ஆப்பிரிக்காவிலும், பின்னர் இந்தியாவிலும் நடந்த பலவேறு சத்தியாக்கிரகப் போராட்டங்களைப் பற்றிய விவரம் மிகவும் உபயோகமானது. பின் சேர்க்கைப் பகுதியில் மகாத்மாவின் பல கடிதங்கள் தவிர பாபு ராஜேந்திர பிரஸாத் எழுதிய ஒத்துழையாமை இயக்க வரலாறு இடம் பெற்றிருப்பது வாசகர்களுக்கு மிகுந்த பயனை அளிக்கும்.

கட்டுரைகளில் வரும் பெயர்கள், சம்பவங்கள்பற்றி ஆங்காங்கு கொடுக்கப்பட்டிருக்கும் அடிக் குறிப்புகள் மிகுந்த உபயோகமாயிருக்கும். ஆசிரியர்கள் சரளமான ஆனால் நல்ல தமிழ் நடையில் மகாத்மாஜியின் கருத்துக்களை வாசகர்கள் எளிதில் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் மொழி பெயர்த்திருக்கின்றனர்.

259-ம் பக்கத்தில் உள்ள அடிக் குறிப்பில் அமிருசரஸ் காங்கிரஸ் 1920 டிசம்பரில் நடந்ததாகக் கூறியிருப்பது தவறு. மேற்படி காங்கிரஸ் 1919-ல் நடைபெற்றது.

இந்தக் தொகுப்புகள் மூலம் ஆசிரியர்கள் தமிழகத்துக்குச் சிறந்த பணி புரிந்திருக்கின்றனர் என்பதில் ஐயமில்லை. — ரா. கா.

[மகாத்மா காந்தி நூல்கள் — 8. தமிழாக்கம்: ஆசிரியர் ஸ்ரீ ரா. வேங்கடராஜுலு, துணை ஆசிரியர் ஸ்ரீ ஜெயமணி சுப்பிரமணியம்;

பிரசுரம்: காந்தி நூல் வெளியீட்டுக் கழகம், சென்னை — 2. விலை ரூ. 7.50.

யாரோ ஒருவருக்கு

நண்பர் சொன்ன கதை சுவாரசியமாகவே இருந்தது:

ஒரு சமயம் முனிவர்கள் நிறைந்த ஆரண்யமொன்றுக்கு மகா விஷ்ணு விஜயம் செய்தாராம். முனிவர்கள் எல்லாம் மரியாதையுடனும், பயபக்தியுடனும், பரமாத்மாவை வரவேற்று உபசரித்து அவர் பொன்மொழிகளைக் கேட்கத் தயாராக நின்றார்களாம். முதல் வரிசையில் சீனியர் ரிஷிகளெல்லாம் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களுக்குப் பின்னால் ஜூனியர் ரிஷிகள் அப்புறம் 'சப் ஜூனியர்' ரிஷிகள்.– இந்த மாதிரி வரிசைக் கிரமமாக, தபோபலத்தைப் பொறுத்து நின்று கொண்டிருந்தார்கள்.

கடைசி வரிசையில் நின்று கொண்டிருந்த மூஷிகமுகர் என்ற ஒரு குட்டி ரிஷிக்கு, பரமாத்மாவின் வார்த்தை தன் காதில் தெளிவாக விழுமோ விழாதோ என்ற அச்சம் எழுந்தது. மகாவிஷ்ணு சங்கு சக்கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தாரே தவிர மைக்கைப் பிடித்துக்கொண்டிருக்கவில்லையே!

முன்னே போக வேண்டும் என்ற ஆசையில், மூஷிகமுகர் முன் வரிசைகளின் ஊடே அங்கும் இங்கும் கிடைத்த இடைவெளிகளில் முண்டியடித்துப் புகுந்து முன் வரிசையை எட்டிவிட்டார். ஆனால் அவர் ஆசையை அவர் துரதிருஷ்டம் முந்தி விட்டது. முதல் வரிசையில் நின்று கொண்டிருந்த துர்வாச ரிஷியின் முதுகில் போய் முட்டிக் கொண்டு விட்டார்.

அவ்வளவுதான்! திரும்பிப் பார்த்த துர்வாசரின் முகம் தக்காளிப் பழமாகச் சிவந்து விட்டது. முதுகு வலி ஒரு காரணம். ஒரு குட்டி ரிஷி தன் அந்தஸ்தை மறந்து முன் வரிசையில் இடம் பிடிக்க முயன்றது இரண்டாவது காரணம். ''ஹே! மூஷிகமுகா. நீ உன் அந்தஸ்தை மறந்து முதியோருக்கு அபசாரம் செய்து விட்டாய்! பிடி சாபம்! கலியுகத்தில் நீ இதே பரத கண்டத்தில் ஆட்டோரிக்ஷா ஓட்டியாகப் பிறப்பாய்! நீயும் உனக்குப் பின் தோன்றும் உன் வர்க்கமும் எந்தச் சந்தர்ப்பத்திலும் முன்னால் செல்லும் வாகனங்களை முந்திக் குறுக்கும் நெடுக்கும் புகுந்து உங்கள் வாகனங்களை ஓட்டுவீர்கள். உங்கள் வாகனங்கள் எழுப்பும் சத்தம் மக்களை மிரளச் செய்வதாக இருக்கும்!'' என்றார். தம் சாபத்தைக் கேட்ட பின்னரும், மூஷிகமுகர் தம்மிடம் மன்னிப்புக் கேட்காமல் முன்னேறவே துர்வாசருக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டு வந்தது. ''ஹே! மூஷிகமுகா! நீ செய்த அபசாரத்துக்கு மன்னிப்புக் கேட்கக் கூட உனக்குத் தோன்றவில்லையல்லவா? பிடி இன்னொரு உபரி சாபம்! உன் வாகனத்தில் சவாரி செய்து விட்டு இறங்குபவர்களிடமெல்லாம் நீ அதிகச் சில்லறை கேட்டுத் தொங்கி நிற்பாய்'' என்று சொல்லி நகர்ந்தார்.

மூஷிகமுகர் அதற்கும் அஞ்சவில்லை! மௌனமாகவே இருந்தார். இப்படித் தன் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைகள் இருக்கும் இடத்தில் இருப்பதைக் காட்டிலும், துணிந்து முன்னேற இடம் கிடைக்கும் பரத கண்டத்துச் சென்னைமா நகரில் ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவதே மேல் என்று நினைத்து விட்டாரோ என்னவோ?

நண்பர் சொன்ன கதை இவ்வளவுதான். அவர் சில நிமிடங்களுக்கு முன்னால்தான் ஆட்டோ ரிக்ஷாவில் வந்து இறங்கினார். எழுபத்தி ஐந்து நயா பைசாக்களுக்குப் பதிலாக ஒரு ரூபாயை அந்த வாகன ஓட்டியிடம் கொடுத்ததையும்பார்த்தேன். அவன் மீதி சில்லறை இல்லை என்று சாதித்ததைக் கண்டேன். நண்



பரின் தலை, சட்டை, பாண்ட் எல்லாம் கலைந்திருந்ததிலிருந்து அவர் வந்த வேகத்தையும் ஊகித்துக் கொண்டேன்.

நம் நகர வாழ்க்கையில் பிரயாண வசதி வரிசையில் மூன்றாவது இடம் பெறுகிறது இந்த ஆட்டோ ரிக்ஷா! முதல் தாம்பூலத்தைச் சர்க்கார் பஸ்ஸும், இரண்டாவது மரியாதையை டாக்ஸியும் பெறுகின்றன.

நகரத்தில் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்குச் சற்றுச் சௌகரியமாக, வசதியாகப் போக ஆட்டோ ரிக்ஷா நல்ல சாதனம் என்று தோன்றினாலும், கூடவே அதை உபயோகிக்க நினைப்போர் உள்ளங்களிலே பீதியும் தோன்றி விடுகிறதே! ஆட்டோ ரிக்ஷா ஓட்டிகளுக்கு ஏனோ ஒருவகை அசுர வேகத்தில் அதிக ஆசை ஏற்பட்டு விடுகிறது. வில்லிலிருந்து விடுபட்ட அம்பு போல் ரஸ்தாக்களில் பறப்பதில் ஓர் ஆனந்தம். ஏரோப்ளேன் பைலட்டுகளாகப் போக முடியவில்லையே என்ற ஏக்கத்தைப் போக்கிக் கொள்ள முயற்சி செய்வது போல் தரையில் பறந்து பார்க்கிறார்களா என்று கூடப் பிரமை ஏற்படுகிறது. 'பிரேக்' சாதனத்தை வீட்டில் கழற்றிப் போட்டு விட்டு அந்த இடத்திலும் ஏதாவது உபரி 'ஆக்ஸிலேட்'டரை மாட்டிக் கொண்டு வந்திருக்கிறார்களோ என்ற அச்சமும் ஏற்படுகிறது.

நாம் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் ஆட்டோ ரிக்ஷாவுக்கு முன்னால் ஒரு கடோத்கச டிரான்ஸ்போர்ட் பஸ் முதுகைக் காட்டி ஓடிக் கொண்டிருக்கும். எதிர்த்தாற் போல் சில கஜ தூரத்தில் நம் ஆட்டோ ரிக்ஷாவை நோக்கி ஒரு பீமசேன பஸ்ஸும் அதற்குப் பின்னால் ஏதாவது டாக்ஸியோ, சொந்தக் காரோ வந்து கொண்டிருக்கும். இந்தக் கட்டத்தில்தான் நமது ஆட்டோ ஓட்டிக்கு உற்சாகமும் குஷியும் பிறக்கும். முன்னே போகும் பஸ்ஸைத் தாண்டிப் போக வலது பக்கமாக வண்டியை ஒடிப்பார். வேகத்தை அதிகமாக்கி முன்னே போகும் பஸ்ஸைத் தாண்டும் வேளையில், கச்சிதமாகச் சொல்லி வைத்தாற் போல் எதிரேயிருந்து வரும் பஸ்ஸும் நம்மை வலது பக்கத்தில் தாண்டும். அந்தக் கணத்தில் நம் இதயத் துடிப்பின் வேகத்திலிருந்து ஏதாவது ஜெனரேட்டர்கள் வைத்து மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடுமானால் எத்தனையோ மில்லியன் கிலோவாட் சக்தியை உற்பத்தி செய்து விடலாம்.

இந்தக் குறுக்கே புகும் படலம் தாண்டியவுடன் நாமே நம்மைக் கிள்ளிப் பார்த்துக் கொள்வோம். மானிடர்களாகவே இருக்கிறோமா? இல்லை, அமரர்களாகி வானுலகம் நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோமா என்ற பிரமையில்.

ஆட்டோ ஓட்டிகளைச் சவாரிக்காக நாம் அணுகும்போது அவர்கள், பஸ் கண்டக்டர்களை விட டாக்ஸி ஓட்டிகளை விட நம்முடன் அனுதாபத்துடனேயே நடந்து கொள்கிறார்கள். தட்டிக் கழிக்காமல் பத்துக்கு ஒன்பது சந்தர்ப்பங்களில் நம்மை ஏற்றிக் கொள்கிறார்கள். நேரம், தூரம், பேரம் வியவகாரங்கள் குறுக்கிடாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.

பல சந்தர்ப்பங்களில், அவர்களுடைய இயந்திர ஒலியே அவர்கள் வரும்படிக்குப் பாதகமாகவும் இருக்கிறது. ''ஆட்டோ! ஆட்டோ!'' என்று ஆறு கட்டை ஏழு கட்டை ஸ்ருதியில் நடை பாதையில் இருந்து கத்தினாலும், ஆட்டோ ஓட்டிகளின் செவிகளில் விழுவதில்லை. அசைப்பில் அவர்கள் பார்வை நம் கை ஆட்டலில் விழுந்தால் தான் நிற்பார்கள்.

இந்த ஆட்டோ வித்வான்களிடம் மத்திம கால சஞ்சாரமே கிடையாது. எடுத்த எடுப்பிலேயே துரித காலம் தான். மேல் ஸ்தாயி பஞ்சமம்தான்! நம் ஐம்புலன்களுக்கும் ஆட்டம்தான்!

பத்து ஆட்டோ ரிக்ஷா ஓட்டிகளில் ஆறு பேர் வாய் திறக்காமல் பணி செய்கிறவர்களாக விளங்குகிறார்கள். தினசரிப் பிழைப்பில் தங்களுக்கு இருக்கும் போட்டியை உணர்ந்து கடமையில் ஈடுபடுகிறார்கள் .மெச்ச வேண்டிய விஷயம். மீதி நான்கு பேர்கள் வேறு ரகம். இறங்கும் கட்டத்தில் கொஞ்சம் பேரம் பண்ணுவதில் அவர்களுக்கு ஆனந்தம்.

எண்பது பைசா கட்டணத்தை மீட்டர் காண்பித்தால், நூறு பைசாவையும் கவீகரிப்பதில் ஆசை காட்டுவார்கள். அனுபவ ஆசாமிகள், சிரமத்தைப் பாராமல் எண்பது பைசாவை எண்ணி வைத்தால் ''என்ன சார்! கூட நாலணா கொடுங்க சார்!'' என்பார்கள். சில சமயங்களில் அவர்கள் குரல் அவர்களுக்குச் சாதகமாக இருக்கும். பத்துப் பைசாவாவது கூடக் கொடுக்கத் தோன்றும். சில சமயங்களில் ஆட்டோ ரிக்ஷா நம்பரை மனத்தில் பதித்துக்கொண்டு, வரும் காலத்தில் அதைத் தவிர்க்கும் எண்ணம் தோன்றும்! தூர்வாசரின் உபரி சாபத்தின் பலனோ என்னவோ!

யாரோ எழுதியது

உப்புப் பெறாத விஷயம்!

"கோன்"



குடும்பத் தலைவரின் குறிப்பு :

சமையல் பகுதி உதவியாளருக்கு : இன்று பகல் சாப்பாட்டின்போது ரசத்தில் நூறு சத விகிதம் உப்பு கூடியிருந்தது என் நாவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தக் கவனக் குறைவான செயலுக்கு இன்னும் இரண்டு மணி நேர அவகாசத்துக்குள் விளக்கம் கோரப்படுகிறது. இத்தகைய கவனக் குறைவான காரியங்கள் சமீபத்தில் சமையல் பகுதியில் அதிகமாயிருக்கின்றன. விளக்கம் நம்பிக்கை அளிப்பதாக இல்லாவிடில் 'குடும்ப மானுயூல் வால்யூம்' இரண்டு 'குக்கிங்' சாப்டர் ரூல் பதினேந்தின்படி தண்டனை அளிக்கப்படும்.

சமையல் பகுதி உதவியாளர் சங்கரி அம்மாளின் உபகுறிப்பு :

அடியே சாந்தா! உங்க அப்பா எழுதியிருப்பதைப் பார்! ரசம் கொதிக்க ஆரம்பித்தபோது நான் உன்னிடம் சொல்லி விட்டுத்தானே எதிர்வீட்டு அம்மாவின் புதுப் புடவையைப் பார்க்கப் போனேன்? உப்பை இரண்டு தடவை போட்டுத் தொலைத்து விட்டாயா? நான் ரசம் போட்டுக் கொள்ளாததால் எனக்குத் தெரியவில்லை. உண்மையைச் சொல்லித் தொலை. உங்க அப்பாவிடம் பல்லைக் காட்டிக் கெஞ்சிப் பார்க்கிறேன்.



சாந்தாவின் பதில் :

அடி அம்மா! உப்புப் போடும் பொறுப்பை நீ என்னிடம் ஒப்படைத்தது என்னவோ உண்மை. ஆனால் இன்று ரசத்துக்கு நான் உப்பே போடவில்லை. ஆகையால் ரசத்தில் இரட்டை உப்பு என்ற குற்றச்சாட்டுக்கு இடமேயில்லை. ஆகையால் செய்யாத தவற்றுக்கு விளக்கமும் தேவையில்லை.

சமையல்பகுதி உதவியாளர் சங்கரி அம்மாளின் மறுகுறிப்பு:

சாந்தா! நீ உப்புப் போடவில்லை என்பதே பெரிய தவறு. உன் விளக்கம் என்னை மாட்டி வைத்துவிடும் போலிருக்கிறது. உன் அப்பாவின் நாக்கு சாப்பாட்டு விஷயங்களில் 'அதாரிட்டி'. ஆகையால் நீ உப்புப் போட்டது உண்மை. வழக்கமான கரண்டி காணமற் போய்ச் சற்றுப் பெரிதான கரண்டியை எடுத்து உப்பு ஜாடியில் போட்டு விட்டேன் என்ற விளக்கத்தைக் கொடுக்கிறாயா? நான் அதை ஆமோதித்து விடுகிறேன்.



சாந்தாவின் இரண்டாவது பதில் :

அம்மா! நான் பொய் விளக்கம் கொடுக்கத் தயாரில்லை. நான் உப்பு போடவில்லை என்றால் போடவில்லைதான்! ஏதோ நினைவாகக் கோலப் பொடி ஜாடியில் கையை விட்டு அள்ளிப் போட்டு விட்டேன்.


சமையல் பகுதி உதவியாளர் சங்கரியம்மாளின் விளக்கம்:

குற்றச் சாட்டைப் பார்த்தேன். குற்றச்சாட்டின் காரணத்துக்கு ஆதாரமில்லை! நடக்காத செயலுக்குத் தண்டனை விதிப்பதாகத் தாங்கள் கொடுத்திருக்கும் 'மெமோ' சட்ட ரீதியாகச் செல்லாது. ரசத்தில் போடப்பட்டது கோலப் பொடி; உப்பு அல்ல.

குடும்பத் தலைவரின் உத்தரவு :

குற்றச்சாட்டு வாபஸ் வாங்கப்பட்டது. பி. கு. உப்பை விடக் கோலப் பொடி மலிவா என்று விசாரிக்கவும்.

'தரத்தின் சின்னம்'
இதைப் பாருங்கள்



உங்களுடைய கூடுதலான பாதுகாப்பிற்கு உத்திரவாதம்


புதிய டயர்கள் வாங்க வேண்டும்போது பயர்ஸ்டோனைத் தேர்ந்தெடுங்கள்
உங்கள் பணத்திற்கு இந்தச் சிறந்த மதிப்புகளைப் பெறுங்கள்

- **கூடுதலான பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மை**
  இன்னமும் பிரத்தியேகமான, வழுக்குவதைத் தடுக்கக்கூடிய டிரெட் அமைப்பு - உங்கள் தேவைக்கும் கூடுதலான, வலுவான, பாதுகாப்பிற்காக முறுக்கப்பட்ட பசை தோய்க்கப்பட்ட 'கார்டு பாடி'
- **நீடித்த உழைப்பு மற்றும் சிக்கனம்**
  ஒவ்வொரு ரூபாய் டயர் செலவுக்கும் கூடுதலான கிலோ மீட்டர்கள் ஓட்டம். இந்திய உழைப்புச் சூழ்நிலைக்கென பிரத்தியேகக் கலவை செய்த டிரெட் ரப்பர்

Firestone
பயர்ஸ்டோன்



நியூ டிலக்ஸ் சாம்பியன் கார் டயர்கள்
இன்று சிறந்தவை — நாளை மேலும் சிறந்தவை


குடும்பம் முழுவதற்கும் ஏற்றது...
கால்கேட் ஆல்-பர்ப்பஸ் டால்கம் பவுடரில்
அபூர்வமான மலர்களின் மனோரம்மிய
பரிமளம் கலந்திருக்கிறது
சிக்கனமானதுடன்
பெயர் பெற்ற
கால்கேட்டின் உயர்ந்த
தரத்துடன் கூடியது
ஸ்நானத்திற்கு பின்,
உடைகளை அணிவதற்கு
முன்பும், வெளியில்
செல்லும்பொழுதும்
புத்துணர்ச்சியளிக்கும்
இச்சிறந்த பவுடரை
உங்கள் உடம்பின்மேல்
தூவிக்கொள்ளுங்கள்...
மென்மையுடன்
நேர்த்தியும்
கொண்டது...
குழந்தையின்
இளம் சருமத்திற்கு
மிகவும் ஏற்றது.
COLGATE
All-Purpose
TALCUM POWDER
கால்கேட்
ஆல்-பர்ப்பஸ் டால்க்


பண்டிட்
டி.கோபாலாச்சார்லுவின்
அருணா
ஸ்திரீகள் ஆரோக்ய
சௌபாக்யத்திற்கு
ஆயுர்வேதாஸ்ரமம்
பிரைவேட் லிட்.
சென்னை - 17

தீர்த்த யாத்திரை

பி.வி.ஆர்

வைகுண்டம் தீர்மானித்து விட்டார். முப்பது வருஷ உத்தியோக வாழ்க்கையில் அவர் செய்யாததை, செய்ய நினைக்காததைச் செய்ய முடிவு செய்து விட்டார். அந்த முடிவுக்கு அவர் வராதபோனாலும் அவருடைய தீர்த்த யாத்திரை அபிலாஷை எப்படி நிறைவேறும்?

சித்திரை பிறக்க இன்னும் ஆறு மாதங்கள் தான். அதற்குள் பணத்தைத் தயார் செய்தாக வேண்டும்! பிராவிடண்டு பண்டில் கடன் கழுத்துக்கு மேலே போயாகி விட்டது. மார்வாடியிடம் மனைவியின் இரண்டு வடச் சங்கிலியை அடகு வைத்து வருஷங்கள் இரண்டாகின்றன. வட்டியைக் கொடுக்கக்கூட இதுவரையில் இயலவில்லை. சென்ற மாதம் தான் தீபாவளிக்குக் காரியாலயத்தில் கடன் கொடுத்தார்கள். மாதச் சம்பளம் தவணைகளை விழுங்கிக் கைக்கு வந்த போது, எதைக் கொடுத்து எதை நிறுத்தி வைப்பது என்ற பிரச்னையே அவரைக் கலங்க வைத்தது. இந்த நிலையில் தீர்த்த யாத்திரைக்கு என்ன செய்வது?

மனைவியிடம் தம் ஆசையைப் பிரஸ்தாபித்த போது அவள் வழக்கம் போல் எரிந்து விழுந்தாள். ''நம்ம வீட்டுப் பூஜை அறையில் இல்லாத பெருமாள் நீங்க நினைக்கிற ஊர்களிலேயும் இல்லே... அப்படியிருந்தாலும் அதுகள் கண் சங்கிலியைப் பார்த்ததும் இறக்கப் போவதில்லே'' என்று எடுத்த எடுப்பிலேயே முட்டுக் கட்டை போட்டாள். சென்ற வருஷம் பட்டணத்தில் இருநூறு ரூபாய் சம்பளத்தில் வேலைக்கு அமர்ந்த மகனுக்கு எழுதிப் பார்த்தார். திருமலாச்சாரி கெட்டிக்காரப் பையன். இல்லை என்று ஒரு வார்த்தை கூட எழுதவில்லை. பட்டணத்தின் விலைவாசிகளையெல்லாம் எழுதி விட்டு, யோக்கியமான முறையில் வாழும் ஓர் இளைஞனுக்கு ஆகும் செலவுகளையெல்லாம் கடிதத்தில் ஒப்பித்தான். வைகுண்டம் தம் மாப்பிள்ளைக்கு எழுதவில்லை. அந்த எண்ணமே அவரை வாட்டி எடுத்தது.

இந்தச் சமயத்தில் தான் சீதாபதி ஒரு நாள் அவருடன் காரியாலயத்தில் ஆறு மணிக்கு மேல் பேசிக் கொண்டிருந்தான். அவன் ஒரு கம்பெனியின் ஏஜண்டு. வைகுண்டத்தினால் எத்தனையோ காரியங்கள் அவனுக்கு நடக்க விருக்கின்றன. அவன் கம்பெனி செய்த செய்யாத வேலைகளுக்கெல்லாம் 'பில்'—போட்டுத் தொகையை எழுதும் வேலை வைகுண்டத்தினுடையது. அதை ஒட்டிய சில்லறை வேலைகள் வேறு. அவருக்கு முன்னால் அந்த வேலையில் இருந்த குமாஸ்தா நான்கு வருடங்களில் சம்பாதித்த பணம் இப்போது ஒரு மாடி வீடாகக் காட்சியளிக்கிறது.

''என்னங்க உங்களுக்குப் பிழைக்கத் தெரியல்லீங்க....!''

''வாஸ்தவம் ...... நீ சொல்ற நிலையிலே பிழைக்கத் தெரியவில்லே!''

''நான் சொல்றதைக் கேட்டீங்கன்னா, எனக்கும் ஏதோ கிடைக்கும். உங்களுக்கும்..'' என்று சீதாபதி இழுத்தான்.

அவருடைய மனத்தின் நாடி அலையைப் பிடிக்கும் கருவியை ஒருதரம் ஏறிட்டுப் பார்த்தார். உடல் வியர்த்தது. அவருடைய மௌனத்தைச் சீதாபதி சாதகமாகப் பிடித்துக் கொண்டு தொடர்ந்தான்.

''நான் சொல்றதைக் கேளுங்க. அதனாலே நமக்கு நஷ்டம் இல்லே. என் வார்த்தைப்படி நடந்தால்....''

சீதாபதி தன் யோசனையை வெகு அந்தரங்கமாக வெளியிட்டு விட்டு, சிரித்துக் கொண்டே, ''இப்படித்தான் வேலாயுதம் செய்தார். வீடு கட்டினார். யார் என்ன செய்து விட்டார்கள்? கிருகப்பிரவேசத்துக்குக் கூடப் பெரிய மனுஷங்க எல்லாம் போகவில்லையா?'' என்று கொக்கி போட்டான்.

''நமக்கு நஷ்டம் இல்லே. சரி, எங்க கம்பெனிக்கு?''

''ஒரு ஆளை ஏமாற்றுவது பாபம். சாஸ்திரமே சொல்கிறது. கம்பெனி என்பது அப்படியா? பெரிய சமுத்திரத்திலிருந்து ஒரு செம்பு நீர் எடுத்தால் குறைகிறதா? கொட்டினால் கூடுகிறதா?''

மனத்தில் பிறந்த பிரளயத்தின் குறிகள் வைகுண்டத்தின் முகத்தில் பிரதிபலித்தன. சீதாபதி சொன்ன வழியும் முறையும் அப்பழுக்கில்லாதவை. யாரும் கண்டுபிடிக்க முடியாதவை. காதும் காதும் வைத்தாற் போல் நடக்கும். ஊகிக்கலாம். கிடைத்த பணத்தை நாலு பேர் அறிய ஊதாரித்தனமாகச் செலவழித்தால். ஊகித்தாலும் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கத் துப்பு இல்லை.

என்ன செய்யலாம்? பெருமாள் விசுவரூபம் எடுத்து அவர் முன்னால் புன்னகை பூத்து நின்றார். நான் பத்திரிநாத்தில் இருக்கிறேன், பூரியில் இருக்கிறேன், பண்டரிபுரத்தில் இருக்கிறேன், மதுராவில் விளையாடுகிறேன் என்றெல்லாம் சொல்லி 'வா, வா' என்று அழைத்தார்.

அன்று இரவு விடிய விடிய வைகுண்டம் தமக்குள் போராடினார்! பாவம் — புண்ணியம் என்ற இரு துருவங்களுக்கிடையில் அவர் ஆயிரமாயிரம் தடவைகள் பிரயாணம் செய்து களைத்தார். கடைசியில் எது பாவம், எது புண்ணியம் என்றே விளங்காமல் போய் விட்டது. பாவத்தைச் செய்தால் புண்ணியத்தின் அருமையும் பெருமையும் தெரியும். அதைச் சம்பாதித்துக் கொள்ள மன உறுதியும் பிறக்கும் என்ற புது சித்தாந்தம் உண்டாயிற்று. வெள்ளித் தட்டில், வெற்றிலை பாக்கு பணத்துடன் சீதாபதி கை நீட்டிக் கொண்டு நின்றான், சிரித்த முகத்துடன். வைகுண்டத்தின் கைகள் தானாக முன்னேறின.

முப்பது வருஷ உத்தியோகத்தில் வைகுண்டத்துக்கு என்ன கிடைத்ததோ கிடைக்கவில்லையோ, ஒழுங்காக, கவனமாக, தப்பில்லாமல் வேலையைச் செய்கிறவர் என்ற பெயர் கிடைத்தது. அவர் ஒன்றை எழுதி மேலிடத்துக்கு அனுப்பினால், தலைமைக் குமாஸ்தா ஒரு மொட்டைக் கொக்கியைப் போட்டு, பைலைத் தூக்கி எறிவார், உதவி மானேஜருக்கான பெட்டியில். இருவருடைய கையெழுத்துக்களும் இருந்து விட்டால் போதும், உதவி மானேஜர் சிவப்பு மையில் ஒரு ரயில் தொடரைச் சிருஷ்டி செய்து திருப்பி அனுப்புவார்.


வைகுண்டம் ஒன்று மட்டும் உறுதியாகத் தீர்மானித்து விட்டார். சீதாபதியுடன் ஒப்பந்தம் அவர் தீர்த்த யாத்திரை ஆரம்பிக்கும் வரையில் தான். அதற்குப் பின் முகாலோபனம் கூட இருக்கக் கூடாது. பெருமாளைச் சேவிக்க வேணும் என்ற கட்டுக்கடங்காத ஆசை அவரை ஒரு பாப காரியத்தில் தள்ளி விட்டது. தீர்த்தங்களுக்கெல்லாம் மோட்சமளித்த பெருமாள் அவரைக் கைவிட மாட்டார். பத்ரிநாத்தில் கடைசியாக அவருடைய பாபங்கள் கரைந்து அவர் நீரிலிருந்து வெளி வரும் போது, புண்ணியத்தின் சாயை தேஜோமயமாக ஒளி வீசும்.

இந்த நம்பிக்கை அசையாமல் நின்றது.

தை பிறந்து முடிந்து. மாசியைத் தள்ளிக் கொண்டு பங்குனியும் பிறந்து விட்டது. அகில இந்திய யாத்திரைகளை நடத்தும் கம்பெனிகளின் விளம்பரங்களையெல்லாம் அவர் அலசினார். இதுவரையில் அவர் கேள்விப்பட்டிராத க்ஷேத்திரங்களின் பெயர்களையும் அந்த இடங்களின் விசேஷங்களையும் படித்தபோது உடல் புல்லரித்தது.

சீதாபதியை வாழ்த்திக் கொண்டே அவர் பணத்தைக் கட்டினார். ஒரு பெரிய மனிதருடைய ஆதரவில் செல்வதாக மனைவியிடம் பொய்யைச் சொன்னார். பாவங்கள் கரைகிற போது இந்த ஒரு பொய் மட்டும் கல் மாதிரி கரையாமலா இருக்கப் போகிறது?

பாரத பூமியின் தெற்கில் இருக்கும் வைகுண்டம் வடக்கு நோக்கித் தீர்த்த யாத்திரை தொடங்கினார். பல நதி தீரங்களில் ஸ்நானங்கள். கோவில்களில் தரிசனம். கிருஷ்ணா கோதாவரி நர்மதா தீரங்கள் அவரை மெய் மறக்கச் செய்தன.



தீர்த்த யாத்திரையின் போது வீடு வாசல் எல்லாம் ரயில் பெட்டியில் தான். ஒன்று ஓடிக் கொண்டிருக்கும்; இல்லாவிட்டால் ஏதாவது ஓர் ஊரில், ஸ்டேஷனில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும்.

ஒவ்வோர் இரவும் படுக்கையில் படுத்திருக்கும் போது சீதாபதியின் நினைவு வரும். அவன் இல்லாவிட்டால் அவருக்கு இந்த க்ஷேத்திராடனமே கிடையாது. அவன் யோக்கியனில்லை தான். தன் முதலாளியை வஞ்சித்துப் பணம் திரட்டுவதில் முனைகிறவன் தான். இருந்தாலும் என்ன. பெருமாள் அனுக்

சிரமத்தில் அவருக்கு உதவி அளிக்க என்றே அவன் முன் வந்தான்.

அவனும் அவரும் பாப காரியத்தைச் செய்ய முனைந்தார். ஆனால் அந்த ஒரு பாபத்தினால் மற்றப் பாபங்களை அவர் விலக்கு வாங்க வில்லை. ஆடம்பரமாகவும் அனாசாரித்தன மாகவும் செலவு செய்து பாவத்தில் ஊற வில்லை. ஒரு நல்ல காரியத்துக்காக, வாழ் நாளில் எத்தனையோ பேருக்குக் கிட்டாத க்ஷேத்திராடனத்துக்காக ஒரு பாபத்தைச் செய்தார். இதில் ஒருவிதத் தப்பும் இல்லை.

இந்த மாதிரியான எண்ணங்கள் தினம் தினம் தோன்றுகையில், கூடவே ஒரு கேள்வி யும் எழும். மாட்டைக் கொன்று செருப்புத் தானம் செய்யலாமா?

இந்தக் கேள்வியின் பதிலை அவரே தம்முள் சொல்லிக் கொள்ளும்போது பயத்தில் உடல் வியர்க்கும்.

மதுரையில் யமுனைநதி தீரத்தில் கண்ணன் ஆடின இடங்களையும், குழலூதிச் சென்ற புல் தரைகளையும் பார்த்துத் தொட்டு, வைகுண்டம் கண்களில் ஒற்றிக் கொண்டார். ஹரித்துவாரத்தில் பச்சிலைகளில் விளக்குக ளேற்றி, கங்கா மாதாவின் மடியில் விட்டு, பிரவாகத்தோடு அவை செல்லும் அழகில் மயங்கினார். முனிவர்களின் தனி இருப்பிட மான ரிஷிகேசம் அவரை ஆட்கொண்டது.

பத்ரிப் பிரயாணமும் தொடங்கியது.

அன்று காலையில் கையில் இருக்கும் பணத்தை எண்ணிப் பார்த்தார். ஏழு ரூபாய் முப்பது பைசா.

என்னதான் யாத்திரை நடத்தும் கம்பெனி இரண்டு வேளை சாப்பாடு போடு வோம் என்று மார்தட்டிக் கொண்டு விளம்பரப்படுத் திப் பணத்தை வாங்கிக் கொண்டாலும், எத்தனை நாட்களுக்கு அது தன் உண்மை நாணயத்தைக் காட்டாம லிருக்கும்? ஒரு நாள் சாயந்திரம் பால் கிடைக்கா விட்டால் மறு நாள் மோருக்குத் தவிர் இல்லை யென்ற காரணம் காட்டிச் சாப் பாடே இல்லை என்று அறிவித் தது. அதனால் அவர் களுக்கு ஏற்பட்ட கஷ்டங்களைச் சொல்லிமுடியாது. சாப்பாட்டு நேரத் தில் ரயில் ஓடிக் கொண்டிருந்தால் ஏதாவது ஒரு சாக்குச் சொல்லி, பக்தியில் மூழ்கிச் செல்லும் பிரயாணிகளை ரயில் நிலையங்களில் சாப்பிட்டுக் கொள்ளச் செய்தார்கள்.

இந்தச் செலவுகள் வைகுண்டம் எதிர் பாராதவை. இது தவிர, கோவில்களில் தெய்வங்களை அடகு வைத்து, அவைகளின் கோபாவேசங்களைச் சொல்லிப் பயமுறுத்தி, கோவில் சிப்பந்திகள் அவரிடமிருந்து பறித்த பணத்துக்குக் கணக்கில்லை. வயிறு எரிந்து கொண்டே கொடுத்தால், புண்ணியம் கிடைக்காது என்று வைகுண்டம் மனதாரக் கொடுப்பவரைப் போலத்தான் கொடுத்தார். கயாவிலும் காசியிலும் என்ன செலவு, அப் பப்பா! ஆக மொத்தத்தில், கைச்செலவுக்கு என்று வைத்திருந்த நூறு ரூபாயில் ஏழு ரூபாய் முப்பது பைசாதான் மிச்சம்! என்ன செய்வது? மனைவிக்கு எழுத முடியாது! 'பெரிய மனிதரின் ஆதரவில்தானே சென் றிருக்கிறீர்கள். அவரிடமிருந்தே பெற்றுக் கொள்ளுங்கள்!' என்று எழுதி விடுவாள். மகன்? அவனை நம்ப முடியாது. மாம்பூவில் காம்பு ஆய்கிறவன் அவன். ஐம்பது கேட்டால் பத்து அனுப்பி, 'திருப்பித் தந்து விடு' என்று எழுதுவான்.

கம்பெனிக்கு எழுதினால்...? ரூபா சம்ப ளத்தை வாங்கி வீட்டில் கொடுத்தாகி விட் டது! முன் பணமாக எப்படித் தருவார்கள்?


அவர் யாரிடம் கேட்பார்? யார் இருக் கிறார்கள் கொடுக்கப் பெருமாளைத் தவிர?

'சீதாபதி!' என்றது உட்குரல்.

ஆம் சீதாபதி இருக்கிறான்! ஆனால் அவர் அவனுக்கு இங்கிதமாக நடந்து கொண்டால் தான் பணம் தருவான்! இப்போது எதை வைத்துக் கொண்டு கேட்கிறது?

ஏன் பணம் வாங்கிக் கொண்டு 'இங்கித மாக' நடப்பதும் கிடையாதா? திரும்பி வந்த தும் செய்யக் கூடிய உதவிக்கு முன் பணமாக அனுப்பச் சொல்ல வேண்டியதுதான்.

அன்றே சீதாபதிக்குக் கடிதம் எழுதினார். காரியாலயத்தில் மட்டும் தத்தம் சுயநலங் களுக்காகத் தொடர்பு வைத்துக் கொண் டிருந்ததால் வீட்டு விலாசத்தைத் தெரிந்து கொள்ள வாய்ப்பே இருக்கவில்லை. அதனால் சீதாபதியின் கம்பெனி விலாசத்துக்கே எழு தினார். தாம் ரிஷிகேசத்திலிருந்து பத்ரிநாத் துக்கு அன்று புறப்படுவதாகவும், தந்தி மணி யார்டரில் ரிஷிகேசத்துக்கே நூறு ரூபாய் அனுப்பி வைக்க வேண்டும் என்றும் எழுதினார். கடிதத்தை 'அவசரத் தபாலில்' போட்ட பிறகு பெருமாளைத் தியானம் செய்தார் வைகுண்டம்.



திரும்பி ரிஷிகேசம் வந்த அன்று தந்தி மூலம் கேட்ட பணம் வந்தது. சீதாபதியை மனமார வாழ்த்திய வைகுண்டம், அவனுக்குச் சொர்க்க பதவி கிடைக்க வேண்டும் என்று வேண்டினார்.

ரிஷிகேசத்திலிருந்து இந்திரப் பிரஸ்தம்; அங்கிருந்து ஜெய்ப்பூர், பம்பாய், பண்டரி புரம், பஞ்சவடி என்று தொடர்ந்து திருப்பதியை அடைந்து ஏழுமலையானின் பாதார விந்தத்தில் விழுந்து விட்டு நேரே சென்னைக்கு வந்து சக பிரயாணிகளிடம் விடைபெற்றுக் கொண்டு ஊருக்கு வந்தார்.

இரண்டு மாதப் பிரயாணக் களைப்பை மத்தியானம் முழுதும் தூங்கிக் கழித்து விட்டு, மாலை ஆறு மணிக்கு மேல் சீதாபதியிருக்கும் கம்பெனிக்குச் சென்றார். அங்கு சீதாபதி இல்லை. ஆனால் வைகுண்டம் யார் என்பதை அறிந்த ஒரு சிப்பந்தி, "ஸார்! இனிமேல் அவரை நீங்கள் உங்கள் கம்பெனியில் எங்கள் கம்பெனி விஷயமாகப் பார்க்க முடியாது!" என்று கூறினான்.

"ஏன்?" என்று திடுக்கிட்ட வைகுண்டம் கேட்டு விட்டு, "பெரிய வேலை கிடைத்து விட்டதா?" என்று முடித்தார்.

"இல்லை......அவரை வெளியே அனுப்பி விட்டார்கள்!"

"ஏன்?" என்று வைகுண்டம் உள்ளுக்குள் நடுங்கினார்.

"ரொம்ப நாட்களாகக் கம்பெனியை மோசடி செய்து கொண்டிருக்கிறார் என்ற உண்மை தெரிஞ்சதுங்க. உடனே அனுப்பி விட்டார்கள்!"

"அடப் பாவமே!"

வைகுண்டம் திரும்பினார். 'தாம் சீதாபதிக்குச் சொர்க்க பதவி கிடைக்க வேண்டும் என்று பிரார்த்தித்த பிரார்த்தனையின் பலன், காரியாலயப் பதவி போனதுதானா?' மனமுடைந்துபோய் வீட்டுக்குத் திரும்பிய அவர் யாருடனும் பேசாமல் படுத்துக் கொண்டார்.

இரண்டு மாத 'லீவுக்கு'ப் பிறகு அவர் கம்பெனி வாசற்படியை மிதித்தபோது மனம் கசந்தது. என்றென்றும் ரிஷிகேசத்திலேயே வாழக் கொடுத்து வைக்கவில்லையே! இன்னும் எத்தனை நாட்கள் இப்படி ஏற வேண்டுமோ!

அவருடைய நண்பர்கள் யாரும் அவரைக் கண்டதும் ஓடோடி வந்து குசலம் விசாரிக்கவில்லை. என்னடா ஒருவன் பாரத பூமியைச் சுற்றி வந்திருக்கிறான், விசாரிப்போம் என்று ஒருவனுக்குக் கூடத் தோன்றவில்லையே?

பத்து மணிக்கு, மானேஜர் அறைக்குப் போனார் வைகுண்டம்.

"வைகுண்டமா!" என்று சிரித்து விட்டு "உட்காருங்கள்" என்றார். "க்ஷேத்திராடனமெல்லாம் எப்படி?"

"ரொம்ப நன்றாக இருந்தது!"

"நான் கூடப் போக வேண்டும் என்று நாலைந்து வருஷங்களாகப் பார்க்கிறேன். பண வசதி இல்லை. ரொம்பச் செலவாயிற்றோ?"

"ஐந்நூறுக்கு மேலே கொஞ்சம்!"

"புண்ணியத்தின் விலை ரொம்ப அதிகம் தான்! இல்லையா!" என்று சொல்லி விட்டு மணியை அடித்தார்.

"அவரை வரச் சொல்!" என்று வந்த பியூனிடம் சொன்னார்.

உட்கார்ந்திருந்த வைகுண்டம் ஏதோ விபரீதம் நடக்கப் போகிறது என்பதை உணர்ந்தார். 'அவர் யார்? சீதாபதி வேலையை இழக்கும்போது அவரையும் இழுத்து விட்டுப் போய் விட்டானா? பாவி!'

சில நிமிஷங்களில் சீதாபதி வேலை செய்யும் கம்பெனியின் மானேஜர் உள்ளே வந்தார்.

"இவர்தான் ஸார், சீதாபதியின் 'பார்ட்னர்!'" என்றார் வைகுண்டத்தின் மானேஜர்.

"நேத்து சாயங்காலம் கூட சீதாபதியைத் தேடிக் கொண்டு வந்தாராம்" என்றார் அவர். பிறகு "தந்தி மணியார்டர் வந்ததா?" என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

நரை கவிழ்ந்த வைகுண்டத்தின் கண்களிலிருந்து பொலபொலவென்று நீர் பெருக்கெடுத்தோடியது.

கடைசியில், "முப்பது வருஷங்களாக யோக்கியமாக, கௌரவமாக, நாணயமாக உழைத்தேன்,—ஸார்....சேர்த்து வைக்க நான் யாரையும் வஞ்சிக்கவில்லை. நானும் க்ஷேத்திரங்களைப் பார்க்கவேணும் என்ற ஒரே அபிலாஷை என் கண்ணை மூடியது. நான் செய்த தப்புக்கு என்னை வெளியே அனுப்பி விடுவார்கள். ஒரு தடவை அவமானப்பட்டால் தான் கௌரவத்தின் அருமை எனக்கு நன்றாகத் தெரியும்!"

வைகுண்டத்தின் நாக் குளறியது.

இரு மானேஜர்களும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

"ரொம்ப நன்றி, மிஸ்டர் கருணாகரன். சீதாபதியின் கடிதத்தைத் தவறுதலாக உங்க பியூன் உடைத்து உங்களுக்குக் காட்டியிரா விட்டால் இவ்வளவெல்லாம் நமக்குத் தெரிந்திருக்காது!" என்று அவரை அனுப்பிவிட்டு, வைகுண்டத்தின் மானேஜர், "வைகுண்டம்! போய் வேலையை ஆரம்பியுங்கள். பத்துப் பத்து ரூபாயாகப் பிடித்துக் கொள்ளலாம் இந்த நூறு ரூபாயை!"

எழுந்து நின்ற வைகுண்டம் கதறிவிட்டார்.

"என்ன? என்னையா மீண்டும் வேலை செய்யச் சொல்லுகிறீர்கள்? மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்திருக்கிறேன்!"

மானேஜர் சிரித்தார். பிறகு, "முப்பது வருஷங்கள் நாணயமாக இருந்தவர் திடீரென்று இப்படி மாற வேண்டுமானால் என்ன காரணம் இருக்க முடியும் என்று நீர யோசனை செய்தேன், கருணாகரன் நீங்கள் எழுதிய கடிதத்தைக் கொண்டு வந்தபோது! அதில் கடைசி வரிகள் எனக்கு விடையைத் தந்தன. 'எனக்கு உப்பிட்டவர்களை வஞ்சிக்கிறோம் என்பதை நினைக்கும்போது குலை நடுங்குகிறது. ஆனால் நல்ல காலம் வரும்போது உழைக்காமல் கிடைத்த பணத்தைத் திருப்பிக் கம்பெனிக்கே கொடுத்து விடுவேன்! இல்லா விட்டால் இந்தத் தீர்த்த யாத்திரையினால் எனக்கு ஏது புண்ணியம்! மாட்டைக் கொன்று செருப்புத் தானம் செய்கிறவனுடைய கதிதான்!' இந்த வரிகளில் நீங்கள் உங்களுடைய உண்மை மனிதனை எனக்குக் காட்டி விட்டீர்கள்!"

வைகுண்டத்துக்கு என்ன செய்வது, என்ன பேசுவது என்றே தெரியவில்லை. நூற்றுக்கணக்கான கோவில்களில் பெருமானைத் தேடினாரே? அவர் அங்கேயெல்லாமா இருக்கிறார்?

"ஸார், நீங்கள்தான் நான் வணங்கும் பெருமான்!" என்று நாத்தழு தழுக்கக் கூறிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார்.

நீண்ட ரஸ்தாவில் கடும் வெய்யலில் செல்லும்பொழுது விரல்களில் சுட்ட புண் ஏற்பட்டுவிட்டால்

கவலைப்படாதீர்கள்—பர்னாலை தடவுங்கள். அது உடனே நிவாரண மளித்து, புண்ணை சீக்கிரத்தில் ஆற்றுகிறது. வெட்டுக்காயங்கள், சுட்ட புண்கள், பூச்சி கடிகள் மற்றும் சிராய்ப்பு போன்றவைகளுக்கு நிவாரணமளிக்கக்கூடிய ஒரு ஆன்டிஸெப்டிக் மருந்து பர்னால். எதிர்பாராத விபத்துகளுக்கு ஒரு பர்னால் ட்யூப்பை உங்கள் கை வசம் வைத்திருங்கள்—உங்களுக்கு உபயோகப்படும்



பர்னால்

சிறந்த ஆன்டிஸெப்டிக் ஆயின்ட்மெண்ட் — 20 வருஷங்களுக்கு மேலாக பெயர் பெற்றது.

டிரக்ஸ் மற்றும் கெமிக்கல்ஸ் தயாரிப்பாளர்களான பூட்ஸ் கம்பெனியாரின் ஓர் சிறந்த தயாரிப்பு.

Boots



இனாம் நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பர்னால் ட்யூப்புடனும் ஒரு அழகான புட்-ரூல் கிடைக்கும்.

NATIONAL BB-261

பிரபல பல்வைத்திய நிபுணர்கள் நிரூபித்துள்ளனர்

கால்கேட் குளோரோபில்



ஈறுகளை பலப் படுத்து கிறது

வாய் நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது! "ஆல் மோஸ்கோப்" பரிசோதனையில், கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட், வேறெந்த சாதாரண பற்பசையைவிட மிகத்தீவிரமாக வாய் நாற்றத்தை ஒழிக்கிறது என்பது நிரூபணமாயுள்ளது.


சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது! கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால், பற்களை சொத்தையாக்கும் கிருமிகள் அழிகின்றன.

கால்கேட்டின் பிரத்தியேகமான சேர்க்கை முறையைக் கொண்ட குளோரோபிலின் பூரண பலனை அடையுங்கள்.... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் அல்லது கால்கேட் குளோரோபில் டூத் பவுடர் வாங்குங்கள்!

கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்டை தினமும் தேய்ப்பதால், தீவிரமான குளோரோபிலின் பூரண தன்மையை அடைந்து, ஈறுகள் உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க ஏதுவாகிறது. உன்னதமான இந்த குளோரோபில் டூத் பேஸ்ட், சிறந்த பற்பசை, பற்பொடி முதலியவை தயாரிப்பதில் மிக்க அனுபவம்கொண்ட உலகிலே மிகப்பெரிய ஸ்தாபனத்தால் தயாரிக்கப்படுகிறது!

வேறு எந்த பற்பசையிலும்
இதைவிட அதிக வீரிய குளோரோபில்
இல்லை — குழந்தைகள் அதன்
பெப்பர்மின்ட் வாசனையை மிகவும்
விரும்புகிறார்கள்!





பெரிய எக்கானமி
சைஸ் லாபகரமானது!

CTPA-G-10 TAM.

லட்சியம்

ஆர். சூடாமணி

"நாற்றைம்பது ரூபாய். எண்ணி எடுத்துக்குங்க."

எண்ண வேண்டிய அவசியமே இல்லைதான். ஆயினும் எண்ணாததால் சுப்பையாவிடம் அவன் காட்டக் கூடிய நம்பிக்கையை விட எண்ணுவதன் மூலம் அவருக்குத் தம்மிடமே உள்ள நம்பிக்கையைக் கௌரவிப்பது இன்னும் பொருத்தமாய்த் தோன்றியது. அவர் வடிவம் எழுப்பும் உணர்வே என்றும் அப்படித்தான். கண்ணன் பணத்தை எண்ணினான். எண்ணுவது மிகச் சுலபமாகும் படி எல்லாம் பத்து ரூபாய் நோட்டுக்களாக இருந்தன. சில்லறையாய்க் கொடுக்கும் வழக்கம் சுப்பையாவிடம் என்றுமே கிடையாது. 'நான் என் பணியைத்தான் இயற்றுகிறேன். அதற்கு உன் இரக்கம் தேவையில்லை' என்பதுபோல் உள்ள அவரது பெரிய தோரணையின் முன் அதை மதிப்பதைத் தவிர வேறு வழியில்லை.

பெஞ்சின் மீது அமர்ந்து கையிலிருந்த கடிதக் கற்றையைப் பக்கத்தில் வைத்து விட்டுத் தலையைச் சற்றுத் தாழ்த்தி இரு கைகளாலும் தலைப்பாகையைக் கழற்றினார் சுப்பையா.

"ஸ்! என்ன வெய்யில்!"

விச்ராந்தியாய் அவர் உட்கார்ந்ததும் கண்ணனுக்கும் நிம்மதியாயிற்று.

"இன்னும் நிறையச் சுற்றணுமே பாவம் உங்களுக்கு!"

"ஆமாம்! என்ன செய்யறது சொல்லுங்க. இன்னிக்கு மணியார்டரும், ரிஜிஸ்டரும் கொஞ்சம் அதிகம். ஒவ்வொரு வீட்டிலேயும் நின்னு கையெழுத்து வாங்கிப் போறதிலே ரொம்ப லேட்டாயிடுத்து. வெய்யில் வேறே ஏறிப் போச்சு."

"கொஞ்சம் மோர்த் தண்ணி கொண்டு வரேன். குடியுங்களேன் நாயுடு."

"ம்... மோர்த் தண்ணியா? சரி சார்! கொஞ்சம் வேண்டுமானால் கொடுங்கள்."

கண்ணன் உள்ளே சென்று மோர் வாங்கி வந்தான். சுப்பையா நாயுடு பெஞ்சி மேல் அப்படியே உட்கார்ந்திருந்தார். கண்கள் பாதி மூடியிருந்தன. உடலில் தன்னைத்தானே தாலாட்டிக் கொள்வது போன்ற முன்னும் பின்னுமான இலேசான ஆட்டம். நெற்றிச் சுருக்கங்களோடு மங்கி இழைந்திருந்த நாமம். நரை மயிர்களிடைத் தடாகம்போல் மின்னிய வழுக்கையிலிருந்து வழிந்த வியர்வை நீர், நீண்டு வளைந்திருந்த மூக்குத் தண்டின் இரு ஓரங்களில் தயங்கிப் பளபளத்தது.

பார்த்தவுடன் மதிப்பை எழுப்பும் தன்மை வறுமைக்கும் உழைப்புக்கும் அப்பால் நின்று அவை தீண்ட முடியாத வானொளி போலும். இன்னதென்று சொல்ல முடியாத அந்தத் தன்மையில் அவருக்கு ஒரு பீடம் அவன் மனத்தில் உருவாகியிருந்தது.

"இந்தாங்க."

சுப்பையா கண்களைத் திறந்தார். மோரை அவர் கையில் வைத்தபோது நைவேத்தியம் செய்வது போல் அவனுக்கு இருந்தது. எப்போதாவது ஒரு சமயம் களைப்பு மீறும்போது, அவர் அவனிடமிருந்து ஒரு தம்ளர் மோரை வாங்கிப் பருகுவார். அது நட்பின் உரிமையாய் அவனுக்குத் தோன்றியது. வீட்டுக்கு வரும் விருந்தாளிக்குக் காட்டும் மரியாதைச் செயல். கை நீட்டிச் சில்லறை வாங்காத அவர் பெருந்தன்மை அங்கீகரிக்கும் சமத்துவம்.



"ரொம்ப நன்றி ஸார். அப்...பாடா!" அனுபவித்து மோரைக் குடித்தார் அவர்.

"கொஞ்சம் இளைப்பாகத் தெரியறீங்களே, நாயுடு!"

"நம்மை விட்டுத் தள்ளுங்க சார். ஏதோ காலம் போகுது. நாலேக்குக் கல்லே முடிஞ்ச பிறகு பின்னேங்க தெருவில் கடலே வைக்காட்டி அதுவே போதும்."

நோயாளி மனைவியும் ஐந்து குழந்தைகளும் விருப்பு வெறுப்பற்ற சொந்த இயந்திரப் போராட்டமும் அங்கங்களாய் விளங்கும் நீடிய வறுமையை அலட்சியமாய் ஏற்றுக் கொண்ட வெறும் தூசாளைப்படுத்தான் அந்த வார்த்தைகள். கண்ணன் அவர் எதிரே ஒரு நாற்காலியில் உட்கார்ந்தான். பேசவே தயக்கம். அவரே சிரித்து ஒதுக்கிய வறுமை நிலைவைத்தான் ஒரு விஷயமாய்ப் பேசித் தொடுவதற்கு அவனை மதிக்கும் இதயம் கூசியது.

"அது சரி நாயுடு! ஆளையும் உடம்பையும் கவனிக்கணுங்க!"

"உடம்பு உடம்புன்னு பார்த்தால் உடம்பே நம்மைச் சாப்பிட்டு விடும் சார். நாமதான் எதுனாலென்னு அதுக்குக் காட்ட வேணுமா?"

பேச்சோடு பேச்சு இறைந்தபோது அவர் முன் அவன் தலை பணிந்தது. குனிந்த பார்வையில் அவர் பாதங்கள் படிந்தன. ஸார் அறுந்த செருப்புக்கள் ஆணிகள் தூசிந்து நின்றன. குதிகால் பக்கம் வலது செருப்பின் அடித்தோல் பிய்ந்து பக்க வார் 'ஹ' தொங்கியது.

"போகாமல் நீங்களும் அந்த ஆறுமுகம் போலிட்டேன் மாதிரி சைக்கிள் உடனேயாகப் படுத்துங்கலேன்!"

"ஆறுமுகம் சின்னப் பையன். எனக்கோ சைக்கிள்னே போதும் கலே கத்துது ஸார். என்ன செய்யறது?"

உள்ளே இன்னொரு செருப்பு ஜோடி இருந்ததே. அநேகமாய் அவருக்கு அளவு சரியாயிருக்கும். சொல்லலாமா?

"நாயுடு..."

"நான் போகணும் ஸார். இன்னும் ரெண்டு தெரு பாக்கி யிருக்கு. மோருக்கு மிகவும் நன்றி!"

அவர் எழுந்து விட்டார்.

கண்ணனின் பையில் ரூபாய் நோட்டுக்கள் கனத்தன. சிற்றப்பனின் வீட்டில் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான் அவன். ஊரிலிருந்து மாதாமாதம் அவன் செலவுகளுக்கு அப்பா நூற்றைம்பது ரூபாய் அனுப்பி விடுவார். ஒவ்வொரு மாதமும் கப்பையா தான் மணியார்டர் பணத்தைக்கொண்டு தருவார். அவர் தரும் சில்லறையில்லாத பத்து ரூபாய் நோட்டுக்கள் அவர்களிடையே ஒரு தூரத்தை அமைத்து அவரது நட்பு நிறைந்த புன்னகையை ஒரு மதிப்புச் சின்னமாய் எழுப்பும்.

"தம்ளரை அந்தப் பக்கமாய் வச்சிடலாமா நாயுடு?"

"ஓஹோ. மன்னிக்கணும் இந்தாங்க."

குனிந்து தம்ளரை எடுத்து அவன் கையில் வைத்தார் கப்பையா.

பையில் முன்பே இருந்த ஒற்றை ரூபாய் நோட்டு ஒன்றை மின்னல் வேகத்தில் எடுத்துக் கையில் வைத்திருந்த கண்ணன் அவர் கையிலிருந்த தம்ளரைப் பெற்றுக் கொண்டு சட்டென்று உள்ளே திரும்பினான்.

"ஸார், ஸார்! மிஸ்டர் கண்ணன்!"

கப்பையா கூவினார். தம் கையிலே பட்டு எப்படி ஒரு ரூபாய் நோட்டு ஒன்று கீழே விழுந்ததென்று அவருக்குக் குழப்பமாயிருந்தது.

"என்ன?"

"நோட்டைப் போட்டுட்டீங்களே. இந்தாங்க." அவர் குனிந்து எடுத்தார்.

தெரிந்து கொடுத்தால்தான் வாங்கிக் கொள்ளத் தயக்கம். ஆகவே கைக்குறிப்பில் விடுத்து மறைந்தால் பேச்சற்ற நிலையில் அந்தக் கொடைக்கு ஓர் உருவம் இருக்காது என்று அவன் எண்ணம். இத்தனை நாட்கள் துணியாமல் இன்று இதைக் கொடுக்க உந்திய நூதன வேகம். இதையெல்லாம் வெளிப்படையாகக் கூற முடியவில்லை. தடைப்பட்ட நடையில் சங்கடம் ததும்பியது.

"ஓ. நோட்டா? பரவாயில்லை. அதுதான் இவ்விக்கும் பெரிய தொகையே வந்திருக்கே. நீங்கதான் எடுத்துப் போங்க நாயுடு! குழந்தைகளுக்கு ஏதாவதும் வாங்கிக் கொடுங்க."

"ஸார், விடுங்க."

அவன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். முன்னே நீட்டிய கையில் ரூபாய் நோட்டு சிறு பொருளாய் நிலையின்றித் துடித்த துடிப்பு. கண்களில் தீவிர ஆழம். உதடுகள் பிரியாமலேயே இடையிலிருந்து வெளிப்பட்ட சொல் வடிவத்தின் அமைதியான மறுப்பு. அறுந்த செருப்பிடைப் புண்ணாகியிருந்த பாதங்களிலிருந்து வழுக்கைத் தலையின் நடாக உச்சிவரை நிமிர்ந்து நிறைந்த சுயமரியாதை. இவைகளும் அவ்விரண்டு சொற்களும் சேர்ந்து உருவாக்கிய கம்பீரமான கண்டனத்தின் முன் அவன் குறுகி விட்டான். குற்றவாளியாகக் கை நீட்டி நோட்டைப் பெற்றுக் கொண்டான்.

கப்பையாவின் உடலில் சிறு அசைவு தோன்றியது. புன்னகையுடன், "எனக்கும் கூடச் சம்பளம் வந்துடுத்து ஸார். இப்போ தேவை ஒண்ணும் இல்லே" என்றார். அவனைச் சமாதானப்படுத்துபவர் போல.

கண்ணன் பேசாமல் நின்றான். அவன் குற்றவாளி மட்டுமல்ல, மன்னிக்கப்பட்ட குற்றவாளி. அதன் நாணம் உடலெங்கும் பாய்ந்து சிறுத்தது.

கப்பையா சென்று விட்டார். செருப்புக் கிழப் பற்றிய பேச்சை எடுக்கக் கண்ணனுக்குத் துணிவே வரவில்லை. இனிமேல் என்றும் வராது.

அறுபட்ட அவமானத்துடன் கூடவே அடுத்த கையின் கம்பீரத்தால் உள்ளம் பூரித்தது.

வழக்கம்போலத் தினம் தபால்கள் வரும். சைக்கிளில் வந்து போகும் ஆறுமுகம் வெறும் தபால்காரன்தான். ஆனால் கப்பையா அவனிடம் கடிதங்களைக் கொடுக்கும்போது அவர் ஸ்தானமே வேறு. கொடுக்கும் அந்த வெளிச் செய்கைக்கு 'நான் வாங்குவதில்லை' என்று உட்பொருள் என்பதாகக் கண்ணனின் கற்பனை ஓடும். எப்போதாவது தாகசாந்திக்குத் தரும் அந்த நீர் மோரில் என்றும் கையேந்திய உணர்வே நிலைத்தது.

அவரது தேய்ந்த செருப்புக்களில் அவன் பார்வை சில சமயம் ஏக்கமுடன் தாவும். அவன் எண்ணத்தை அறிந்து கொண்டவர் போல் அவர் ஒருநாள் "அடுத்த மாசம் சம்பளம் வந்ததும் முதல் வேலையாகப் புதுச்

செருப்புத்தான் வாங்கிக்கப் போறேன். இது ரொம்பக் கிழிஞ்சு போயிருக்குது. ஸார்!'' என்று கூறினார்.

உள்ளேயிருந்த அவனது காலணிகள், அந்த நிமிஷம் அவன் இதயத்தைச் சுற்றி அழுத்திக் கொண்டன. ஆனால் சுப்பையாவின் கருக்கேறிய முகத்தில் ஒளிர்ந்த ஏதோ ஒன்று அவனை மௌனியாக்கி வைத்தது. எத்தனையோ முறைகள் உதடுகள் அசைந்தன. ஆனால் 'தருகிறேன்' என்ற சொல்லை ஏந்த முடியாத ஓர் அதிகாரம் அவர் வடிவத்திலிருந்து அவனைப் பார்த்துச் சிரித்தது. மேல் நிலை, கீழ் நிலை என்ற எல்லாப் பாகுபாடுகளையும் கடந்த ஒரு மனித அதிகாரம் அது. மனிதனாய்ப் பிறந்ததாலேயே ஒவ்வொருவனும் உரிமை கொண்டாடத் தக்க ஒரு சொத்து. அந்தச் சொத்தை அவன் எப்படி அபகரிப்பது? அவ்வுரிமையைப் பறிக்க அவன் யார்?



''உங்க கால் ரொம்பப் புண்ணாயிருக்கிறதே? நாயுடு! செருப்பு அறுந்தும் இழை இழையாப் பிஞ்சு போச்சு.''

''ஆமாம், ஸார்!''

அதற்கு மேல் வார்த்தையில்லை. இருவரிடமும்தான். கண்ணன் தினமாய் அவரைப் பார்ப்பான். ஏதோ ஒரு தவிப்பில் வெற்றிக்கும் தோல்விக்குமிடையே சோதனை நடப்பதாகப் பிரமை. அவர் ஏதும் சொல்லாமல் கடமையைச் செய்து விட்டுப் போய்விடுவார்.

இப்படியே ஒரு வாரம் கடந்தது. அன்று தபால் கொண்டு வந்தவரின் பாதங்களில் புதிய செருப்புக்கள் காணப்பட்டன. கண்ணன் மௌனமாய்ப் பார்த்தான்.

''ஒரே ஒரு கார்ட். வேறே கடிதங்கள் இல்லே.''

''சரி.''

அவ்வளவுதான் சம்பாஷணை. ஒரு புன்னகையோடு அவர் போய் விட்டார். கண்ணனுக்கு உள்ளம் நிறைந்தது. சோதனைக்கு வெற்றியில் முடிவு! சுப்பையாவின் வெற்றியிலே தானும் ஏதோ ஒரு விதமாய் உயர்ந்து விட்டதாகத்தான் தோன்றியது.

'தருகிறேன்' என்று அவரை அவமானம் செய்யவில்லை அவன். அந்தக் கண்டனப் பார்வையை அவர் கண்களில் கொண்டு வரவில்லை.

நாட்களினூடே பக்தி வளர்ந்தது.

''என்ன, நாயுடு, கையிலே கடுதாசிக் கட்டு பருமனாயிருக்குதே!''

''ஆமாம், ஸார், ஸீஸனுக்கு வெளியூர் போயிருந்த நாலைஞ்சு வீடுகளில் ஊருக்குத் திரும்பி விட்டாங்க.''

''அப்போ வேலை அதிகம்னு சொல்லுங்க....''

''ஆ, விட்டுத் தள்ளுங்க ஸார். இதோ உங்களுக்கு மணியார்டர். நூற்றைம்பது ரூபாய் எண்ணி எடுத்துக்குங்க.''

சில்லறையில்லாத பத்து ரூபாய் நோட்டுக்களை அவன் ஒவ்வொன்றாய் எண்ணி வாங்கிக்கொண்டு இருமை நீட்டாமல் அவரைக் கௌரவித்தான்.

''களைப்பாயிருக்கிங்களே, கொஞ்சம் உட்கார்ந்து இளைப்பாறலாமே!''

''வேணும் ஸார். நேரமில்லே.''


கம்பீரமான நடை தொலைவில் மங்கியது. கால்களின் அந்தக் கம்பீரத்தில் அக்கால்களைச் சுற்றிய வேட்டியிலிருந்த கிழிசல்கள் மறைந்துவிட்டன. அந்தக் கிழிசல்களின் உணர்வு கூடத் தன் நெஞ்சில் படுவது அவருக்குத் துரோகமாகும் என்றுதான் கண்ணனால் எண்ண முடிந்தது.

''என்னப்பா, புது ஆள் போலிருக்கே?''

''ஆமாம், ஸார்! இந்தாங்க கடிதாசுங்க. ஒரு மணியார்டர் கூட இருக்குது.''

பதினொன்று பத்து ரூபாய் நோட்டுக்கள், ஐந்து ரூபாய் ஒன்று. ஒரு ரூபா





"ஐயோவ், மேஸ்திரி! கீழே கிணறு கட்டும்படியாக ஆர்டர் வந்திருக்கு. நீ பாட்டுக்கு மேலே புகைக் கூண்டு கட்டிண்டு போறே?"

"அப்படியா? என்ன குடி முழுகிப்போச்சு இப்போ? அப்படியே இதைப் பூமியிலே அழுத்தி விட்டால் போச்சு"

யாய் நான்கு. ஒரு ரூபாய்க்குக் கலகலக்கும் நாணயங்கள்.

கண்ணன் பணத்தை அள்ளிப் பையில் திணித்துக் கொண்டான். ஒரு நாணயம் கை மாறியது. கூடவே அசட்டுச் சிரிப்பின் கும்பிடு. அவன் கவனம் இதிலெங்கும் இல்லை.

"ஆமாம், நாயுடு வரவில்லையா?"

"இல்லை. ஒரு வாரம் லீவு போட்டிருக்காரு.."

"ஏன்? உடம்பு சரியில்லையா?"

முதலில் தோன்றியது இந்தச் சந்தேகம்தான். ஊரெங்கும் ஒரு கொடிய ஜுரம் பரவியிருந்தது. அவனுடைய சிற்றப்பன் கூட நோய்வாய்ப்பட்டுச் சமீபத்தில்தான் தேறியிருந்தார்.

"அவர் உடம்புக்கு ஒண்ணுமில்லை. அவர் பெஞ்சாதிக்குத்தான் இரண்டு வாரங்களாய் ஒரே காய்ச்சல். ரொம்பக் கவலைக்கிடமா இருக்குது."

"அட, பாவமே! அவங்க வீடு எங்கே?"

தபால்காரனின் புருவங்கள் உயர்ந்தன. கண்ணன் அக்கறை கொள்ளவில்லை. "எங்கே வீடு நாயுடுவுக்கு?"

ஏதோ ஒரு சந்து அது. மனம் உந்தவில்லையானும் கால்களுக்குத் தெரியக் கூடிய சந்து அல்ல

அங்கு அவன் விரைந்தான்.

வெய்யிலின் கசகசப்பில் குழந்தைகளின் ஓயாத பேச்சொலிகள். கவலையில் ஒலித்தவை சில. என்னவென்றே புரியாமல் சத்தத்தை விழாவாக அனுபவிக்கும் பச்சைப் பருவத்தில் சில ஜீவன்கள். கண்ணன் தொலைவிலிருந்தே பார்த்தான்.

வழுக்கைத் தலை கண்ணீர் வடிக்க, முகம் குவிந்து ஒடுங்கி நின்றிருந்தார் கப்பையா. முகத்தில் தெளிந்த வேதனைப் பின்னல்களுக்குப் பெயர் சொல்வது எளிதாயில்லை. கண்ணனும் பார்த்து, உள்ளத்தில் எழும் எதிரொலியின் பயங்கரத்தில் தடுமாறும் ஓர் உணர்ச்சி நிலை அது. கண்ணன் எச்சில் விழுங்கிக் கொண்டான். பரிதாபமும் ஒடுக்கமும் துயருடன் சேர்ந்து உருவாக்கும் நலிவின் நிலையில் அவரைப் பார்க்கக் கண்கள் நாணின. மலர்ந்த புன்னகையும் நிமிர்ந்த பார்வையுமான அவரது பிறப்புச் சொத்துக்களின் நித் தனிமையில் அவரைப் பார்ப்பது மனிதத் தன்மைக்கே இழைக்கும் அநீதி போல் தோன்றியது.

"என்ன கப்பையா, ஒண்ணும் கவலைப் படாதே. இப்போ டாக்டர் சொல்லியிருக்கிற ஊசி வாங்கிப் போட்டால் அவளுக்கு நல்லாயிடும்" என்று உரிமையோடு யாரோ கப்பையாவின் தோளைத் தட்டினார். யாராவதொரு உறவுக்காரராயிருக்கலாம்.

தம்முன் புதைந்து போன கண்களைக் கப்பையா நிமிர்த்தியபோது கண்ணனின் இதயத்தில் அடி விழுந்தது. மனிதக் கண்களில் அகரத் துயரம் என்றும் தெய்வீகத்தின் பொருள்தான் என்ன?

"நான் எப்படி மாமா ஊசி வாங்குவேன்.? முப்பது ரூபாயாமில்லே அது?"

"ஒனக்குத்தான் சம்பளம் வந்திருக்குமே, கப்பையா? இப்போ மாசம் மொதல்தானே?"

"வீட்டுக்கும் மருந்துக்குமாய்ப் பாதியும் போச்சு.கடன் கொடுத்தவங்க வேறே வாங்கிட்டாங்க."

"கடனு? கப்பையாவுக்கா? கண்ணனால் நம்ப முடியவில்லை. வீட்டில் படையெடுத்துள்ள பிணியின் கைங்கரியம் போதும்! எப்படியாவது போகட்டும். அவர் யாரிடமாவது கடன் வாங்கியிருக்கலாம். அதைப்பற்றி அவனுக்கு அக்கறையில்லை. அவனைப் பொறுத்த வரையில் அவர் முழு ரூபாய் நோட்டுக்கள் தரும் தன்மானமுள்ள தொழிலாளிதான். அவன் பயத்துடன் கொடுத்த ரூபாயைப் பெருமையுடன் மறுத்த பெரிய மனிதர்தான். அவரிடம் அவன் ஏதோ லட்சியத்தை உருவகப்படுத்தியிருந்தான்.

தன் சட்டைப் பையில் கையை வைத்துப் பார்த்துக் கொண்டபோது அந்த லட்சியம் அழியப்போகிறதென்று அவனுக்குத் தெரிந்து போயிற்று.

இது மனிதனின் கடமை. வேறு வழி? கப்பையாவின் ஏழைமை படிந்த முகத்தில் கம்பீரத்துடன் தலை நிமிர்ந்திருந்த மனித அதிகாரத்தைச் சிதைப்பது இப்போது மனிதக் கடமையாகி விட்டது.

"அப்படியா கப்பையா? அட கடவுளே! எங்கிட்டகூட இப்ப பணம் இல்லையேப்பா!"

அந்த வட்டாரத்திலேயே திடீரென்று முப்பது ரூபாயை எடுத்துக் கொடுக்கும் சக்தி யாரிடம் இருக்கப் போகிறது? அந்த நெஞ்சங்களில் நட்புத்தான் இருக்கும். கண்ணீர் வடிக்கும் கருணைதான் இருக்கும். அவர்கள் சொத்து அத்தனை சிறியதோ அல்லது அத்தனை பெரியதோ - எப்படியிருந்தாலும் அது அத்தனைதான்.

"நான் பணத்துக்கு இனிமேல் எங்கே போவேன் மாமா? அவ....அவ.... என்னை விட்டுட்டு...."

கண்ணன் சட்டென்று பார்வையை விலக்கிக் கொண்டான். தான் ஈடேற்றிய வடிவத்தின் கண்ணீரைக் காண்பது துரோகம்

என்ற நினைப்பு மேலோங்கியது. துரோகம் அந்த வைத்தியருக்கா அல்லது தனக்கேதானா என்பது கூடத் தெளிவாயில்லை.

''இந்தா கப்பையா, இதோ பாரு. இப்படி அழுவாதே....தெய்வம் இருக்குது. நம்மைக் கைவிடாது...உனக்கு ஒரு கெடுதலும் வராது......''

குரலே அரவணைத்தது. அந்த 'மாமா'வின் கரங்களும் நிச்சயம் அவரை அணைத்துக் கொண்டுதானிருக்கும்.

''புது வனி....புது வனி....''

புது வனியின் பெயரைச்சொல்லிச் சொல்லி விசிலொலி வெடித்துக் கொண்டிருந்தது. கண்ணன் திரும்பிப் பாராமல் வந்துவிட்டான்.

படுத்துக் கொண்டிருப்பவளைச் சாகவிடுவதா? அது சாத்தியமில்லை. அந்த லட்சியம் தான் சாக வேண்டும். எந்த மருந்தும் பொருந்தும்தன்மைதான் மடியப் பார்த்திருக்க வேண்டும் அவன்.

அந்த மருந்தைச் சிற்றப்பாவுக்காக வைத்தியர் எழுதித் தந்தது ஞாபகமிருந்தது. 'பிரிஸ்கிரிப்ஷன்' இன்னும் வீட்டில் இருந்ததால் அதை வாங்கிக் கொள்ளக் கப்பையாவிடம் அவன் போக வேண்டிய அவசியமிருக்கவில்லை. அந்த வேதனை மிச்சமான வரை நிம்மதிதான்.

வீடு சென்று பிரிஸ்கிரிப்ஷனை எடுத்துக் கொண்டு மருந்துக் கடையை நோக்கிச் செல்லும் போது அவன் நெஞ்சில் ஏதோ ஓர் உயர்வுக்குச் சமாதி கட்டி விட்ட முடிவு உணர்ச்சிதான் மேலோங்கியிருந்தது.

உயர்வு முடிகின்றதா? ஆமாம். அவர் கை தாழும்போது உயர்வு முடிந்துதான் விடும். கைநீட்டாத மதிப்பின் லட்சியச் சின்னமாய் அவர் இருந்த இருப்பை அவரு கடைசியில் இப்படித் துண்டிக்க நேரிடும்? பையில் இருந்த பணத்தில் மூன்று பத்து ரூபாய் நோட்டுக்கள் கோடாலியாய் வருத்தின.

'பார்மஸி' வந்து விட்டது.

முப்பது ரூபாய் மருந்துப் பெட்டியாய் மாறியது.

திரும்பி நடந்தான். ஒவ்வோர் அடியும் இதயத்தில் கனத்தது. நேரம் நீண்டு கொண்டிருந்த போதிலும் அதற்கு ஓர் அர்த்தமில்லை.

''ஸார் பிடியுங்க!'' நெஞ்சு அதிர்ந்தது நினைவில். அந்த ரூபாய் நோட்டு அவருடைய திரஸ்காரத்தால் அற்பப் பொருளாகி அவன் கைக்கே திரும்பிய தினம். அந்தக் கையை அவன் இதயம் அஞ்சலி செய்ததே!

அப்படி யாரையாவது, எதையாவது,— அஞ்சலி செய்ய வேண்டிய அவசியம் ஒவ்வொரு மானிட உள்ளத்துக்கும் இருந்ததோ? ஏழு ரூபாய் நோட்டுக்களைச் சில்லறையின்றி அவர் தந்த செயலில் அவன் ஆராதனை உருக்கொண்டது. ஆராதிக்கும் தெய்வம் விழுந்தால் பக்தனும் விழுந்துவிட வேண்டியதுதானே? கம்பீரம் பொருந்திய அந்த முகம் தாழ்ந்து, அந்தக் கை அவன் கைக்குக் கீழ் நீளும்போது அவனுக்குக் கூசி விடும். அவன் தாங்க மாட்டான். அவனுள்ளேயே ஏதோ ஒரு சின்னம் அழிந்து போகும். அந்த அழிவுக்காகத்தானோ இந்தத் துயரம்? தன் வீழ்ச்சியை நினைத்துத்தானோ அவன் உள்ளத்தில் இந்த வேதனை?


அவர் மனைவிக்கு ஏன் நோய் வரவேண்டும்? அவருடைய பணம் ஏன் பெருமையைச் சிறுமையாக்க நேர வேண்டும்?

மருந்தை எடுத்து மௌனமாய் அவர் பக்கம் வைத்து விட்டு அவர் முகத்தைப் பாராமலே திரும்பி விட வேண்டியதுதான்.

அதோ, அதே இடம், அதே வீடு...வீடு ஏன் நிசப்தமாயிருக்கிறது? ஒரு வேளை உடம்பு அதிகமாய்ப் போய்....? இல்லை, அப்படியிருக்காது. இருக்க வேண்டாம்... உணர்ச்சிகளிடையே அவன் பார்த்துக் கொண்டே போகையில் நின்றபோது எதிரே குழந்தை தென்பட்டது. கப்பையாவின் குழந்தைகளில் ஒன்றுதான். முதலில் வந்த போது பார்த்திருந்த அடையாளம் தெரிந்தது. நல்லவேளை! அருகில் யாரும் இல்லை.

''இந்தா தம்பி, இந்த மருந்தை உங்க அப்பா கையில் கொடுத்திடு. அம்மாவுக்கு உடம்பு நல்லாயிடும்.''

குழந்தைக்குப் பதில் சொல்லக் கூடத் தெரியவில்லை. மருந்துப்பெட்டியை அதன் கையில் வைத்து விட்டு அவன் திரும்பி விட்டான். நல்ல வேளையாய் அவரைச் சந்திக்கும்படி நேர்ந்து விடவில்லை.


தினசரி சுகமாக
அணிந்துகொள்ள
கைத்தறிகள்,
குடும்பம் முழுவதும், தினசரி
அணிவதற்கு கைத்தறியே.
கைத்தறி ஆடைகள
பாரம்பர்யத்தையும்,
கவினத்தையும் கலந்து
கண்கவர் டிசைன்களில் கிடைக
கின்றன. நீடித்த உழைப்பிற்கும்,
சுகத்திற்கும் நீங்கள்
தேர்ந்தெடுக்க வேண்டியது
கைத்தறியே.
சேலைகள்,
சோளித் துணிகள், கவுன்கள்,
ஷர்ட்டுகள், புஷ்-ஷர்ட்டுகள்
உறைத் துணி வகைகள்,
பலரகங்களில் கிடைக்கின்றன.
ஹாண்ட்லூம் ஹவுஸ்
9, ரடன் பஜார், சென்னை-3
போன்: ஷோரூம்-33405
மற்றும்:
221, தாதாபாய் நௌரோஜி ரோடு,
பம்பாய்-1
2, லிண்ட்ஸே தெரு, கல்கத்தா-16
9-ஏ, கான்னாட் பிளேஸ், புது டில்லி.
தலைமை ஆபீஸ்:
அகில இந்திய
கைத்தறித் துணிகள் விற்பனை
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
ஜன்மபூமி சேம்பர்ஸ்,
பம்பாய்-1

ஒரு வார லீவு ஒரு மாத லீவாக நீண்டுவிட்டது. கண்ணனுக்கு ஒரு வித நிம்மதி அதில். அவரைப் பார்க்க வேண்டாம் என்ற எண்ணத்தில்.

ஆனால் — ஒரு மாதத்துக்கும் முடிவு உண்டல்லவா? அன்று காலை....

''ஸார். போஸ்ட்!''

ஐயோ, அந்த மாற்று ஆளாகவே ஏன் இருக்கக்கூடாது? அவன் கூசிக் குறுகி வெளியே வந்தான். வழுக்கைத் தலையின் மேல் தலைப்பாகை, நெற்றிச் சுருக்கங்களிடையே மங்கி இறைந்த நாமம். நீண்டு வளைந்த மூக்கு....

கண்ணன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். மனதில் சங்கடம் தட்டுப்பட்டது. அரசனாய் வீற்றிருந்தவனைச் செல்வமெல்லாம் இழந்த பிச்சைக்காரனாய்க் காணுவது போல உணர்ச்சிகள் கசின.



''தலைக்கு வந்தது தலைப்பாவோடே போச்சுன்னு! விட்டுத் தள்ளுமய்யா''

''அதெப்படி விட்டுத் தள்ள முடியும்? தலை போனாலும் போகட்டும், தலைப்பா போகக் கூடாது சார்! நான் இப்பதான் புதுசா அதை வாங்கினேன்!''

''என்ன சார், சுகமா?''

அவரே பேச்சைத் தொடங்கியதும் அவன் தலை நிமிரவில்லை.

''ம்.''

''ஒரு மாசமா நான் லீவு போட்டிருந்தேனே ஸார். பொஞ்சாதிக்கு உடம்பு சரியில்லே. அதுதான் காரணம்.''

அவன் தன் கடிதங்களுக்காகக் கையை நீட்டினான். அவர் சீக்கிரம் போய் விட்டால் தேவலை போல் இருந்தது.

''அவளுக்கு இப்போ நல்லாக் குணமாயிட்டுது ஸார்!''

தான் விசாரிக்கவில்லையென்பது அப்போது தான் உணர்வாயிற்று அவனுக்கு. ''அப்படியா நாயுடு? ரொம்ப சந்தோஷம்'' என்றவாறு மெள்ளப் பார்வையை உயர்த்தினான். கப்பையாவின் முகம் மிகவும் களைத்திருந்தது. ஆயினும் இருப்தியும் தென்பட்டது. மனைவி பிழைத்து விட்டாளல்லவா?

''ரொம்பக் கவலையாப் போச்சு, சார் முதல்லே. பிழைக்க மாட்டான்னே நெனைச்சிட்டேன். அப்புறம் டாக்டர் ஒரு பெரிய இன்ஜக்ஷன் எழுதிக் கொடுத்தாரு. முப்பது ரூபாய் விலை. அவ்வளவு பணம் கையில் இல்லாம நான் என்ன தவி தவிச்சேன் தெரியுங்களா?''

அவன் பார்வை மறுபடியும் தாழ்ந்தது.

''அப்புறம், ஏதோ நல்ல காலம், மருந்து வந்து டாக்டர் ஊசி போட்டதிலே அவளும் பிழைச்சுக்கிட்டா. குழந்தைகளும் அநாதையாகாமல் தப்பிச்சது...உங்க மணி ஆர்டர் வந்திருக்கு ஸார். கையெழுத்துப் போடுங்க. இதோ நூற்றைம்பது ரூபாய். எண்ணி எடுத்துக்குங்க.''

முழுப் பத்து ரூபாய் நோட்டுக்கள். கண்ணனுக்கு நெஞ்சில் ஏதோ நெருடியது. இன்று இந்தச் செயலை அனர்த்த மற்றுப் போகப் பார்த்திருக்க வேண்டுமா அவன்? 'நாயுடு என்னை மன்னியுங்கள். நான் உங்களைச் சிறியவனாக்கி விட்டேன். நான் கோவில் கட்டிக் கும்பிட்ட மதிப்புக்கு இடையே சாமானிய மனித தர்மம் குறுக்கிட்டு விட்டது.' இது உள்ளத்தில் குமுறியது; வார்த்தையாக வெளிப்படவில்லை.

கையெழுத்தைப்போட்டுப் பணத்தை வாங்கினான். தலை இன்னும் நிமிரவில்லை.

''நல்ல வேளையா கடன்காரங்கள்ளே ஒருத்தன் பணத்தை அடுத்த மாசம் கொடுத்தாப் போதும்னு சொல்லிட்டான். அந்தப் பணத்திலே தான் ஊசி மருந்து வாங்கினேன்.''

கண்ணனின் தலை சட்டென்று நிமிர்ந்தது.

''அப்புறம் ஒரு வேடிக்கை பாருங்க ஸார்! யாரோ ஒரு புண்ணியாத்மா ஒரு மருந்தை வாங்கி என் பையன் கையிலே கொடுத்துட்டுப் போயிருக்காரு. கிட்டத் தட்ட அதே பேருள்ள மருந்துதான். ஆனா அது இல்லே. பாவம், அந்த மருந்து வீணாத்தான் போச்சு. என் பொஞ்சாதிக்கு உபயோகப்படுத்த முடியலே. அந்த நல்ல மனுஷன் யாரோ!....''

கண்கள் விரிந்த வியப்பு ஓர் ஆழ்ந்த நெடு மூச்சாய் அமைந்து அடங்கிச் சாந்தியுற்றது.

லட்சியம் அழியவில்லை.

அவன் முன் அவர் கை தாழவில்லை!

மறுபடியும் அந்த வடிவத்தில் அதே பழைய கம்பீரம், அதிகாரம்!

இதயத்திலிருந்த வேதனை உணர்ச்சி எங்கே? பீடமேற்றிய வடிவம் தாழ வேண்டிய நிர்ப்பந்தம் விலகியதில் அவனும் ஏனோ பெருமிதமடைந்தான்.

முழு ரூபாய் நோட்டுக்கள் மறுபடியும் உயர்பொருளாய் மதிப்புத் தோன்ற அவன் பையில் வீற்றிருந்தன.

உள்ளமெங்கும் பூரிப்பு விரிந்தது. உடல் கறுசுறுப்புற்றது.

''உக்காருங்க நாயுடு. பாவம் களைப்பா யிருக்கீங்களே. கொஞ்சம் மோர் கொண்டு வரட்டுமா?''

''மோரா ஸார்? ம், கொஞ்சம் வேணும்னு கொடுங்க, வெயில் ரொம்ப அதிகமா யிருக்கு.''

அவர் பெஞ்சியின் மேல் உட்கார்ந்தார். நைவேத்தியம் எடுத்து வர அவன் உள்ளே விரைந்தான்.

Printed & Published by R Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10.
Managing Editor, T. Sadasivam.

பிரெஞ்சு காபியில்
தலை சிறந்தது





ருசிக்கச் சிறந்த வகை
யில் கலவை செய்த
ப்ரூக் பாண்ட் கபே
பிராண்டு பிரெஞ்சு
காபி இப்பொழுது எங்கும்
கிடைக்கும். நறுமணத்
தையும் சுவையையும்
காக்க இவை ஸெலபோன்
பைகளில் விற்பனை
செய்யப்படுகின்றன.
பிரெஞ்சு காபியில் நல்ல
மணம், சுவை இவற்றைப்
பெற ப்ரூக் பாண்ட் காபி
யையே விரும்பிக்
கேளுங்கள். இதுவே
நீங்கள் கொடுக்கும்
பணத்திற்குச்
சிறந்தது.

ப்ரூக் பாண்ட்
கபே பிராண்டு பிரெஞ்சு காபி

JWTBB 404

Registered as a Newspaper in Ceylon
REGISTERED No. M. 4392

